# சித்த மருந்து முறையியல்
# SIDDHA PHARMACOPOEIA

Dr. பொன். இராமநாதன் M.D. (S)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




வெளியீடு:
அகில இலங்கை அரச சேவை சித்த ஆயுர்வேத
வைத்திய அதிகாரிகள் சங்கம்
யாழ்ப்பாணம்
-2000-

# சித்த மருந்து முறையியல்

# SIDDHA PHARMACOPOEIA

பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர்களுக்கான
துணைப் பாடநூல்


ஆசிரியர் :
வைத்தியகலாநிதி
பொன். இராமநாதன் *M. D. (S)*
விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



வெளியீடு :
அகில இலங்கை அரச சேவை சித்த ஆயுர்வேத
வைத்திய அதிகாரிகள் சங்கம்
யாழ்ப்பாணம்.
– 2000 –

| | | |
|---|---|---|
| *முதற் பதிப்பு* | : | ஜனவரி **2000** |
| *நூற் பெயர்* | : | சித்த மருந்து முறையியல் |
| *நூலாசிரியர்* | : | வைத்தியகலாநிதி<br>பொன். இராமநாதன் எம். டி. (சித்த) |
| *முகவரி* | : | " கனகதாரா "<br>தாவடிச் சந்தி, கொக்குவில், இலங்கை. |
| *பதிப்புரிமை* | : | ஆசிரியருக்கே. |
| *வெளியீடு* | : | அகில இலங்கை அரச சேவை<br>சித்த ஆயுர்வேத<br>வைத்திய அதிகாரிகள் சங்கம்,<br>யாழ்ப்பாணம். |
| *அச்சுப்பதிவு* | : | ஏழாலை மஹாத்மா அச்சகம்<br>இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை,<br>கந்தமடம்,<br>யாழ்ப்பாணம். |

*விலை* : ரூபா **250/**

| | | |
|---|---|---|
| *First Edition* | : | January **2000** |
| *Title* | : | Siddha Pharmacopoeia |
| *Author* | : | Dr. P. Ramanathan *M. D. (Siddha)* |
| *Address* | : | " Kanagathara "<br>Thavady Junction,<br>Kokuvil, ( N. P. ). Sri Lanka. |
| *All Rights* | : | Reserved |
| *Published By* | : | All Island Service Siddha Ayurvedic Medical Officers Union, Jaffna. |
| *Printers* | : | Earlalai Mahathma Printing Works.<br>Hindu Ladies College Lane,<br>Kandamadam, Jaffna, Sri Lanka. |

PRICE : Rs. **250/-**


# அகில இலங்கை அரச சேவை
# சித்த ஆயுர்வேத
# வைத்திய அதிகாரிகள் சங்கம்
# ALL ISLAND SERVICE SIDDHA AYURVEDIC MEDICAL OFFICERS UNION

*Regd No. / பதிவு இல.* : **4747**

## சான்றுரை — CERTIFICATE

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரச சேவை சித்த ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பின் பேரில் இந்நூல் உருவாக்கப்பெற்றது. இதில் கூறப்பட்டுள்ள சகல மருந்து முறைகளும் **03 - 11 - 1998** திகதியன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் சமர்ப்பித்து, சபையினால் பரிசீலனை செய்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

இ. கனகலிங்கம் — *தலைவர்*

ஐ. ஜெயநாமகணேசன் — *செயலாளர்*

உ

# சமர்ப்பணம்

எமது அன்புக்கினிய

முன்னறி தெய்வங்களான

தாவடியூர் சித்த வைத்தியர்

**அமரர் ஆறுமுகம் பொன்னம்பலம்**

( பரமு வைத்தியர் )

அவர்களுக்கும்

இந்நூலை எழுதும் காலத்தில் ஆசீர்வதித்து

மகிழ்வெய்தி

அச்சுருப் பெற்று நூல் வெளிவரமுன்


அண்மையில் சிவபதமடைந்த

**திருமதி கனகம்மா பொன்னம்பலம்**

அவர்களுக்கும்

இந்த நறுமலரை அன்புடன்

காணிக்கையாக்குகின்றேன்.



உ

சிவமயம்

# வெளியீட்டுரை


**Dr. இரா. கனகலிங்கம் *D. A. M. (Cey.)***

*தலைவர்,*

*அகில இலங்கை அரச சேவை சித்த ஆயுர்வேத*

*வைத்திய அதிகாரிகள் சங்கம், யாழ்ப்பாணம்*


வைத்திய கலாநிதி பொன். இராமநாதன் அவர்கள் 1976ஆம் ஆண்டிலிருந்து 1997 சித்திரை வரையும் எமது வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினராகவும் சில வருடங்கள் பொருளாளராகவும் இறுதி மூன்று வருடங்கள் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். இவர் எழுதிய "சித்த மருந்து முறையியல்" என்ற நூலினை வெளியிடுவதில் எமது சங்கம் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறது. எமது சங்கத்தின் ஐந்தாவது தலைவராகப் பொறுப்பேற்றுச் சங்கத்தின் அனைத்து முன்னேற்ற முயற்சிகளுக்கும் ஆக்கமும் ஊக்கமுமளித்ததுடன் பல வருடகாலம் தொடர்பற்று இருந்த தென்னிலங்கைத் தாய்ச்சங்கத்துடன் எமது சங்கத்தையும் ஓர் அங்கமாக மீண்டும் சேர்ந்து இயங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுத்து வெற்றி கண்டவர்.

இலங்கா சித்தாயுர்வேத வைத்தியக் கல்லூரியில் 1973 ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை விரிவுரையாளராகவும் சேவையாற்றி மாணவர்களின் நன்மதிப்பை பெற்றவர். 1976இல் உள்ளூராட்சிச் சேவையில் வைத்திய அதிகாரியாகச் சேர்ந்த பின்னரும் அரசாங்க அனுமதியுடன் பகுதி நேர விரிவுரையாளராகவும் அங்கு தொடர்ந்து கடமையாற்றி வந்துள்ளார். 1988இல் தமிழ்நாடு சென்று பட்டமேற்படிப்பை மேற்கொண்டு, குணபாடம் சிறப்புப் பிரிவில் "சித்த மருத்துவ அறிஞர்" – Doctor of Medicine (Siddha) என்னும் பட்டத்தைப் பெற்று 1991 இல் தாய்நாடு திரும்பினார்.

இவர் நாடு திரும்பியதும் 1992 இல் யாழ்ப்பாண மாநகர சபைப் பிரதம வைத்திய அதிகாரியாகப் பொறுப்பேற்று 1997 சித்திரை மாதம் வரை கடமையாற்றினார். யாழ். மாநகரசபையில் இவர் கடமையாற்றிய காலத்தில் சித்த மருந்துகள் தயாரிப்

பதில் முன்னோடியாக விளங்கிக் கூடிய ஆர்வமும் அக்கறையும் காட்டினார். அத்துடன் யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறையில் இடை வருகை விரிவுரையாளராகவும், வெளிவாரிப் பரீட்சை மதிப்பீட்டாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

1997 மே மாதத்திலிருந்து யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவத் துறையில் நிரந்தர விரிவுரையாளராக நியமனம் பெற்றுப் பணியாற்றுகின்றார். இவரது தகுதி அறிந்து விரிவுரையாளர் பதவி வழங்கிக் கௌரவித்த துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கட்கும் இவ்விடத்தில் எமது சங்கம் தனது பாராட்டையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றது.

இந்நூலாசிரியர் ''சித்த ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்கட்கான கைந்நூல்'' என்ற நூலை 1987இல் வெளியிட்டுள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கது. அந்நூலின் தரமும் பயனும் சித்த மருத்துவர்களினால் பெரிதும்பாராட்டப் பெற்றதென்றால் மிகையாகாது. அதனால் 1994இல் மேலும் பல புதிய அம்சங்களுடன் 2ஆம் பதிப்பாக வெளிவந்தது. அது சித்த மருத்துவத் துறை மாணவர்கள், விரிவுரையாளர்கள், வைத்திய அதிகாரிகளாலும் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது எழுதிய ''சித்த மருந்து முறையியல்'' என்னும் இந்நூல் ஈழத்துச் சித்த மருத்துவ சமூகத்திற்குப் பெரும் வரப்பிரசாதமாகும். எமது சங்கக் கூட்டங்களில் எல்லாம் வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதேச சபை வைத்தியசாலைகள் அனைத்திலும் ஒரே தரமாகவும் ஒரே விதமான சித்த மருந்துகள் கிடைக்கக்கூடிய அளவுக்குச் சித்த மருந்துகளை உற்பத்தி செய்யவேண்டுமென முன்பு அடிக்கடி வலியுறுத்தி வந்தார். எல்லா வைத்தியசாலைகளிலும் ஒரே விதமான மருந்துகள் கையாளப்படுவதற்கு இவரது இந்நூல் சிறந்த வழிகாட்டியாக அமையுமெனக் கூறலாம். அத்துடன் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சித்த மருந்தகங்கள் எல்லாவற்றுக்கும் மருந்து விநியோகம் சீராக நடைபெறும் வகையில் ''சித்த மருந்து தயாரிப்பு நிலையம்'' ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பது எங்கள் சங்கத்தின் பெரும் விருப்பமாகும். எமது நீண்டகாலக் கோரிக்கை தற்போதைய சூழ்நிலைகளால் பின்தள்ளப்பட்டு வருகின்றது. அப்படி ஒரு நிலையம் அமைப்ப



தற்கும் இவரது இந்நூல் பேருதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

'சித்த மருந்து முறையியல்' என்ற இந்நூலில் 168 மருந்து செய்முறைகளும் 86 சுத்தி முறைகளும் பற்றி விரிவாகவும் விபரமாகவும் தரப்பட்டுள்ளன. அத்துடன் தற்கால நவீன மருத்துவ அளவை முறைகளும் எமது மருந்துகட்கேற்ப வகுத்துத் தரப்பட்டுள்ளமை காலத்திற்கேற்ற ஒரு வளர்ச்சியான புதிய அணுகுமுறை, இன்று வளர்ந்துவரும் வைத்திய சமூகத்திற்கு ஒரு நல்ல முன்மாதிரியாக அமையுமென நம்புகின்றேன். எமது மத்தியில் அருகிக்கொண்டு வரும் யாழ்ப்பாண வைத்திய நூல்களான பரராசசேகரம், சுதேச வைத்திய அவுடதத் திரட்டு ஆகியவற்றில் இருந்து மருந்துகள் தெரிந்து தரப்பட்டுள்ளன. அவ்வாறே இந்தியாவில் தமிழக அரச மருந்துக் கூட்டுத்தாபனம் (IMPCOPS) முறைகள், பாளையங்கோட்டை சித்த மருத்துவ மனை முறைகள், இவரது தந்தையாரின் மருத்துவக் குறிப்புக்கள் யாழ் மாநகரசபையில் இந்நூலாசிரியரால் அறிமுகம் செய்து வைக்கப்பெற்ற மருந்து முறைகள் ஆகியவற்றிலிருந்து இலகுவானதும், தற்காலத்தில் தயாரிப்பதற்கு ஏற்றதுமான மருந்து முறைகளையும் தொகுத்துத் தருவதில் இந்நூல் எமது வைத்திய உலகிற்கு அரியதொரு பங்களிப்பைச் செய்திருக்கிறது என்பதையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

இது போன்ற பல நூல்களைச் சித்த மருத்துவ சமுதாயத்துக்கு எழுதி உதவ வேண்டுமென இந்நூலாசிரியரை எமது சங்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன். இந்நூலை எமது சங்கம் வெளியிட்டு வைப்பதில் மிகவும் பெருமையடைகின்றது. டாக்டர் பொன். இராமநாதன் அவர்களுக்கு நீடிய ஆயுளும் மற்றுமெல்லா நலன்களும் கிடைக்கவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வைத்திய கலாநிதி
இரா. கனகலிங்கம் D. A. M (Cey.)

# முன்னுரை

ஈழத்து வடக்கு – கிழக்கு மாகாணத்திலுள்ள அரசினர் சித்த மருந்தகங்களுக்குச் சித்த மருந்துகள் கிடைப்பது நீண்ட காலமாயுள்ள பெரும் குறையாகும். இம் மருந்தகங்களுக்கு மருந்துகள் வழங்கும் சிறிலங்கா ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபத்தினர் சித்த மருந்துகளைத் தயாரிக்காது விட்டமையும் ஒரு காரணமாகும். இந் நிறுவனம் ஆயுர்வேத மருந்துகளைத் தயாரித்து இந் நாட்டிலுள்ள எல்லா அரசினர் மருந்தகங்களுக்கும் அனுப்பி, அவற்றைக் கூடுதலாகப் பயன்படுத்தச் செய்ததும் மற்றொரு காரணம் எனலாம். இதனால் சித்த மருத்துவ அதிகாரிகள் ஆயுர்வேத மருந்துகளை மக்களுக்கு வழங்கி, பழக்கத்திலும் கொண்டு வந்துள்ளனர். அத்துடன் ஆயுர்வேத மருந்துகளை முற்றாகப் பழக்கத்தில் வைத்துக் கொண்டு, தம்மைச் சித்த வைத்திய கலாநிதிகள் என்று தம்பட்டம் அடிப்போரும் எம்மிடையே உள்ளனர்.

உண்மையில் சித்த மருந்துகள் தனிப்பட்ட சித்த வைத்தியர்கள் மத்தியிலேயே பழக்கத்திலிருத்தலை அவதானிக்க முடிகிறது. எனவே, வடக்கு–கிழக்கு மாகாணத்திலுள்ள அரசினர் சித்த மருந்தகங்களில் சித்த மருந்துகளை உபயோகத்துக்குக் கொண்டு வர வேண்டியது சித்த மருத்துவ அதிகாரிகளின் தலையாய கடமையாகும்.

மேற்குறிப்பிட்ட குறைபாடுகள் பற்றி அரச சேவை சித்த ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கம் பலமுறை வலியுறுத்தி வந்ததை நான் நன்கு அறிவேன். இதனால் இக் குறைபாட்டினை நீக்குவதற்கு ஏற்ற நூல் ஒன்று கைவசம் இருத்தல் அவசியம் என்ற எண்ணம் எனக்கு உண்டானது. அத்துடன் தமிழகத்துப் பாளையங்கோட்டையிலுள்ள மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் நான் பட்டமேற்படிப்பை மேற்கொண்டிருந்த காலத்திலும், இத்தகைய



நூல் ஒன்று எழுதவேண்டுமென்ற உணர்வு என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து கொண்டது. அதற்கேற்றவாறு தமிழ் நாட்டுச் சித்த மருந்து முறைகளையும் சேகரித்தேன். இதன்பேறாக ஆக்கப்பெற்றதே இச் "சித்த மருந்து முறையியல்" என்ற நூலாகும்.

எனது பட்ட மேற்படிப்பை நிறைவு செய்தபின், யாழ் மாநகர சபையில் கடமையாற்றுமாறு பணிக்கப்பட்டேன். அக் காலத்தில் கொழும்பிலிருந்து மருந்துகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் பல ஏற்பட்டன. அதனால் மருந்துகளை நாங்களே தயாரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் உண்டானது. இந் நிலையில், யாழ். மாநகரசபை ஆணையாளரின் அனுசரணையுடனும் அங்கீகாரத்துடனும் மருந்து தயாரிப்பதற்கென ஒரு கட்டடமும் கட்டி, சித்த மருந்துகளைத் தயாரிக்க ஆரம்பித்தோம். அம் முயற்சியில் ஓர் அளவு வெற்றியும் கண்டுள்ளோம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சித்த மருந்து தயாரிக்கும் விடயத்தில், யாழ். மாநகரசபையில் மருந்து செய்நிலையம் ஒன்றைப் புதிதாக அமைத்து, மருந்து தயாரிப்பதற்கு ஊக்கமளித்த யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் அவர்களுக்குச் சித்த மருத்துவ சமூகம் என்றும் கடப்பாடுள்ளது என்பதை நன்றியுடன் குறிப்பிட விரும்புகிறேன். யாழ். மாநகர சபையில் நான் பணியாற்றிய பொழுது எனது சொந்த அனுபவத்தில் அறிந்ததும், இலகு முறையுமான மருந்துகளையே தெரிந்தெடுத்துப் பட்டியலிட்டு அவற்றினை வைத்திய அதிகாரிகள் சங்கப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பித்தேன். அவற்றைப் பரிசீலனை செய்த சங்க உறுப்பினர் அனைவரும் தமது சாதகமான ஆலோசனைகளை வழங்கி ஊக்கமளித்தனர்.

அதனைத் தொடர்ந்து 1997ஆம் ஆண்டு யாழ். பல்கலைக் கழகச் சித்த மருத்துவத் துறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கு சித்த மருத்துவ மாணவர்களின் மருந்து செய்முறைகளில் ஏற்படும் சிக்கல்களை இலகுவில் தீர்க்கும் நோக்குடன் மருந்து செய்முறைகளிலுள்ள சில முக்கிய விடயங்கள் பற்றி அனுபவ வாயிலாக அறிந்துகொண்ட உண்மைகளை இந்நூலிற் சேர்க்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு உதயமானது. அதனையும் இதில் சேர்த்துள்ளேன்.

இந்நூல் இரு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியில் 167 மருந்து செய்முறைகளும், 86 மருந்துச் சரக்குகளின் சுத்தி முறைகளும் விளக்கியுள்ளமை அவதானிக்கத் தக்கது. இரண்டாம் பகுதியில் பொதுவான மருந்து செய்முறைகளிலுள்ள சில விசேட விதிமுறைகள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

அத்துடன் கூட்டுச்சரக்குகள், கலைச்சொற்கள், மருத்துவ அளவைகள், ஆகியவையும் இங்கு சேர்க்கப்பட்டுள்ளன.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகளில் சில எமது தந்தையார் கையாண்ட முறைகளாகும். அவற்றை யாழ்.மாநகரசபையில் நான் பணியாற்றியபொழுது பரீட்சார்த்தமாகச் செய்து, நல்ல பெறுபேறுகளைக் காணக்கூடியதாயிருந்தது. இவ்வாறு அறிமுகப் படுத்தப்பெற்ற மருந்து முறைகளை யாழ். மாநகர சபை முறையெனக் குறிப்பிட்டுள்ளேன். இத்தகைய முறையில் மருந்து வகைகள் தயாரிப்புத் தொடர்பான மூலங்களும், அதன் பயன்பாட்டிலுள்ள சிறப்புகளும் அந்தந்த மருந்துகளின் கீழ், குறிப்பு எனத் தரப்பட்டுள்ளது. மருந்துச் சரக்குகளின் சுத்தி பற்றிக் குறிப்பிடுகையில், இலகுவில் செய்யக்கூடியதும், கிடைக்கக்கூடியதுமான முறைகளையே பின்பற்றியுள்ளேன். இந்நூலில் Indian Medical Practioners Co – operative Pharmacy & Stores (IMPCOPS) முறைகளையே பெரும்பாலும் தெரிவு செய்துள்ளேன். யாழ்ப்பாணச் சித்த வைத்தியர்கள் பயன்படுத்தும் விசேட மருந்துகளையும், சுத்தி முறைகளையும் இதில் புகுத்தியுள்ளேன். ஆனால் சித்த மருந்து முறைகளின் சிறப்பம்சமான கட்டு, களங்கு, சுண்ணம் போன்றவை இந்நூலில் இடம்பெறவில்லை. ஏனெனில், அரச மருந்தகங்களில் அவற்றை நடைமுறைப்படுத்தல் சிரமம் என்பதே காரணமாகும்.

அடுத்து இந்நூலாக்கத்துக்கு ஊக்கமும் உற்சாகமுமளித்த அனைவரும் நன்றி கூறுதற்கு இன்றியமையாதவர்களாவர். அந்த வகையில் இந் நூலை ஆக்குவதற்கு ஊக்கம் தந்து விரைவில் நிறைவு செய்யுமாறு அடிக்கடி தூண்டிய அரசசேவை சித்த ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு முதற்கண் எனது நன்றிகள். பல்வேறு வேலைப்பளுவுக்கு மத்தியிலும் இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை



அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகும். மேலும், இதற்குப் பாராட்டுரை வழங்கிய உயர்பட்ட ஆய்வுப் பீடாதிபதி, பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கு என்றும் நன்றி கூறும் கடப்பாடுடையேன். மற்றும் இந்நூலுக்கு வாழ்த்துரைகள் வழங்கிச் சிறப்பித்து உதவிய யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் அவர்களுக்கும், சுதேச மருத்துவப் பணிப்பாளர், பேராசிரியர் சு. பவானி அவர்களுக்கும் சித்த மருத்துவத் துறைத் தலைவர் Dr. (திருமதி) ஞா. பவானி அவர்களுக்கும், சித்த மருத்துவத்துறை முன்னாள் தலைவர் Dr. (திருமதி) மி. ஸ்ரீகாந்தன் அவர்களுக்கும் நன்றி கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அத்துடன் இந்நூலுக்கு வெளியீட்டுரை தந்த அரசசேவை சித்த ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர் Dr. இ. கனகலிங்கம் அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றிகள் எந்நாளும் உண்டு.

இந்நூல் எழுதும் காலத்தில் எனது ஆய்வுக்குத் தேவையான நூல்களைத் தந்துதவிய வைத்தியசிரோன்மணி அமரர் M. சோமசுந்தரம் (M. S. மருந்தகம்) அவர்களையும், வைத்திய கலாநிதி அமரர் சிவப்பிரகாசம் அவர்களையும் இவ்வேளையில் மனதில் நிறுத்தி நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

அடுத்து சில விசேட மருந்து முறைகளைத் தந்துதவிய எனது அன்புக்கும் மதிப்பிற்குமுரிய தந்தையாருக்குச் சமமாக விளங்குபவரும் எனது ஆசானும் ஓய்வு பெற்ற அதிபர், லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, வைத்திய சிரோன்மணி A. V. இராசரத்தினம் அவர்களுக்கு நன்றியுடன் மனமார்ந்த வணக்கம் உரித்தாகுக.

மேலும், கையெழுத்துப் பிரதியிலிருந்து அச்சுப் பதிவாகும் வரை இந்நூலை ஒழுங்காக வாசித்து, ஒவ்வொரு விடயத்தையும் கவனித்து வாக்கிய அமைப்புக்கள், இலக்கணப் பிழைகள், மொழி பெயர்ப்புக்கள் ஆகியவற்றைத் திருத்தித் தெளிவாக்கி நன்கு வடிவமைத்துத் தந்த எனது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய ஓய்வு பெற்ற அரசாங்க மொழி பெயர்ப்பாளரான இணுவில் சோ. பரமசாமி B.Sc. அவர்களுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன். இதனை எழுதும் காலத்தில் வேலைப்பளு காரணமாக நான் சோர்வடையும் போதெல்லாம் வீடு தேடி வந்து ஊக்கமும் உற்சாகமும் அளித்து நூல் முழுமை பெறுவதற்குப் பெரிதும்

உறுதுணையாய் உதவிய இத் தமிழறிஞர் பெருமகனார்க்கு நன்றி கூறுதற்கான வார்த்தைகள் எழுத்திலடங்கா.

இன்னும், இந்நூலமைப்பைச் சீராக்கி அட்டவணைப் படுத்தித் தந்த எனது துணைவியாரும் நன்றிகளுக்கு உரியவரா வார். இவற்றுடன் சில பகுதிகளைப் பிரதி செய்வதற்குதவிய யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கும் எனது நன்றிகள் என்றும் உண்டு.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு பேரார்வங் காட்டிய இனிய நண்பர்கள் Dr. V. வேதநாதன், Dr. P. சண்முகரத்தினம், Dr. T. சண்முகராசா மற்றும் உறுப்பினர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

இந்நூலை அழகாக அச்சிட்டுத் தந்த ஏழாலை மஹாத்மா அச்சக அதிபர், மற்றும் பணியாளர்கள் யாவரும் நன்றிக்கு உரியவர்களாவர். இந்நூலில் திருத்தங்கள், சேர்க்க வேண்டிய விடயங்கள் போன்றவை ஏதுமிருப்பின், எனக்கு அறியத்தந்தால் மறுபதிப்பில் அவற்றைக் கவனத்திற் கொண்டு ஏற்ற நடவடிக்கை எடுக்க முயல்வேனென்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

வைத்திய கலாநிதி
பொன். இராமநாதன்.

" கனகதாரா !"
தாவடிச் சந்தி,
கொக்குவில்.
14, ஜனவரி, 2000.



# ஆசியுரை

துணைவேந்தர்

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
*B.A. Hons (Cey.), Ph. D. (Durham)*

யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவத் துறையிலிருந்து முதன்முதலாகச் சித்த மருந்து முறையியல் (Siddha Pharmacopoeia) என்ற நூல் வெளிவருவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்நூல் சித்த மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவத் துறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் வைத்தியகலாநிதி பொ. இராமநாதன் அவர்கள் மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த, பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் தனது பட்ட மேற் படிப்பை நிறைவு செய்தவர். இவர் சித்த மருத்துவத் துறையில் குணபாடம் (Pharmacology) என்ற பிரிவில் ஈழத்தில் முதன் முதலாகச் சித்த மருத்துவ அறிஞர்-Doctor of Medicine (Siddha) பட்டத்தைப் பெற்றவர்.

இவரது தந்தையார் தாவடியூர் ஆறுமுகம் பொன்னம்பலம் (பரமு வைத்தியர்) அவர்களும் ஒரு புகழ் பெற்ற சித்த வைத்தியராய் இருந்து சமூகசேவை ஆற்றியவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இந் நூலாசிரியர் அரசாங்க சித்த ஆயுர்வேத மருத்துவ அதிகாரியாக இருபது ஆண்டுகள் சேவையாற்றி அனுபவம் பெற்றவர். தற்போது எமது பல்கலைக்கழகத்தில் சித்த மருத்துவத்

துறை கற்கை நெறியில் பயிலும் மாணவர்களுக்கு மருந்தியல் பாடத்தைப் போதித்தும், செய்முறையைப் பயிற்றுவித்தும் வருகின்றார்.

எனவே சித்த மருந்து முறையியல் என்ற நூலை எழுது வதற்கு இவர் மிகவும் பொருத்தமானவர் எனக் கருதுகின்றேன். அத்துடன் அரசசேவை சித்த ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கம் இந்நூலை அங்கீகரித்தமையும் ஒரு சிறப்பு அம்சமாகும்,

வைத்தியகலாநிதி பொ. இராமநாதன் அவர்கள் சித்த மருத்துவம் சார்ந்த பல நூல்களை எழுதி யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறையை மேலும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இவருடைய முயற்சி களைப் பாராட்டுவதுடன் எனது இதயபூர்வமான நல்லாசிகளை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை



# பாராட்டுரை

பேராசிரியர்
முனைவர் அ. சண்முகதாஸ்
*B A. Hons (Cey.), Ph. D. (Edin)*
முதுநிலைத் தமிழ்ப் பேராசிரியர்
தலைவர், உயர் பட்ட ஆய்வு பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
தலைவர், வடஇலங்கை சுதேச வைத்திய சபை – யாழ்ப்பாணம்

டாக்டர் பொ. இராமநாதன் அவர்களுடைய சித்த மருந்து முறையியல் என்னும் நூல் தற்காலத் தேவைக்கேற்ற ஒரு வெளி யீடாகும். வாகடங்களிலும் ஏனைய நூல்களிலும் பாடல்களிலே இருக்கின்ற எங்கள் மரபுவழி மருத்துவ அறிவு, இன்றைய அறிவியற் கையளிப்பு முறையிலே மாணவர்களுக்கும் ஏனைய வாசகர்களுக்கும் வழங்க வேண்டிய தேவை உண்டு. டாக்டர் இராமநாதன் இதனை நன்குணர்ந்து மருத்துவத்துறையில் மருந்து முறையியல் என்னும் பகுதிக்குரிய மரபு வழி நூல்களை ஆராய்ந்து இந்நூலை அமைத்துள்ளார். இரண்டு பகுதிகளாக அமையும் இந் நூலில், முதலாவது பகுதியிலே சித்த மருந்துகளின் வகைகளும் அவற்றைத் தயாரிக்கும் முறைகளும் விளக்கப்படுகின்றன. இம் மருந்து வகைகளின் தயாரிப்பு முறை தொடர்பான மூலங்களும் இங்கு குறிப்பிடப்படுவது ஆசிரியருடைய நேர்மையினையும் ஆய்வுத் திறனையும் காட்டுகின்றது. எடுத்துக்காட்டாக, பறங்கிக் கிழங்குச் சூரணம் யாழ்ப்பாண ஏட்டு முறையிலே குறிப்பிட்ட படியான தயாரிப்பு முறையை ஆசிரியர் தருகிறார். ஆனால், ஏலாதிச் சூரணம் பற்றிக் கூறும்பொழுது, சித்த வைத்தியத் திரட்டுப் பற்றிக் குறிப்பிடுகிறார். தக்காளிச் சாற்றுக் கோரோ சனை மாத்திரைச் செய்முறை ஏட்டு முறையாக அமைந்த

போதிலும், அதனைக் கோப்பாய் சித்த வைத்திய அறிஞர் ஏ. வி. இராஜரட்ணம் அவர்களிடமிருந்தே ஆசிரியர் பெற்றுக் கொண்ட உண்மை குறிப்பிடப்பட்டுள்ளது. நூலின் மூன்றில் இரண்டு பகுதி மருந்துகளின் அட்டவணையாக அமைகின்றது.

நூலின் இரண்டாவது பகுதி மூலிகைகளிலிருந்து சாறு எடுக்கும் முறைகள் பற்றி விளக்குகின்றது.

இன்றைய சித்த வைத்திய மாணவர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்பாடுடையதாக அமையவுள்ளது. கற்பித்தல், பரிசோதனைகள் யாவற்றுக்கும் ஆய்வுமுறை அடிப்படை நூல்கள் தேவை. சித்த மருத்துவ மருந்து முறையியல் துறைக்கு இந்நூல் நல்லதொரு பங்களிப்பாகும். இதனால், இந்நூலாசிரியர் பாராட்டுக்குரியவர்.

இந்நூலுக்கு இச்சிறிய பாராட்டுக் குறிப்பினை எழுதுவதிலே மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்



# அணிந்துரை

யாழ். மாநகரசபை ஆணையாளர்
திரு. வே. பொ. பாலசிங்கம், *S. L. A. S.*
*B. A., Dip in L. G. Adm.*

வைத்தியகலாநிதி பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் பட்டறிவின் பயனாக எமக்குக் கிடைத்த பொக்கிஷம் இந்நூலாகும். இவர் பரம்பரை வைத்திய மரபில் தோன்றியவர்.

நூலாசிரியர் உள்ளூராட்சிச் சபைகளில் பலவருடகாலம் வைத்திய அதிகாரியாகச் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம் மாநகரசபையில், பிரதம சித்த வைத்திய அதிகாரியாகச் சேவையாற்றிய காலத்தில், தனது அனுபவங்களைக்கொண்டு மருந்துசெய் நிலையமொன்றை ஆரம்பிக்க உறுதுணையாக இருந்து அதைச் செயற்படுத்தினார். பல சிறப்பான மருந்து களைத் தயாரித்து அறிமுகப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தனது தந்தையாரின் மருத்துவ முறைகளையும், மேற்படி நிலையத்தில் புகுத்தி, அதனை "மாநகரசபை முறைகள்" என இந்நூலில் காட்டியுள்ளமை பெருமைப்படக்கூடியதொன்றாகும். இவரது நிர்வாக ஆளுமையும், மருத்துவத் துறை அனுபவமும், பட்ட மேற்படிப்பும் இவரை யாழ். பல்கலைக் கழகச் சித்த மருத்துவத்துறையில், விரிவுரையாளராக உயர்த்தி உள்ளது.

"சித்த மருந்து முறையியல்" என்ற இந்நூல் இரு பகுதி களாக அமைந்துள்ளது. முதலாவது பகுதி மருந்துகளின் வகைகளும், அவற்றைத் தயாரிக்கும் முறைகளும் அடக்கி உள்ளது. இரண்டாவது பகுதியில் மருந்து தயாரிப்பு முறை களுக்கு மூலிகைகளைப் பயன்படுத்தும் வழிகள் பற்றியும், மருத்துவம் சார்ந்த சில முக்கிய விடயங்கள் பற்றியும் கூறியுள்ளார். சித்த மருத்துவ நூல்கள் கால வெள்ளத்தால் அழிந்து போகும் இந்நிலையில், இந்நூல் சித்த மருத்துவத் துறைக்கும், சித்த மருத்துவ மாணவ உலகுக்கும் பெரும் பயனளிக்குமென நிச்சயமாக நம்புகிறேன்.

இந்நூலாசிரியரின் ஆக்கம் மேன்மேலும் வளர்ந்து நன்மை பல பயப்பதாக !

வே. பொ. பாலசிங்கம்

# அறிமுகவுரை


**பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி**
D. A. M. & S. (Cey), H. P. A. (Cey)
*வடக்கு – கிழக்கு மாகாண*
*சுதேச மருத்துவப் பணிப்பாளர்*
*திருகோணமலை*


வைத்தியகலாநிதி பொ. இராமநாதன் யாழ். மாநகரசபையில் பொறுப்பு வைத்தியராக இருந்தபோதும், யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவத்துறை விரிவுரையாளராக இருக்கின்ற போதும் மருந்து தயாரிப்பது பற்றிய பரந்த அறிவையும் அனுபவத்தையும் பெற்றுள்ளார். சித்த மருந்துகள் பற்றிய விபரங்கள் பல மருத்துவ நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. உதாரணமாக பரராஜசேகரம், சுதேசவைத்தியத் திரட்டு, இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், சொக்கநாதர் தன்வந்திரியம் போன்ற நூல்கள் அவற்றுட் சிலவாகும்.

சுதேச மருத்துவர்களின் பணியில் மருந்து செய்முறை ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஏனெனில், தரமான மருந்துகளை தயாரிப்பது நோய் தீர்ப்பதில் விசேடமானதாக அமைகின்றது. இன்று தரமான சித்தமருந்துகளைத் தயாரிப்பதற்கு அரசாங்கம் எதுவித நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாகத் தெரியவில்லை. தனியார் நிறுவனங்களும் வியாபார நோக்கில் சில மருந்துகளைத் தயாரிக்கின்றனவேயன்றி மக்களின் சுகாதார நலன்களை பேணும் வகையில் தயாரிப்புகள் தரப்படுத்தப்படவில்லை.

வைத்திய கலாநிதி பொ. இராமநாதன் அவர்கள் பல நூல்களில் உள்ள சித்த மருந்துகளில் முக்கியமானவற்றைத் தொகுத்து இந்த நூலை ஆக்கியுள்ளார். வடகிழக்கு மாகாணத்தில் உள்ள அரச மருந்தகங்களில் சித்த மருந்துகள் பாவிக்கப்படுவது தவிர்க்க முடியாததொன்றாகும். இந்த மருத்துவ நூல் வைத்தியர்களுக்கும் வைத்திய மாணவர்களுக்கும் மற்று மருந்து தயாரிக்கும் நிறுவனங்களுக்கும் பிரயோசனமானதாக இருக்கும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை என நான் உறுதியாகக் கூறுகின்றேன்.

**பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி**



# வாழ்த்துரை


**Dr. (Mrs.) ஞானாமிர்தம் பவானி**
D. A. M. & S. (Cey), H.P.A. (Cey)
*தலைவர், சித்த மருத்துவத் துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*


வைத்திய கலாநிதி பொ. இராமநாதன் அவர்கள் சித்த மருத்துவப் பரம்பரையில் உதித்தவர். அவரது தந்தை மிகவும் பிரபல்யமான சித்த மருத்துவர். தந்தையின் விருப்பப்படி கொழும்பு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் (தற்போது சுதேச மருத்துவ நிறுவனம்) பயின்று, பின்னர் உள்ளூராட்சி மன்றத்தில் மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றியவர். பின்பு தமிழகத்துப் பாளையங்கோட்டையில் அமைந்துள்ள மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பை மேற்கொண்டார். அதனை நிறைவு செய்த பின் தாய்நாடு திரும்பி யாழ். மாநகரசபையில் பிரதம சித்த மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றினார்.

இக் காலக்கட்டத்தில் இலவச சித்த ஆயுர்வேத மருத்துவ சாலைகளுக்கு மருந்துகள் தயாரித்து விநியோகிக்கும் திட்டத்தைப் புகுத்தினார். இது மிகவும் சிறந்த பலனைத் தந்துள்ளது.

மருந்துகளைத் தயாரிப்பதற்குப் பொதுவாக ஒரு நூல் இருப்பது அவசியம் என்பது அகில இலங்கை சித்தஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் அனைவரினதும் கருத்தாகும். இக் கருத்து அவருக்கு ஓர் உந்துசக்தியாக அமைந்தது. இது சம்பந்தமான ஒரு நூல் வெளியிடவேண்டும் எனும் அவா அவர் மனதில் எழுந்தது. அதற்கான ஆக்கவேலைகளை ஆரம்பித்தார்.

பின்னர் 1997ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவத் துறையில் விரிவுரையாளராகப் பதவி ஏற்றார். ஔடபாகத விதி அவர் கற்பிக்கும் ஒரு பாடமாகும். அதில் விரிவுரைகளுடன் செய்முறைகளும் அவசியம். இது அவரது புத்தக ஆக்க வேலைக்கான தேவையை மேலும் அதிகரிக்க வைத்தது எனலாம். இந்தச் செயற்பாடுகளின் வெளிப்பாடாகச் ''சித்த மருந்து முறையியல்'' என்ற இந்நூல் நம் கைகளில் இன்று தவழ்கின்றது. இது இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளதாகும்.

இதில் சித்த மருந்துகளின் தயாரிப்பு முறைகள் அடங்கியுள்ளன. சுதேச மருத்துவர்கள் தமது மருந்துகளைத் தாமே தயாரிக்க வேண்டும். சீரான முறையில் தயாரிப்பதற்கு வழி காட்டியாக நூல்கள் மிகவும் அவசியம். இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் ஓர் ஆரம்ப முயற்சியாக இந்நூல் அமைகின்றது.

வைத்திய கலாநிதி இராமநாதன் அவர்கள் பல மாதங்களாய் இரவு பகலாக இம்முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளார். இதன் மூலம் சித்த மருத்துவர்கள், சித்த மருத்துவ மாணவர்கள் எல்லோரும் சிறந்த பயனைப் பெறுவார்கள் என்பது உறுதி. அவரது முயற்சிகள் மேலும் விரிவடைந்து அடுத்த கட்டமாகத் தரப்படுத்தல் ரீதியாக மருந்துகள் தயாரிக்கப்படவேண்டும்.

அவரது பணிகள் எல்லாத் திக்கையும் சென்றடைந்து சிறந்த பெறுபேறுகளை அடைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

வளர்க அவர் பணி,

Dr. (Mrs ) ஞானாமிர்தம் பவானி



# மதிப்புரை

**Dr. (Mrs ) மிதிலைச்செல்வி ஸ்ரீகாந்தன் *M.D. (S)***
*முன்னாள் தலைவர்,*
*சித்த மருத்துவத்துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

''சித்த மருந்து முறையியல்'' என்னும் இந்நூலை எழுதிய எமது துறையைச் சார்ந்த விரிவுரையாளர் டாக்டர் பொன். இராமநாதன் அவர்களைக் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நான் நன்கு அறிவேன். பாளையங்கோட்டையில் அமைந்துள்ள மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புக்காக அங்கு சென்றபோதே டாக்டர் அவர்களை நேரில் சந்தித்துப் பழகும் வாய்ப்புக் கிட்டியது. நான் பொது மருத்துவப் பிரிவிலும் டாக்டர் இராமநாதன் அவர்கள் குணபாடப் பிரிவிலும் மேற்படிப்பை மேற்கொண்டிருந்த காலத்தில் அவர்களுடன் அதிகமான பரிட்சயம் ஏற்பட்டது. டாக்டர் அவர்கள் தமது குடும்பத்தினருடன் அங்கு தங்கியிருந்தார். அவரது தந்தையாரும் ஒரு பிரபல சித்த வைத்தியராக விளங்கினார் என்பதனை இணுவிலைச் சேர்ந்த எனது மாமனார் வாயிலாகவும் ஊர்மக்கள் மூலமாகவும் நான் அறிந்திருக்கிறேன்.

அந்த வகையில் ஒரு பரம்பரை வைத்திய மரபிலே வந்த டாக்டர் இராமநாதன் அவர்கள் ''சித்த மருந்து முறையியல்'' என்ற இந்நூலினை எழுதுவதற்கு மிகவும் பொருத்தமானவர் என்று குறிப்பிட வேண்டும். எமது யாழ் பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறையிலே இவர் மருந்து செய்முறைப் பிரிவிலே மிகவும் சிறப்பாகக் கற்பித்தும் செயல் முறைகளில் பயிற்சி அளித்தும் வருகின்றார். சித்த மருத்துவத்தில் அதியுயர் தகைமையும், மிகுந்த அனுபவமும் கொண்ட டாக்டர் இராமநாதன் அவர்களால் எழுதப்பட்ட இந்நூலானது எமது துறைப் பாடவிதானத்துக்கு ஒரு துணை நூலாக அமைவதற்கு ஏற்றதாகவும் எழுதியிருப்பதனைப் பாராட்டுகிறேன். இதன் மூலம் எமது துறை மாணவர்கள் பெரிதும் பயனடைவர்,

இப்படியானதொரு சிறந்த நூலை எமது துறை சார்ந்தோர் வெளியிடுவது பெருமைப்பட வேண்டிய தொன்றாகும். அவரது பெருமுயற்சியினையும் சேவையினையும் பெரிதும் பாராட்டி டாக்டர் அவர்கள் எமது துறைக்கு மேன்மேலும் புதிய ஆக்கங்களை உருவாக்கித் தரவேண்டும் என வாழ்த்துக் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். எல்லாம் வல்ல இறைவன் அவரது குடும்பத்தினரையும் ஆசீர்வதிப்பாராக.

**Dr. (Mrs.) மிதிலைச்செல்வி ஸ்ரீகாந்தன்**



# பொருளடக்கம்

## பகுதி 1

### சித்த மருந்துகளின் அட்டவணை


| மருந்து வகை | தொகை | பக்கம் |
|---|---|---|
| குடிநீர் | 24 | 01 |
| சூரணம் | 27 | 14 |
| மாத்திரை / குளிகை | 25 | 42 |
| இலேகியம் / இளகம் | 10 | 70 |
| மெழுகும் குழம்பும் | 05 | 87 |
| மணப்பாகு (Syrup) | 03 | 95 |
| எண்ணெய் (தைலம்) | 25 | 99 |
| செந்தூரம் | 11 | 131 |
| பற்பம் | 12 | 144 |
| கறுப்பு | 03 | 161 |
| புற மருந்துகள் | 23 | 166 |
| மொத்தத் தொகை ……… | 168 | |


### மருந்துச் சரக்குகளின் சுத்தி


| | | |
|---|---|---|
| 1– தாவர இனம் | 27 | 182 |
| 2– விலங்கினம் | 17 | 190 |
| 3– தாது இனம் | 42 | 194 |
| மொத்தத் தொகை ………… | 86 | |


## பகுதி 2


| | |
|---|---|
| மூலிகைகளிலிருந்து சாறு எடுக்கும் முறைகள் | 207 |
| கூட்டுச் சரக்குகள் | 213 |
| மருத்துவக் கலைச் சொற்கள் (வடமொழி – தென்மொழி) | 223 |
| தமிழ் எண்கள் | 225 |
| சீந்தில் சர்க்கரை எடுக்கும் முறை | 227 |
| புடங்களின் வகைகள் | 230 |
| மருத்துவ அளவைகள் | 234 |
| எந்திரங்கள் | 240 |

மருத்துவம் சார்ந்த சில முக்கிய விடயங்கள்


| | பக்கம் |
|---|---|
| வெடியுப்புச் செயநீர் தயாரிப்பு முறை | 152 |
| சீலை மண் செய்தல் | 159 |
| மாத்திரைக் கட்டு | 165 |
| தோலா இயந்திரம் | 182 |
| தாது இனச் சரக்குகளுக்குச் சுருக்குக் கொடுத்தல் | 193 |
| அனுபானம் (தேன், தாய்ப்பால்) | 228 |
| மருந்துகளைப் பழக வைத்தல் | 232 |
| ஐந்திணை நிலங்கள் | 232 |
| ஐம்பூதத் தலங்கள் | 232 |
| காய கற்பம் | 233 |
| மருந்து சார்ந்த இயல்கள் | 233 |




# பகுதி I

உ



## சித்தர் வணக்கம்

பார்த்திடவே நந்திசர், மூலத் ீசர்,
பண்பான அகத்திசர், சட்டைநாதர்,
போர்த்திடவே பதஞ்சலியும், ஊனர்கண்ணீர்,
கோரக்கர், கமலமுனி, சண்டிகேசர்,
கூர்த்திடவே இடைக்காடர், சிவாயசித்தர்,
கொங்கணவர், தநிந்தி போகநாதர்,
காத்திடவே மச்சமுனி, பிண்ணாக்கீசர்,
காலாங்கி சுந்தரரும் காப்புத்தானே.

*— தோற்றக் கிரம ஆராய்ச்சியும்*
*சித்த மருத்துவ வரலாறும்*

உ

சிவமயம்

# குடிநீர்

குறிப்பிட்ட சரக்குகளை ஒவ்வொன்றாக வெட்டி எடுத்து, இடித்துக் குறிப்பிட்ட அளவு தண்ணீர் விட்டுக் காய்ச்சி,அளவுப்படி குறுக்கி, வடித்து எடுத்துக் கொள்வது குடிநீராகும்.

அஃதாவது,உலர்ந்த மூலிகைச் சரக்குகளையாவது பச்சை மூலிகைச் சரக்குகளையாவது இடித்து, குறிப்பிடப்பட்டுள்ள அளவின்படி தண்ணீர் விட்டு 1/2, 1/4, 1/6, 1/8, 1/16 ஆகவாவது சரக்குகளுக்கு ஏற்பக் காய்ச்சிக் குறுக்கி, வடிகட்டி எடுத்துக் கொள்வதாகும்.

இவை உட்கொள்ளவும், கொப்பளிக்கவும், மருந்துகளை அரைக்கவும், மருந்துகளுக்குத் துணையாகவும் பலவாறு பயன் படுகின்றன.

குடிநீரில் சேர்க்கப்படும் சரக்குகளுக்கு 16 மடங்கு நீர் விட்டு $\frac{1}{8}$ ஆகச் சுண்டக் காய்ச்சி, வடித்து எடுப்பது பொது விதியாகும். மேலும் குடிநீர்ச் சரக்குகளின் அளவு குறிப்பிடப்படாதவிடத்து, குடிநீர்ச் சரக்கை ஒரு பலமாகவும் (40 கிராம்) அதற்கு 16 பலம் ( 20 அவுன்ஸ் அல்லது 625 மி.லீ) நீர் விட்டு $\frac{1}{8}$ ஆகக் காய்ச்சி வற்ற வைத்து எடுப்பதுவே நடைமுறை விதியாகும்.

குடிநீரில் சேர்க்கப்படும் சரக்குகளின் தன்மையைப் பொறுத்தும் நீரைச் சுண்டக் காய்ச்சும் அளவு மாறுபாடு அடையலாம். அவையாவன:

1. வைரக் கட்டைகள் இருப்பின் — $\frac{1}{16}$

2. வன்மையான வேர் இருப்பின் — $\frac{1}{12}$

3. கொடி நரம்பு போன்றவை இருப்பின் — $\frac{1}{8}$

4. இலை, சிறு பட்டை, கிழங்கு, தானியம், மாமிசம் போன்றவை இருப்பின் — $\frac{1}{6}$

மேற் குறிப்பிட்ட முறைப்படி குடிநீர் காய்ச்சும் போது அவற்றின் சத்துக்கள் முற்றாகக் குடிநீரில் சேருமெனலாம். ஆனால் கலப்பு இனமுள்ள குடிநீர்ச் சரக்குகளாயின், ⅛ ஆகக் காய்ச்சி, வற்றவைத்து எடுத்தல் பொது விதியாகும்.

குடிநீரில் சில சரக்குகள் கிளிகட்டிக் காய்ச்ச வேண்டி ஏற் படலாம். உதாரணமாக :- கொம்பரக்கு, பலவித பிசின், சிறிய இதழ்களையுடைய பூக்கள், நீரில் மிதக்கும் வித்துக்கள்.

பொதுவாகக் குடிநீரில் போடவேண்டிய சரக்குகளைச் சிறிது சிறிதாக வெட்டி, உரலிலிட்டு நொருக்கி ஒன்றாக வைத்துக் கொண்டு, அன்று அன்று தேவையானவற்றை முதல் நாள் இரவு நீரில் ஊறப்போட்டு, விடியற்காலை குறிப்பிட்டபடி காய்ச்சிக் குறுக்கி வடித்து உபயோகிக்கலாம். வடித்தபின் அதற்குள் நீர் விட்டுத் திரும்பவும் ஊறவைத்து, அன்று இரவு காய்ச்சி வடிகட்டிக் குடிக்கலாம். மறுநாள் புதிதாகப் போடவேண்டும். இதுவே நடைமுறையாகும்.

எவ்வகைக் குடிநீரையும் தயாரிக்கும்போது, கமலாக்கினி யாகவே எரிக்கவேண்டும். வடி கட்டிய குடிநீரை இளஞ்சூட் டுடன் அருந்துதல் சிறந்ததாகும்.

மருத்துவ நூலின்படி குடிநீரின் ஆயுட்காலம் - 3 மணி நேர மாகும்; ஆனால் 24 மணி நேரம் வரை அதனைப் பாதுகாத்தும் உபயோகிக்கலாம்.



# குடிநீர் வகைகள்

01. வளி வெப்புக் குடிநீர்
02. பித்த வெப்புக் குடிநீர்
03. ஐய வெப்புக் குடிநீர்
04. நில வேம்புக் குடிநீர் (N. V குடிநீர்)
05. நொச்சிக் குடிநீர்
06. முறைச் சுரத்துக்கு — குடிநீர்
07. நீர் முள்ளிக் குடிநீர் (N. M குடிநீர்)
08. ஆடா தோடைக் குடிநீர்
09. செங்கண் மாரிக் குடிநீர்
10. அன்னக் குடிநீர்
11. நாக்குப் பூச்சிக் குடிநீர்
12. கருக்குக் குடிநீர்
13. ஆமணக்கம் வேர்க் குடிநீர்
14. சாத்தா வாரிக் குடிநீர்
15. தொய்வுக் குடிநீர்
16. நாட்பட்ட சருமரோகக் குடிநீர்
17. ஷடங்க பாணிக் குடிநீர்
18. சிறுபிள்ளைக்கு — கிருமிக் குடிநீர்
19. விக்கலுக்கு — குடிநீர்
20. வாந்தி நிவாரணக் குடிநீர்
21. சுக பேதிக் குடிநீர்
22. பெரும் பாட்டுக்கு — குடிநீர்
23. வயிற்றோட்ட நிவாரணக் குடிநீர்
24. பிரப்பங்கிழங்காதிக் குடிநீர்.

## 01) வளி வெப்புக் குடிநீர் [வாத சுரம்]

01. பெருங்காஞ்சோன்றி வேர்
02. திற்பலி மூலம்
03. சித்திர மூலம்
04. இயங்கம் வேர்
05. வெள்ளறுகு
06. நில வேம்பு
07. பலாசம் வித்து
08. கழற்சி வேர்
09. கண்டங் கத்தரி
10. பேராமாட்டி
11. சிற்றரத்தை
12. மாவிலங்கம் வேர்
13. பேரரத்தை
14. சிறுகாஞ்சோன்றி வேர்
15. சதகுப்பை
16. விஷ்ணுகிராந்தி
17. சிறுதேக்கு
18. சுக்கு
19. திப்பலி
20. செவ்வியம்
21. கோட்டம்

இவற்றை எல்லாம் சம பங்காக எடுத்து, இடித்து 21 பாகங்களாக்கி ஒரு பாத்திரத்திலிட்டு ஒரு பாகத்திற்கு மூன்று லீற்றர் என்ற வீதப்படி நீர் ஊற்றி ஊறவிட்டபின், அதனை அடுப்பேற்றி 250 மில்லி லீற்றராக சுண்டக் காய்ச்சி இறக்கிக் கொள்க. வாதராட்சதன் குளிகை பணவெடை(488 m.g) எடுத்துப் பொடித்து தேன் 3 மில்லி சேர்த்து, இழைத்து(உரைத்து) மேற்படி குடிநீருடன் தினம் இருவேளை கொடுத்து வர வாத சுரங்கள், நடுக்கு வாதம் தீரும்.

## 02) பித்த வெப்புக் குடிநீர் (பித்த சுரம்)

01. விலாமிச்சம் வேர்
02. சிறுகாஞ்சோன்றி வேர்
03. வில்வம் வேர்
04. பாதிரி வேர்
05. அதிமதுரம்
06. வெண்கோட்டம்
07. நன்னாரி வேர்
08. நிலவாகை
09. நற்சீரகம்
10. கொத்தமல்லி
11. தும்பை வேர்
12. பேரீச்சம் காய்
13. யானைத் திப்பலி
14. நெல்லி வற்றல்
15. சுக்கு



இவற்றை வகைக்கு ஒருபலம் (40 கிராம்) எடுத்து இடித்து 10 பங்காகப் பிரித்து,ஒரு பங்கை 3 லீற்றர் நீர்விட்டு ஊறவிட்டு எட்டிலொன்றாகச் சுண்டக் காய்ச்சி வைத்துக் கொண்டு,கோரோசனை மாத்திரையைத் தேனில் உரைத்துக் கொடுத்தபின் இக் குடிநீரையும் இருவேளை அருந்த, பித்த சுரம் நீங்கும்.

## 03) ஐய வெப்புக் குடிநீர் (கப சுரம்)

1. சுக்கு
2. திற்பலி
3. சுராம்பு
4. சிறுகாஞ்சோன்றி வேர்
5. அக்கராகாரம்
6. முள்ளி வேர்
7. கடுக்காய்த் தோல்
8. ஆடாதோடை வேர்
9. கற்பூரவள்ளி
10. வெண்கோட்டம்
11. சீந்தில்
12. சிறுதேக்கு
13. நிலவேம்பு
14. வட்டத்துத்தி
15. கோரைக் கிழங்கு

இவற்றை வகைக்கு 35 கிராம் எடுத்து இடித்து, 15 பங்காகப் பிரித்து, ஒரு பங்குக்கு 2.8 லீற்றர் நீர்விட்டு அதனை எட்டிலொன்றாகச் சுருக்கிக் காய்ச்சி வைத்துக்கொண்டு காலை மாலை கோரோசனை மாத்திரை அல்லது சந்திரோதய மாத்திரையைத் தேன்விட்டு குழைத்து (உரைத்து)க் குடிநீருடன் உட்கொள்ள, கப சுரங்கள் திரும்.

## 04) நிலவேம்புக் குடிநீர் (N. V. குடிநீர்)

1. நிலவேம்பு
2. வெட்டிவேர்
3. விலாமிச்சம் வேர்
4. சந்தனத் தூள்
5. பேய்ப் புடோல்
6. கோரைக் கிழங்கு
7. சுக்கு
8. மிளகு
9. பற்படாகம்

இவற்றை வகைக்கு 8.75 கிராம் எடுத்து விதிப்படி குடிநீர் செய்து ,30 – 40 மி. லீற்றர் அருந்திவரப் பொதுவான சுரங்கள் நீங்கும்.

## 05 நொச்சிக் குடிநீர்

நொச்சிக் கொழுந்து ஒரு பிடி, மிளகு - கால்பலம் (10 கிராம்), பூடு - 4. 2 கிராம், வெற்றிலை - பத்து இலைகளைச் சேர்த்து, முறைப்படி குடிநீர் செய்து 30 - 60 மி. லீ. வீதம் காலை மாலை அருந்திவர, குளிர்ச் சுரம் தீரும்.

## 06) முறைச் சுரத்துக்கு குடிநீர்

*[மலேரியாவுக்கும் உகந்தது]*

1. அதிவிடயம்
2. திரிகடுகு
3. வெட்பாலை
4. சிறுமூலம்
5. தேவதாரம்
6. மதுரம்
7. பேய்ப்புடோல்
8. ஆடாதோடை
9. இலுப்பைப் பூ/பட்டை
10 வேப்பம் பட்டை
11. கோட்டம்
12. மஞ்சள்
13. வசம்பு
14. பெருங்குரும்பை
15. மல்லி
16. சாத்தாவாரி
17. தாமரைப் பூ
18. பற்படாகம்
19. நிலவேம்பு
20. இருவேலி
21. விலாமிச்சு
22. கோரைக் கிழங்கு
23. சீந்தில்
24. நன்னாரி
25. சிற்றாமட்டி

மேற்கூறியவை வகைக்கு 10 கிராம் எடுத்து 2½ லீற்றர் நீர் விட்டு அதனை நாலிலொன்றாகச் சுருக்கி 25-35 மி. லீ. அளவு மூன்று முறை கொடுக்கலாம். வேண்டிய இடத்து, கூடவும் உபயோகிக்கலாம்.

மிருத்திஞ்சியரச மாத்திரை அல்லது திரிபுவன கீர்த்திரச போன்ற மாத்திரைகளையும் சேர்த்து உபயோகிக்கலாம்.



## 07) நீர் முள்ளிக் குடிநீர் (N. M குடிநீர்)

1. நெருஞ்சில்
2. நெல்லிவற்றல்
3. நீர்முள்ளி
4. பறங்கிக் கிழங்கு
5. மணத்தக்காளி வற்றல்
6. சரக்கொன்றைப் புளி
7. சோம்பு
8. வெள்ளரி வித்து
9. சுரைக் கொடி
10. கடுக்காய்
11. தான்றிக்காய்

இவை வகைக்கு 4. 2 கிராம் எடுத்து முறைப்படி நீர்விட்டுக் காய்ச்சி வடிகட்டி, காலை மாலை 60 மி. லீ. குடித்துவர, நீரைப் பெருக்கிச் சோபை ரோகத்தைப் போக்கும்; நீர் கட்டுக்கும் உபயோகிக்கலாம்.

## 08) ஆடாதோடைக் குடிநீர்

ஆடாதோடையிலை இரண்டு அல்லது மூன்று எடுத்துச் சிறுக அரிந்து தேன் விட்டு வதக்கி,

1. அதிமதுரம்
2. தாளிச பத்திரி
3. அரிசித் திப்பலி

இவை வகைக்கு அரைவராகன் (2 கிராம்) தட்டிச் சேர்த்து முறைப்படி குடிநீர் செய்து, காலை மாலை இருவேளையும் 30-40 மி. லீ. வீதம் கொடுக்க, இருமல், சுவாசம் போன்ற சுவாசாசய நோய்கள் நீங்கும்; பசியின்மையும் தீரும்.

## 09) செங்கண் மாரிக்கு — குடிநீர்

1. சிற்றாமட்டி
2. வில்வம் வேர்
3. சிறு நெருஞ்சில்
4. செந்தாமரைக் கிழங்கு
5. சிறு பயறு
6. மல்லி
7. சுக்கு
8. நெற் பொரி
9. நற்சீரகம்

வகைக்கு 20 கிராம் வீதம் எடுத்து, செவ்விளநீர் 3 படி (5 போத்தல்) சேர்த்து ¼ பங்காக வற்ற வைத்து, 30 - 60 மி. லீ. வீதம் தினம் மூன்று வேளை கொடுத்து வரவும். இக்குடிநீருடன் பூரணச் சந்திராதி மாத்திரை, சாந்த சந்திரோதய மாத்திரை, மிருந்த சஞ்சீவி மாத்திரை ஆகியவற்றில் ஒன்றைச் சேர்த்துக் கொடுக்கலாம்.

தீரும் நோய்கள் —

செங்கண்மாரி, செங்கண்மாரிச் சுரம், பித்தப்பை, ஈரல் வீக்கம் பித்தப்பைக் கல், பித்தப்பை விரணம் ஆகியன நீங்கும்.

## 10) அன்னக் குடிநீர்

1. வில்வம் வேர்
2. நெற் பொரி
3. வறுத்த அரிசி
4. சுக்கு

இவற்றை வகைக்குச் சமனாக எடுத்து, விதிப்படி குடிநீர் காய்ச்சி ⅛ ஆக வற்ற வைத்துக் காலை மாலை 60-120 மி. லீ. வீதம் அருந்திவரத் தாகம், நாவறட்சி, தேகச்சூடு முதலியன தீரும்.

## 11) நாக்குப் பூச்சிக் குடிநீர்

| | | |
|---|---|---|
| 1. | பலாசம் வித்து (சுத்தி செய்தது) | 140g |
| 2 | கருஞ்சீரகம் | 140g |
| 3 | வாய்விடங்கம் | 140g |
| 4. | ஓமம் | 140g |
| 5. | சிவதை வேர் | 140g |
| 6. | நிலாவாரை | 140g |
| 7. | சோம்பு | 140g |
| 8. | கடுகு ரோகிணி | 70g |

இவற்றை ஒன்று சேர்த்து இடித்து, நொருக்கி முறைப்படி குடிநீர் செய்து, 30 - 60 மி. லீற்றர் கொடுக்கப் பேதியாகும். நிலமைக்கு ஏற்ப இருமுறையோ, மூன்று முறையோ உபயோகிக்கலாம். குடலில் உள்ள பூச்சிகள் புழுக்கள் நீங்கும்.



## 12) கருக்குக் குடிநீர்

*(பரராசசேகரம் பால ரோக நிதானம்)*

1. சுக்கு
2. வசம்பு
3. உள்ளி
4. கடுக்காய்
5. இந்துப்பு
6. கருஞ்சீரகம்
7. திற்பலி
8. வேப்பங்கூர்
9. மிளகு
10. அசமதாகம்
11. கடுகு
12. வெந்தயம்
13. மல்லி
14. புழுங்கலரிசி

வகைக்கு 5 கிராம் வீதம் எடுத்து வறுத்து அவித்துக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் —

சிறுவர்களுக்கு ஏற்படும் மாந்தம், கழிச்சல், வயிற்றோட்டம் போன்றவை நீங்கும்.

## 13) ஆமணக்கம் வேர்க் குடிநீர்

1. ஆமணக்கம் வேர்
2. வில்வம் வேர்
3. வட்டுக்கத்திரி வேர்
4. கண்டங்கத்திரி
5. புளித்தோடை
6. பீளை சாறி
7. நெருஞ்சில்

இவற்றினைச் சம எடையாக எடுத்து, விதிப்படி குடிநீர் செய்து, 30 - 60 மி. லீற்றர் வீதம் காலை மாலை அருந்திவர, பொதுவான வாத ரோகங்கள் தீரும். இது இருத்தரிசி (Sciatica) நோயில் சிறந்த பலனைக் கொடுக்கவல்லது.

## 14) சாத்தாவாரிக் குடிநீர்

1. சாத்தாவாரி
2. நன்னாரி
3. வெண்சந்தனம்
4. விலாமிச்சு
5. அதிமதுரம்
6. மஞ்சிஸ்ட்டி
7. முந்திரிகைப் பழம்
8. இருவேலி
9. நிலப்பனங் கிழங்கு
10. அல்லிக் கிழங்கு

இவற்றைச் சம எடையாக எடுத்து, விதிப்படி குடிநீர் செய்து, 30 – 60 மி. லீற்றர் வீதம் காலை மாலை அருந்தவும்.

**தீரும் நோய் –**

இது உடம்பில் உள்ள எல்லா மண்டலங்களையும் குளிர்மை அடையச் செய்யும். அத்துடன் வெள்ளை சாய்தல் (Leucorrhoea) நோய்க்கும் சிறந்த குணத்தைக் கொடுக்கும்.

## 15) தொய்வுக் குடிநீர்

| | |
|---|---|
| 1. வெண்கோட்டம் | 5. அதிமதுரம் |
| 2. சுக்கு | 6. கண்டங் கத்திரி |
| 3. சிறுதேக்கு | 7. ஆடாதோடை |
| 4. இடாமாஞ்சில் | 8. நாயுருவி |

இவற்றைச் சம எடையாக எடுத்து முறைப்படி குடிநீர் செய்து, 30 – 60 மி. லீற்றர் வீதம் காலை மாலை இருவேளை அருந்தி வரலாம்.

**தீரும் நோய் –**

சுவாச ரோகங்கள் குறிப்பாக ஈளை ரோகத்தில் (இரைப்பு) Bronchial Asthma வில் சிறந்த நலத்தைக் கொடுக்கும்.

## 16) நாட்பட்ட சருமநோய்க் குடிநீர்

| | |
|---|---|
| 1 கடுக்காய் | 5. பேய்ப்புடல் |
| 2. தாண்டிக்காய் | 6. கடுகு ரோகணி |
| 3. நெல்லிக்காய் | 7. சாத்தாவாரி |
| 4. சீந்தில் | |

இவற்றைச், சம எடையாக எடுத்து, விதிப்படி குடிநீர் செய்து, 30 – 60 மி. லீற்றர் வீதம் தினம் இருமுறை உபயோகிக்கலாம்.

**தீரும் நோய் –**

இது நாட்பட்ட சரும நோய்களுக்கு ( Eczema ) சிறந்த பலனைக் கொடுக்கும். அத்துடன் Oesinophilia வையும் குறைக்க வல்லது.



## 17) ஷடங்க பாணிக் குடிநீர்

| | |
|---|---|
| 1. கோரைக் கிழங்கு | 4. பற்படாகம் |
| 2. செஞ் சந்தனம் | 5. விலாமிச்சு |
| 3. வெட்டி வேர் | 6. சுக்கு |

இவற்றைச் சம எடையாக எடுத்து, முறைப்படி குடிநீர் செய்து 30 – 60 மி. லீற்றர் வீதம் தினம் மூன்றுவேளை அருந்தலாம்.

**தீரும் நோய்–**

பித்த சுரம் (Jaundice) போன்றவை. நாவறட்சி, தேக எரிவு, வயிறு எரிவு ஆகியனவற்றுக்குச் சிறந்தது. அதிசார சுரத்திற்கும் (Typhoid fever) உபயோகிக்கலாம்.

## 18) சிறுபிள்ளைக்கு — கிருமிக் குடிநீர்

| | |
|---|---|
| 1. கிருமி சத்துரு | 5. துவரம் பருப்பு |
| 2. வாய்விடங்கம் | 6. கறிவேம்புக் கூர் |
| 3. வேப்பங் கூர் | 7. முருங்கைக்காய்த் தோல் |
| 4. மாம் பித்து | 8. மாதுளம் வேர் |

இவை வகைக்கு 15 கிராம், கராம்பு 3 கிராம் எடுத்து விதிப்படி குடிநீர் செய்து, 30 – 60 மி. லீற்றர் காலை மாலை அருந்தவும்.

பெரியவர்களுக்கு (6 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு) ஈச்சம் குருத்து, ஆடுதீண்டாப் பாலை சேர்க்கலாம். குடல் பூச்சிகள் நீங்கும்.

குறிப்பு:- கராம்பின் அளவு 3 கிராமிற்கு அதிகரிக்கக் கூடாது.

## 19) விக்கலுக்கு — குடிநீர்

| | |
|---|---|
| 1. மயில் இறகு சுட்ட சாம்பல் | 5. தாமரை வித்து |
| 2. அதிமதுரம் | 6. பனங் கற்கண்டு |
| 3. ஏலம் | 7. சீனி |
| 4. திற்பலி | |

இவை வகைக்கு 10 கிராம் எடுத்து வறுத்தவித்த குடிநீர் செய்து, அத்துடன் தேன் கலந்து கொடுக்கலாம்.

## 20) வாந்தி நிவாரணக் குடிநீர்

நல்ல சாம்பிராணி 200 கிராம் நன்றாகப் பொடித்து, அதனை ஒரு சிறிய வெள்ளைத் துணியிற் பரவி, திரித்து, ஒரு மண்கட்டியில் வைத்து எரித்துச் சாம்பலாக்கியபின், அரை லீற்றர் நீர் விட்டு, அதனை எட்டிலொன்றாகக் காய்ச்சி வடித்துக் கொடுக்க, பொதுவாக ஏற்படும் வாந்தி குணமடையும்.

## 21) சுகபேதிக் குடிநீர்

1. கடுக்காய்த் தோல்
2. பிரமி
3. சூரத்து நிலாவாரை
4. நில பாவல் இலை
5. றோசாப் பூ
6. கற்றாளம் சருகு
7. வெங்காயம்
8. கடுகுரோகணி

இவை வகைக்கு 10 கிராம் எடுத்து, ஒரு லீற்றர் நீர் விட்டு எரித்து ¼ பங்காக்கி, நேரம் 100 மி. லீ. பனங்கட்டி சேர்த்துக் குடிக்கவும். தேக பலம் கண்டு, அளவைக் கூட்டிக் கொடுக்கலாம்.

## 22) பெரும்பாட்டுக்கு -- குடிநீர்

1. வெந்தயம்
2. ஓமம்
3. நற்சீரகம்
4. கடுக்காய்
5. களிப்பாக்கு
6. மாயாக்காய்
7. காசுக்கட்டி
8. தென்னங் குரும்பைக் கயர்
9. அத்திப் பட்டை
10. நாவற் பட்டை
11. கருவேலம் பட்டை

இவை வகைக்கு 10 கிராம் எடுத்து வறுத்து 2 லீற்றர் நீர் விட்டு அரை லீற்றராகச் சுண்டக் காய்ச்சி, நேரம் 25 – 50 மி. லீ. குடிநீரில் தேன் விட்டுக் குடிக்கவும்.

## 23) வயிற்றோட்ட நிவாரணக் குடிநீர்

1. அத்திப் பட்டை
2. நாவற் பட்டை
3. கருவேலம் பட்டை
4. கோரைக் கிழங்கு
5. அக்கராகாரம்
6. அதிவிடயம்
7. மலைதாங்கி வேர்
8. திற்பலி
9. ஓமம்
10. ஏலம்
11. வெந்தயம்
12. மாதுளை ஓடு
13. மாங்கொட்டைப் பருப்பு
14. வெட்பாலையரிசி



இவை வகைக்கு 10 கிராம் வீதம் எடுத்துத் தனித்தனியே வறுத்து 2 லீற்றர் தண்ணீர்விட்டு அரை லீற்றராகக் குறுக்கி, நேரம் 25 – 35 மி. லீ. குடிநீர் காலை மாலை தேன் கலந்து கொடுக்கவும். இதனை 4 – 7 நாட்கள் வரை உபயோகிக்கலாம்.

## 24) பிரப்பங் கிழங்காதிக் குடிநீர்

(வாதத்துக்கு)

1. அமுக்கிராக் கிழங்கு
2. பறங்கிக் கிழங்கு
3. இயங்கம் வேர்
4. பிரப்பங் கிழங்கு
5. வட்டு வேர்
6. கொடிவேலி

இவ்வாறும் வகைக்கு 40 கிராம்

7. சாறணை வேர்
8. தூதுவளை வேர்
9. கண்டங்கத்தரி வேர்
10. நன்னாரி வேர்

இந்நான்கும் வகைக்கு 20 கிராம்

11. கடுகுரோகணி
12. திரிகடுகு
13. வசுவாசி
14. சித்தரத்தை
15. சாதிக்காய்
16. கராம்பு
17. செவ் வள்ளி
18. வாய்விடங்கம்

இவை வகைக்கு 5 கிராம்

மேற்குறித்த சரக்குவகை 60 கிராமுக்கு ஒரு லீற்றர் வீதம் நீர் விட்டுக் காலாகக் குறுக்கி, 35 – 50 மி. லீ. வீதம் தினம் மூன்றுவேளை உபயோகிக்கலாம்.

தீரும் நோய் —

வாத ரோகங்கள் தீரும்.

# சூரணம்

தனிச் சரக்கின் அல்லது கூட்டுச் சரக்குகளின் பொடித்த நுண்ணிய துகள்களே சூரணம் எனப்படும்.

சூரணங்களிற் சேரும் சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து உலர்த்த வேண்டிய சரக்குகளை உலர்த்தியும் வறுக்க வேண்டியவற்றை வறுத்தும் தனித்தனியே இடித்தபின் வஸ்திரகாயம் செய்து குறிப்பிட்ட எடைப்படி ஒன்று சேர்த்துக் கலந்து கொள்வது செய் முறையாகும்.

சூரணங்களில் கற் சரக்குகள் சேருமிடத்து, கல்வத்திவிட்டு அரைத்துச் சேர்க்கலாம். பிசின் போன்ற சரக்குகளைக் கரைத்தாவது அல்லது கல்வத்தில் இட்டு அரைத்தாவது சேர்த்துக் கொள்ளலாம். சூரணங்களைப் புடம்போடும்படி குறிப்பிட்டிருப்பின், பொதுவாக ஓர் அளவில் வறுத்து, அரைத்து எடுப்பது எனக் கருதவும். மருந்துகளிற் கூறப்படும் முறைக்கு ஏற்பக் கவனித்தல் வேண்டும்.

சூரணங்கள் நுண்ணிய துகள்களாகவும் ஈரமற்றதாகவும் இருக்கவேண்டும்.

**ஆயுட்காலம் –**

இது மூன்று மாதங்கள் வரை வன்மையுடையது. (இதனைக் காற்றுப்புகாத வண்ணம் வைக்கப் பண்ணுமிடத்து, மூன்று மாதங்களுக்கு மேலும் வன்மையுடையதாகக் காணப்படலாம்)

## சூரண வகைகள்

1. (A) அமுக்கிராய்ச் சூரணம்
   (B) அமுக்கிராய்ச் சூரணம்
2. அமுது சர்க்கரைச் சூரணம்
3. (A) அட்ட சூரணம்
   (B) அட்ட சூரணம்
4. அசைச் சூரணம்
5. இலகு விரேசனச் சூரணம்
6. இஞ்சிச் சூரணம்
7. ஏலாதிச் சூரணம்
8. கழற்சிச் சூரணம்
9. கெந்தக இரசாயணம்
10. சந்திர காந்தச் சூரணம்
11. சிவதைச் சூரணம்
12. சீதோ பலாதிச் சூரணம்
13. தயிர் சுண்டிச் சூரணம்
14. தசமூலச் சூரணம்
15. தாளிசாதிச் சூரணம்
16. தாது விருத்திச் சூரணம்
17. திரிபலாச் சூரணம்
18. நிலவாகைச் சூரணம்
19. பஞ்ச தீபாக்கினிச் சூரணம்
20. (A) பறங்கிக் கிழங்குச் சூரணம்
    (B) பறங்கிக் கிழங்குச் சூரணம்
21. பாஸ்க்கர லவணம்
22. பெரியகறுப்புத் தூள்
23. மல்லிச் சூரணம்
24. மது மேகச் சூரணம்
25. மயிலிறகாதிச் சூரணம்
26. மாதுளை ஒட்டுச் சூரணம்
27. முடக்குச் சூரணம்

## 1) A அமுக்கிராய்ச் சூரணம் (AMK சூரணம்)

(கண்ணுச்சாமிப் பரம்பரை வைத்தியம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | சுக்கு | — 10 | கிராம் |
| 2. | திற்பலி | — 10 | ,, |
| 3. | மிளகு | — 10 | ,, |
| 4. | இலவங்கப் பத்திரி | — 10 | ,, |
| 5. | கராம்பு | — 10 | ,, |
| 6. | குரோசாணி ஓமம் | — 10 | ,, |
| 7. | சாதிக்காய் | — 10 | ,, |
| 8. | அதிமதுரம் | — 10 | ,, |
| 9. | கடுகுரோகிணி | — 10 | ,, |
| 10. | சுத்திசெய்த அமுக்கிராய்க்கிழங்கு | — 180 | ,, |
| 11. | சீனி | — 270 | ,, |

**செய் முறை -**

மேற்கூறப்பட்ட சரக்குகளை வெவ்வேறாகப் பொடித்து, பின்பு மூன்று சேர்த்து அரைக்கவும். சீனியை இறுதியாக அரைத்துச் சேர்க்கவும்.

**அளவு —**

500 - 2000 மி. கிராம். தினம் இருவேளை

**அனுபானம் —**

தேன் / வெந்நீர்

**தீரும் நோய்கள் —**

வாதரோகங்களுக்கு உபயோகிக்கக்கூடிய பொதுவான மருந்தாகும். நரம்பு சம்பந்தப்பட்ட உளைவு, குத்து, பிடிப்பு ஆகியன தீரும். பித்த வாய்வு, அரோசகம், குன்மம், எலும்புருக்கி நோய் முதலியன நீங்கும். விசேடமாக அழல்வாதத்துக்கு (Neuritis) இதனை உபயோகிக்கலாம்.



## 01 B அமுக்கிராய்ச் சூரணம் (A M K சூரணம்)

(IMPCOPS முறை - இந்தியா)

(தேரையர் கரிசல் - 300, அகத்தியர் வைத்தியரத்தினச்சுருக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | கராம்பு | — 10 | கிராம் |
| 2- | சிறுநாகப் பூ | — 20 | ,, |
| 3. | ஏலம் | — 40 | ,, |
| 4- | மிளகு | — 80 | ,, |
| 5. | திற்பலி | — 160 | ,, |
| 6. | சுக்கு | — 320 | ,, |
| 7. | நாட்டுஅமுக்கிராய் | — 640 | ,, |
| 8. | சீனி | — 1280 | ,, |

**செய் முறை —**

மேற்குறிப்பிட்டவற்றுள் சீனி நீங்கலாக, மற்றைய சரக்குகளிலே தூய்மை செய்யவேண்டியதைத் தூய்மைசெய்து, முறைப்படி இடித்து அரித்துச் சீனியைச் சேர்த்துக் கலந்து வைக்கவும்.

**அளவு -**

1 - 2 கிராம்.
தினம் — இருவேளை.

**அனுபானம் -**

தேன் அல்லது வெந்நீர்.

**தீரும் நோய்கள் -**

எண்வகைக் குன்மம், இடப்பாட்டு ஈரல் நோய்கள், குத்துவாய்வு, மேக வெட்டை, வெள்ளை, வறட்சி, கைகால் எரிவு, கயம், இரைப்பு, இளைப்புச் சயம், விக்கல், பாண்டு, விந்து நட்டம்.

## 02 அமுது சர்க்கரைச் சூரணம்

(சித்த அவுடத செய் முறை)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | ஓமம் | | — 25 | கிராம் |
| 02. | அதிமதுரம் | | — 25 | ,, |
| 03. | சாதிக்காய் | | — 25 | ,, |
| 04. | சாதிபத்திரி | | — 25 | ,, |
| 05. | அதிவிடயம் | | — 25 | ,, |
| 06. | வெண்கோட்டம் | | — 25 | ,, |
| 07. | ஏலம் | | — 25 | ,, |
| 08. | குரோசாணி ஓமம் | | — 25 | ,, |
| 09. | கராம்பு | | — 25 | ,, |
| 10. | வசுவாசி | | — 25 | ,, |
| 11. | நற்சீரகம் | | — 25 | ,, |
| 12. | ஆவரசம் பட்டை | ஆவரசம் பஞ்ஞாங்கம் | — 25 | ,, |
| 13. | ஆவரசம் பிஞ்சு | | — 25 | ,, |
| 14. | ஆவரசம் துளிர் | | — 25 | ,, |
| 15. | ஆவரசம் பூ | | — 25 | ,, |
| 16. | ஆவரசம் வேர் | | — 25 | ,, |
| 17. | ஆவரசம் வித்து | | — 25 | ,, |
| 18. | தாமரை வித்து பருப்பு | | | |
| | | எண்ணிக்கை | — 100 | |

செய் முறை –

மேற்கூறியவற்றைச் சூரணம் செய்துகொள்ளவும். பின்னர்—

அபின்

கஞ்சா வித்து

கஸ்தூரி

புனுகு

வகைக்கு — (1¼ கழஞ்சு) 6¼ கிராம்

சீந்தில் மா — 1500 கிராம்

இவற்றைக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து, முன் குறிப்பிட்ட சூரணத்துடன் சேர்த்து மீண்டும் அரைத்து, வைத்துக் கொள்ளவும்.



அளவு-

1¼ கிராம் — 2½ கிராம் வரை.

காலை, மாலை இருவேளை.

அனுபானம் –

தேன், / நெய், / பசு வெண்ணெய், / பால்.

தீரும், நோய்கள் -

நீரிழிவு நோயில் ஏற்படுகின்ற அழல் வாதம் (Neuritis), கால் எரிவு, குத்து, அழற்சி, வயிற்றெரிவு, நீர்க்கடுப்பு, சலக்கழிச்சல், மலச்சிக்கல் ஆகியன தீரும். தேகம் மெலிவு அடைவது நீங்கும். இது மதுமேக நோயாளிகட்கு சிறந்த மருந்து.

## 03 A அட்ட சூரணம்

(சுதேச வைத்திய அவுடதத் திரட்டு)

1. கருஞ்சீரகம்
2. நற்சீரகம்
3. கடுகு
4. மிளகு
5. உள்ளி
6. இந்துப்பு
7. பெருங்காயம்
8. அசமதாகம்

வகைக்கு — சம அளவு.

செய் முறை –

இவற்றை இளம்பதமாக வறுத்து, இடித்து விதிப்படி, சூரணம் செய்து கொள்க.

அளவு –

250 – 1000 மி. கிராம்,

காலை, மாலை — இருவேளை.

அனுபானம் –

வெந்நீர், / தேன், / வேண்டியவை

தீரும் நோய்கள் –

வாயு, வயிற்றுவலி, குன்மம், கெற்பவாயு, ஆகியன தீரும்.

## 03 B அட்ட சூரணம்

(யாழ் மாநகரசபை முறை)

| | | | |
|---|---|---|---|
| 1. | ஓமம் | — 10 | கிராம் |
| 2. | பெருங்காயம் | — 20 | ,, |
| 3. | இந்துப்பு | — 30 | ,, |
| 4. | மிளகு | — 40 | ,, |
| 5. | நற்சீரகம் | — 50 | ,, |
| 6. | கருஞ்சீரகம் | — 60 | ,, |
| 7. | சுக்கு | — 70 | ,, |
| 8. | திற்பலி | — 80 | ,, |

**செய் முறை —**

துணைமருந்து, தீரும் நோய் எல்லாம் முன்னையதுபோல் எனலாம்.

## 04 அசைச் சூரணம் [ சீரகம் ]

(பாளையங்கோட்டை சித்த மருத்துவ மனை முறை)

| | | | |
|---|---|---|---|
| 1. | சீரகம் | — 1 | கி. கி |
| 2. | தேசிக்காய் ( பழம் ) | — 300 | எண்ணிக்கை |

**செய் முறை —**

கல், மண், தூசி, நீக்கிய சீரகத்தை ஒரு பீங்கானில் இட்டு அதை மூழ்கும்படி பழச்சாற்றை விட்டு ஊறவைத்து நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணமாக்கி எடுத்த எடைக்குக் கால்பங்கு சீனி கூட்டி வைக்கவும்.

**அளவு —**

1 – 2 கிராம்; தினம் — இருவேளை

**அனுபானம் —**

வெந்நீர்

**தீரும் நோய்கள் —**

பித்த நோய்கள், தலைக் கிறுகிறுப்பு, வாந்தி, அக்கினிமாந்தம், உஷ்ணம், காங்கை ஆகியன தீரும். Hypertension நோய்க்கு ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால், பலன் கிடைக்கும்.



## 05 இலகு விரேச்சனச் சூரணம் (Lax. Powder)

(யாழ் மாநகரசபை முறை)

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரத்து நில ஆவாரை | — 120 | கிராம் |
| 2. | கடுக்காய்த் தோல் | — 120 | ,, |
| 3. | அதிமதுரம் | — 60 | ,, |
| 4. | றோசாப் பூ | — 60 | ,, |
| 5. | சீரகம் | — 30 | ,, |
| 6. | சிவதை (சுத்தித்தது) | — 30 | ,, |
| 7. | ஏலம் | — 15 | ,, |

**செய் முறை —**

இவற்றை உலரவைத்து இடித்து சூரணமாகப் பத்திரப் படுத்தவும்.

**அளவு —**

1 – 5 கிராம் வரை
(இரவு மட்டும்)

**அனுபானம் —**

பனங்கட்டி, / சர்க்கரை, / சீனி

**தீரும் நோய்கள்**

மலக்கட்டு நீங்கும்

## 06 இஞ்சிச் சூரணம்

(சித்த வைத்தியத் திரட்டு)

| | | | |
|---|---|---|---|
| 1. | தோல் நீக்கிய இஞ்சி | — 1400 | கிராம் |
| 2. | சுத்தம் செய்த நற்சீரகம் | — 700 | கிராம் |

**செய் முறை —**

தோல் நீக்கிய இஞ்சி 1400 கிராம் துண்டு துண்டாக அறுத்து உலர்த்தி நெய்யில் பொரித்துப் பொடியாக்கி சுத்தம்செய்த சீரகத்தை 700 கிராம் எடுத்துப் பொன்வறுவலாக வறுத்து

இடித்துப் பொடியாக்கி, இவ்விரண்டும் சேர்ந்த எடை அதாவது 2100 கிராமை சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து வைக்கவும்.

**அளவு —**

1 – 2 கிராம்

தினம் — இருவேளை வெந்நீருடன்

**தீரும் நோய்கள் -**

வாந்தி, உடலெரிவு, அனல், மந்தம், செரியாமை, பித்தப் பிணிகள் தீரும்.

## 07 ஏலாதிச் சூரணம்

*(சித்த வைத்தியத் திரட்டு)*

*(மூலம் – அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம்)*

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கராம்பு | — | 5 | கிராம் |
| 2. | மிளகு | — | 10 | ,, |
| 3. | சிறுநாகப் பூ | — | 20 | ,, |
| 4. | தாளிசப் பத்திரி | — | 40 | ,, |
| 5. | கூகைநீறு | — | 80 | ,, |
| 6. | சுக்கு | — | 160 | ,, |
| 7. | சிற்றேலம் | — | 320 | ,, |

**செய் முறை**

இவற்றை எடுத்து வெயிலில் உலர்த்தி இடித்து அரித்துக் கொள்க. சூரணத்தின் எடைக்குச் சமவளவு சீனி இடித்துச் சேர்த்துப் பத்திரப்படுத்தவும்.

**அளவு —**

1 - 2 கிராம்

காலை, மாலை — இருநேரம்

**அனுபானம் —**

தேன் அல்லது வெந்நீர்

**தீரும் நோய்கள் -**

பித்த வாய்வு, வாயு, சிரந்தி, குட்டம், பெரும்பாடு, எலும்புருக்கி.



## 08 கழற்சிச் சூரணம்

*(பாளையங் கோட்டை சித்த மருத்துவ மனை முறை)*

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கழற்சிப் பருப்புத் தூள் | — | 1 | பங்கு |
| 2. | மிளகுத் தூள் | — | ¼ | பங்கு |

**செய் முறை —**

மேற்குறித்த இரண்டு சரக்குத் தூளையும் பட்டுப்போல இடித்து ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.

**அளவு —**

200 – 1000 மி. கி,

தினம் — இரு / மூன்று வேளை.

**அனுபானம் —**

வெந்நீர்

**தீரும் நோய் —**

விரை வாதம், யானைக் கால் நோய்.

## 09 கெந்தக இரசாயனம்

*(சித்த அவுடத செய் முறை)*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | நெல்லிக் கெந்தகம் (சுத்தித்தது) | - | 600 | கிராம் |
| 02. | பறங்கிக் கிழங்கு ( ,, ) | – | 60 | ,, |
| 03. | கொடிவேலி வேர்ப்பட்டை ( ,, ) | – | 60 | ,, |
| 04. | விளைவு கற்பூரம் | – | 60 | ,, |
| 05. | அமுக்கிராய்க் கிழங்கு | – | 60 | ,, |
| 06. | சாதிக்காய் | – | (0 | ,, |
| 07. | வசுவாசி | – | 60 | ,, |
| 08. | சடாமாஞ்சில் | – | 60 | ,, |
| 09. | சிறுநாகப் பூ | – | 60 | ,, |
| 10. | கராம்பு | – | 60 | ,, |

**செய் முறை –**

நெல்லிக் கெந்தகம், விளைவு கற்பூரம் இரண்டும் நீங்கலாக, மற்ற சரக்குகளில் சுத்தி செய்யவேண்டியவற்றைச் சுத்திசெய்து நன்றாக வெய்யிலில் உலர்த்தி இடித்துச் சூரணம் ஆக்குக.

அடுத்து கெந்தகத்தை நன்கு அரைத்து அரித்து எடுத்துக் கொள்க.

பின்னர் முன்கூறியவற்றை ஒன்றாகக் கலந்து அரைத்ததன் மேல், விளைவு கற்பூரத்தையும் சேர்த்து அரைத்துக் காற்றுப் புகாமல் பத்திரப்படுத்துக.

**அளவு –**

500 – 2000 மி. கிராம்
தினம் — இரு / மூன்று வேளை.

**அனுபானம் –**

பசு நெய் அல்லது பசுப் பால்

**தீரும் நோய்கள் –**

இது சருமநோய்க்குச் சிறந்தது. சொறி, சிரங்கு, கரப்பன் போன்ற வியாதிகளுக்கு உபயோகிக்கலாம்.

## 10 சந்திர காந்தச் சூரணம்

(சித்த அவுடத செய்முறை)
(மூலம் – பரராசசேகரம் – கெற்ப ரோக சிகிச்சை)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | நெல்லிக் கெந்தகம் | (சுத்தித்தது) | — | 15 | கிராம் |
| 02. | இரசம் | ( ,, ) | — | 15 | ,, |
| 03. | காந்தம் | ( ,, ) | — | 15 | ,, |
| 04. | அயப்பொடி | ( ,, ) | — | 15 | ,, |
| 05. | பெருங்காயம் | (வறுக்கவும்) | — | 15 | ,, |
| 06 | மிளகு | | — | 15 | ,, |
| 07. | சுக்கு | | — | 15 | ,, |
| 08. | உள்ளி | | — | 05 | ,, |
| 09. | பெருஞ்சீரகம் | | — | 05 | ,, |
| 10. | நற்சீரகம் | | — | 5 | கிராம் |
| 11. | கருஞ்சீரகம் | | — | 5 | ,, |
| 12. | திற்பலி | | — | 5 | ,, |
| 13. | சிற்றேலம் | | — | 5 | ,, |
| 14. | கடுக்காய் | | — | 5 | ,, |
| 15. | இந்துப்பு | | — | 5 | ,, |
| 16. | கடுகு | | — | 5 | ,, |
| 17. | வெந்தயம் | | — | 5 | ,, |
| 18. | ஓமம் | | — | 5 | ,, |
| 19. | சாதிக்காய் | | — | 5 | ,, |
| 20. | வசுவாசி | | — | 5 | ,, |
| 21. | கராம்பு | | — | 5 | ,, |
| 22. | இலவங்கப் பட்டை | | — | 5 | ,, |



**அரைப்பு –**

கற்றாளைச் சாறு ஒரு நாள்
இஞ்சிச் சாறு ,,
கையாந்தகரைச் சாறு ,,

**செய் முறை –**

மேற்கூறியவாறு நன்றாக அரைத்து, நிழலில் உலர்த்தியபின், 180 கிராம் நற் சந்தனத்தூளை மேற்படி சரக்குகளுக்குச் சமன் சேர்த்து மீண்டும் அரைத்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு –**

500 – 1000 மி. கி (சாதாரணமாக 650 மி. கி கொடுக்கலாம்)
தினம் — இருவேளை.

**அனுபானம் –**

தேன்

(பூத்த 5ம் நாள் பேதிக்கு உண்டு, அடுத்த நாள் தொடக்கம் மருந்தெடுக்க ஆரம்பிக்கலாம்)

**தீரும் நோய் –**

கெற்ப வாயு, கெற்ப சூலை, சோணித வாயு, கெற்பக் கிருமி என்பன தீரும்.

## 11 சிவதைச் சூரணம்

*(சித்த வைத்தியத் திரட்டு)*

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இலவங்கம் | — | 1 | பங்கு |
| 2. | திரிபலை | — | 1 | ,, |
| 3. | திரிகடுகு | — | 1 | ,, |
| 4. | ஏலம் | — | 1 | ,, |
| 5. | சிறுநாகப் பூ | — | 1 | ,, |
| 6. | கோரைக் கிழங்கு | — | 1 | ,, |
| 7. | சிவதை | — | 4 | ,, |

**செய் முறை –**

சிவதையை பாலில் வேகவைத்துச் சுத்திசெய்தபின் எல்லாச் சரக்குகளையும் தனித்தனி பொடித்து ஒன்றுசேர்த்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு –**

2 - 15 கிராம்,
இரவுவேளை மட்டும்

**அனுபானம் –**

பனங்கட்டி / சர்க்கரை / வெந்நீர்

**தீரும் நோய்கள் -**

மலக்கட்டு, வெப்பு, வாய்வு நோய் தீரும்

## 12 சிதோ பலாதிச் சூரணம்

*(கண்ணுச்சாமிப் பரம்பரை வைத்தியம்)*

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மூங்கிலுப்பு | — | 45 | கிராம் |
| 2. | கூகை நீறு | — | 45 | ,, |
| 3. | சிறு திற்பலி | — | 45 | ,, |
| 4. | ஏலக்காய் வித்து | — | 22½ | ,, |
| 5. | இலவங்கப் பட்டை | — | 11¼ | ,, |
| 6. | சீந்தில் சர்க்கரை | — | 45 | ,, |
| 7. | கற்கண்டு | — | 225 | ,, |
| 8. | பூமாதுளம் பூ | — | 22½ | ,, |



**செய் முறை –**

மேற் கூறப்பட்ட எட்டுச் சரக்குகளில், இடிக்க வேண்டிய வற்றை இடித்துச் சூரணம் செய்து, மற்றச் சரக்குகளுடன் கூட்டிக் கல்வத்தில் போட்டு நன்றாக அரைத்து எடுக்கவும்.

**அளவு –**

500 – 1000 மி. கி
தினம் – இருவேளை

**அனுபானம் -**

பசுவின் பால், / தேன் / வெந்நீர்

**தீரும் நோய் –**

மேக சுரம், அஸ்தி சுரம், தேக காங்கை, க்ஷயம் முதலியவை குணமடையும்.

**பத்தியம் -**

காரசார மில்லா உணவுகள் உண்ண வேண்டும்.

## 13 தயிர் சுண்டிச் சூரணம்

*(சித்த வைத்தியத் திரட்டு)*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | இந்துப்பு | (சுத்தித்தது) | — | 35 | கிராம் |
| 2. | வளையலுப்பு | ( ,, ) | — | 35 | ,, |
| 3. | பூநீறு | ( ,, ) | — | 35 | ,, |
| 4. | சோற்றுப்பு | ( ,, ) | — | 35 | ,, |
| 5. | கல்லுப்பு | ( ,, ) | — | 35 | ,, |
| 6. | தோல் நீக்கிய சுக்கு | | — | 175 | ,, |
| 7. | புளித்த தயிர் | | — | 1400 | ,, |

**செய் முறை –**

மேற் குறிப்பிட்டவைகளை ஒரு பாண்டத்திற் சேர்த்து நாள்தோறும் நன்றாக உலரும் மட்டும் வெயிலில் வைத்துப் பொடித்து அரித்து வைக்கவும்.

**தீரும் நோய் –** 1 — 2 கிராம், தினம் இரு வேளை வெந்நீரில் கொடுக்க அஜீரணபேதி தீரும்.

## 14 தசமூலச் சூரணம்

*(சித்த அவுடத செய் முறை)*
*(மூலம் - சுதேச வைத்திய அவுடதத் திரட்டு)*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | சிவநார் வேம்பு வேர் | — | 60 | கிராம் |
| 02. | சீந்தில் மா | — | 60 | ,, |
| 03. | பூவரசம் வேர் | — | 60 | ,, |
| 04. | நன்னாரி வேர் | — | 60 | ,, |
| 05. | நிலப்பனங் கிழங்கு | — | 60 | ,, |
| 06. | இயங்கம் வேர் | — | 60 | ,, |
| 07. | சிறுகுறிஞ்சா வேர் | — | 60 | ,, |
| 08. | வெள்ளறுகு | — | 60 | ,, |
| 09. | அமுக்கிராக் கிழங்கு | — | 60 | ,, |
| 10. | பறங்கிக் கிழங்கு | — | 60 | ,, |
| 11. | சுக்கு | — | 30 | ,, |
| 12. | மிளகு | — | 30 | ,, |
| 13 | திற்பலி | — | 30 | ,, |
| 14. | வெளுத்தல் பிசின் | — | 30 | ,, |
| 15. | தான்றிக் காய் | — | 30 | ,, |
| 16. | பெருங்காயம் | — | 30 | ,, |
| 17. | சந்தனம் | — | 30 | ,, |
| 18. | இரசுகற்பூரம் (சுத்தித்தது) | — | 30 | ,, |
| 19. | வெண்கோட்டம் | — | 30 | ,, |
| 20. | தக்கோலம் | — | 30 | ,, |
| 21. | சிறுநாகப் பூ | — | 30 | ,, |
| 22. | அதிமதுரம் | — | 30 | ,, |
| 23. | சடாமாஞ்சில் | — | 30 | ,, |
| 24. | ஏலம் | — | 30 | ,, |
| 25. | மரமஞ்சள் | — | 30 | ,, |
| 26. | இலவங்கம் | — | 30 | ,, |
| 27. | அபின் — (சுத்தித்தது) | — | 30 | கிராம் |



**செய் முறை —**

மேற்கூறியவற்றை எடுத்து வறுத்து சூரணம் செய்யவும்.
கறிவேப்பிலை — 120 கிராம்
கஞ்சா இலை (சுத்தித்தது) — 240 கிராம்

இவற்றை உலர்த்தி, இடித்துச் சேர்த்துக் கொள்ளவும்.

**அளவு —**

650 மி. கி (வெருகடிப் பிரமாணம்)
தினம் - இரு வேளை

**அனுபானம் —**

தேன் / நெய்

**தீரும் நோய் —**

21 மேக ரோகங்கள் தீரும், தேகம் இறுகும், சிறப்பாக வயது சென்றவர்கட்குக் கொடுத்தால், உடல் பலமுற்று, நரம்பு மண்டலம் சீராகும்.

**பத்தியம் —**

புளி, உப்பு, புகை, சம்போகம் ஆகியவற்றைத் தவிர்க்கவும்.

**குறிப்பு —**

இம்மருந்தை ஒரு மண்டலத்துக்கு (40 நாட்கள்) மட்டும் உபயோகிக்கவும்.

## 15 தாளிசாதிச் சூரணம்

(IMPCOPS *முறை - இந்தியா)*

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | தாளிச பத்திரி | — | 50 | கிராம் |
| 2. | மிளகு | — | 100 | ,, |
| 3. | சுக்கு | — | 150 | ,, |
| 4. | திற்பலி | — | 200 | ,, |
| 5. | மூங்கிலுப்பு | — | 50 | ,, |
| 6. | கூகைநீறு | — | 200 | ,, |
| 7. | ஏலம் | — | 25 | ,, |
| 8. | கறுவா | — | 25 | ,, |
| 9. | சீனி | — | 1400 | ,, |

**செய் முறை —**

மேற் குறிப்பிட்டவற்றுள் சீனியை தவிர்த்து, மீதியை முறைப்படி பொடித்து, சீலையில் அரித்துக்கொள்ளவும். பின்னர் சீனியை இடித்து முன்னையவற்றுடன் சேர்த்துக் கொள்ளவும்.

**அளவு —**

1 - 3 கிராம் வரை

தினம் — இரண்டு / மூன்று வேளை

**அனுபானம் —**

தேன் / நெய் / வெந்நீர்

**தீரும் நோய்கள் —**

இருமல், இளைப்பு, அரோசகம், தடிமன், சுரம், அக்கினி மாந்தம் ஆகியவை.

**குறிப்பு—**

(IMPCOPS முறையிலிருந்து சிறு மாற்றம் செய்தது)

## 16 தாது விருத்திச் சூரணம்

*(கண்ணுச்சாமிப் பரம்பரை வைத்தியம்)*

| | | | |
|---|---|---|---|
| 1. | நிலப்பனங் கிழங்கு | — 40 | கிராம் |
| 2. | சீந்தில் சர்க்கரை | — 40 | ,, |
| 3. | நெருஞ்சி முள் | — 40 | ,, |
| 4. | பெரும் பூனைக்காலி வித்து | — 40 | ,, |
| 5. | நெல்லி வற்றல் | — 40 | ,, |
| 6. | முள் இலவம் பிசின் | — 40 | ,, |
| 7. | கற்கண்டு | — 40 | ,, |

**செய் முறை**

கற்கண்டையும், சீந்தில் சர்க்கரையும் நீக்கி, மற்றைய ஐந்து சரக்குகளையும் நன்றாய் உலர்த்தி; நன்கு இடித்துச் சூரணம் செய்து கல்வத்திலிட்டுக் கற்கண்டையும் சீந்தில் சர்க்கரையையும் சேர்த்து அரைத்து மிருதுவான பதத்தில் எடுத்துக் கொள்க,

**அளவு**

500 மி. கி - 1000 மி. கி

தினம் - இரு வேளை



**அனுபானம் —**

பசுப்பால் அல்லது பசுநெய்

**தீரும் நோய் —**

தாதுப் பலவீனம்

பெண்களுக்கும் உபயோகிக்கலாம்,

**பத்தியம் —**

இச்சா பத்தியம், கப உணவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

## 17 திரிபலாச் சூரணம்

*(பாளையங்கோட்டை சித்த மருத்துவ மனை முறை)*

| | | | |
|---|---|---|---|
| 1. | கடுக்காய்த் தோல் | — 1 | பங்கு |
| 2. | விதை நீக்கிய நெல்லிவற்றல் | — 1 | பங்கு |
| 3. | தான்றிக்காய்த் தோல் | — 1 | பங்கு |

**செய் முறை —**

சரக்குகளைத் தனித்தனியே இடித்து, ஒன்று சேர்த்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு —**

1 - 2 கிராம்

தினம் - இரு / மூன்று வேளை

**அனுபானம் —**

பனங்கட்டி / சீனி / வெந்நீர்

**தீரும் நோய்கள் —**

மலக்கட்டு நீங்கும்; வாய் கொப்பளிக்க, வாய்ப்புண் மாறும்; விரணங்களை கழுவவும் உதவும்.

## 18 நிலவாகைச் சூரணம் (N. V சூரணம்)

*(சித்த வைத்தியத் திரட்டு)*

| | | | |
|---|---|---|---|
| 1. | நிலவாகை | — 10 | கிராம் |
| 2. | சுக்கு | — 10 | ,, |
| 3. | மிளகு | — 10 | ,, |
| 4. | ஓமம் | — 10 | ,, |
| 5. | வாய் விடங்கம் | — 10 | ,, |
| 6. | சீனி | — 50 | ,, |

**செய் முறை —**

முற்கூறப்பட்ட ஐந்து சரக்குகளையும் இடித்து, வஸ்திரகாயம் செய்தபின் சீனியை இடித்துச் சேர்க்கவும்.

**அளவு —**

1 - 2 கிராம்
தினம் - இரு வேளை

**அனுபானம் —**

வெந்நீர் அல்லது பனங்கட்டி

**தீரும் நோய்கள் —**

மலக்கட்டு, தோல்பிணிகள், வாய்வு, உடம்பெரிவு ஆகியன தீரும்.

**குறிப்பு —**

நிலபாவல் சூரணம் எனப்படுவது வேறு

## 19 பஞ்ச தீபாக்னிச் சூரணம்

*(சித்த வைத்தியத் திரட்டு)*

1. சுக்கு
2. மிளகு
3. திற்பலி
4. சிற்றேலம்
5. சீரகம்

வகைக்குச் சம எடை எடுக்கவும்

**செய் முறை —**

இவற்றை (இளவறுப்பாக) வறுத்து, இடித்து சூரணிக்கவும். பின் சூரணத்தின் எடைக்குச் சம எடையாக மாச்சீனி கலந்து, வைத்துக் கொள்ளவும்.

**அளவு —**

1 - 2 கிராம்
தினம் – இரு வேளை

**அனுபானம் —**

தேன் / பசுநெய்

**தீரும் நோய்கள் —**

உட்டண நோய், சூலை, வாய்வு, பித்த வாய்வு, வயிற்றுப் பொருமல், செரியாமை, மாந்தம், மயக்கம், கிறுகிறுப்பு, மூலவாய்வு, அத்திசுரம் ஆகியன தீரும்.



**குறிப்பு —**

இத்துடன் காந்த பற்பம் (130 - 150 மி. கி) சேர்த்து உபயோகிக்கலாம். இதற்குப் பத்தியமாகப் புளி, கைப்பு, புகை, நீக்கவும்.

## 20 - A பறங்கிக் கிழங்குச் சூரணம்

*(ஏட்டு முறை — யாழ்ப்பாணம்)*

| | | | |
|---|---|---|---|
| 01. | பறங்கிக் கிழங்கு | — 80 | கிராம் |
| 02. | திரிகடுகு | — 5 | கிராம் |
| 03. | திற்பலி மூலம் | — 5 | கிராம் |
| 04. | உள்ளி (பூடு) | — 5 | ,, |
| 05. | இலவங்கம் | — 5 | ,, |
| 06. | இலவங்கப் பத்திரி | — 5 | ,, |
| 07. | சித்தரத்தை | — 5 | ,, |
| 08. | பேரரத்தை | — 5 | ,, |
| 09. | ஏலம் | — 5 | ,, |
| 10. | சிறுநாகப்பூ | — 5 | ,, |
| 11. | வால்மிளகு | — 5 | ,, |
| 12. | சதகுப்பை | — 5 | ,, |
| 13. | ஓமம் | — 5 | ,, |
| 14. | கராம்பு | — 5 | ,, |
| 15. | வசுவாசி | — 5 | ,, |
| 16. | சாதிக்காய் | — 5 | ,, |
| 17. | பெருங்காயம் | — 5 | ,, |
| 18. | இரசம் | — 5 | ,, |
| 19. | கந்தகம் | — 5 | ,, |

01. கொடிவேலி வேர்
02. எருக்கலை வேர்
03. வெள்ளறுகு
04. இயங்கம் வேர்
05. செங்கத்தாரிப்பட்டை

வகைக்கு — 8 கிராம்

**செய் முறை —**

இவற்றில் சுத்தி செய்ய வேண்டியவற்றைச் சுத்திசெய்து, இடிக்க வேண்டியதை இடித்து, அரைக்க வேண்டியதை அரைத்து பின்னர் எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து அரைத்து வைக்கவும்.

அளவு –
250 மி. கி — 1கிராம்
காலை, மாலை — இரு வேளை.

அனுபானம் -
தேன் / வேண்டியவை.

தீரும் நோய்கள் –
கிரந்திச் சூலை, வாத முடக்கம், கரப்பன், அரையாப்பு, குத்துளைவு, குன்மம், சன்னி வாதம் தீரும்.

மேற்குறித்த நோய்களுக்கு இச்சூரணம் ஒரு கைகண்ட மருந்தென மருத்துவர்கள் உபயோகிப்பர்.

## 20 - B பறங்கிப் பட்டைச் சூரணம்
(சித்த வைத்தியத் திரட்டு)

1. பறங்கிப் பட்டை (சுத்தி செய்தது) – 100 கிராம்
2. சீனி – 100 ,,
3. கருந்துளசி இலைச்சாறு – தேவையான அளவு.

செய் முறை –
சுத்தி செய்த பறங்கிப் பட்டையைக் கருந்துளசிச் சாற்றில் பாவனம் செய்து, உலர்ந்த பின் பொடித்து, அரித்து எடுக்கவும்; பின்னர் சீனியை இடித்துச் சேர்க்கவும்.

அளவு –
1 — 2 கிராம்
தினம் - இரு வேளை.

அனுபானம் –
சீனி / பசுப்பால்.

தீரும் நோய்கள் –
மேகம், வெண் குஷ்டம், கருங் குஷ்டம், குணமாகும்; அத்துடன் மேனி துலங்கும்; பசியெடுக்கும்.



## 21. பாஸ்கர லவணம்
(யாழ். மாநகர சபை முறை)
(கண்ணுச்சாமிப் பரம்பரை வைத்தியம்)

01. கறியுப்பு — 250 கிராம்
02. கல்லுப்பு — 150 ,,
03. கறுத்த உப்பு — 60 ,,
04. இந்துப்பு — 60 ,,
05. மல்லி — 60 ,,
06. திற்பலி 60 ,,
07. திற்பலி மூலம் — 60 ,,
08. கருஞ்சீரகம் — 60 ,,
09. இலவங்கப் பத்திரி — 60 ,,
10. சிறுநாகப்பூ — 60 ,,
11. தாளிச பத்திரி — 60 ,,
12. கொறுக்காய்ப் புளி — 60 ,,
13. மிளகு — 30 ,,
14. நற்சீரகம் — 30 ,,
15. சுக்கு — 30 ,,
16. மாதுளம்பழ ஓடு — 120 ,,
17. இலவங்கப் பட்டை — 15 ,,
18. ஏலக்காய் — 15 ,,

செய் முறை –
இவற்றில் உப்புக்களை வறுத்தெடுக்கவும். மற்றைய சரக்குகளைப் பொடித்து, ஒன்று கூட்டி உப்புக்களை அரைத்துச் சேர்க்கவும்.

அளவு –
500 மி. கி — 1500 மி. கி
தினம் — இரு வேளை.

அனுபானம் –
வெந்நீர் அல்லது மோர் (உண்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன், மருந்தை உபயோகிக்கவும்.)

தீரும் நோய்கள் –
பித்த வாய்வு, அசீரணம், பரிநாம சூலை, வயிற்றுப் பொருமல், பசியின்மை, ஆமாசய விரணம் ஆகியன தீரும்.

## 22 - பெரிய கறுப்புத் தூள்

*(அருணோதயச் சூரணம்)*

*(இருபாலைச் செட்டியார் இயற்றிய வைத்திய விளக்கம்)*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | இரசம் (சுத்தி செய்தது) | — | 5 | கிராம் |
| 02 | கந்தகம் ( ,, ) | — | 5 | கிராம் |
| 03. | காந்தம் ( ,, ) | — | 5 | ,, |
| 04. | மனோசிலை ( ,, ) | | 5 | ,, |
| 05. | சாதிலிங்கம் ( ,, ) | — | 5 | ,, |
| 06. | பொன் அரிதாரம் ( ,, ) | — | 5 | ,, |
| 07. | வெங்காரம் ( ,, ) | — | 5 | ,, |
| 08. | பொரிகாரம் ( ,, ) | — | 5 | ,, |
| 09. | கராம்பு ( ,, ) | — | 5 | ,, |
| 10. | வெழுத்தல் | — | 5 | ,, |
| 11. | பெருங்காயம் | — | 5 | ,, |
| 12. | நாபி (சுத்தி செய்தது) | — | 5 | ,, |
| 13. | சாதிக்காய் | — | 5 | ,, |
| 14. | வசுவாசி | — | 5 | ,, |
| 15. | இலவங்கப் பத்திரி | — | 5 | ,, |
| 16. | பொன் நிமிளை (சுத்தித்தது) | — | 10 | ,, |
| 17. | வெண் நிமிளை ( ,, ) | — | 10 | ,, |
| 18. | திரிகடுகு (வகைக்கு) | — | 15 | ,, |
| 19 | ஓமம் | — | 15 | ,, |
| 20. | சீரகம் | — | 15 | ,, |
| 21. | சாத்திரபேதி | — | 15 | ,, |
| 22. | மிருதார்சிங்கி | — | 15 | ,, |

**செய் முறை**

இவற்றிலே கற்சரக்குகளை முறைப்படி கல்வத்திலிட்டு நன்கு அரைத்தும், மற்றைய உலர்ந்த சரக்குகளை உரலில் இட்டு இடித்தும், அரைக்க வேண்டியவற்றை கல்வத்திலிட்டு அரைத்தும் பின்பு எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து நன்கு அரைத்த பின், அவற்றை ஒரு புதுச்சட்டியில் போட்டு வெப்பமூட்டி வறுத்து அரைத்து எடுக்கவும்.

இப்படியாக ஏழுமுறை வறுத்து அரைத்து வைக்கவும்.

**அளவு –**

ஒரு பண எடை (488 மி. கிராம்)

தினம் – இரு வேளை



**அனுபானம் –**

தேன், வேண்டிய அனுபானம்

**தீரும் நோய்கள் –**

கழிச்சல், வர்தம், வெட்டை, காசம், விப்புருதி, சேர்ளை, கண்டமாலை, சூலை, அண்டவாதம், ஈளை, குட்டம், வாதசன்னி ஆகியன நீங்கும்.

**குறிப்பு –**

இம் மருந்து யாழ்ப்பாணத்துப் பழைய சித்த வைத்தியர்களின் கைகண்ட மருந்தாகும்.

## 23. மல்லிச் சூரணம்

*(சித்த அவுடதச் செய் முறை)*

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நற்சீரகம் | — | 360 | கிராம் |
| 2. | கருஞ்சீரகம் | — | 360 | ,, |
| 3. | கராம்பு | — | 360 | ,, |
| 4. | அதிமதுரம் | — | 360 | ,, |
| 5 | கறுவாப் பட்டை (பென்சில் கறுவா) | — | 360 | ,, |
| 6. | கொத்தமல்லி | — | 600 | ,, |
| 7. | சீனி | — | 360 | ,, |

**செய் முறை –**

கொத்தமல்லியில் வினாகிரி (750 மி, லிற்றர்) ஊற்றி வெய்யிலில் வைத்து உலர்ந்த பின், இடித்துச் சூரணம் செய்து மற்றைய சரக்குகளையும் சேர்த்து இடித்துச் சூரணித்து வஸ்திரகாயம் செய்து, இறுதியில் சீனியை இடித்துச் சேர்த்துப் பத்திரப்படுத்துக.

**அளவு –**

1 — 2½ கிராம் வரை.

காலை, மாலை — இரு வேளை.

**அனுபானம் –**

தேன் / வெந்நீர் / வேண்டியவை.

**தீரும் நோய்கள் –**

இச்சூரணத்தைத் தகுந்த துணைமருந்துடன் உண்டுவர, அது உடலை உரமாக்கும்; இடுப்பு, நெஞ்சு பலமடையும்; நித்திரை இன்மை, தலையிடி முதலிய பித்தரோக இலட்சணங்கள் தீரும். அத்துடன் சரீரத்தில் ஏற்படுகின்ற கரப்பான், வாய்வு நீங்கும்.

## 24. மதுமேகச் சூரணம்

*(பாளையங் கோட்டை சித்த மருத்துவ மனை முறை)*

| | | | |
|---|---|---|---|
| 1. | கடுக்காய்த் தோல் | — 50 | கிராம் |
| 2. | நெல்லி வற்றல் | — 50 | ,, |
| 3. | கறிவேப்பிலை | — 50 | ,, |
| 4. | சிறுகுறிஞ்சா இலை | — 25 | ,, |

**செய் முறை –**

முதலில் இவற்றை உலர வைத்துப் பொடித்து, சீலையில் அரித்து எடுக்கவும்.

**அளவு –**

1 — 4 கிராம்
காலை, மாலை — இரு வேளை.
நிலைமைக்கு ஏற்பக் காலை மட்டும் உபயோகிக்கலாம்.

**அனுபானம் –**

வெந்நீர்.

**தீரும் நோய்கள் –**

மதுமேக நோயாளிகளுக்கு உகந்தது. குருதியிலுள்ள சீனிச் சத்தை மட்டுப்படுத்த வல்லது; உடலுக்கு வன்மை யூட்டவும் சிறந்தது.

## 25. மயிலிறகாதிச் சூரணம்

*(சித்த வைத்தியத் திரட்டு)*
*(மூலம் — தேரையர் பாடல் திரட்டு)*

| | | | |
|---|---|---|---|
| 1. | திற்பலி | — 8 | பங்கு |
| 2. | சீரகம் | — 10 | ,, |
| 3. | மயிலிறகு சுட்ட சாம்பல் | — 4½ | ,, |

**செய் முறை –**

திற்பலி, சீரகம் ஆகியவற்றைப் பொடித்து, மயிலிறகுச் சாம்பலுடன் கலந்து, அரைத்து வைத்துக் கொள்க.



**அளவு –**

500 மி.கி – 1 கிராம்
விக்கலின் தன்மையைப் பொறுத்துக் கொடுக்கும் நேரத்தைத் தீர்மானிக்கவும்.

**அனுபானம் –**

தேன்

**தீரும் நோய் –**

விக்கல் தீரும்

## 26. மாதுளை ஓட்டுச் சூரணம்

(IMPCOBS *முறை — இந்தியா*)

| | | | |
|---|---|---|---|
| 01. | மூங்கிலுப்பு | — ½ | பங்கு |
| 02. | ஏலம் | — 2 | ,, |
| 03. | கறுவா | — 2 | ,, |
| 04. | இலவங்கப் பத்திரி | — 2 | ,, |
| 05. | சிறுநாகப்பூ | — 2 | ,, |
| 06. | ஓமம் | — 4 | ,, |
| 07. | கொத்தமல்லி | — 4 | ,, |
| 08. | சீரகம் | — 4 | ,, |
| 09 | திற்பலி மூலம் | — 4 | ,, |
| 10. | திரி கடுகு (வகைக்கு) | — 4 | ,, |
| 11. | உலர்ந்த மாதுளை ஓடு | — 32 | ,, |
| 12. | மாச்சீனி | — 32 | ,, |

**செய் முறை –**

இவற்றைத் தனித்தனியே முறைப்படி சூரணம் செய்து, ஒன்று சேர்த்து அரைத்து எடுக்கவும்.

**அளவு**

1 – 2 கிராம்
தினம் — இரண்டு அல்லது மூன்று வேளை

**அனுபானம் –**

தேன் / நெய்

**தீரும் நோய்கள் –**

வயிற்றோட்டம், கழிச்சல், பொருமல் ஆகியனவற்றுக்கு உபயோகிக்கலாம். அகட்டு வாய்வகற்றி துவர்ப்பி செய்கை உடையது.

இம்மருந்து Ulcerative Colitis, Amoebiasis போன்ற நோய்களில் துணை மருந்தாகவும் உபயோகிக்கலாம்.

## 27. முடக்குச் சூரணம்

(சித்த அவுடத செய் முறை)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | நற்சீரகம் | — | 20 | கிராம் |
| 02. | அமுக்கிராய்க் கிழங்கு | — | 20 | ,, |
| 03. | நிலப்பனங் கிழங்கு | — | 20 | ,, |
| 04. | கோரைக் கிழங்கு | — | 20 | ,, |
| 05. | நீரடிமுத்துப் பருப்பு | — | 20 | ,, |
| 06. | சிற்றரத்தை | — | 20 | ,, |
| 07. | சுக்கு | — | 20 | ,, |
| 08. | தான்றிக்காய் | — | 5 | ,, |
| 09. | நெல்லிக்காய் | — | 5 | ,, |
| 10. | மாயாக்காய் | — | 5 | ,, |
| 11. | சாதிக்காய் | — | 5 | ,, |
| 12. | திற்பலி | — | 5 | ,, |
| 13. | கராம்பு | — | 5 | ,, |
| 14. | திற்பலி மூலம் | — | 5 | ,, |
| 15. | ஓமம் | | 5 | ,, |
| 16. | கொத்தமல்லி | — | 5 | ,, |
| 17. | அதிமதுரம் | — | 5 | ,, |
| 18. | வெண்கோட்டம் | — | 5 | ,, |
| 19. | கார்போக அரிசி | — | 5 | ,, |
| 20. | கருஞ்சீரகம் | — | 5 | ,, |
| 21. | பறங்கிக் கிழங்கு(சுத்தித்தது) | — | 205 | ,, |



**செய் முறை**

இவற்றை வெயிலில் உலர்த்தி, இடித்துச் சூரணம் செய்து கொள்ளவும்.

**அளவு**

500 - 1000 மி. கிராம்
தினம் - இரு வேளை

**அனுபானம் –**

தேன் அல்லது வேண்டியவை

**தீரும் நோய்கள் –**

மேக வியாதிகள், கைகால் முடக்கம், வாத ரோகங்கள், குன்மம் ஆகியன தீரும்.

# மாத்திரை / குளிகை

**மா**த்திரை என்பது தேவையான சில சரக்குகளைச் சேர்த்து மூலிகைச் சாறுகளை, குடிநீர்களை விட்டரைத்துக் குறிப்பிட்ட அளவுகளில் உருட்டி, நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்வதாகும்.

செய் முறை –

இவற்றைக் குளிகை அல்லது உருண்டை அல்லது மாத்திரை எனவும் கூறுவர். செய்முறையில் குறிப்பிட்ட சரக்குகளைத் தனித்தோ அல்லது சேர்த்தோ இடித்து, அரித்து கல்வத்திலிட்டுத் தண்ணீர் அல்லது தாய்ப்பால் உடன் குறிப்பிட்ட வேறு சாறுகளை அல்லது குடிநீரைச் சேர்த்துக் குறிப்பிட்ட காலம் வரை நன்றாக அரைத்து, உருட்டும் பதம் வந்தபின் குறிப்பிட்ட அளவுப்படி மாத்திரைகளை உருட்டவும். எண்ணெய்ப் பசையற்ற சரக்குகள் சேர்ந்த மாத்திரைகளை உருட்டும்போது, விரல்களிற் சிறிது நெய்தடவிக் கொள்ளலாம்.

தாது வர்க்கச் சரக்குகளை சேர்க்கும்போது நட்பு, பகைச் சரக்குகளை நன்கறிந்து, கல்வத்திலே முதலில் போடவேண்டிய சரக்குகளை ஒழுங்கு முறையாகப் போட்டுப் பொடித்துக கொள்ள வேண்டும். எல்லா மருந்துகளும் குறிப்பிட்ட அளவுப்படி உருட்டினாலும், அதன் நிறை அதனில் சேரும் தாதுப் பொருட்களை பொறுத்து வேறுபடும். ஆகையால் மருந்துகளுக்கு ஏற்ப நிறையைத் தீர்மானம் செய்யவும். தயாரித்த மாத்திரைகளை நிழலில் நன்கு உலர்த்தி வைக்கவேண்டும்.

ஆயுட்காலம் –

பொதுவாக ஒருவருடம் வரை வன்மையுடையது. எனவே, மாத்திரைகளைக் காற்றுப் புகாத போத்தல்களிற் போட்டு வைப்பது நன்று. சில மாத்திரைகள் கண்ணாடி மூடியுள்ள போத்தல்களில் வைப்பது அவசியமாகும். அல்லாவிடில், மணம் கெட்டு அதன் தன்மையும் இழந்துவிடும். மாத்திரைகள் தமது நிறத்தையோ, சுவையையோ, மணத்தையோ, உருவத்தையோ, இழக்காமல் இருக்கவேண்டும். இப் பண்புகள் மாறினால் அல்லது பூஞ்சணம் பிடித்தால் அவற்றைப் பயன்படுத்தக் கூடாது.

# மாத்திரை / குளிகை

01. இருமல் மாத்திரை
02. கஸ்தூரி மாத்திரை
03. கடுக்காய் மாத்திரை
04. கபாட மாத்திரை
05. கல்லுடை குடோரி மாத்திரை
06. காக்கணவன் மாத்திரை
07. சாந்த சந்திரோதய மாத்திரை
08. சின்னச் சிவப்பு மாத்திரை
09. சிலேப்பன நாயகன் மாத்திரை
10. சுவாச குடோரி மாத்திரை
11. தக்காளிச் சாற்றுக் கோரோசனை மாத்திரை
12. தாழம் பூ மாத்திரை
13. திரிதோடக் குளிகை
14. பலவாயுக் குளிகை
15. பால சஞ்சீவி மாத்திரை
16. பிரமானந்த பைரவ மாத்திரை
17. புன்னை வேர்க் குளிகை
18. பெரிய கோரோசனை மாத்திரை
19. நீர்க்கோவை மாத்திரை
20. மகா ஏலாதி மாத்திரை
21. முருக்கம் விதை மாத்திரை
22. வாதராட்சதன் மாத்திரை
23. விரேசன பூபதி மாத்திரை
24. விஷ்ணு சக்கரம்
25. வெள்ளை வெங்காயக் குளிகை.

## 1. இருமல் மாத்திரை (Flaco Tablet)

*(யாழ் மாநகரசபை முறை)*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | சுக்கு | — | 155 | கிராம் |
| 02. | மிளகு | — | 50 | ,, |
| 03. | சிறுநாகப் பூ | — | 15 | ,, |
| 04. | திற்பலி | — | 105 | , |
| 05. | இலவங்கப் பட்டை | — | 15 | ,, |
| 06. | அதிமதுரம் | — | 50 | ,, |
| 07. | செவ்வியம் | — | 50 | ,, |
| 08. | திற்பலி மூலம் | — | 105 | ,, |
| 09. | தாளிச பத்திரி | — | 50 | ,, |
| 10. | இலவங்கப் பத்திரி | | 15 | ,, |
| 11. | ஏலம் | — | 15 | ,, |
| 12. | வெட்டிவேர் | — | 15 | ,, |
| 13. | சித்தரத்தை | — | 15 | ,, |
| 14. | சர்க்கரை | — | 850 | ,, |
| 15. | பசுப்பால் | — | 01 | லீற்றர் |

**செய் முறை –**

1—12 வரையுமுள்ள சரக்குகளைத் தனித்தனி சூரணம்செய்யவும். பின் ஒரு சட்டியில் பசுப்பாலை ஊற்றி வேடுகட்டி, அடுப்பேற்றியதும் மேற்குறிப்பிட்ட எல்லாச் சூரணங்களையும் வெல்லத்தையும் ஒன்றாகக் கலந்து அதன்மீது வைத்து மேற்சட்டி கொண்டு மூடி பிட்டுப்பதம் வரும்வரை எரித்தெடுத்து, உரலில் இட்டு நன்றாக இடித்து ஒரு கிராம் அளவு உருட்டி (தட்டையாக) நிழலில் உலர்த்தவும்.

**அளவு –**

1 — 2 மாத்திரை

தினம் — இரு வேளை (தேவையான நேரங்களில்)

**தீரும் நோய்கள் –**

கபநோய், தொண்டைக் கரகரப்பு, தொண்டை நோ, செருமல், இடைவிடா இருமல் ஆகியன தீரும்.



**குறிப்பு –**

இதனை வாயில் வைத்து உமிழ்ந்து கொண்டு இருக்கவேண்டும். இம்மருந்து யாழ். மாநகராட்சி மன்றத்தில் தயாரிக்கப்பட்டு விநியோகித்து அனுபவத்திற் சிறந்த பலனைப்பெற்றுள்ளது.

## 2 கஸ்தூரி மாத்திரை (முக்கூட்டு மாத்திரை)

(IMPCOPS முறை — இந்தியா)

*(மூலம்: தேரையர் பாடல் திரட்டு)*

| | | | |
|---|---|---|---|
| 1. | கஸ்தூரி | — | 1 பங்கு |
| 2 | குங்குமப் பூ | — | 2 ,, |
| 3. | கோரோசனை | ... | 3 ,, |
| 4. | தாய்ப் பால் அல்லது கற்பூரவள்ளிச் சாறு | — | தேவையான அளவு |

**செய் முறை –**

மேற்கூறிய சரக்குகளைக் கல்வத்திலிட்டுத் தாய்ப் பால் அல்லது கற்பூரவள்ளிச் சாறுவிட்டு நன்கு அரைத்து 25மி.கிராம் அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

**அளவு –**

ஒரு மாத்திரை — இரு வேளை.

**அனுபானம் –**

தேன் / தாய்ப் பால்

**தீரும் நோய்கள் –**

கபசுரம், வாயு, கிரந்தி, தோடம் ஆகியன.

**குறிப்பு –**

இதனை முக்கூட்டு மாத்திரை என்றும் கூறுவர். யாழ்ப்பாணத்திலே பிள்ளைகள் பிறந்து 40 நாட்களின் பின், கிரந்திக் கொதியெண்ணையைத் தலைக்குவைத்து முக்கூட்டு மாத்திரையும் கொடுத்து வருதல் தொன்றுதொட்டு நடைமுறையிலுள்ள ஒரு மரபாகும். 40 நாட்களுக்கு முன் கோரோசனை மட்டும் கொடுப்பதும் சில இடங்களில் வழக்கத்தில் உண்டு. குழந்தைகளை நீராட்டும் நாட்களில் கஸ்தூரி மாத்திரையைக் கொடுத்தல் சிறந்தது எனலாம்.

### 3. கடுக்காய் மாத்திரை

*(பாளையம் கோட்டை சித்த மருத்துவ மனை முறை)*

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அன்னபேதி (சுத்தித்தது) | — | 900 | கிராம் |
| 2. | கடுக்காய்த் தோல் | — | 300 | ,, |
| 3. | மிளகு | — | 300 | ,, |
| 4. | வெள்ளைக் கரிசாலை | — | 3 கி. | கிராம் |

**செய் முறை —**

அன்னபேதியைக் கல்வத்திலிட்டுப் பொடித்து வைத்துக் கொண்டு, மற்றைய கடுக்காய்த் தோல், மிளகு ஆகியனவற்றை இடித்து வஸ்திரகாயம் செய்து அதனைக் கல்வத்தில் பொடித்த அன்னபேதியுடன் ஒன்றுகூட்டிக் கரிசாலைச்சாறு விட்டு அரைத்து 250 மி. கி அளவு உருட்டி நிழலில் உலர்த்தி வைக்கவும்.

**அளவு —**

1 — 2 மாத்திரை

உணவுக்குப் பின், தினம் — இரு வேளை.

**அனுபானம் —**

வெந்நீர்/தேசிப் புளி நீர் மற்றும் பொருத்தமான அனுபானம்

**தீரும் நோய்கள் —**

வெழுப்பு நோய், வீக்கம், களைப்பு ஆகியன தீரும்.

கர்ப்பிணிப் பெண்களுக்கு இரத்த விருத்திக்கு உபயோகிக்கலாம்.

**குறிப்பு —**

வெள்ளைக்கரிசாலைச் சாற்றுடன் தேசிப் புளி சேர்த்து அரைக்கும் முறையும் வழக்கத்தில் உண்டு. இம்மருந்து பாளையம் கோட்டை சித்த மருத்துவ மனையில் ஆய்வுசெய்து, வெழுப்பு நோய்க்கு (Anaemia) சிறந்தது என காணப்பட்டுள்ளது இதனை கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் (Ante Natal Clinics) உபயோகிக் கலாம். இம் மாத்திரையை உபயோகிக்கும்போது வயிற்றோட்டம் ஏற்படின், மருந்தின் அளவைக் குறைக்கலாம்; அல்லது முற்றாக நிறுத்திவிட்டு, பின் தொடரலாம்.



### 4. கபாட மாத்திரை

(IMPCOPS முறை — இந்தியா)

*(மூலம்: தேரையர் கரிசல் – 300)*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | சாதிக்காய் | ... | 1 | பங்கு |
| 02. | சாதி பத்திரி | — | 1 | ,, |
| 03. | அபின் | ... | 1 | ,, |
| 04. | பெருங்காயம் (பால்) | ... | 1 | ,, |
| 05. | நற்சீரகம் | ... | 1 | ,, |
| 06. | அதிவிடயம் | ... | 1 | ,, |
| 07. | கராம்பு | ... | 1 | ,, |
| 08. | வெந்தயம் | ... | 1 | ,, |
| 09. | சாதிலிங்கம் (சுத்தி செய்தது) | ... | 1 | ,, |
| 10. | கழற்சிப் பருப்பு | ... | 1 | ,, |
| 11. | குரோசாணி ஓமம் | — | 1 | ,, |
| 12. | கஞ்சாக் குடிநீர் | ... | தேவையானளவு | |

**செய் முறை —**

இவைகளைச் சுத்தி செய்து, கல்வத்திலிட்டுப் பொடித்துக் கஞ்சாக் குடிநீர்விட்டு 12 மணிநேரம் நன்கு அரைத்து 100 மி. கிராம் அளவு மாத்திரைகளாக உருட்டி, நிழலில் உலர்த்திக் கொள்க.

**அளவு —**

ஒரு மாத்திரை

இரு வேளை — 3 நாட்களுக்கு

**அனுபானம் —**

தேன் / வாழைப்பூச் சாறு

**தீரும் நோய்கள் —**

கழிச்சல், இரத்தக் கழிச்சல், நிணக் கழிச்சல், ஆசனக்கடுப்பு, செரியாக் கழிச்சல், பெருங் கழிச்கல் ஆகியனவற்றுக்கு வாழைப் பூச்சாற்றில் கொடுக்கலாம்.

## 5. கல்லுடை குடோரி மாத்திரை
*(சித்த வைத்தியத் திரட்டு)*

| | | |
|---|---|---|
| 1. இரசம் | — | 1 பங்கு |
| 2. கெந்தகம் | — | 2 ,, |
| 3. வெள்ளைச் சாறனை (சமூலம்) | — | தேவையானளவு |
| 4. சிறுபீளைச் (சமூலச்) சூரணம் | — | ,, |

**செய் முறை –**

இவைகளை முறைப்படி சுத்தி செய்து, கல்வத்திலிட்டுப் பொடித்து, வெள்ளைச் சாறணை சமூலச் சாறுவிட்டு நன்கு அரைக்கவும். பின் அதனைச் சிறு மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தவும், மாத்திரைகளை அகலிற் பரப்பி மூடி, சீலை மண் செய்து காயவைத்து மணல் மறைவில் புடமிட்டு எடுத்த எடைக்குச் சம எடையாகச் சிறுபீளைச் சமூலச் சூரணம் சேர்த்து வெள்ளைச் சாறணைச் சாற்றுடன் அரைத்து 100 மி. கி. அளவு மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைக்கவும்.

**அளவு –**

ஒரு மாத்திரை
தினம் — இரு வேளை.

**அனுபானம் –**

காலையில் — வெள்ளரிக் குடிநீர்
மாலையில் — நெருஞ்சிச் சாறு.

**தீரும் நோய்கள்**

சிறுநீர்ப் பாதையிலுள்ள கல்லடைப்பு நீங்கும்.

## 6. காக்கணவன் மாத்திரை
*(சித்த வைத்தியத் திரட்டு)*
*(மூலம்: பால வாகடம்)*

| | | |
|---|---|---|
| 1. கறுத்தக் காக்கணவன் வேர் | — | 4 பங்கு |
| 2. திற்பலி | — | 1 ,, |
| 3. சுக்கு | — | 1 ,, |
| 4. கண்டங் கத்தரிவேர் | — | 1 ,, |
| 5. நேர்வாளம் | — | 2 ,, |
| 6. பூரம் | — | 2 ,, |
| 7. சாதிலிங்கம் | — | 2 ,, |
| 8. தேசிப்புளி | — | தேவையானளவு |



**செய் முறை –**

இவைகளை முறைப்படி சுத்திசெய்து, பொடிக்க வேண்டியன வற்றைப் பொடித்து, கல்வத்திலிட்டுப் பழச்சாற்றுடன் 4½ மணி நேரம் நன்கு அரைத்து, 100 மி. கி மாத்திரைகளாக உருட்டி, நிழலில் உலர்த்தவும்.

**அளவு –**

ஒரு மாத்திரை
காலையில் மட்டும்.

**அனுபானம் –**

ஓமக் குடிநீர் அல்லது சுக்குக் குடிநீர்.

**தீரும் நோய்கள் –**

மாந்தம், மலக்கட்டு, குடல் பூச்சிகள் (புழுக்கள்) ஆகியன நீங்கும்.

**குறிப்பு –**

தொடர்ந்து உபயோகிக்கக் கூடாது.
பாலர்களின் வயதிற்கேற்ப அளவினைத் தீர்மானிக்கவும்.

சுக்குக் குடிநீர் – எல்லாவகை மாந்தங்களுக்கும்
ஓமக் குடிநீர் – குடல் பூச்சிகளுக்கு

## 7. சாந்த சந்திரோதய மாத்திரை
*(சித்த வைத்தியத் திரட்டு)*

| | | |
|---|---|---|
| 1. வெங்காரம் | — | 17.5 கிராம் |
| 2. இரச கற்பூரம் | — | 35.0 ,, |
| 3. கப்பு மஞ்சள் | — | 105.0 ,, |
| 4. தேசிப் புளி | — | தேவையானளவு |

**செய் முறை**

மேற்கூறிய சரக்குகளைக் கல்வத்திலிட்டு, தேசிப்புளி சேர்த்து 12 மணி நேரம் அரைத்து 65 மி. கி. மாத்திரைகளாக உருட்டி, நிழலில் உலர்த்திக் கொள்க.

**அளவு –**

ஒரு மாத்திரை
காலை, மாலை — இரு நேரம்.

4

அனுபானம் —

தேன் / சீரகம் அவித்த நீர் / வேண்டிய அனுபானம்

திரும் நோய்கள் —

பித்த சுரங்கள் தீரும் (Jaundice) மருந்தின் அளவு கூடினால் விரேசனத்தை உண்டாக்கும், ஆகையால் நோயாளியின் பலமறிந்து உபயோகிக்கவும்.

## 8. சின்னச் சிவப்பு மாத்திரை (S. S. Pill)

(சுதேச வைத்திய அவுடதத் திரட்டு)

| | | | |
|---|---|---|---|
| 01. | வெண்கோட்டம் | — | 5 கிராம் |
| 02. | வச்ச நாபி (சுத்தித்தது) | — | 5 ,, |
| 03. | சாதிலிங்கம் ( ,, ) | — | 5 ,, |
| 04. | மிளகு | — | 5 ,, |
| 05. | சித்தரத்தை | — | 5 ,, |
| 06. | கராம்பு | — | 5 ,, |
| 07. | ஓமம் | — | 5 ,, |
| 08. | சீரகம் | — | 5 ,, |
| 09. | வசம்பு | — | 5 ,, |
| 10. | பொரிகாரம் | — | 5 ,, |
| 11. | இஞ்சிச் சாறு | — | வேண்டியளவு |

செய் முறை —

இவற்றில் அரைக்க வேண்டியதை அரைத்தும், பொடிக்க வேண்டியதைப் பொடித்தும் ஒன்று சேர்த்து, கல்வத்திலிட்டு இஞ்சிச் சாறுடன் நன்கு அரைத்து எடுத்துக் கொள்க. 130 மி. கிராம் (2 கிறெயின்) அளவு குளிகைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக்கொள்க.

அளவு —

1 — 2 மாத்திரைகள்

தினம் — இரு அல்லது மூன்று வேளை.

அனுபானமும் பிணி நீக்கமும் —

வெற்றிலைச் சாற்றில் ஒரு குளிகை உரைத்துக் கொடுக்க— நெஞ்சடை வாயு தீரும். (நெஞ்சடை வாயு அல்லது வாதம்



என்பதை (Angina Pectoris) வேதனைக்கு ஒரு அளவு ஒப்பிடலாம்) நெஞ்சுப் படபடப்பு (Palpitation) தீரும்.

முலைப்பால், இஞ்சி, தேன் ஆகியனவற்றில் கலந்துகொடுக்க— சுரங்கள், இருமல், சுவாசக் குத்து, இளைப்பு ஆகியன தீரும்.

இக்குளிகையைப் பொதுவாக எல்லாச் சித்த வைத்திய சாலைகளிலும் சுரம் அகற்றி (Antipyretic) மருந்தாக உபயோகிக்கலாம்; அத்துடன் அனுபானத்தை மாற்றி, வேறு நோய்களுக்கும் உபயோகிக்கலாம். பாலர்களுக்கு உபயோகிக்கும் போது, அளவைக் குறைத்துக் கொடுக்க வேண்டும். பிரதேச சபைச் சித்த மருந்தகங்கள் இதனைக் கூடுதலாக உபயோகிக்கின்றன.

## 9. சிலேற்பன நாயன் மாத்திரை

(ஏட்டு முறை—கோப்பாய் A.V.R. ஐயாவிடமிருந்து பெற்றது)

| | | | |
|---|---|---|---|
| 01. | இரசம் | — | 1 பங்கு |
| 02. | மனோசிலை | — | 1 ,, |
| 03. | வெங்காரம் | — | 1 ,, |
| 04. | காந்தம் | — | 1 ,, |
| 05. | திரிபலை | — | 1 ,, |
| 06. | திரிகடுகு | — | 1 ,, |
| 07. | பொன் அரிதாரம் | — | 1 ,, |
| 08. | அய செந்தூரம் | — | 1 ,, |
| 09. | ஜடா மாஞ்சில் | — | 1 ,, |
| 10. | கருஞ்சீரகம் | — | 1 ,, |
| 11. | கஸ்தூரி மஞ்சள் | — | 1 ,, |
| 12. | நேர்வாளம் | — | 1 ,, |
| 13. | ஆடாதோடை இலைச் சாறு | — | வேண்டியளவு |

செய் முறை —

மேற்குறிப்பிட்ட சரக்குகளில், சுத்தி செய்யவேண்டியவற்றைச் சுத்தி செய்து, ஏனைய சரக்குகளில் பொடிக்க வேண்டியதைப் பொடித்து, மற்றும் கற்சரக்குகளை முறைப்படி கல்வத்திலிட்டு நன்றாக அரைத்தபின், பொடித்த சூரணத்தைச் சேர்த்து, ஆடாதோடை இலைச்சாறுவிட்டு நன்கு அரைத்துப் பதமானதும், 65 மி. கிராமளவுகளில் உருட்டி நிழலிலுலர்த்திக் கொள்க.

அளவு -

1 — 2 மாத்திரை
தினம் — இரண்டு அல்லது மூன்று வேளை.

அனுபானம் -
திரிகடுகுத் தூள் / ஆடாதோடையிலைச் சாறு / தேன்.

தீரும் நோய்கள் -
தொய்வு, இருமல், மந்தாரகாசம், சளியடைப்பு ஆகியன.

## 10. சுவாச குடோரி மாத்திரை
(சித்த வைத்தியத் திரட்டு)

| | | | |
|---|---|---|---|
| 1. | வெள்ளெருக்குப் பூ | — 120 | கிராம் |
| 2. | வெள்ளை மிளகு | — 120 | ,, |
| 3. | தாளிச பத்திரி | — 200 | ,, |

செய் முறை –

தாளிச பத்திரியை விதிப்படி குடிநீர் செய்தபின், வெள்ளெருக்கம் பூவைக் கல்வத்திலிட்டு அரைத்து, அதனுடன் மிளகு சேர்த்து நன்கு அரைக்கும் பொழுது மேற்படி கசாயத்தைவிட்டு நன்றாக அரைத்து, 130 மி. கிராமளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுக்கவும்.

அளவு –
1 — 2 மாத்திரை
தினம் — இரண்டு அல்லது மூன்று வேளை.

அனுபானம் –
தாளிச பத்திரிக் குடிநீர் / வேறு தேவையான அனுபானம்.

தீரும் நோய்கள் –
சுவாசகாசம், இருமல், சளி, இழுப்பு ஆகியன தீரும்.

குறிப்பு :

வெள்ளெருக்குப் பூவை ஒடித்துப் பால் உலர்ந்தபின் மருந்தில் சேர்க்கவும்.



## 11. தக்காளிச் சாற்றுக் கோரோசனை மாத்திரை
(ஏட்டுமுறை – கோப்பாய் A.V.R. ஐயாவிடமிருந்து பெற்றது)

| | | | |
|---|---|---|---|
| 01. | கோரோசனை | — 5 | கிராம் |
| 02. | திரிகடுகு | — 5 | ,, |
| 03. | ஓமம் | — 5 | ,, |
| 04. | சாதிக்காய் | — 5 | ,, |
| 05. | பச்சைக் கற்பூரம் | — 5 | ,, |
| 06. | சித்தரத்தை | — 5 | ,, |
| 07. | வசம்பு | — 5 | ,, |
| 08. | உள்ளி | 5 | ,, |
| 09. | குங்குமப் பூ | — 5 | ,, |
| 10. | கணிதபேதி | — 5 | ,, |
| 11. | சாதிலிங்கம் | — 5 | ,, |
| 12. | இரச கற்பூரம் | — 1.25 | ,, |
| 13. | மணித்தக்காளிச் சாறு | — வேண்டியளவு | |
| 14. | வெற்றிலைச் சாறு | | |
| 15. | தாய்ப்பால் | | |

செய் முறை –

மேற்குறிப்பிட்ட சரக்குகளில், சுத்திசெய்ய வேண்டியவற்றைச் சுத்திசெய்து, பொடியாக்க வேண்டியவற்றைப் பொடியாக்கித் துணியில் அரித்து வைத்துக்கொண்டு, சாதிலிங்கம், கணிதபேதி, இரச கற்பூரம், கோரோசனை, குங்குமப்பூ ஆகியவற்றை முறையே தனித்தனியாகக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்தபின், எல்லாவற்றுடன் மேற்குறிப்பிட்ட பொடியையும் ஒன்றாகச் சேர்த்து மணித்தக்காளிச் சாறு, வெற்றிலைச் சாறு, தாய்ப்பால் ஆகியனவற்றை ஒரு நாளைக்கு ஒவ்வொன்றாக மூன்றுநாட்களுக்கு நன்றாக அரைத்து, இறுதி நாளன்று பச்சைக் கற்பூரத்தைச் சேர்த்து நன்றாக அரைத்து 65 மி. கிராம் அளவுகளில் உருட்டி, நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

அளவு –

1 — 2 மாத்திரைகள்
தினம் — மூன்று வேளை.

**அனுபானம் –**

1. முலைப்பால், கற்பூரவள்ளிச் சாறு, தேன்
2. இக்கிரி, துளசி, கற்பூரவள்ளி
3. வெங்காயம் அவித்த நீர், தேன்

வேண்டிய அனுபானத்தில் கொடுக்க.

**தீரும் நோய்கள் -**

சிறுபிள்ளைகளுக்கு ஏற்படும் கிரந்தி, இருமல், சளிக்கட்டு, கிரந்திக் கொதி ஆகியன தீரும்.

**குறிப்பு :**

யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான சித்த வைத்தியர்கள் சிறு பிள்ளைகளுக்கு இம்மருந்தைப் பொதுவாக உபயோகிக்கின்றனர். தாய்ப்பாலுக்குப் பதிலாக கற்பூரவள்ளிச் சாறை உபயோகிக்கலாம்.

## 12. தாழம் பூ மாத்திரை

*(சித்த வைத்தியத் திரட்டு)*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | சவ்வீரம் | (சுத்தித்தது) | — 35 | கிராம் |
| 02. | சாதிலிங்கம் | ( ,, ) | — 35 | ,, |
| 03. | இரசசெந்தூரம் | ( ,, ) | — 35 | ,, |
| 04. | கந்தகம் | ( ,, ) | — 105 | ,, |
| 05. | வாளம் | ( ,, ) | — 70 | ,, |
| 06. | தாழம் பூச் சாறு | | — வேண்டியளவு | |

**செய் முறை –**

மேற்குறிப்பிட்ட சரக்குகளைக் கல்வத்திலிட்டு முறைப்படி அரைத்து, இறுதியில் வாளத்தைச் சேர்த்து தாழம் பூச் சாறு விட்டு 12 மணித்தியாலத்துக்கு நன்றாக அரைத்து 65 மி. கி அளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்க.

**அளவு –**

1 — 2 மாத்திரை
காலை, மாலை — இரு வேளை

**அனுபானம் –**

சுரத்திற்கான குடிநீர் / வேறு தக்க அனுபானம்.

**தீரும் நோய்கள் –**

குடல் வாய்வு சார்ந்த ரோகம், குறிப்பாக் நெறிகட்டுச் சுரத்திலும் அது தொடர்பான தசை அண்ட வீக்கத்துக்கும் (Fever in Elephantiasis) உபயோகிக்கலாம்.



## 13. திரிதோட மாத்திரை

*(சித்த வைத்தியத் திரட்டு)*

| | | | |
|---|---|---|---|
| 1. | வீரம் (சுத்தித்தது) | — 1 | பங்கு |
| 2. | மிளகு | — 4 | ,, |
| 3. | மிளகுக் குடிநீர் | — வேண்டியளவு | |

**செய் முறை –**

முதலிலே மிளகு எடுத்து முறைப்படி குடிநீர் செய்து கொள்ளவும். பின்னர் சுத்தி செய்த வீரத்தை மிளகுடன் சேர்த்து நன்கு அரைத்து மேலே கூறப்பட்ட குடிநீர்விட்டு மாத்திரைப் பதமாக அரைத்து 65 மி. கி அளவுகளில் உருட்டி நிழலில் உலர்த்தவும்.

**அளவு –**

1 — 2 மாத்திரை
தினம் — இரு வேளை.

**அனுபானம் –**

துளசிச் சாறு / இஞ்சிச் சாறு.

**தீரும் நோய்கள் -**

சுரம், சன்னி, குளிர் சுரம், கபசுரம் ஆதியன தீரும். (மலேரியாச் சுரம், மற்றும் தொற்றுக் கிருமியால் ஏற்படும் சுரங்களுக்கும் சிறந்த பலனைக் கொடுக்கும்).

**குறிப்பு :**

இம் மாத்திரை செய்து ஒரு மாதம் பத்திரப்படுத்திய பின்னர் பயன்படுத்தலே நன்று.

**பத்தியம் –**

உப்பு நீக்கிய கஞ்சியைப் பயன்படுத்தலாம்.

**குடிநீர் தயாரிக்கும் பொதுவிதி –**

மிளகு ஒரு பலம் (40 கிராம்) எடுத்து, 16 மடங்கு நீர்விட்டு எட்டில் ஒன்றாக வற்ற எரித்து எடுப்பது.

## 14. பலவாயுக் குளிகை

*(சுதேச வைத்திய ஔடதத் திரட்டு - யாழ்ப்பாண நூல்)*

| | | | |
|---|---|---|---|
| 01. | திற்பலி | — 10 | கிராம் |
| 02. | சாதிக்காய் | — 10 | ,, |
| 03. | ஏலம் | — 10 | ,, |
| 04 | உள்ளி | — 10 | ,, |
| 05. | நற்சீரகம் | — 10 | ,, |
| 06 | கருஞ்சீரகம் | — 10 | ,, |
| 07. | திற்பலி மூலம் | — 10 | ,, |
| 08. | கராம்பு | — 10 | ,, |
| 09. | மதுரம் | — 10 | ,, |
| 10. | ஓமம் | — 10 | ,, |
| 11. | இலவங்கப் பட்டை | — 10 | ,, |
| 12. | வெந்தயம் | — 10 | ,, |
| 13. | கடுகு | — 10 | ,, |
| 14. | சந்தனம் | — 10 | ,, |
| 15. | காந்தம் | — 10 | ,, |
| 16. | வாளம் | — 10 | ,, |
| 17. | இந்துப்பு | — 10 | ,, |
| 18. | வெங்காரம் | — 10 | ,, |
| 19. | பால் பெருங்காயம் | — 10 | ,, |
| 20. | சீனாக்காரம் | — 10 | ,, |
| 21. | சுக்கு | — தேவையான அளவு | |

**செய் முறை —**

மேற்குறிப்பிட்ட சரக்குகளிற் சுத்திசெய்ய வேண்டியவற்றைச் சுத்தி செய்யவும். பிறகு 1 முதல் 14 வரையுமுள்ள சரக்குகளைப் பொடித்து வஸ்திரகாயம் செய்தபின், மேலே குறிப்பிட்ட 15 முதல் 20 வரையும் உள்ள சரக்குகளை முறைப்படி கல்வத்திலிட்டு நன்கு அரைத்த பின்னர் மேற்கூறிய சூரணத்தையும் கலந்து சுக்குக் குடிநீர் விட்டு மேலும் அரைத்து ஏற்ற பதம் வந்ததும் 130 மி. கி. அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி வைக்கவும்.



**அளவு —**

1 — 2 மாத்திரைகள்
தினம் — இரண்டு / மூன்று வேளை

**அனுபானம் —**

சுக்குக் குடிநீர் / உள்ளி அவித்த நீர் / வேறு வேண்டிய அனுபானம்

**தீரும் நோய்கள் —**

வாய்வு, தேக உளைச்சல், வயிற்றுவலி, மற்றும் வாத ரோகங்கள்.

**குறிப்பு :**

இது ஈழத்தில் சித்த மருத்துவர்களின் கை மருந்தாகும்.

## 15. பால சஞ்சீவி மாத்திரை

*[பால வாகடம்]*

| | | | |
|---|---|---|---|
| 1. | சுக்கு | — 1 | பங்கு |
| 2. | மிளகு | — 1 | ,, |
| 3. | திற்பலி | — 1 | ,, |
| 4. | பொரித்த வெங்காரம் | — 1 | ,, |
| 5. | சாதிலிங்கம் | — 1 | ,, |
| 6. | தேசிப் புளிச் சாறு | — தேவையானளவு | |

**செய் முறை —**

மேற்கூறிய சரக்குகளை எடுத்து முறைப்படி சுத்தி செய்து கல்வத்தில் இட்டு விதிப்படி பொடித்துப் பழச்சாற்றுடன் மூன்று மணி நேரம் அரைத்து 100 மி. கிராம் அளவாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

**அளவு —**

ஒரு மாத்திரை
தினம் — இரண்டு / மூன்று வேளை

**அனுபானம் —**

சுவாச நோய்களுக்கு : கற்பூரவள்ளி சாறுகளிலும், துளசி, வெற்றிலை ஆகியவற்றின் சாறுகளிலும்.
சுரத்துக்கு : இக்கிரி, மல்லி, தூதுவளைக் குடிநீரிலும்.
மாந்தத்துக்கு : மாந்தக் குடிநீரிலும்
உபயோகிக்கலாம்.

**தீரும் நோய்கள் —**

சுவாசாசய நோய்கள், சுரம், மாந்தம், கழிச்சல் ஆகியன தீரும். நோய்க்கு ஏற்ப அனுபானத்தை வகுத்துக் கொள்க.

## 16. பிரமானந்த பைரவ மாத்திரை (B. B. Pill)

*[சித்த வைத்தியத் திரட்டு]*

| | | | |
|---|---|---|---|
| 1. | வெங்காரம் | — 1 | பங்கு |
| 2. | கந்தகம் | — 1 | ,, |
| 3. | மனோசிலை | — 1 | ,, |
| 4. | அரிதாரம் | — 1 | ,, |
| 5. | நாபி | — 1 | ,, |
| 6. | சுக்கு | — 1 | ,, |
| 7. | இலிங்கம் | — 6 | ,, |
| 8. | இஞ்சிச் சாறு | — தேவையானளவு | |

**செய் முறை —**

மேற்குறித்த சரக்குகளை முறைப்படி சுத்தி செய்து கல்வத்தில் இட்டு அரைத்து இஞ்சிச் சாறுவிட்டு ஒரு நாள் — 24 மணி நேரம் — நன்கு அரைத்து 100 மி. கி அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

**அளவு —**

1 — 3 மாத்திரைகள்
தினம் — இரண்டு / மூன்று வேளை

**அனுபானம் —**

இஞ்சி, தேன் சேர்த்துக் கொடுக்கவும்.



**தீரும் நோய்கள்**

சுரங்கள், சன்னி தீரும்; இதனைப் பொதுவாகச் சுரம் அகற்றி [Antipyretic] மருந்தாக வேண்டிய அனுபானத்தில் உபயோகிக்கலாம். மேலும் இம் மருந்தைச் சின்னச்சிவப்பு மாத்திரை / புன்னைவேர்க் குளிகைக்குப் பதிலாக உபயோகிக்கலாம்.

## 17. புன்னை வேர் குளிகை

*[ஏட்டு முறை — யாழ். மாநகரசபை முறை]*

| | | | |
|---|---|---|---|
| 01. | ஊசிக்காந்தம் | — 10 | கிராம் |
| 02. | சாதிலிங்கம் | — 10 | ,, |
| 03. | பெருங்காயம் | — 10 | ,, |
| 04. | சாத்திர பேதி | — 10 | ,, |
| 05. | வெங்காரம் | — 10 | ,, |
| 06. | கல்மதம் | — 10 | ,, |
| 07. | கோரைக் கிழங்கு | — 10 | ,, |
| 08. | வெண் கோட்டம் | — 10 | ,, |
| 09. | சுக்கு | — 10 | ,, |
| 10. | மிளகு | — 10 | ,, |
| 11. | திற்பலி | — 10 | ,, |
| 12. | அதிமதுரம் | — 10 | ,, |
| 13. | புன்னை வேர்ப்பட்டை | — 50 | ,, |

**செய் முறை —**

மேற்கூறிய சரக்குகளிற் சுத்தி செய்ய வேண்டியவற்றைச் சுத்தி செய்து, பொடிக்க வேண்டியவற்றை பொடித்து கல்வத்தில் தாதுப் பொருட்களை முறைப்படி போட்டு அரைத்த பின் மேற்படி பொடித்த சூரணத்தைப் போட்டு புன்னை வேர் பட்டைக் குடிநீர் விட்டு நன்கு அரைத்து உரிய பதத்தில் 65 மி. கி அளவில் உருட்டிக் கொள்க.

**அளவு —**

2 — 4 மாத்திரை - பெரியவர்கட்கு
1 — 2 மாத்திரை - பாலர்களுக்கு
தினம் — இரண்டு / மூன்று வேளை

**அனுபானம் –**

இஞ்சிச் சாறு, தேன், தாய்ப்பால், வேறு வேண்டிய அனுபானம்.

**தீரும் நோய்கள் -**

வாய்வு, சுரம், தேக உளைச்சல், நெஞ்சுக் குத்து, வாதவலி, கப ரோகங்கள் ஆகியன தீரும்.

**குறிப்பு :**

புன்னை வேர்ப்பட்டைக் குடிநீர் தயாரிக்கும்போது, குடிநீருக்கான பொதுவிதிப்படி செய்யவும்.

## 18. பெரிய கோரோசனை மாத்திரை

*[சித்த ஔடத செய் முறை]*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | கோரோசனை | — | 15 | கிராம் |
| 02. | குங்குமப் பூ | — | 15 | ,, |
| 03. | இரச கற்பூரம் (சுத்தித்தது) | — | 15 | ,, |
| 04. | இரச செந்தூரம் (சுத்தித்தது) | — | 15 | ,, |
| 05. | பச்சைக் கற்பூரம்(சுத்தித்தது) | — | 15 | ,, |
| 06. | சிற்றேலம் | — | 15 | ,, |
| 07. | அப்பிரக செந்தூரம் | — | 15 | ,, |
| 08. | கராம்பு | — | 15 | ,, |
| 09. | கோட்டம் | — | 15 | ,, |
| 10. | சாதிக்காய் | — | 15 | ,, |
| 11. | அக்கராகாரம் | — | 15 | ,, |

**செய் முறை –**

மேற்குறிப்பிட்டவற்றுள், சூரணம் செய்யவேண்டியவற்றைச் சூரணம் செய்து, மற்றைய சரக்குகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்து, பின் இரண்டையும் ஒன்று சேர்த்துப் கீழ்வரும் குடிநீர்களை விட்டு அரைத்து 130 மி. கி. அளவுகளில் உருட்டி, நிழலில் உலர்த்தி வைக்கவும்.



**அரைப்பு -**

1 – சந்தனக் குடிநீர் — 4 சாமம் (12 மணி நேரம்)
2 - சண்பகப்பூ குடிநீர் — 2 ,, (06 ,, )
3 – குங்குமப்பூ குடிநீர் — 2 ,, (06 ,, )

**அளவு –**

1 — 2 மாத்திரை
தினம் – இரண்டு / மூன்று வேளை

**அனுபானம் -**

தாய்ப்பால் / கற்பூரவள்ளிச் சாறு / வெற்றிலைச் சாறு எதுவாயிருப்பினும் பனங்கட்டியைச் சேர்க்கவேண்டும்.

**தீரும் நோய்கள் –**

கப நோய்கள் தீரும்; சுவாசாசய கப நோய் தீரும்; நெஞ்சுப் பலம் உண்டாகும்.

## 19. நீர்க்கோவை மாத்திரை (N. K. Pill)

*[சித்த வைத்தியத் திரட்டு]*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | கப்பு மஞ்சள் | — | 1 | பங்கு |
| 02. | கஸ்தூரி மஞ்சள் | — | 1 | ,, |
| 03. | பொரிகாரம் | — | 0.5 | ,, |
| 04. | சாம்பிராணி | — | 0.5 | ,, |
| 05. | மிளகு | — | 0.5 | ,, |
| 06. | சுக்கு | — | 0.5 | ,, |
| 07. | சாதிக்காய் | — | 0.5 | ,, |
| 08. | ஓமம் | — | 0.25 | ,, |
| 09. | இலவங்கம் | — | 0.25 | ,, |
| 10. | கற்பூரம் | — | 0.25 | ,, |
| 11. | தேசிப் புளி | — | தேவையானளவு | |

**செய் முறை -**

மேற்கூறியனவற்றுள் பொடிக்க வேண்டியவற்றைப் பொடித்து மற்றையவற்றைக் கல்வத்திலிட்டு அரைத்துத் தேசிப் புளியுடன் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து 6 மணி நேரம் அரைத்து 500 மி. கி அளவு மாத்திரைகளாக உருட்டி, நிழலில் உலர்த்திக் கொள்க.

**பிரயோகம் –**

ஒரு நேரம் முலைப்பாலில் அல்லது தேசிப் புளியில் உரைத்து நெற்றியில் (கன்னங்களில்) பற்றிடுக.

**தீரும் நோய் –**

தலை வலி, சல தோடம், தலைப் பாரம், கன்னக்குழி வேதனை போன்றவை தீரும். இது Sinusitis இல் சிறந்த பலனைக் கொடுக்கும்.

**குறிப்பு :**

வெளிப்பிரயோகம் மட்டும்.

*மாத்திரைகளைக் காற்றுப்புகா வண்ணம் அடைத்து வைக்கவும்.*

## 20. மகா ஏலாதி மாத்திரை

*[சித்த வைத்தியத் திரட்டு]*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | ஏலம் | — | 10 | கிராம் |
| 02. | இலவங்கம் | — | 10 | ,, |
| 03. | வால்மிளகு | — | 10 | ,, |
| 04. | சந்தனம் | — | 10 | ,, |
| 05. | வெட்டிவேர் | — | 10 | ,, |
| 06. | விலாமிச்சம் வேர் | — | 10 | ,, |
| 07. | அகில்வேர்க்கட்டை | — | 10 | ,, |
| 08. | தாமரை மகரந்தம் | — | 10 | ,, |
| 09. | தாமரை வளையம் | — | 10 | ,, |
| 10. | அதிமதுரம் | — | 10 | ,, |
| 11. | அக்கராகாரம் | — | 10 | ,, |
| 12. | அமுக்கிரா | — | 10 | ,, |
| 13. | குங்குமப் பூ | — | 10 | ,, |
| 14. | கஸ்தூரி | — | 10 | ,, |
| 15. | மான்கொம்பு | — | 10 | ,, |
| 16. | ஜடாமாஞ்சில் | — | 10 | ,, |



| | | | | |
|---|---|---|---|---|
| 17. | உருத்திராட்சை | — | 10 | கிராம் |
| 18. | கோரோசனை | — | 10 | ,, |
| 19. | அம்பர் | — | 10 | ,, |
| 20. | பச்சைக் கற்பூரம் | — | 10 | ,, |
| 21. | சாம்பிராணி | — | 05 | ,, |
| 22. | அம்பிரக பற்பம் | — | 05 | ,, |
| 23. | வெள்ளி ,, | — | 05 | ,, |
| 24. | முத்து ,, | — | 05 | ,, |
| 25. | பவள ,, | — | 05 | ,, |
| 26. | மாதுளம் பூச்சாறு | } தேவையான அளவு | | |
| 27. | இளநீர் | | | |
| 28. | தாய்ப்பால் | | | |

**செய் முறை –**

மேற்கூறிய சரக்குகளைச் சுத்தி செய்து, பொடிக்க வேண்டியவைகளை முறைப்படி பொடித்து, ஏனைய சரக்குகளைக் கல்வத்திலிட்டு அரைத்து, எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து மாதுளம் பூச்சாறு, இளநீர், தாய்ப்பால் இவைகளைத் தனித்தனியாக ஒவ்வொன்றையும் 24 மணி நேரம் அரைத்து, 65 மி. கி மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்துக.

**அளவு –**

ஒரு மாத்திரை–இருவேளை 45 நாட்களுக்குக் கொடுக்கலாம்.

**அனுபானம் -**

இளநீர் / பால் / சர்க்கரை / தேன் / பழரசங்கள்

**தீரும் நோய்கள் –**

கண் நோய், கண்காசம், மஞ்சள் நோய் [காமாலை] கல் அடைப்பு, ஊதல், தாக சுரம், கடுங்காய்ச்சல், நீரிழிவு, உழலை, எரிவு, வாந்தி ஆகியன தீரும்.

**குறிப்பு :**

முகம் அழகு பெறும்; ஞாபகசக்தி உண்டாக்கும்; நீண்ட ஆயுளும் அமையும். இதனை யாழ்ப்பாணத்தில் பண்டைய வைத்தியர்கள் கற்ப மருந்தாகவும் உபயோகித்துள்ளனர்.

## 21. முருக்கம் விதை மாத்திரை

*[சித்த வைத்தியத் திரட்டு]*

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திரிகடுகு (வகைக்கு) | — | 1 | பங்கு |
| 2. | நற்சீரகம் | — | 1 | ,, |
| 3. | கடுகுரோகிணி | — | 1 | ,, |
| 4. | பலாசம் வித்து | — | 1 | ,, |
| 5. | நேர்வாளம் (சுத்தித்தது) | — | 6 | ,, |

**செய் முறை –**

மேற்குறிப்பிட்ட சரக்குகளை நீர்விட்டு அரைத்து 500 மி. கி அளவு மாத்திரைகளாக உருட்டி வைக்கவும்.

**அளவு –**

ஒரு மாத்திரை — ஒருமுறை மட்டும்

**அனுபானம் –**

பனை வெல்லம் / இளநீர் / நெய் / பால் / சீனி வேண்டிய அனுபானம். அதிகாலை வெறுவயிற்றில் உபயோகிக்கவும்.

**தீரும் நோய் –**

குடல் கிருமி, புழுக்கள், மாந்தம், சீதக்கட்டு, வயிற்று உப்பிசம் தீரும்.

## 22. வாதராட்சதன் குளிகை

*[பரராசசேகரம் — வாதரோக சிகிச்சை]*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | இரசம் | | — | 5 | கிராம் |
| 02. | சாதிலிங்கம் | (சுத்தித்தது) | — | 5 | ,, |
| 03. | அரிதாரம் | | — | 5 | ,, |
| 04. | காந்தம் | | — | 5 | ,, |
| 05. | சுக்கு | | — | 5 | ,, |
| 06. | மிளகு | | — | 5 | ,, |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 07. | திப்பலி | | — | 5 | கிராம் |
| 08. | கடுக்காய் | | — | 5 | ,, |
| 09. | உள்ளி | | — | 5 | ,, |
| 10. | நெல்லிக் கெந்தகம்(சுத்தித்தது) | | — | 5 | ,, |
| 11. | வசம்பு | | — | 5 | ,, |
| 12. | குக்கில் | | — | 5 | ,, |
| 13. | இந்துப்பு | | — | 5 | ,, |
| 14. | கடுகுரோகிணி | | — | 5 | ,, |
| 15. | வச்சநாபி | | — | 5 | ,, |
| 16. | இருவி | | — | 5 | ,, |
| 17. | நிர்விஷம் | சுத்தித்தது | — | 5 | ,, |
| 18. | சீனாக்காரம் | | — | 5 | ,, |
| 19. | பால்துத்தம் | | | 5 | ,, |
| 20 | நற்சீரகம் | | — | 5 | ,, |
| 21. | கருஞ்சீரகம் | | — | 5 | ,, |
| 22. | மனோசிலை | | — | 5 | ,, |
| 23. | சாம்பிராணி | | — | 5 | ,, |
| 24. | துரிசு | சுத்தித்தது | — | 5 | ,, |
| 25. | நேர்வாளம் | | — | 5 | ,, |
| 26. | வெங்காரம் | | — | 5 | ,, |

**செய் முறை –**

மேற்குறிப்பிட்ட சரக்குகளில் இடிக்க வேண்டியவற்றை இடித்துச் சூரணம் செய்க. பின்பு அரைக்க வேண்டியவற்றை முறைப்படி கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சூரணத்தையும் ஒன்று சேர்த்து அரைக்கவும். பின்னர் முதல் ஏழு நாட்களுக்கு பலாசம் பட்டைச் சாறும் அடுத்த ஏழு நாட்களுக்கு இஞ்சிச் சாறும் விட்டு நன்கு அரைத்து 32 மி. கி அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுக்கவும்.

**அளவு –**

1 — 4 மாத்திரை
காலை, மாலை — இரு வேளை

**அனுபானம் –**

உள்ளிச் சாற்றில் கொடுக்க — வாத ரோகங்களும், சுக்கு அவித்த நீரில் கொடுக்க — வாயு வகைகளும், இஞ்சிச் சாற்றில் கொடுக்க குன்ம ரோகங்களும் தீரும்.

### தீரும் நோய்கள் –

வாத ரோகம், கீல்வாயு, மலக்கட்டு, வாயு ஆகியன தீரும்.

## 23. விரேசன பூபதி

*[சித்த வைத்தியத் திரட்டு]*

| | | | |
|---|---|---|---|
| 1. | இரசம் | — 1 | பங்கு |
| 2. | சுக்கு | — 1 | ,, |
| 3. | வெங்காரம் | — 1 | ,, |
| 4. | கந்தகம் | — 1 | ,, |
| 5. | நேர்வாளம் | — 4 | ,, |

### செய் முறை –

மேற்கூறிய சரக்குகளைத் தூய்மை செய்து கல்வத்திலிட்டு முறைப்படி பொடித்துத் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து 75 மி. கி அளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

### அளவு –

*1 — 2 மாத்திரை*
ஒரு வேளை மட்டும்

### அனுபானம் –

குழந்தைகளுக்கு வெந்நீரில் உரைத்துக் கொடுக்கவும், பெரியவர்களுக்கு அளவைக் கூட்டி உபயோகிக்கலாம்.

### தீரும் நோய்கள் -

மலக்கட்டு, ஊதுமாந்தம், பொருமல், வளி நோய்கள்

## 24 விஷ்ணு சக்கரம்

*[சித்த வைத்தியத் திரட்டு]*

| | | | |
|---|---|---|---|
| 01. | இரசம் | — 1 | பங்கு |
| 02. | கந்தகம் | — 1 | ,, |
| 03. | லிங்கம் | — 1 | ,, |
| 04. | நாபி | — 1 | பங்கு |
| 05. | பலகறைப் பற்பம் | — 1 | ,, |
| 06. | பால்துத்தம் | — 1 | ,, |
| 07. | தாளகம் | — 1 | ,, |
| 08. | காந்தம் | — 1 | ,, |
| 09. | மனோசிலை | — 1 | ,, |
| 10. | வேப்பம்பழச் சாறு | — | தேவையானளவு |

### செய் முறை –

மேற்கூறிய சரக்குகளைச் சுத்தி செய்து, முறைப்படி கல்வத்தில் இட்டுப் பொடித்து, வேப்பம்பழச் சாற்றுடன் நன்றாக அரைத்து, 130 மி. கி அளவு மாத்திரையாக உருட்டி, நிழலில் உலர்த்தவும்.

### அளவு–

ஒரு மாத்திரை
தினம் – இரு வேளை

### அனுபானம்–

திரிகடுகுத் தூள் / இஞ்சி / நீர் / தேன்

### தீரும் நோய்கள் –

பக்கவாதம், கீல் வாயு, விக்கல், ஊதல், சன்னி 13, ஏப்பம் மூர்ச்சை வாயு.

## 25. வெள்ளை வெங்காயக் குளிகை (V.V.Pill)

*[பரராசசேகரம் — கெர்ப்பரோக சிகிச்சை]*

| | | | |
|---|---|---|---|
| 01. | சாதிக்காய் | — 5 | கிராம் |
| 02. | ஓமம் | — 5 | ,, |
| 03. | மிளகு | — 5 | ,, |
| 04. | வெந்தயம் | — 5 | ,, |
| 05. | கல்லுப்பு | — 5 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 06. | அக்கராகாரம் | — 5 | கிராம் |
| 07. | இந்துப்பு | — 5 | ,, |
| 08. | திற்பலி | — 5 | ,, |
| 09. | சுக்கு | — 5 | ,, |
| 10. | ஏலம் | — 5 | ,, |
| 11. | ஊசிக்காந்தம் (சுத்தித்தது) | — 5 | ,, |
| 12. | கடுகுரோகிணி | — 5 | ,, |
| 13. | வசம்பு | — 5 | ,, |
| 14. | வெண்கோட்டம் | — 5 | ,, |
| 15. | கராம்பு | — 5 | ,, |
| 16. | இலவங்கம் | — 5 | ,, |
| 17. | பொரிகாரம் (எண்ணெய்க்- | — 5 | ,, |
| 18. | கறுவா -காரம்) | — 5 | ,, |
| 19. | கடுக்காய் | — 5 | ,, |
| 20. | சதகுப்பை | — 5 | ,, |
| 21. | சிற்றரத்தை | — 5 | ,, |
| 22. | மல்லி | — 5 | ,, |
| 23. | வசுவாசி | — 5 | ,, |
| 24. | வெங்காரம் (சுத்தித்தது) | — 5 | ,, |
| 25. | முச்சீரகம் (வகைக்கு) | — 5 | ,, |
| 26. | பால்பெருங்காயம் | — 5 | ,, |
| 27. | கடுகு | — 5 | ,, |
| 28. | வெளுத்தல் பிசின் | — 5 | ,, |
| 29. | உள்ளி (பூண்டு) | — 50 | ,, |
| 20. | உத்தாமாணிச் சாறு | — | வேண்டியளவு |

**செய் முறை —**

மேற்குறிப்பிட்ட சரக்குகளில் பொடிக்க வேண்டியவற்றைப் பொடித்தும், அரைக்க வேண்டியவற்றை அரைத்தும் உத்தாமாணிச் சாறு விட்டு ஒன்று சேர்த்து அரைத்து மாத்திரைப் பதத்தில் 250 மி. கி அளவு உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்க.

**அளவு —**

1 - 4 மாத்திரை

தினம் —இரண்டு / மூன்று வேளை



**அனுபானம் —**

வெந்நீர் / உள்ளி அவித்த நீர் / தேன் / வேண்டிய குடிநீர்.

**தீரும் நோய்கள் —**

உணவுப் பாதையில் ஏற்படும் சாதாரண கோளாறுகள் (Gastro Intestinal Disorders) அரோசகம், கெற்பசூலை, அஜீரணம், வயிற்று வேதனை, உப்பிசம், வயிற்றுப் பொருமல் போன்றவை தீரும். இதனை வேதனா சாந்தினியாகவும் உபயோகிக்கலாம், குருதி அமுக்க நோயாளிகள் (Hypertension) இதனை உபயோகித்தல் சிறந்தது. குருதியிலுள்ள கொழுப்புத் தன்மையைக் குறைக்க வல்லது. பொதுவாக யாழ்ப்பாண வைத்தியர்கள் வாய்வுக் குளிகை அல்லது உள்ளிக் குளிகை என்ற பெயரில் இதனைக் கைகண்ட மருந்தாகப் பழக்கத்தில் வைத்திருக்கின்றனர்.

குறிப்பு:

இதனைப் போத்தலில் அடைத்து வைத்திருக்கும் போது கண்ணாடி மூடியால் அடைத்து வைத்திருப்பது சிறந்தது. குழந்தைகளுக்கு இம்மருந்தை உபயோகிக்கும் போது, பரராசசேகரத்தில் பாலரோக சிகிச்சையில் குறிப்பிட்ட வெள்ளை வெங்காயக் குளிகையை உபயோகித்தல் சிறந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள சித்த மருத்துவர்கள் வெள்ளை வெங்காயக் குளிகை, உள்ளிக் குளிகை என்ற பெயர்களுடன் தங்களுடைய அனுபவத்திற்கேற்பச் சில மருந்துச் சரக்குகளைச் சேர்த்தும், சில மருந்துச் சரக்குகளை விலக்கியும் தயாரித்துத் தங்கள் கையாட்சியில் வைத்திருக்கின்றனர்.

இக் குளிகை பற்றிப் பெரும்பாலான நூல்களிற் குறிப்பிட்டு இருப்பினும், அவை வெவ்வேறு வகைச் சரக்குகளை அடக்கி உள்ளன. ஆயினும் எமது சொந்த அனுபவத்தைப் பொறுத்த வரை, பரராசசேகரம் கூறும் இரு வெள்ளை வெங்காயக் குளிகைகளுமே [கெர்ப்ப ரோகம், பாலரோகம்] தரமானவையும் சித்த மருத்துவத்துக்கு ஏற்றவை எனக் கொள்ளலாம்.

# இலேகியம் / இளகம்

குடிநீர் அல்லது சாறுகளுடன் சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி அதற்குரிய மணம் வரும் பொழுது பாகு பதத்தில் சூரணங்களைப் போட்டு நெய்யும், தேனும் விட்டுக் கிண்டி எடுப்பதை இலேகியம் எனலாம்.

### செய் முறை —

குடிநீர் வகைகள், சாறு வகைகள், பசுப்பால் ஆகியவற்றைத் தனியாகவேனும் அல்லது கலந்தேனும் அத்துடன் சர்க்கரையையும் சேர்த்துக் கரைத்து வடிகட்டியதும் அடுப்பேற்றி எரிக்கும் பொழுது பாகு பதம் ஆகும். அவ்வேளையில் சூரணத்தைச் சிறிது சிறிதாகப் போட்டுக் கிண்டிக் கொண்டிருக்கையில் நெய்யைச் சேர்க்கவும். இறுதியில் இலேகிய பதமானதும் தேன் விட்டுக் கிண்டிப் பக்குவப் படுத்துக.

### இன்னொரு செய் முறை :—

ஒரு பாத்திரத்தில் தேவையான அளவு தூய நீரை விடவும். பின் அதனுள் சேர்க்க வேண்டிய சர்க்கரை அல்லது சீனியைக் கரைத்து வடிகட்டி எடுக்கவும். இலேகியத்துக்குப் பசுப்பால் சேர்க்குமாறு கூறப்பட்டிருப்பின், மேற் குறிப்பிட்டவாறு கரைக்க வேண்டியவற்றைப் பசுப்பாலில் கரைத்து வடிகட்டி எடுக்கவும்.

வடிகட்டி எடுத்த திரவத்தை ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பிலேற்றி எரிக்கவும். அப்பொழுது பாகு பதம் அடையும். அந்நேரத்தில் தேனை விட்டு ஒருதரம் பொங்கி வரும் போது,



பொடித்து வைத்த சரக்குப் பொடியைச் சிறிது சிறிதாக தூவிக் கிளறும் பொழுது அதனுடன் நெய்யைக் கலந்து இலேகியப் பதத்தில் எடுத்துக் கொள்ளலாம். தேவையேற்படின், மீண்டும் சிறிது தேனைச் சேர்த்துக் கொள்ளலாம். சரியான பதம் வந்ததும் பாத்திரத்தைக் கீழே இறக்கி, இலேகியத்தைப் பக்குவப் படுத்தவும்.

### ஆயுட் காலம் —

ஆறு மாதம் வரை வன்மையுடையது.

இலேகியங்களைக் காற்றுப்புகாததும், தண்ணீர்ப் பற்று இல்லாததுமான சாடிகளில் அல்லது கண்ணாடிப் பாத்திரங்களில் வைத்துப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். பூஞ்சணம் பிடிக்க விடக்கூடாது. இலேகியச் சாடியில் தேன் மேற்பரப்பில் மிதக்கத் தக்கதாக விட்டும், அதன் பதம் கெடாமல் பாதுகாக்கலாம்.

## இலேகிய / இளக வகைகள்

01. அமுக்கிரா இலேகியம்
02. ஆடாதோடை கண்டங்கத்தரி இலேகியம்
03. கருணைக் கிழங்கு இலேகியம்
04. தேற்றாங் கொட்டை இலேகியம்
05. நெல்லிக்காய் இலேகியம்
06. பித்த சமன இலேகியம்
07. வாலை இலேகியம்
08. வில்வாதி இலேகியம்
09. வெண் பூசினி இலேகியம்
10. வெள்ளை வெங்காய இலேகியம்

## 1. அமுக்கிராய் இலேகியம்

*(IMPCOPS முறை – இந்தியா)*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | அமுக்கிரா | — | 60 | கிராம் |
| 02. | நிலப் பூசினிக் கிழங்கு | — | 60 | ,, |
| 03. | நன்னாரி | — | 60 | ,, |
| 04. | சீரகம் | — | 60 | ,, |
| 05. | பறங்கிக் கிழங்கு | — | 60 | ,, |
| 06. | முந்திரிகை வற்றல் | — | 50 | ,, |
| 07. | ஏலம் | — | 10 | ,, |
| 08. | சுக்கு | — | 10 | ,, |
| 09. | மிளகு | — | 10 | ,, |
| 10. | திற்பலி | — | 10 | ,, |
| 11. | நெய் | — | 150 | ,, |
| 12. | தேன் | — | 300 | ,, |
| 13. | சீனி | — | 600 | ,, |
| 14. | நீர் | — | 1000 | மி. லீ |

**செய் முறை**

01 முதல் 10 வரையுமுள்ள சரக்குகளை எடுத்துச் சுத்தி செய்யவேண்டியவற்றைச் சுத்தி செய்து, பொடித்துச் சேர்த்து வைத்துக்கொள்க. பின் சீனியை நீரில் கலந்துப் அடுப்பிலேற்றிக் காய்ச்சுகையில் பாகுபதம் வந்ததும் நெய்விட்டு மேற்குறிப்பிட்ட பொடித்த தூளைச் சிறிது சிறிதாக போட்டுக் கிண்டும் பொழுது இலேகியப்பதம் வரும். பின் அதனை இறக்கித் தேனைச் சேர்த்துக் கொள்க.

**அளவு –**

6 — 12 கிராம்
தினம் — இரு வேளை

**அனுபானம் –**

சூடான பால் / வெந்நீர்

**தீரும் நோய்கள் –**

பலக் குறைவு, பாண்டு, மலடு, க்ஷீரணமண்டல வியாதிகள் தீரும். இது உடல் உரமாக்கி [Tonic], இன்பம் பெருக்கி, இரத்த விருத்தி, நரம்பு உரமாக்கி ஆகிய செய்கை உடையது



## 2. ஆடாதோடை கண்டங் கத்தரி இலேகியம்

*[IMPCOPS முறை — இந்தியா]*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | ஆடாதோடை வேர்ப் பட்டை | — | 5000 | கிராம் |
| 02. | கண்டங் கத்தரி (சமூலம்) | — | 5000 | ,, |
| 03. | தண்ணீர் | — | 100 | லீற்றர் |
| 04. | சீனி | — | 4000 | கிராம் |
| 05. | திரிகடுகு (வகைக்கு) | — | 50 | ,, |
| 06. | சிற்றரத்தை | — | 50 | ,, |
| 07. | சீந்தில் மா | — | 50 | ,, |
| 08. | கொடிவேலி (சுத்தித்தது) | — | 50 | ,, |
| 09. | கற்கடகசிங்கி | — | 50 | ,, |
| 10. | சிறுதேக்கு | — | 50 | ,, |
| 11. | கோரைக் கிழங்கு | — | 50 | ,, |
| 12. | திற்பலி மூலம் | — | 50 | ,, |
| 13. | பூனைக்காஞ்சோன்றி வேர் | — | 50 | ,, |
| 14. | நெய் | — | 400 | ,, |
| 15. | திற்பலி | — | 400 | ,, |
| 16. | தேன் | — | 400 | ,, |
| 17. | மூங்கிலுப்பு | — | 400 | ,, |

**செய் முறை –**

முதலில் குறிப்பிட்ட இரு சரக்குகளையும் வெட்டி இடித்துக் கசாயம் போட்டு. அதனைக் கால் பங்காக வற்றவைக்கவும். கசாயத்தை வடித்து எடுத்துச் சீனி சேர்த்து மணப்பாகு பதத்தில் மேலும் காய்ச்சும் பொழுது 05 — 13 வரையுமுள்ள சரக்குகளின் சூரணத்தை மேற்படி மணப்பாகில் கலந்து நெய்யைச் சேர்க்கவும் உரிய பதம் வரும் பொழுது திற்பலி. மூங்கிலுப்பு ஆகியவற்றின் சூரணத்தை இறுதியாகக் கலந்து கிண்டு கபின் அடுப்பிலிருந்து இறக்கித் தேன் விட்டுக் கிளறி இலேகிய பதத்தில் எடுக்கவும்.

**அளவு –**

5 — 10 கிராம் வரை
தினம் – இரு வேளை

அனுபானம் -

வெந்நீர் / வேண்டிய அனுபானம். இதனைத் துணை மருந்துடனும் உபயோகிக்கலாம். (உதாரணம் - பவள பற்பம்)

திரும் நோய்கள் -

சுவாசாசய நோய்கள் (Chronic Bronchitis, Bronchiectasis, Pulmonary T. B) மற்றும் பசிக்குறைவு, அஜீரணம் போன்றவற்றுக்கு உபயோகிக்கலாம். இதற்குக் விசேடமாக கோளையகற்றிச் (Expectorant) செய்கை யுண்டு.

குறிப்பு :

இதனில் மூங்கிலுப்பின் அளவைக் குறைத்துச் சேர்த்துக் கொண்டால், வாய் எரிவு ஏற்படாது. சீனிக்குப் பதிலாகச் சர்க்கரையையும் சேர்த்துக் காய்ச்சலாம்.

## 3. கருணைக் கிழங்கு இலேகியம்

*[சித்த வைத்தியத் திரட்டு]*

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கருணைக்கிழங்கு | — | 1 | பங்கு |
| 2. | திரிபலைச் சூரணம் | — | 0.5 | ,, |
| 3. | பூநீறு (சுத்தித்தது) | — | 0.25 | ,, |
| 4. | நல்லெண்ணெய் | — | தேவையானளவு | |

செய் முறை -

கருணைக் கிழங்கைச் சுத்தம் செய்து சிறு துண்டுகளாக அரிந்து சிறிதளவு நீரில் வேகவைத்து அரைக்கவும். பின்பு அதனுடன் திரிபலைச் சூரணம், பூநீறு ஆகியவற்றையும் சேர்த்துப் பிசைந்து அடுப்பேற்றி தேவையானளவு நல்லெண்ணெய் விட்டு, மெழுகு பதம் வரும் வரை கிண்டி இலேகியமாக எடுக்கவும்.

அளவு -

3 - 4 கிராம் [நெல்லிக்காயளவு]
தினம் — இரு வேளை
பத்து நாட்கள் உட்கொள்ளலாம்.



அனுபானம் -

பசுப்பால் / வெந்நீர்

துணை மருந்து -

நாக பற்பம் / நத்தைப் பற்பம்

தீரும் நோய்கள் -

மூலநோய்கள், சீழ் மூலம், இரத்த மூலம், வாய்வு மூலம், உள் மூலம், வெளி மூலம் ஆகியவற்றுடன் மலக்கட்டும் நீங்கும்.

குறிப்பு :

கருணைக் கிழங்கை உலர்த்தி இடித்துப் பொடித்து வைத்துக் கொண்டு, சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுபதமானதும் மேற்படிபொடியைப் போட்டு இலேகியமாகக் கிண்டி எடுப்பதும் வழக்கத்தில் உண்டு.

## 4. தேற்றாங் கொட்டை இலேகியம்

*[அகத்தியர் பரிபூரணம் - 400]*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | தேற்றாங் கொட்டை | | — | 300 | கிராம் |
| 02. | சுக்கு | | — | 30 | ,, |
| 03. | மிளகு | | — | 30 | ,, |
| 04. | திற்பலி | | — | 30 | ,, |
| 05. | கடுக்காய் | | — | 30 | ,, |
| 06. | நெல்லிக்காய் | | — | 30 | ,, |
| 07. | தான்றிக்காய் | | — | 30 | ,, |
| 08. | சிற்றரத்தை | | — | 30 | ,, |
| 09. | நற்சீரகம் | | — | 30 | ,, |
| 10. | சர்க்கரை | | — | 240 | ,, |
| 11. | பசுப்பால் | [64 அவுன்ஸ்] | — | 2000 | மி.லீ |
| 12. | நெய் | [16 ,, ] | — | 500 | ,, ,, |
| 13. | தேன் | [ 8 ,, ] | — | 250 | ,, ,, |

**செய் முறை –**

01 — 09 வரையுமுள்ள சரக்குகளைப் பொடித்து வைக்கவும். பின் பசுப் பாலில் சர்க்கரையைக் கரைத்து வடிகட்டி அடுப்பேற்றி எரிக்கும் பொழுது பாகு பதம் அடையும். அப்பொழுது மேற்படி பொடியைப் போட்டுக் கிளறி, பசு நெய் சேர்த்து இலேகியப் பதம் வரும் வரை கிண்டிய பின், இறக்கித் தேன் சேர்த்துக் கொள்ளவும்.

**அளவு –**

5 கிராம் [ கொட்டைப் பாக்களவு ]
தினம் — இரு வேளை

**அனுபானம் –**

வெந்நீர் / பசுப் பால்

**துணை மருந்து**

நாக பற்பம் / சிரிங்கி பற்பம் / சிலாசத்துப் பற்பம் /சங்குபற்பம்

**தீரும் நோய்கள் –**

என்புருக்கி நோய், பசிமந்தம், மூலநோய்கள் ஆகியன தீரும்.

இந்த இலேகியத்துடன் 30 மி. கிராம் நாகபற்பம் ஒருங்கு கூட்டித் தினம் இரு வேளை 20 நாட்களுக்குக் கொடுத்துவர மூலநோய் தீரும். குறிப்பாக Ulcerative Colitis நோய்க்குச் சிறந்த பலனைக் கொடுக்கும்.

பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோய்க்கும் [Leucorrhoea] சிலாசத்துப் பற்பம் / சங்கு பற்பத்துடன் சேர்த்துக் கொடுக்கலாம்.

**குறிப்பு :**

தேற்றா விதையை இடித்துப் பொடியாக்குவதில் சிரமம் ஏற்படின், அதனை நீரில் ஊற வைத்து, அரைத்துச் சேர்த்துக் கொள்ளவும்.



## 5. நெல்லிக்காய் இலேகியம்

*[வைத்திய சில்லறைக் கோவை]*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | நெல்லி வற்றல் | — | 3500 | கிராம் |
| 02. | தண்ணீர் | — | 21.40 | லீற்றர் |
| 03. | சர்க்கரை | — | 350 | கிராம் |
| 04. | சுக்கு | — | 35 | ,, |
| 05. | ஓமம் | — | 35 | ,, |
| 06. | திற்பலி மூலம் | — | 35 | ,, |
| 07. | கராம்பு | — | 35 | ,, |
| 08. | தக்கோலம் | — | 35 | ,, |
| 09. | ஏலம் | — | 35 | ,, |
| 10. | வெண் குங்கிலியம் | — | 35 | ,, |
| 11. | பூனைக்கண் குங்கிலியம் | — | 35 | ,, |
| 12. | வாய்விடங்கம் | — | 35 | ,, |
| 13. | நற்சீரகம் | — | 35 | ,, |
| 14. | மல்லி | — | 35 | ,, |
| 15. | கூகை நீறு | — | 35 | ,, |
| 16. | அதிமதுரம் | — | 35 | ,, |
| 17. | நெய் | — | 1400 | மி.லீற்றர் |

**செய் முறை –**

ஆரம்பத்தில் 4முதல்16வரையுமுள்ள சரக்குகளைப் பொடித்து வைக்கவும். பின் 1 — 2 வரையுள்ள இரண்டு சரக்குகளையும் ஒரு பாத்திரத்திற் போட்டு அடுப்பேற்றிக் கொதிக்க வைத்து அதனை எட்டொன்றாக வற்ற வைக்கவும் [அதாவது 2. 700 லீற்றர்]. பின்பு அதனை வடித்தெடுத்துச் சர்க்கரை சேர்த்துக் கரைத்து, மேலும் ஒரு முறை வடிகட்டி பின் அடுப்பேற்றி எரித்துப் பாகு பதம் வரும் பொழுது, மேற்படி பொடித்த சூரணத்தைச் சிறிது சிறிதாகச் சேர்த்து நெய்யைக் கலந்து இலேகிய பதத்திற் கிண்டி எடுத்துக் கொள்க.

**அளவு**

2 — 4 கிராம்
தினம் — இரு வேளை

**அனுபானம் –**

பசுப் பால்

**தீரும் நோய்கள் –**

மேகம், எலும்பு நோய், ஈளை, இருமல், தேகப்பலவீனம் ஆகியன தீரும். உடல் புஷ்டியைக் கொடுக்கும். இது ஒரு கற்ப மருந்தாகும்.

உண்டாரை நீடு வாழச் செய்யும் கருநெல்லிக் கனியைப் பெற்ற அதியமான், அதனைத் தான் உண்டு, கற்ப காலம் வாழ நினையாது ஔவைக்கு ஈர்ந்து மகிழ்ந்த புறநானூறு தரும் செய்தியை இங்கு எண்ணிப் பார்த்தல் பொருந்தும்.

**குறிப்பு :**

இதற்குத் தேவையான அளவு தேன் சேர்த்தும் இலேகியமாகத் தயாரிக்கலாம்.

நெல்லி வற்றலுக்குப் பதிலாக நெல்லிக் கனியைச் சேர்த்தும் இலேகியம் தயாரிக்கலாம்.

## 6. பித்த சமன இலேகியம்

*[ஏட்டு முறை — யாழ் மாநகர சபை]*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | நற்சீரகம் | — | 2 | கிலோ கிராம் |
| 02. | கடுக்காய் | — | 80 | கிராம் |
| 03. | நெல்லி வற்றல் | — | 80 | ,, |
| 04. | தான்றிக் காய் | — | 80 | ,, |
| 05. | கராம்பு | — | 80 | ,, |
| 06. | சுக்கு | — | 80 | ,, |
| 07. | பற்படாகம் | — | 80 | ,, |
| 08. | கோரைக் கிழங்கு | — | 80 | ,, |
| 09. | சிறுநாகப் பூ | — | 80 | ,, |
| 10. | ஏலம் | — | 80 | ,, |
| 11. | சீந்தில் மா | — | 80 | ,, |
| 12. | சிற்றாமட்டி | — | 80 | ,, |
| 13. | மல்லி | — | 80 | ,, |
| 14. | இலவங்கப் பட்டை | — | 80 | ,, |
| 15. | இலவங்கப் பத்திரி | — | 80 | ,, |
| 16. | திற்பலி | — | 80 | ,, |
| 17. | வெட்டி வேர் | — | 80 | ,, |
| 18. | சித்திர மூலம் | — | 80 | ,, |
| 19. | விலாமிச்சம் வேர் | — | 80 | ,, |
| 20. | தேன் (½ போத்தல்) | — | 375 | மி. லீ |
| 21. | நெய் (1½ ,, ) | — | 1125 | மி. லீ |
| 22. | சர்க்கரை | — | 6 | கி. கிராம் |
| 23. | சீனி | — | 300 | கிராம் |



**செய் முறை –**

1 முதல் 19 வரையுமுள்ளவற்றில் சுத்தி செய்ய வேண்டிய வற்றைச் சுத்தி செய்து, பொடித்துச் சூரணம் செய்து கொள்க. சர்க்கரையைத் தேவையான அளவு ஏறத்தாழ பத்து லீற்றர் தண்ணீரில் கரைத்து வடிகட்டி அடுப்பேற்றி எரிக்கவும்.

பாகு பதம் வரும் போது மேற் குறித்துள்ள சூரணத்தைச் சிறிது சிறிதாகப் போட்டுக் கிளறும் பொழுது அத்துடன் நெய்யும் பின் சீனியையும் கலந்து இலேகிய பதத்தில் இறக்கித் தேனை விட்டுச் சேர்த்துக் கொள்ளவும்.

**அளவு –**

5 கிராம்
தினம் — இரு வேளை

**அனுபானம் –**

பால் / வெந்நீர்

**தீரும் நோய்கள்**

பித்த நோய்கள், தேக எரிவு, வயிற்று எரிவு, ஏப்பம், பசியின்மை, மேகம், வெள்ளை, வெட்டை, அழல் வாதம் [Neuritis], வாய் அவியல், நரம்பு நோய்கள் ஆகியன தீரும்

**குறிப்பு :**

யாழ் மாநகராட்சி மன்றத்தில் தயாரிக்கப்படும் இம்மருந்து பொது மக்கள் மத்தியில் பெரும் மதிப்புப் பெற்றுள்ளது. அதனால் தற்பொழுது பெருமளவில் தயாரித்து விநியோகிக்கின்றனர்.

## 7. வாலை இலேகியம்

*[பழைய ஏட்டு முறை]*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | அதிமதுரம் | — | 10 | கிராம் |
| 02. | ஏலம் | — | 10 | ,, |
| 03. | இலவங்கம் | — | 10 | ,, |
| 04. | கோட்டம் | — | 10 | ,, |
| 05. | சாதிக்காய் | — | 10 | ,, |
| 06. | கராம்பு | — | 10 | ,, |
| 07. | சுக்கு | — | 10 | ,, |
| 08. | மதனகாமியப் பூ | — | 10 | ,, |
| 09. | கசகசா | — | 10 | ,, |
| 10. | அபின் | — | 10 | ,, |
| 11. | என்ளு | — | 40 | ,, |
| 12. | உழுந்து | — | 40 | ,, |
| 13. | சாறனை வேர் | — | 40 | ,, |
| 14. | அமுக்கிரா | — | 40 | ,, |
| 15. | கஞ்சா | — | 40 | ,, |
| 16. | நிலப்பனங் கிழங்கு | — | 40 | ,, |
| 17. | பசுப்பால் [80 அவுன்ஸ்] | — | 2000 | மி. லீற்றர் |
| 18. | தண்ணீர் விட்டாங் கிழங்குச் சாறு | — | 80 | ,, |
| 19. | சாம்பல் வாழைக்கிழங்குச் சாறு | — | 80 | ,, |
| 20. | பனங்கட்டி | — | 40 | ,, |
| 21. | கற்கண்டு | — | 40 | ,, |
| 22. | சீனி | — | 40 | ,, |
| 23. | நெய் [20 அவுன்ஸ்] | — | 500 | மி. லீற்றர் |
| 24. | தேன் [20 ,, ] | — | 500 | ,, |

### செய் முறை —

முதலிலே ஒன்று முதல் 16 வரையுமுள்ள சரக்குகளை [9, 10, 11 நீங்கலாக] எடுத்துப் பொடித்துச் சூரணம் செய்து கொள்க. பின்பு 17, 18, 19 ஆகிய மூன்றையும் ஒரு பாத்திரத்தில் விட்டு 20, 21, 22 ஆகியவற்றை வகைக்கு 40 கிராம் வீதம் எடுத்து அதில் போட்டு நன்கு கரைத்து வடிகட்டி எடுத்து, அதனை அடுப்பேற்றி எரிக்கவும். பின் 9, 10, 11 ஆகிய வற்றைக் கல்வத்திலிட்டுச் சிறிது பால் விட்டு நன்கு அரைக்கவும். அரைக்கையில், மெழுகுப்பதமானதும் அக்கலவையை, ஏற்கெனவே அடுப்பிலிருக்கும் பாத்திரத்திலுள்ள கலவையுடன் சேர்த்து நன்கு கரைக்கவும். மேலும் எரிக்கும் போது பாகு பதம் அடையும். அச்சமயத்தில் மேற்குறிப்பிட்ட பொடித்த சூரணத்தைச் சிறிது சிறிதாகச் சேர்த்துக் கிண்டி நெய் விட்டு இலேகிய பதத்தில் இறக்கித் தேன் சேர்த்துக் கொள்க.

### அளவு -

2 — 4 கிராம் (தேக பலத்திற்கேற்ப வழங்கவும்)
தினம் — இருவேளை

### அனுபானம் —

பால் / வெந்நீர் / வேண்டியவை

### தீரும் நோய்கள் —

நரம்புப் பலவீனம், உடல் மெலிவு, பசியின்மை, சொற்பன ஸ்கலிதம், தேகச் சூடு ஆகியன தீரும். போக சிற்றின்பத்தைப் பூரணமாகப் பெறாதவர்கள், அதாவது Premature Ejaculation உள்ளவர்கள் நிவாரணம் அடைவார்கள்.

### பத்தியம் —

இச்சா பத்தியம்
இதனை ஒரு மண்டலம் (40 நாட்கள்) உபயோகிக்கலாம்.

### குறிப்பு :

இந்த இலேகியத்தை எக்காரணம் கொண்டும 40 நாட்களுக்கு மேல் உபயோகிக்கக் கூடாது. தொடர்ந்து உபயோகித்தால் உட்லுக்குக் கேடு உண்டாகும். இவ்விடயத்தில் மருத்துவர்கள் கவனஞ் செலுத்தல் மிகவும் அவசியம். இம் மருந்தை உபயோகிக்கும் பொழுது போதை நஞ்சுத் தன்மையேற்படின், வாழைப்பழம் கொடுப்பதன் மூலம் நஞ்சை முறித்துக் கொள்ளலாம்.

## 8. வில்வாதி இலேகியம்

(அகஸ்தியர் வைத்திய வல்லாதி — 600)

| | | | |
|---|---|---|---|
| 01. | வில்வம் வேர் | — | 11. 2 கி. கிராம் |
| 02. | தண்ணீர் | — | 89. 600 லீற்றர் |
| 03. | பசுப்பால் | — | 22. 400 லீற்றர் |
| 04. | பனை வெல்லம் | — | 13. 440 கி. கிராம் |
| 05. | கராம்பு | — | 600 கிராம் |
| 06. | இலவங்கப் பட்டை | — | 600 ,, |
| 07. | சாதிக்காய் | — | 600 ,, |
| 08. | சிறுநாகப்பூ | — | 600 ,, |
| 09. | சுக்கு | — | 600 ,, |
| 10. | தாளிச பத்திரி | — | 600 ,, |
| 11. | திற்பலி | — | 600 ,, |
| 12. | மிளகு | — | 600 ,, |
| 13. | ஏலக்காய் | — | 600 ,, |
| 14. | தேன் | — | 2800 ,, |
| 15. | நெய் | — | 4600 ,, |

**செய் முறை –**

05 முதல் — 13 வரையுமுள்ள சரக்குகளைப் பொன் வறுவலாக வறுத்துப் பொடித்தபின் வஸ்திரகாயம் செய்து வைக்கவும்.

பின்பு வில்வம் வேரைச் சிறிய துண்டுகளாக வெட்டித் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைக்கவும். விட்ட நீர் கால் பங்காக வற்றியதும் வடிகட்டி, அதனுடன் சர்க்கரை, பால் ஆகியவற்றைக் கலந்து மெல்லிய துணியில் வடிகட்டிய பின், மீண்டும் கொதிக்க வைக்கவும். கொதித்து வருகையில் பாகு பதம் ஏற்படும். அப்பொழுது மேற்குறிப்பிட்ட சூரணத்தைச் சேர்த்து நெய் விட்டுக் கிண்டி இலேகிய பதத்தில் இறக்கித் தேனைச் சேர்த்துக் கொள்க.

**அளவு –**

5 — 10 கிராம்
தினம் — இருவேளை



**அனுபானம் –**

வெந்நீர் / வேண்டிய அனுபானம்

**துணை மருந்து –**

சங்கு பற்பம் / தாம்பிர பற்பம் / ஆமையோட்டுப் பற்பம் / வேண்டியவை.

**தீரும் நோய்கள் –**

அழல் குன்மம், எரிவு, பசியின்மை, குடல் அழற்சி, வயிற்றுப் போக்கு ஆகியன தீரும். இது Amoebiasis நோய்க்குப் பொருத்தமான துணை மருந்துடன் உபயோகிக்கலாம். இது உடலை உரமாக்கும்.

## 9. வெண் பூசினி இலேகியம்

(அகஸ்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 01. | வெண் பூசினிக் காய்ச் சாறு | — | 5600 மி.லீட்டர் |
| 02. | தாழை விழுதுச் சாறு | — | 1400 ,, ,, |
| 03. | தென்னம்பூச் சாறு | — | 1400 ,, ,, |
| 04. | எலும்மிச்சம் பழச் சாறு | — | 1400 ,, ,, |
| 05. | பசுப் பால் | — | 2800 ,, ,, |
| 06. | சர்க்கரை | — | 350 கிராம் |
| 07. | நற்சீரகம் | — | 35 ,, |
| 08. | மல்லி | — | 35 ,, |
| 09. | வெண் கோட்டம் | — | 35 ,, |
| 10. | மிளகு | — | 35 ,, |
| 11. | மாயாக்காய் | — | 35 ,, |
| 12. | ஏலம் | — | 35 ,, |
| 13. | சாதிக்காய் | — | 35 ,, |
| 14. | சாதி பத்திரி | — | 35 ,, |
| 15. | அதி மதுரம் | — | 35 ,, |
| 16. | தாளிச பத்திரி | — | 35 ,, |
| 17. | நெய் | — | 700 மி.லீட்டர் |
| 18. | தேன் | — | 700 ,, ,, |

**செய் முறை –**

07 முதல் 16 வரையுமுள்ள சரக்குகளை முதலில் உரலிலிட்டுச் சூரணித்து வைக்கவும். பின்பு 01 — 06 வரையுமுள்ளவற்றை ஒன்று சேர்த்துக் கரைத்து, வடிகட்டி அடுப்பேற்றவும், பாகு பதம் வரும் பொழுது, மேற்படி, சூரணத்தைக் கலந்து நெய் சேர்த்துக் கிண்டுகையில் இலேகிய பதம் வரும். உடனே இறக்கித் தேனைச் சேர்த்துக் கொள்ளவும்.

**அளவு –**

5 — 10 கிராம்
தினம் — இரு வேளை

**அனுபானம் –**

பசுப் பால் / வெந்நீர்

**துணை மருந்து –**

சிலாசத்துப் பற்பம் / சிரிங்கி பற்பம் முதலியன.

**தீரும் நோய்கள் –**

மஞ்சள் நோய் (காமாலை), ஊதல், என்புச் சுரம், வெள்ளை, வெட்டை, நீர் சுருக்கு, வெப்பு நோய் ஆகியன தீரும். வாய் அவியல், வயிற்று எரிவு போன்ற பித்த நோய்கள் தீரும். இவ் இலேகியத்துடன் சிலாசத்துப் பற்பம் சேர்த்துக் கொடுக்கப் பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் (Leucorrhoea) குணமடையும்.

**பத்தியம் –**

புளி, புகை நீக்கவும்

## 10. வெள்ளை வெங்காய இலேகியம்

*(இருபாலைச் செட்டியார் வைத்தியத் தெளிவு)*

| | | | |
|---|---|---|---|
| 01. | பசுப் பால் (128 அவுன்ஸ்) | — | 4000 மி.லீற்றர் |
| 02. | உள்ளி (தோல் நீக்கியது) | — | 360 கிராம் |
| 03. | பசு நெய் (32 அவுன்ஸ்) | — | 1000 மி.லீற்றர் |
| 04. | தேன் (20 அவுன்ஸ்) | — | 625 மி.லீற்றர் |
| 05. | சீனி (10 அவுன்ஸ்) | — | 312.5 கிராம் |
| 06. | சிற்றேலம் | — | 5 கிராம் |
| 07. | சாதிக்காய் | — | 5 ,, |
| 08. | அதிமதுரம் | — | 10 ,, |
| 09. | அபின் | — | 5 ,, |
| 10. | கராம்பு | — | 5 ,, |
| 11. | செவ்வள்ளிக் கொடி | — | 5 ,, |
| 12. | இலவங்கப் பட்டை | — | 5 ,, |
| 13. | ,, பத்திரி | — | 5 ,, |
| 14. | சிறுநாகப் பூ | — | 5 ,, |
| 15. | நற்சீரகம் | — | 5 ,, |
| 16. | கருஞ்சீரகம் | — | 5 ,, |
| 17. | வசுவாசி | — | 5 ,, |
| 18. | பெரிய இலவங்கப் பட்டை | — | 5 ,, |
| 19. | ஓமம் | — | 5 ,, |
| 20. | வால் மிளகு | — | 5 ,, |
| 21. | வெண் கோட்டம் | — | 5 ,, |
| 22. | மாயாக்காய் | — | 5 ,, |
| 23. | குரோசாணி ஓமம் | — | 5 ,, |
| 24. | சடாமாஞ்சில் | — | 5 ,, |
| 25. | சிறுநாகப் பூ | — | 5 ,, |
| 26. | சுக்கு | — | 5 ,, |
| 27. | மிளகு | — | 5 ,, |
| 28. | திற்பலி | — | 5 ,, |
| 29. | அக்கராகாரம் | — | 5 ,, |
| 30. | கடுகுரோகணி | — | 5 ,, |
| 31. | வெந்தயம் | — | 5 ,, |
| 32. | செண்பகப் பூ | — | 5 ,, |
| 33. | கஸ்தூரி மஞ்சள் | — | 5 ,, |
| 34. | திற்பலி மூலம் | — | 5 ,, |
| 35. | சித்தரத்தை | — | 5 ,, |
| 36. | கல்நார் | — | 5 ,, |
| 37. | பெருங்காயம் | — | 5 ,, |
| 38. | தக்கோலம் | — | 5 ,, |
| 39. | கண்டங் கத்தரி வேர் | — | 5 ,, |

| | | | |
|---|---|---|---|
| 40. | சாறணைக் கிழங்கு | — | 5 கிராம் |
| 41. | அமுக்கிரா | — | 5 ,, |
| 42. | நாயுருவி வேர் | — | 5 ,, |
| 43. | வாகை வேர் | — | 5 ,, |
| 44. | கோரைக் கிழங்கு | — | 5 ,, |
| 45. | நன்னாரி வேர் | — | 5 ,, |
| 46. | நிலப்பனங் கிழங்கு | — | 5 ,, |
| 47. | தூதுவளை வேர் | — | 5 ,, |

**செய் முறை -**

06 முதல் 47 வரையுமுள்ள (அபின் நீங்கலாக) சரக்குகளைப் பொடித்துச் சூரணம் செய்க. பின்பு பசுப்பாலில் உள்ளியைப் போட்டு அவித்துக் கடைந்து, அதில் மேற்படி சூரணத்தையும் நெய்யையும் விட்டு * அபின் சேர்த்துக் கிண்டி, இறுதியில் சீனி, தேன் கலந்து இலேகிய பதத்தில் எடுத்துக் கொள்ளவும்.

(* அபினை பாலில் கரைத்துச் சேர்க்கவும்)

**அளவு –**

5 கிராம்

**அனுபானம் –**

வெந்நீர் / பசுப்பால்

**தீரும் நோய்கள்**

காமாலை, மூத்திரக் கிருச்சரம், மேகம், உணவுப்பாதை சார்ந்த நோய்கள் ஆகியன தீரும். வீரிய விருத்தியும், பலமும், அறிவு வளர்ச்சியும், உடல் பூரிப்பும் உண்டாகும்.



# மெழுகும் குழம்பும்

**மெழுகு**

சேர்க்க வேண்டிய சரக்குகளை அரைத்து அல்லது இடித்து அல்லது சுருக்குக் கொடுத்து மெழுகு பதத்தில் எடுத்துக் கொள்வது மெழுகெனலாம். இதில் இருவகையுண்டு.

1. அரைப்பு மெழுகு
2. சுருக்கு மெழுகு

**ஆயுட் காலம் –**

5 ஆண்டுகள் வன்மையுடையன.

(சேரும் சரக்கையும், பாதுகாக்கும் தன்மையையும் பொறுத்தே ஆயுட்காலம் அமையும்)

**குழம்பு –**

மூலிகைச் சாறுகளில் சரக்குப் பொடிகளைக் கலந்து அடுப்பேற்றிக் குழம்புப் பக்குவத்தில் எடுத்துக் கொள்வது அல்லது சரக்குகளை நெய்ப்பசையுள்ள பொருட்களைக் கொண்டு அரைத்துக் குழம்புப் பக்குவத்தில் எடுத்துக் கொள்வதைக் குழம்பு எனலாம்.

**ஆயுட் காலம் -**

5 ஆண்டுகள் வன்மையுடையது.

**குறிப்பு :**

யாழ்ப்பாணத்தில் இலேகியத்தையும், குழம்பையும் பேச்சுத் தமிழில் ஒன்றாகவே கருதுவர். ஆனால் சித்த மருத்துவ முறையில் இவை இரண்டும் வேறுபட்டவை.

## மெழுகு குழம்பு வகைகள்

1. இரச கெந்தி மெழுகு
2. இடி வல்லாதி மெழுகு
3. குன்ம குடோரி மெழுகு
4. சாதி சம்பீரக் குழம்பு
5. மலக் குடார மெழுகு

## 1. இரச கெந்தி மெழுகு

*(புலிப்பாணி — 500)*

| | | | |
|---|---|---|---|
| 01. | இரசம் (சுத்தித்தது) | — 4 | கிராம் |
| 02. | கெந்தகம் ( ,, ) | — 4 | ,, |
| 03. | இரச கற்பூரம் ( ,, ) | — 4 | ,, |
| 04. | அரிதாரம் ( ,, ) | — 4 | ,, |
| 05. | ஊசிக்காந்தம் ( ,, ) | — 4 | ,, |
| 06. | துருசு ( ,, ) | — 4 | ,, |
| 07. | பால் துத்தம் ( ,, ) | — 4 | ,, |
| 08. | மிருதார் சிங்கி ( ,, ) | — 4 | ,, |
| 09. | சுக்கு | — 4 | ,, |
| 10. | ஓமம் | — 4 | ,, |
| 11. | மஞ்சள் | — 4 | ,, |
| 12. | திற்பலி | — 4 | ,, |
| 13. | சித்தரத்தை | — 4 | ,, |
| 14. | வெண் கோட்டம் | — 4 | ,, |
| 15. | வாலுளுவை அரிசி | — 4 | ,, |
| 16. | சோம்பு | — 4 | ,, |
| 17. | ஏலம் | — 4 | ,, |
| 18. | சீரகம் | — 4 | ,, |
| 19. | மிளகு | — 4 | ,, |
| 20. | சாதிக்காய் | — 4 | ,, |
| 21. | கார்போக அரிசி | — 4 | ,, |
| 22. | மாயாக்காய் | — 4 | ,, |
| 23. | திற்பலிக் கட்டை | — 4 | ,, |
| 24. | வாய்விடங்கம் | — 4 | ,, |
| 25. | வசம்பு | — 4 | ,, |
| 26. | இலவங்கம் | — 4 | ,, |
| 27. | பறங்கிப்பட்டை | — 4 | ,, |
| 28. | சேங்கொட்டை (சுத்தித்தது) | — 4 | ,, |
| 29. | கடுக்காய்த் தோல் | — 4 | ,, |
| 30. | கருஞ்சீரகம் | — 4 | ,, |
| 31. | காட்டுச் சீரகம் | — 4 | ,, |



| | | | |
|---|---|---|---|
| 32. | சிறு தேக்கு | — 4 | கிராம் |
| 33. | தாளிச பத்திரி | — 4 | ,, |
| 34. | திராட்சை (உலர்ந்தது) | — 4 | ,, |
| 35. | பிரப்பங் கிழங்கு | — 4 | ,, |
| 36. | எட்டிவிதை (சுத்தித்தது) | — 4 | ,, |
| 37. | தேற்றான் விதை | — 4 | ,, |
| 38. | நீர்முள்ளி வித்து | — 4 | ,, |
| 39. | எள்ளு | — 4 | ,, |
| 40. | கொள்ளு | — 4 | ,, |
| 41. | கொப்பறாத் தேங்காய் | — 4 | ,, |
| 42. | சின்னிவேர் | — 4 | ,, |
| 43. | இயங்கம் வேர் | — 4 | ,, |
| 44. | அமுக்கிராய்க் கிழங்கு | — 4 | ,, |
| 45. | ஆகாயக் கருடன் கிழங்கு | — 4 | ,, |
| 46. | சித்திரமூல வேர்ப்பட்டை | — 4 | ,, |
| 47. | பனை வெல்லம் | — 184 | ,, |
| 48. | கோழி முட்டை | — 2 | எண் |

### செய் முறை —

மேற்குறிப்பிட்ட சரக்குகளில் இடிக்க வேண்டிய சரக்குகளை உரலில் இட்டு இடித்துச் சூரணம் செய்க. பின் அரைக்க வேண்டிய சரக்குகளை முறைப்படி கல்வத்திலிட்டு அரைத்துப் பொடித்து மேற்படி சூரணத்தையும் ஒன்று சேர்த்து அரைத்து வைத்துக்கொள்க. பின்னர், பனை வெல்லத்தை உரலிலிட்டு நொருக்கி மேற்குறிப்பிட்ட ஒன்று சேர்த்து அரைத்து வைத்திருந்த சூரணத்தையும் உரலிலிட்டு இருமுட்டைகளையும் உடைத்து அதற்குள் விட்டு பூண் இல்லாத உலக்கையால் நன்கு இடிக்குக. இவ்வாறு இடிக்கும் பொழுது மெழுகுப் பதம் ஏற்படும். இதனை எடுத்துப் பத்திரப்படுத்துக.

### அளவு —

*300 மி. கிராம்*

தினம் — இரு வேளை, சாப்பாட்டுக்குப் பின்

### அனுபானம் —

பனை வெல்லம் / வாழைப்பழம்.

**குறிப்பு :**

இம் மருந்தை உட்கொள்ளும் பொழுது வாயில் சுடாதவாறு மேற் கூறிய அனுபானத்தில் பொதிந்து உண்ணவும்.

**பத்தியம் —**

பாலும் சோறும் / மோரும் சோறும் உண்ணவும். உணவு உண்டவுடனே மருந்தை உட்கொள்ளவும். வெறு வயிற்றில் மருந்தை உண்ணக்கூடாது. தலை முழுகும் (எண்ணெய் முழுக்கு) நாட்களில் மருந்து உண்பதைத் தவிர்க்கவும்.

**தீரும் நோய்கள் —**

தோல் பிணிகள், வாத நோய்கள் தீரும். வெடிசூலை, மேக சூலை, இடி சூலை, வாத சூலை, தொழுநோய், சிரங்கு, செங் கிரந்தி, கருங்கிரந்தி, பொரி கிரந்தி. இராஜ பிளவை, மூட்டு வாதம் ஆகியன தீரும்.

இது பொதுவாக நாட்பட்ட மூட்டு வாதங்கட்கும், (Chronic Arthritis) நாட்பட்ட தோற்புரை நோய்க்கும் (Chronic Skin Disease) சிறந்த பலனைக் கொடுக்கும்.

## 2. இடி வல்லாதி மெழுகு

*(புலிப்பாணி — 500)*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | சேராங் கொட்டை | — | 350 | கிராம் |
| 02. | எள் | — | 350 | ,, |
| 03. | கொப்பறாத் தேங்காய் | — | 2 | எண் |
| 04. | பறங்கிப் பட்டை | — | 35 | கிராம் |
| 05. | அமுக்கிரா | — | 35 | ,, |
| 06. | சித்திர மூல வேர்ப் பட்டை | — | 35 | ,, |
| 07. | கஸ்தூரி மஞ்சள் | — | 35 | ,, |
| 08. | கருஞ்சீரகம் | — | 35 | ,, |
| 09. | வாலுளுவை அரிசி | — | 35 | ,, |
| 10. | குரோசாணி ஓமம் | — | 35 | ,, |
| 11. | ஓமம் | — | 35 | ,, |
| 12. | வெற்றிலைக் காம்பு | — | 35 | ,, |
| 13. | கடுக்காய்த் தோல் | — | 35 | ,, |
| 14. | திற்பலி | — | 35 | கிராம் |
| 15. | வெண்கோட்டம் | — | 35 | ,, |
| 16. | இரச கற்பூரம் | — | 21 | ,, |
| 17. | பனை வெல்லம் | — | 175 | ,, |
| 18. | சாணிப்பால் | | தேவையான அளவு | |



**செய் முறை —**

மேற்குறிப்பிட்ட சரக்குகளில் சுத்தி செய்யவேண்டியவற்றைச் சுத்தி செய்க. பின் இடிக்க வேண்டிய சரக்குகளை இடித்துச் சூரணம் செய்து வைக்க. கல்வத்தில் பொடிக்க வேண்டிய சரக்குகளையும் பொடித்து வைக்க.

சேராங் கொட்டையை எடுத்து மூக்கை வெட்டிச் சாணிப் பாலில் மூன்று நாட்களுக்கு ஊற வைத்துக் கழுவி எடுக்கச் சுத்தியாகும். இதனைத் துண்டுகளாக வெட்டி கல்லுரலில் போட்டு பூண் இல்லாத உலக்கையால் இடிக்கவும். பின்பு கொப்பரைத் தேங்காய், எள் ஆகியவற்றை ஒவ்வொன்றாகப் போட்டு நன்கு இடிக்கவும். மேலும் பனை வெல்லத்தையும், மேற்படி சூரணத்தையும், கல்வத்தில் பொடித்த தூளையும் ஒவ்வொன்றாகச் சேர்த்து எல்லாச் சரக்குகளும் ஒன்று சேரும்படி இடிக்கவும். இப்படியாக இடிக்கும் பொழுது மெழுகு பதத்தில் திரண்டு வருகையில் எடுத்துப் பத்திரப்படுத்தவும்.

**அளவு —**

*300 மி. கிராம்*
தினம் — இரு வேளை
(40 நாட்கள் உபயோகிக்கவும்)

**அனுபானம் —**

பனை வெல்லம் / வேண்டியவை

**தீரும் நோய்கள் —**

கிரந்தி, சூலை, மேகம், எண்வகைக் குன்மம், வாத ரோகம், மேக விரணங்கள் ஆகியன தீரும்.

**பத்தியம் —**

இச்சா பத்தியம், தயிர், மோர் உபயோகிக்கலாம். மீன் உண்ணக் கூடாது.

## 3. குன்ம குடோரி மெழுகு

*(சித்த வைத்தியத் திரட்டு)*

| | | | |
|---|---|---|---|
| 01. | இந்துப்பு | — 1 | பங்கு |
| 02. | கல்லுப்பு | — 1 | ,, |
| 03. | சோற்றுப்பு | — 1 | ,, |
| 04. | உழ மண் | — 1 | ,, |
| 05. | வெங்காரம் | — 1 | ,, |
| 06. | நவாச்சாரம் | — 1 | ,, |
| 07. | வளையல் உப்பு | — 1 | ,, |
| 08. | வெடி உப்பு | — 1 | ,, |
| 09. | சுக்கு | — 1 | ,, |
| 10. | திற்பலி | — 1 | ,, |
| 11. | மிளகு | — 1 | ,, |
| 12. | ஓமம் | — 1 | ,, |
| 13. | கராம்பு | — 1 | ,, |
| 14. | திற்பலி மூலம் | — 1 | ,, |
| 15. | வெண் கோட்டம் | — 1 | ,, |
| 16. | பெருங்காயம் | — 1 | ,, |
| 17. | உள்ளி (பூண்டு) | — 5 | ,, |
| 18. | பனை வெல்லம் | — 5 | ,, |
| 19. | தேன் | — 5 | ,, |

**செய் முறை —**

முதலில் சூரணம் செய்ய வேண்டிய சரக்குகளை இடித்துச் சூரணம் செய்க. பின்பு மற்றைய சரக்குகளை முறைப்படி கல்வத்திலிட்டு அரைத்து மேற்படி சூரணத்தையும் ஒன்று சேர்த்து நன்றாக அரைத்து இளகிய பதம் வரும்பொழுது எடுத்துக் கொள்ளவும்.

**அளவு —**

500 — 1000 மி. கிராம்
தினம் — இரு வேளை

**அனுபானம் —**

வெந்நீர் / பனை வெல்லம்



**தீரும் நோய்கள் —**

பூப்புக் காலத்தில் ஏற்படும் சூதக வாயு வலி, குன்மம், பித்த வாய்வு, மந்தம், செரியாமை ஆகியன தீரும்.

## 4. சாதி சம்பீரக் குழம்பு

*(சித்த வைத்தியத் திரட்டு)*

| | | | |
|---|---|---|---|
| 1. | கற்பூரம் | — 10 | கிராம் |
| 2. | லிங்கம் | — 35 | ,, |
| 3. | எலுமிச்சம்பழச் சாறு | — 526 | ,, |
| 4. | துளசிச் சாறு | | தேவையானளவு |

**செய் முறை —**

ஓர் அகன்ற மண் அகலுக்குத் துளசிச்சாறு பூசிக் காய விட வேண்டும். இவ்வாறு 3 அல்லது 5 முறை செய்யவும். இந்த அகலை அடுப்பின் மீது வைத்துச் சிறு தீயால் எரிக்கும் சமயத்தில் கற்பூரத்தைப் பொடித்துப் போட்டு உருகும் பொழுது பட்டுப் போல் அரைத்த லிங்கத்தை பழச்சாற்றில் கலந்து வைத்த கலவையைச் சிறிது சிறிதாக விட்டுத் துழாவிக் குழம்புப் பக்குவம் அடையும் சமயம், வழித்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு —**

50 மி. கிராம். நாக்கில் தடவி விடவும்

**தீரும் நோய்கள் -**

வாந்தி, குமட்டல், தாகம், குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தக் கழிச்சல், உடல் வெழுத்துச் சில்லிடுதல், மூர்ச்சை ஆகியன தீரும்.

## 5. மலக்குடார மெழுகு

*(சித்த வைத்தியத் திரட்டு)*

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரத்து நிலாவாரை இலை | — 12 | பங்கு |
| 2. | பன்னீர்ப் பூத் தேனூறல் (குல்கந்து) | — 16 | ,, |
| 3. | கொட்டைத் திராட்சை (உலர்ந்தது) | — 10 | ,, |

4. பாதாம் பருப்பு — 5 கிராம்
5. அதிமதுரம் — 2 ,,
6. கடுக்காய்ப் பிஞ்சு — 5 ,,

**செய் முறை —**

1, 5, 6 ஆவது சரக்குகளைப் பொடித்து வைத்துக் கொள்க. 2 ஆவது சரக்கைக் கல்வத்திலிட்டு அரைத்து, 3, 4 ஆவது சரக்குகளை அதனுடன் சேர்த்து அரைத்து, மேற்படி பொடித்த சூரணத்தைச் சிறிது சிறிதாகச் சேர்த்து அரைத்து மெழுகாக எடுக்கவும்.

**அளவு —**

5 கிராம்

இரவு படுக்கைக்கு போகும் பொழுது எடுக்கவும் ஒரு முறை மட்டும்.

**அனுபானம் —**

பசுப்பால் அல்லது வெந்நீர்

**தீரும் நோய்கள் —**

மலக்கட்டு நீங்கும்

**குறிப்பு :**

மேற் குறிப்பிட்ட மெழுகு, குழம்பு வகைகளைத் தவிர வேறும் அநேக மெழுகு, குழம்பு வகைகள் நூல்களில் கூறப் பட்டுள்ளன. அத்துடன் வெளிப்பிரயோகமாக உபயோகிக்கும் மெழுகுகளும் உண்டு, உதாரணமாக வெள்ளை மெழுகு, கிளிஞ் சில் மெழுகு ஆகியவற்றைக் கூறலாம். இது பற்றி விபரமாக அறிய விரும்பின் அவை பற்றிய விசேட வைத்திய நூல்களைப் பார்வையிடலாம். இங்கு குறிப்பிட்டவை இலகுவில் தயாரிக்கக் கூடியவையும் விசேடமானவையும் ஆகும். எமது அனுபவத்தில் அறிந்த சிறந்த மருந்துகள் சிலவற்றினை மட்டுமே இங்கு தந் துள்ளேன்.



# மணப்பாகு (Syrup)

மூலிகைச் சாறுகள் அல்லது குடிநீர்களுடன் கற்கண்டு அல் லது சர்க்கரை சேர்த்துச் சூடாக்கி அதற்குரிய மணத்துடன் கூடிய பாகு பதம் வந்தவுடன் எடுத்துக் கொள்வது மணப்பாகு ஆகும்.

**செய் முறை**

சில சரக்குகளை / வேர்களை / மலர்களை / கனிகளை / பொடி களைக் கொண்டு தனித்தனி குடிநீர் செய்து, சில கனிகளி லிருந்து எடுக்கும் சாற்றைப் பிழிந்தாவது ஒரு பாத்திரத்தி லிட்டு அதற்குத் தகுந்த அளவு கற்கண்டு அல்லது சீனி சேர்த் துக் காய்ச்சி அதற்குரிய மணம் வரும்வேளை நூல் பதத்தில் இறக்கி ஆற வைத்துக் கொள்க.

மேற்குறிப்பிட்ட பக்குவத்தில் சில சரக்குப் பொடிகளைத் தூவிக் கிளறி ஆறவைத்து எடுக்கும் முறையும் உண்டு.

சில மணப்பாகுகளுக்குத் தேனும் சேர்ப்பதுண்டு. மணப் பாகுவில் சேர்க்கப்படும் சர்க்கரை, கற்கண்டு, தேன் இவைகள் சுவை தருவது மட்டுமன்றி; அவை சேர்ந்த மருந்துப் பொருட் களைக் கெடாமல் பாதுகாக்கவும் உதவுகின்றன.

**ஆயுட்காலம் —**

ஆறு மாதங்கள்வரை வன்மையுடையன.

**குறிப்பு :**

இதனைப் போத்தலில் அடைக்கும்போது முழுமையும் நிரப் பாமல் சற்று இடம்விட்டு நிரப்பி அடைக்கவும். ஏனெனில், மது வர்க்கங்கள் புளிக்கும்போது ஒருவித வாயு வெளிப்படுகின்றமை எனலாம்.

## மணப்பாகு வகைகள் (Syrups)

1. ஆடாதோடை மணப்பாகு
2. கிளிவாசா பாணி
3. சித்த ஜீவாமிர்தம்.

## 1. ஆடாதோடை மணப்பாகு (Syrup Vasaka)

*(சித்த வைத்தியத் திரட்டு)*

1. ஆடா தோடை இலை — 700 கிராம்
2. மாச் சீனி — 700 ,,
3. சுத்தமான நீர் —5600 மி. லீ.

**செய் முறை –**

ஆடாதோடை இலையை தூய்மை செய்து சிறுக அரிந்து மேற்குறிப்பிட்ட நீரில் போட்டு சுண்டக் காய்ச்சி 1400 மி. லீ ஆகக் குறுக்கி எடுக்கவும். பின்பு அக் கசாயத்தில் சீனியைக் கரைத்து மேலும் காய்ச்சி மணப்பாகு பதத்தில் எடுத்து வடித்துக் கொள்ளவும்.

**அளவு –**

10 — 20 மி. லீ

தினம் — இரண்டு / மூன்றுவேளை

**அனுபானம் –**

சுட்டாறிய நீர் — இரண்டு பங்கு

**தீரும் நோய்கள் –**

கப நோய்கள், இருமல், சுரம், வாதநோய் ஆகியன.

## 2. கிளி வாசா பாணி (Glee - Vasa Syrup)

*(யாழ் - மாநகரசபை முறை)*

1. உலர்ந்த ஆடாதோடை இலை — 110 கிராம்
2. அதிமதுரம் — 100 ,,
3. கண்டங் கத்தரி — 25 ,,
4. மிளகு — 50 ,,
5. திற்பலி — 50 ,,
6. காட்டாத்திப் பூ — 25 ,,
7. சீனி — 2500 ,,



**செய் முறை -**

மேற்குறிப்பிட்ட ஆறு சரக்குகளையும் நொருக்கித் தனித் தனிக் குடிநீர் போடவும். குடிநீர் தயாரிப்புப் பொதுவிதிக்கு அமைய குடிநீர் செய்து பின் எல்லாக் குடிநீர்களை ஒன்று சேர்த்து அதற்குள் சீனியைக் கரைக்கவும். பின்பு அதனை மீண்டும் அடுப்பேற்றி மணப்பாகு பதத்தில் எடுத்து வடித்துக் கொள்ளவும்.

**அளவு -**

1 — 2 மேசைக் கரண்டி (15 — 30 மி. லீ.)

தினம் இரண்டு / மூன்று வேளை.

சிறுவர்கட்கு — (ஆறுவயதுக்குட்பட்டவருக்கு)

1 — 2 தேக் கரண்டி (4 — 8 மி. லீ)

பொதுவாக இருபங்கு சுட்டாறிய நீர் கலந்தும் உபயோகிக்கலாம்.

**தீரும் நோய்கள் –**

இருமல், தொண்டைக் கரகரப்பு, தடிமன், நெஞ்சுச் சளி, இழுப்பு, கிரந்திமுட்டு ஆகியன தீரும். சுவாச நோய்களுக்கு உபயோகிக்கும் மாத்திரைகளையும் இதனுடன் துணை மருந்தாகச் சேர்த்துக் கொடுக்கலாம்.

**குறிப்பு :**

மணப்பாகுகளுக்கு வாசனையூட்டிகளைச் (Flavours) சேர்த்துத் தயாரிப்பதும் வழக்கத்திலுண்டு.

## 3. சித்த ஜீவாமிர்தம்

*(சித்த ஔடத செய் முறை)*

1. பச்சை வல்லாரை 7.256 கி. கிராம்
2. அமுக்கிராக் கிழங்கு — 3.628 ,,
3. அதிமதுரம் — 3.628 ,,
4. நிலப் பனங்கிழங்கு — 3.628 ,,
5. சாத்தாவாரிச் சாறு — 9 லீற்றர்
6. கற்கண்டு — 10.884 கி. கிராம்

## செய் முறை -

முதல் கூறிய நான்கையும் ஒரு பாத்திரத்திலிட்டு 72 லீற்றர் (96 போத்தல்) நீர்விட்டு அடுப்பேற்றி எரித்து எட்டிலொன்றா கக் குறுக்கி அதாவது 9 லீற்றராக (12 போத்தலாக) எடுத்து வடிகட்டவும். பின் அதனுடன், சாத்தாவாரிச் சாற்றையும் கலந்து அதிற் கற்கண்டைப் போட்டுச் சூடாக்கிக் கரைத்து வடிகட்டவும். பின்பு அதனை அடுப்பேற்றி எரித்துப் மணப்பாகுப் பதத்தில் இறக்கவும்.

## அளவு –

15 — 30 மி. லீ.

தினம் — இரண்டு / மூன்று வேளை.

## அனுபானம் –

பால் / இளநீர்

## தீரும் நோய்கள் –

தேக எரிவு, வறட்டிருமல், நெஞ்சு வரட்சி, நாட்பட்ட இருமல், நீரெரிவு, நரம்புத் தளர்ச்சி, முதலியன தீரும். கணை, இராக் காய்ச்சல் முதலியவற்றுக்குச் சிறந்தது.

## குறிப்பு:

மேற்கு நாட்டு மருத்துவத்தில் குழந்தைகளுக்குக் கொடுக்கும் மணப்பாகு (Syrup) அவர்களின் மருத்துவ வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைகின்றது. அதே போல் எமது சித்த மருந்து தயாரிப்பு முறையிலும் வளர்ச்சியடைவதற்கு முயற்சிகள் எடுப்பது சித்த மருத்துவர்களின் தலையாய கடமையாகும். தற்போது இந்தியாவில் கற்பூரவள்ளி, துளசி, கண்டங்கத்தரி, அதிமதுரம் போன்ற மூலிகைகளிலிருந்து சிறந்த முறையில் நல்லமணம், சுவையுடன், மணப்பாகுகள் தயாரிப்பதை காணக் கூடியதாகவுள்ளது. எமது நாட்டில் ஆயுர் வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தால் "மதுகா சிறப்" என்ற பெயருடன் ஒரு இருமல் மருந்து தயாரிக்கப்பட்டு தெற்குப் பகுதியில் நன்மதிப்பைப் பெற்று வருகின்றது. இவை எல்லாவற்றையும் நாம் சிந்தித்து செயலாற்ற வேண்டியது அவசியமாகும்.



# எண்ணெய் (தைலம்)

தைலம் என்பது குறிப்பிட்ட சரக்குகளின் சாறு, குடிநீர், சூரணம், கற்கம் ஆகியவைகளை எண்ணெயுடன் சேர்த்துக் குறிப்பிட்ட அளவுப்படி தீ எரித்துக் காய்ச்சி வடித்து எடுத்துக் கொள்வதாகும். இச் செய்முறையின்போது மருந்துச் சரக்குகளின் பிணி நீக்கும் சத்துப் பொருட்கள் எண்ணெய்ப் பொருட்களால் கவர்ந்து கொள்ளப்படுகின்றன.

தைலங்களைத் தயாரிக்க மூன்று பொருட்கள் தேவைப்படுகின்றன. அவையாவன:

I கற்கம் II திரவம் III நெய்ப்புப் பொருள்.

## கற்கம்

நோய் தீர்க்கும் மருந்துச் சரக்குகளை நன்கு பொடியாக்கி அல்லது விழுதுபோன்று அரைத்து இருக்கும் நிலையில் கற்கம் என்று அழைக்கப்படுகின்றது.

## திரவம்

கற்கம் நன்கு கரைந்து மருந்தாக அமைவதற்கும், நெய்ப்புப் பொருட்களின் மருந்துச் சத்துக்களைக் கிரகித்துக் கொள்ளும் தன்மை மேம்படச் சேர்க்கப்படும் சாறுவகைகள், குடிநீர் வகைகள், மாமிச ரசங்கள் (Flesh Soup), நீர், பால், தயிர், மோர் போன்ற நீர் ஊடகங்களுக்கும் (Liquid Media) திரவம் என்று பெயர்.

## நெய்ப்புப் பொருள்கள்

தைலம் காய்ச்சும் போது மருந்துச் சரக்குகளிலிருந்து நோய் நீக்கும் சத்துப் பொருட்களைக் கிரகித்து வைத்துக் கொள்வதற்காகச் சேர்க்கப்படும் பலவித தாவர எண்ணெய்கள், நெய், விலங்கின் கொழுப்புக்கள் ஆகியவற்றுக்கு நெய்ப்புப் பொருள் என்று பெயர்.

மேற்கூறிய மூன்று பொருட்களையும் ஒன்றுசேர்த்து அடுப்பிலேற்றி முறைப்படி காய்ச்சும்போது, அவற்றிலுள்ள நீர்ச்சத்து முழுவதும் சுண்டி விடுவதுடன் மருந்துச் சரக்குகளின் பிணி நீக்கும் சத்துக்களும் எண்ணெய்களால் கவர்ந்து கொள்ளப்படவும் ஏதுவாகின்றது. பின்னர் இவற்றை வடிகட்டிப் பயன்படுத்த வேண்டும்.

தைலம் தயாரிக்கும் பொழுது நன்கு பாகமடைந்த நிலைக்கு அறிகுறியாக அக்கலவைகளிற் சில மாறுதல்கள் காணப்படுகின்றன. தைலத்தின் மேல் பாகத்தில் நுரை கிளம்பும்போது, கற்கத்தில் சிறிது எடுத்து விரல்களால் உருட்ட அது திரிபோன்று உருளுவதுடன் விரல்களிலும் ஒட்டாது. மேலும் அந்தக் கற்கத்தை சிறிதளவு நெருப்பிலிட்டால் "சிடுசிடுப்புப் போன்ற சப்தம் உண்டாகாமல் நன்றாக பற்றி எரியும்.

பொதுவாக அறிகுறிகள் இவ்விதமிருப்பினும் குறிப்பிட்ட உபயோகங்களைக் கொண்டு கற்கத்தின் பாகத்துக்கேற்ப மிருது பாகம், மெழுகு பாகம், கரகரப்புப் பாகம் என மூன்று விதமான பாகத்தில் தைலங்கள் தயாரிக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட முறைப்படி தைலம் தயாரிப்பதுடன் வேறுமுறைகளிலும் சில தைலங்கள் தயாரிக்கப்படுகின்றன.

(1) குழித் தைல முறை
(2) மெழுகுத் தைல முறை.

இவற்றின் விபரங்களைத் தைலம் தயாரிக்கும் விசேட நூல்களில் அறிந்துகொள்ளலாம்.

பொதுவாகத் தைலம் காய்ச்ச நல்லெண்ணெய் பெரிதும் பயன்படுத்தப்பட்டாலும், தேங்காய் எண்ணெய், ஆமணக்கெண்ணெய், கடுகெண்ணெய், வேப்பெண்ணெய் போன்றவைகளும் தேன்மெழுகு, முட்டையின் மஞ்சட் கரு, வாலுளுவையரிசி ஆகியவற்றிலிருந்து சிதைத்து வடித்தெடுக்கப்படும் எண்ணெய்களும் தைலம் காய்ச்சப் பயன்படுத்தப்படுகின்றன.

மேற்குறிப்பிட்டவாறு தைலம் தயாரிப்பு முறைகளோடு, வேறுபல முறைகளும் உண்டு.

### தைலங்களைப் பயன்படுத்தும் முறைகள் –

1. சில தைலங்கள் உட்பிரயோகத்துக்கு மட்டும் பயன்படுகின்றன.
2. சில தைலங்கள் வெளிப் பிரயோகத்துக்கு மட்டும் பயன்படுகின்றன.
3. சில தைலங்கள் உள்—வெளிப் பிரயோகங்களுக்குப் பயன்படுகின்றன.

### ஆயுட் காலம் –

பொதுவாகத் தைலங்கள் ஓர் ஆண்டு காலத்துக்கு வன்மையுடையன.



## எண்ணெய் / தைல வகைகள்

01. அறுகங் கட்டைத் தைலம்
02. அண்டத் தைலம்
03. உழுந்துத் தைலம்
04. ஓணான் சுடர் தைலம்
05. கரப்பான் தைலம்
06. கந்தகச் சுடர் தைலம்
07. கற்பூராதித் தைலம்
08 காதுநோய்த் தைலம்
09. கீழா நெல்லித்தைலம்
10. சிற்றாமுட்டித் தைலம்
11. சிரங்குத் தைலம்
12. சுக்குத் தைலம்
13. செம்பரத்தம் பூ எண்ணெய்
14. தாளங்காய் எண்ணெய்
15. நயனவிதி எண்ணெய்
16. நாசிரோக நாசத் தைலம்
17. பச்சை எண்ணெய்
18. பாலர் கிரந்திக் கொதி எண்ணெய்
19. பிருங்காமலத் தைலம்
20. பீனிசத் தைலம்
21. மெழுகுத் தைலம் (P T Oil)
22. மேனித் தைலம்
23. வாதகேசரித் தைலம்
24. விஷமுட்டித் தைலம்
25. வெள்ளை எண்ணெய்

## 1. அறுகங் கட்டைத் தைலம்

*(பாளையங் கோட்டை சித்த மருத்துவமனை முறை)*

1. அறுகம் புல் — 200 கி. கி.
2. அதிமதுரம் — 1 கி. கி.
3. தே. எண்ணெய் — 20 லீற்றர்

**செய் முறை —**

முதலில் அறுகம் புல்லை இடித்துச்சாறு எடுத்துக் கொள்க. பின் அதனுடன் தேங்காய் எண்ணெயைக் கலந்து அடுப்பேற்றி அதிமதுரத் தூளை அதனுள் போடுக. எரித்துத் துளாவும் பொழுது மெழுகு பதம் கண்டதும், கீழே இறக்கி வடித்துக் கொள்ளவும்.

**அளவு —**

வெளிப் பிரயோகம்

**தீரும் நோய்கள் —**

கரப்பான், சொறி, சிரங்கு ஆகியவை தீரும். விசேடமாக மேற்கூறிய நோய்களில் ஏற்படும் எரிவு சுகமடையும்; கைகால் எரிவு நீங்கும்.

## 2. அண்டத் தைலம்

*(குணபாடம் - இரண்டாம் பாகம்)*

1. கோழிமுட்டை — தேவையானளவு

**செய் முறை -**

கோழிமுட்டைகளைத் தண்ணீரிலிட்டு அவித்து, கோதை உடைத்து அதனுள் இருக்கும் மஞ்சட் கருவை பிரித்து எடுக்கவும். பின்பு எடுத்த மஞ்சட் கருவை தூள்செய்து ஓர் இரும்புத் தாச்சியில் போட்டு அடுப்பில் வைத்துச் சிறு நெருப்பில் எரிக்க, அதிலிருந்து ஒருவகை எண்ணெய் பிரியும், அச்சமயம் தாச்சியைச் சரித்து எண்ணெயை வடித்து எடுத்துக் கொள்க. இரும்புச் சட்டியில் எஞ்சியிருக்கும் மஞ்சட் கருவை கரண்டியால் தாச்சியின் ஒருபக்கம் ஒதுக்கி கரண்டியின் புறப்பாகத்தால் நன்றாக அழுத்த மீதித் தைலம் பிரிந்துவரும். அதனையும் வடித்து எடுக்கவும்.



மேற்குறிப்பிட்ட முறையைவிட குழிப்புட முறையிலும் இத் தைலத்தை இறக்கலாம்.

**அளவு —**

1 முதல் நான்கு துளிகள்
தினம் — இரு வேளை

**அனுபானம் —**

தாய்ப்பால் / பசுப்பால் உடன் சேர்த்து நாக்கில் தடவிவிடவும்.

**தீரும் நோய்கள் —**

குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தம், சன்னி, வலிப்பு ஆகியன தீரும். பக்கவாத நோயில் ஏற்படுகின்ற குரல் செயலிழப்புக்கு நாக்கில் தடவிவரக் குணமடையும். நாக்கு வாதத்துக்கு ஒரு நாளைக்கு இருமுறை நாக்கில் தடவி விடவும்.

**குறிப்பு :**

இத்தைலத்தில் குங்குமப்பூ, உள்ளிச் சாறு, கோரோசனை ஆகியவற்றைக் கலந்தும் கொடுக்கலாம்.

## 3. உழுந்துத் தைலம்

*(தேரையர் தைல வர்க்கம்)*

| | | | |
|---|---|---|---|
| 01. | உழுந்து | — 1.500 | கி.கிராம் |
| 02. | தண்ணீர் | — 6.000 | லீற்றர் |
| 03. | வெள்ளாட்டுப் பால் | — 1.500 | ,, |
| 04. | நல்லெண்ணெய் | — 1.500 | ,, |
| 05. | பூனைக்காலி விதைப் பருப்பு | — 4 | கிராம் |
| 06. | சதகுப்பை | — 4 | ,, |
| 07. | பேரரத்தை | — 4 | ,, |
| 08. | சுக்கு | — 4 | ,, |
| 09. | மிளகு | — 4 | ,, |
| 10. | திற்பலி | — 4 | ,, |

| | | | |
|---|---|---|---|
| 11. | வெட்பாலைப் பட்டை | — 4 | கிராம் |
| 12. | அதிமதுரம் | — 4 | ,, |
| 13. | இந்துப்பு | — 4 | ,, |
| 14. | வசம்பு | — 4 | ,, |

**செய் முறை –**

ஆறு லீற்றர் தண்ணீரில் உழுந்தைப் போட்டு அதனை 1.500 லீற்றராக வற்றக் காய்ச்சி, குடிநீராக வடித்து வைக்கவும். பின்னர் மேற்குறிப்பிட்ட 5 முதல் 14 வரையுமுள்ள சரக்குகளை இடித்து அரித்தெடுத்த பொடியை வெள்ளாட்டுப் பால்விட்டு அரைத்து நல்லெண்ணெய் தயாரித்த குடிநீர், பால் ஆகியவற்றுடன் ஒன்று சேர்த்துக் காய்ச்சி உரியபதத்தில் வடித்துக்கொள்ளவும். இத்தைலத்தைத் தானியபுடமாகப் பத்து நாட்களுக்கு வைத்து எடுக்கவும்.

**அளவு –**

வெளிப் பிரயோகம் மட்டும். இதனைப் பூசி நன்றாகப் பிடித்து (மர்த்தனம்) விடவும்.

**தீரும் நோய்கள் –**

வாத நோய்கள் தலை நடுக்கம், கை நடுக்கம், நரம்புத் தளர்ச்சி, நரம்பு நோய்கள் ஆகியன தீரும். ஓராண்டுவரை தேய்த்து குளித்துவர செவிடு, உள்நாக்கு வளர்ச்சி ஆகியவை தீரும். மேலும் தசைகள் நலிந்து போவதை (க்ஷீணமடைதல் — Atrophy) இது தடுக்கும் தன்மையுள்ளது. இளம்பிள்ளைவாத நோயின் ஆரம்ப அவஸ்தையில் இதனை உபயோகிக்கலாம்.

## 4. ஓணான் சுடர் தைலம்

*[அ] (குணபாடம் இரண்டாம் பாகம்)*

| | | | |
|---|---|---|---|
| 01. | ஓணான் (பெரியது) | | ஒன்று |
| 02. | இரசம் | — | 35 கிராம் |
| 03. | கந்தகம் | — | 35 ,, |
| 04. | இரச கற்பூரம் | — | 35 ,, |
| 05. | வேப்பெண்ணெய் | — | 1.5 லீற்றர் |



*[ஆ] (பாளையங் கோட்டை சித்த மருத்துவ மனை முறை)*

| | | | |
|---|---|---|---|
| 01. | ஓணான் (பெரியது) | — | 12 எண் |
| 02. | வேப்பெண்ணெய் | — | 2 லீற்றர் |
| 03. | வெள்ளைப் பூடு (உள்ளி) | — | 1 கி. கி |
| 04. | வீரம் (சுத்தித்தது) | — | 14 கிராம் |
| 05. | இரச கற்பூரம் | — | 14 ,, |
| 06. | இலிங்கம் | — | 14 ,, |
| 07. | தாளகம் | — | 14 ,, |
| 08. | மனோசிலை | — | 14 ,, |
| 09. | வெள்ளைப் பாடாணம் | — | 14 ,, |
| 10. | கந்தகம் | — | 14 ,, |
| 11. | பால் துத்தம் | — | 14 ,, |
| 12. | துருசு | — | 14 ,, |
| 13. | நவாச்சாரம் | — | 14 ,, |
| 14. | படிகாரம் | — | 14 ,, |
| 15. | நேர்வாளம் (சுத்தித்தது) | — | 14 ,, |
| 16. | வெங்காரம் | — | 30 ,, |

**செய் முறை –**

மேற் கூறப்பட்டவற்றில் ஓணானை எடுத்து தலையைத் துண்டித்து வயிற்றுப் பாகத்தைப் பிளந்து, அதற்குள் இருக்கும் அழுக்கை நீக்கவும். பின் மேற் கூறிய தாதுப் பொருட்களை முறைப்படி கல்வத்திலிட்டு ஒன்று சேர்த்து அரைத்த மருந்தை வெட்டிப் பிளந்த ஓணானின் வயிற்றுப் பகுதியுள் புகுத்தி வேப்பெண்ணெயில் நனைத்த சீலையால் அதனைச் சுற்றி கதிரில் குத்தி சுடர் தைல முறையில் வடித்து எடுக்கவும்.

**அளவு –**

வெளிப் பிரயோகம் மட்டும்

**தீரும் நோய்கள் –**

இளம்பிள்ளை வாதத்தால் பாதிப்புற்ற பகுதிக்கு மேல் பூசி விடவும். வாதம், வலிப்பு ஆகியவற்றுக்கும் உபயோகிக்கலாம்.

**குறிப்பு :**

பாளையங் கோட்டை சித்த மருத்துவ மனையில் இது நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் இந்தியாவில் மருந்துக் கடைகளிலும் இதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

## 5. கரப்பான் தைலம்

(தேரையர் தைல வர்க்கம்)

| | | | |
|---|---|---|---|
| 01. | இரச கற்பூரம் | — 50 | கிராம் |
| 02. | ஏலக்காய் | — 50 | ,, |
| 03. | மயில் துத்தம் | — 50 | ,, |
| 04. | பால் துத்தம் | — 50 | ,, |
| 05. | இரசம் | — 50 | ,, |
| 06. | கெந்தகம் | — 50 | ,, |
| 07. | கார்போகரிசி | — 50 | ,, |
| 08. | மிருதார் சிங்கி | — 50 | ,, |
| 09. | கஸ்தூரி மஞ்சள் | — 50 | ,, |
| 10. | நீரடிமுத்துப் பருப்பு | — 50 | ,, |
| 11. | காட்டுச் சீரகம் | — 50 | ,, |
| 12. | விளைவு கற்பூரம் | — 50 | ,, |
| 13. | தேங்காய் எண்ணெய் (25 போத்தல்) | — 18.75 | லீற்றர் |

**செய் முறை —**

இடிக்க வேண்டிய சரக்குகளை இடித்தும் கல்வத்தில் அரைக்க வேண்டிய சரக்குகளை நன்கு அரைத்தும் எடுத்த பொடிகள் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து நன்கு அரைக்கவும். பின் மூன்று அல்லது நான்கு போத்தல் தேங்காயெண்ணெயுள் ஒரு இரவுக்கு அதனை ஊறப்போட்டு, மறு நாள் மீதித் தேங்கா யெண்ணெயைவிட்டு, அடுப்பேற்றி எரித்து உரிய பதத்தில் (கெந்தகம் எரிந்து போகாமல்) வடித்துக் கொள்ளவும். இறுதி யில் இளம் சூட்டுடன் விளைவு சூடத்தைச் சேர்க்கவும்.

**அளவு —**

வெளிப் பிரயோகம் மட்டும்

**தீரும் நோய்கள்**

கரப்பான், சிரங்கு, படை, சொறி ஆகிய தோல் நோய்க்கு உபயோகிக்கலாம்.

**குறிப்பு :**

முகத்தில் பூசுவதைத் தவிர்க்கவும்.



## 6. கந்தகச் சுடர்த் தைலம்

(அகத்தியர் பரிபூரணம் - 400)

| | | | |
|---|---|---|---|
| 1. | கந்தகம் (சுத்தித்தது) | — 70 | கிராம் |
| 2. | வெடியுப்பு ( ,, ) | — 70 | ,, |
| 3. | மனோசிலை( ,, ) | — 70 | ,, |
| 4. | நவாச்சாரம் | — 10 | ,, |
| 5. | வீரம் (சுத்தித்தது) | — 10 | ,, |
| 6. | தாளகம் ( ,, ) | — 10 | ,, |
| 7. | பசு வெண்ணெய் | — 700 | ,, |
| 8. | பசு நெய் | — 2800 | ,, |
| 9. | துணி | — ஒரு | மீற்றர் |

**செய் முறை —**

ஒன்று முதல் ஆறுவரையுமுள்ள சரக்குகளை முறைப்படி கல்வத்திலிட்டுத் தனித்தனியே நன்கு அரைக்கவும். பின்னர், எல்லா வற்றையும் ஒன்று சேர்த்து வெண்ணெய்விட்டு நன்றாக அரைக் கவும் (மனோசிலையை இறுதியில் சேர்க்கவும்). ஒரு மீற்றர் துணியை ஆறு சமபங்குகளாகப் பிரித்துக் கிழித்தெடுத்து, ஒவ் வொரு துண்டிலும் மேற்படி அரைத்த களிம்பைப் பூசி நீண்ட திரிகளாக உருட்டி வைக்கவும். பின் ஒவ்வொரு திரியாக எடுத்து அதன் நுனியைக் கொழுத்தி எரியும் பொழுது பசுநெய்யைச் சிறிது சிறிதாக திரியின் மீது ஊற்றவும். அப்பொழுது அத் திரியால் தைலம் சுடராகக் கீழே விழும். அதனைக் கண்ணா டிப் பாத்திரத்தில் சேர்த்துப் பத்திரப்படுத்தவும்.

**அளவு —**

1 — 4 துளிகள்

தினம் — இரு வேளை

**அனுபானம் —**

சர்க்கரை

**தீரும் நோய்கள் —**

தொழுநோய், வெண் குட்டம், மேகப் புண், படை, சொறி, வாத ரோகம், குன்மம் ஆகியவை தீரும்.

**பத்தியம் —**

உப்பு, புளி நீக்கவும்.

## 7. கற்பூராதித் தைலம் (K. P. Oil)

*(யாழ் - மாநகர சபை முறை)*

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளி (பூண்டு) | — | 3 கி. கிராம் |
| 2. | விளைவு கற்பூரம் | — | 750 கிராம் |
| 3. | மஞ்சள் பொடி | — | 400 ,, |
| 4. | தே. எண்ணெய் (30 போத்தல்) | — | 22.5 லீற்றர் |
| 5. | ஆமணக்கெண்ணெய் (2 போத்தல்) | — | 1.5 ,, |

**செய் முறை —**

முதலில் வெள்ளை வெங்காயத்தை எடுத்து உரித்துத் துப்பரவு செய்து சிறுசிறு துண்டுகளாக வெட்டுக. பின்னர் அவற்றைத் தேங்காயெண்ணெயில் போட்டு அடுப்பேற்றி எரித்துப் பொரியும் வரை விடுக. பின்பு பொரிந்தவற்றை கண் அகப்பையால் வடித்து எடுக்கவும். பின்னர் கொதிக்கும் எண்ணெயில் மஞ்சள் பொடியைக் கலந்து ஆமணக்கெண்ணெய் சேர்த்து பதத்தில் இறக்கி சூடு ஆறவிட்டு அதாவது இளஞ்சூட்டுடன் பொடித்த விளைவு கற்பூரத்தை போட்டுக் கலக்கிவிடவும்.

**அளவு —**

வெளிப் பிரயோகம் மட்டும்.

**தீரும் நோய்கள் —**

வாத உளைவு, தேகப் பிடிப்பு, அடிபட்ட நோ, தசைப் பிடிப்பு, சுழுக்கு போன்றனவற்றுக்குப் பூசி சூடு ஒத்தடம் கொடுக்கலாம்.

**குறிப்பு —**

இத் தைல முறை யாழ் - மாநகரசபை உதவி வைத்திய அதிகாரி Dr. (செல்வி) தனபாலசரஸ்வதி சபாரட்ணம் அவர்கள் மூலம் அறிந்தது.



## 8. காது நோய்த் தைலம்

*(பாளையங் கோட்டை சித்த மருத்துவ மனை முறை)*

| | | | |
|---|---|---|---|
| 1. | வசம்பு | — | 400 கிராம் |
| 2. | பெருங்காயம் | — | 400 ,, |
| 3. | வெள்ளைப் பூடு | — | 600 ,, |
| 4. | வேப்பெண்ணெய் | — | 4 லீற்றர் |

**செய் முறை —**

பொடித்த வசம்பு, பெருங்காயம், வெள்ளைப் பூடு ஆகியவற்றைக் கல்வத்தில் இட்டு நன்கு ஒன்று சேர்த்து அரைத்துக் கற்கமாக எடுக்கவும். பின் வேப்பெண்ணெயைக் கொதிக்க வைத்து அதனுள் மேற்குறித்த கற்கத்தைப் போட்டு பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

**அளவு —**

2 — 3 துளிகள் காதில் விடவும் அல்லது பஞ்சில் தைலத்தைப் பூசி காதினுள் தடவி விடவும். தைலத்தைக் காதில் கூடுதலாக விடுவதைத் தவிர்க்கவும்.

**தீரும் நோய்கள் —**

காது வலி, நீர் வடிதல், சீழ் வடிதல், காது கடித்தல் ஆகியன தீரும்.

## 9. கீழா நெல்லித் தைலம்

*(அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம்)*

| | | | |
|---|---|---|---|
| 1. | கீழ் காய் நெல்லிச் சமூலம் | — | 1750 கிராம் |
| 2. | பசுப் பால் | — | 2.800 லீற்றர் |
| 3. | எண்ணெய் (எள்) | — | 2.800 ,, |
| 4. | நற்சீரகம் | — | 70 கிராம் |
| 5. | தண்ணீர் | — | 21.5 லீற்றர் |

**செய் முறை —**

கீழ் காய் நெல்லிச் சமூலத்தை நன்றாகப் பஞ்சுபோல் இடித்து, ஒரு பாண்டத்தில் போட்டு நீர்விட்டு அடுப்பிலேற்றவும்.

பின்பு அதனை எட்டிலொன்றாகக் காய்ச்சி வடித்த குடிநீர், பசுப் பால், எண்ணெய் ஆகிய மூன்றையும் ஒன்றாகக் கலந்து, நற்சீரகத்தைப் பசுப்பாலில் அரைத்து கற்கமாகக் கலந்து சிறு தீயாக எரித்து மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

**உபயோகம் –**

சிரசுக்கு வைக்கவும், தலை முழுகவும் உபயோகிக்கலாம்.

**தீரும் நோய்கள் –**

மயக்கம், பித்த நோய்கள், தேக எரிவு, தேகச் சொறிவு, வாயூறல், அழல் வெட்டை, மஞ்சள் நோய், பித்த கிறுதி, கண் எரிவு, தலையிடி ஆகியன தீரும்.

**குறிப்பு –**

செங்கண்மாரி நோய் வந்த நோயாளிகளுக்கு ஆறுமாதம் அல்லது ஒருவருடத்துக்கு சிரசுக்கு வைத்து வந்தால் நன்மை பயக்கும்.

## 10. சிற்றா முட்டித் தைலம்

*(தேரையர் தைல வர்க்கச் சுருக்கம்)*

| | | | |
|---|---|---|---|
| 1. | சிற்றா முட்டி வேர் | — | 3500 கிராம் |
| 2. | தண்ணீர் | — | 22.400 லீற்றர் |
| 3. | பசுப் பால் | — | 11.200 ,, |
| 4. | எண்ணெய் (எள்) | — | 5.600 ,, |
| 5. | சிற்றா முட்டி வேர் (கற்கம் தயாரிக்க) | — | 350 கிராம் |

**செய்முறை –**

சிற்றாமுட்டி வேரைப் பஞ்சுபோல் இடித்து நீரிலிட்டு நாலிலொன்றாகக் காய்ச்சிக் குறுக்கி எடுக்கவும். வடித்த குடிநீர் 5.600 மில்லி லீற்றருடன் பசுப் பால், எண்ணெய் ஆகியனவற்றையும் சேர்த்துக் கலக்கவும். பின்பு 350 கிராம் சிற்றாமுட்டி வேர் சூரணத்துடன் சிறிது பால்விட்டு நன்கு அரைத்த கற்கத்தைச் சேர்த்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து உரிய பதத்தில் வடித்துக் கொள்ளவும். இதனைப் பலா தைலம் எனவும் அழைப்பர்.



**அளவு –**

5 — 10 மி. லீற்றர். இருவேளை உட்கொள்ளலாம். தலைக்குத் தேய்த்து முழுகவும் உபயோகிக்கலாம்.

**தீரும் நோய்கள் –**

கெற்ப வாயு, ருதுகால குத்து ( வலி ), வாத நோய்கள் என்பன தீரும்.

## 11. A) சிரங்குத் தைலம்

*(எட்டு முறை)*

| | | | |
|---|---|---|---|
| 01. | துத்தம் | — | 10 கிராம் |
| 02. | துருசு | — | 10 ,, |
| 03. | கிருமி சத்துரு | — | 10 ,, |
| 04. | கந்தகம் | — | 10 ,, |
| 05. | திரிகடுகு | — | 10 ,, |
| 06. | இரு சீரகம் | — | 10 ,, |
| 07. | வசம்பு | — | 10 ,, |
| 08. | மாயாக்காய் | — | 10 ,, |
| 09. | அதிமதுரம் | — | 10 ,, |
| 10. | கொம்பரக்கு | — | 10 ,, |
| 11. | மனோசிலை | — | 10 ,, |
| 12. | அரிதாரம் | — | 10 ,, |
| 13. | வேம்பாடல் | — | 20 ,, |
| 14. | தேங்காயெண்ணெய் (2 போத்தல் ) | — | 1500 மி. லீ. |

**செய் முறை –**

இடிக்க வேண்டிய சரக்குகளை இடித்துப் பொடிப்பதுடன் அரைக்க வேண்டியவற்றைக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து இரண்டையும் ஒன்றுசேர்த்து அரைத்து, எண்ணெய்யில் கலந்து அடுப்பேற்றிப் பதத்தில் வடித்துக் கொள்க.

**அளவு –**

வெளிப் பிரயோகத்துக்கு மட்டும்.

தீரும் நோய்கள் —

சிரங்கு, சொறி, கரப்பான், அவியல் தோல்புரைஆகியன தீரும்.

குறிப்பு :

சிரசில் வைப்பது உகந்ததல்ல.

## 11. B) சிரங்கெண்ணெய்

(யாழ்.மாநகர சபையில் தயாரிக்கப்படும் சுருக்கமான முறை)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | துத்தம் | — | 10 | கிராம் |
| 2. | துருசு | — | 10 | ,, |
| 3. | கந்தகம் | — | 10 | ,, |
| 4. | கிருமி சத்துரு | — | 10 | ,, |
| 5. | பற்படாகம் | — | 10 | ,, |
| 6. | ஜடாமாஞ்சில் | — | 10 | ,, |
| 7. | வேம்பாடல் | — | 25 | ,, |
| 8. | தே. எண்ணெய் (5 போத்தல்) | — | 3750 | மி. லீ. |

செய் முறை -

மேற்குறிப்பிட்ட சிரங்குத் தைலம் செய்முறை போன்றது.

## 12. சுக்குத் தைலம்

(தேரையர் தைல வர்க்கம்)

அ)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | தோல் சீவிய சுக்கு | — | 3 | கி. கி |
| 2. | தண்ணீர் | — | 48 | லீற்றர் |
| 3. | பசுப் பால் | — | 3 | ,, |
| 4. | நல்லெண்ணெய் | — | 3 | கி. கி |



ஆ)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | சிற்றரத்தை | — | 10 | கிராம் |
| 02. | சுக்கு | | 10 | ,, |
| 03. | மிளகு | — | 10 | ,, |
| 04. | திற்பலி | — | 10 | ,, |
| 05. | கோரைக் கிழங்கு | — | 10 | ,, |
| 06. | மஞ்சிட்டி | — | 10 | ,, |
| 07. | கடுக்காய் | — | 10 | ,, |
| 08. | நெல்லிவற்றல் | — | 10 | ,, |
| 09. | தான்றிக்காய் | — | 10 | ,, |
| 10. | தண்ணீர் விட்டான் கிழங்கு | — | 10 | ,, |
| 11. | அகில் கட்டை | — | 10 | ,, |
| 12. | எருக்கம் வேர்பட்டை | — | 10 | ,, |
| 13. | கடுகுரோகிணி | — | 10 | ,, |
| 14. | கோட்டம் | — | 10 | ,, |
| 15. | கொடிவேலி வேர் | — | 10 | ,, |
| 16. | தேவதாரு | — | 10 | ,, |
| 17. | சந்தனக் கட்டை | — | 10 | ,, |
| 18. | வெள்ளைக் குங்கிலியம் | — | 10 | ,, |
| 19. | செவ்வியம் | — | 10 | ,, |
| 20. | ஆமணக்கு வேர் | — | 10 | ,, |
| 21. | வெள்ளிலோத்திரம் | — | 10 | ,, |
| 22. | பேரிச்சம்பழம் (கொட்டை நீக்கியது) | — | 10 | ,, |
| 23. | திராட்சை (உலர்ந்தது) | — | 10 | ,, |
| 24. | இந்துப்பு | — | 10 | ,, |
| 25. | கஸ்தூரி | — | 2 | ,, |
| 26. | குங்குமப் பூ | — | 2 | ,, |

செய் முறை -

முதலில் (ஆ) என்பதன்கீழ் 01 — 24 வரையிலுமுள்ள சரக்குகளைப் பொடித்து எண்ணெய்க்குரிய கற்கச் சரக்காக வைக்கவும். பின்பு சுக்கை நொருக்கி தண்ணீரில் இட்டுக் காய்ச்சி, ஆறு வீற்றராக சுண்டவைத்து வடித்து எடுக்கவும். வடித்த குடிநீருடன் பசுப்பால், நல்லெண்ணெய் ஆகியவற்றைச் சேர்த்து மேற்குறிப்பிட்ட கற்கச் சூரணத்தையும் கலந்து அடுப்பேற்றி காய்ச்சி உரிய பதத்தில் வடிக்கவும். வடிகலத்தில் கஸ்தூரி, குங்குமப் பூ இவ்விரண்டையும் பொடித்துக் கலந்துபோட்டு தைலத்தை வடிக்கவும். இத் தைலத்தை ஒருமாதம் வரை நெற்புடம் வைக்கவும்.

உபயோகம் -

வெளிப்பூச்சு, மற்றும் தேய்த்துக் குளிப்பதற்கும் உதவும்.

தீரும் நோய்கள் -

வாதநோய், பித்தநோய் தீரும்.

1. பீனிச நோயில் — நசியம் இடலாம்.
2. பல்வலி, பல்லரணையில் — வாய் கொப்பளிக்கலாம்.
3. காது வலிக்கு — துளிக் கணக்கில் காதில் விடலாம்.
4. குருதி அமுக்க நோயில் — இதனை வைத்து முழுகலாம்.
5. மார்பில் கோழை கட்டிக் கொள்ளுதல், தொண்டைக் கட்டு, குரல் கம்மல் ஆகியவற்றுக்குத் தலைமுழுக உபயோகிக்கலாம்.

பத்தியம் -

இச்சா பத்தியம்.

குறிப்பு :

குருதி அமுக்க நோயாளிகள் இதனைச் சிரசில் வைத்து முழுகி வர உறக்கமும் பித்த சாந்தியும் உண்டாகும்.



## 13. செம்பரத்தம் பூ எண்ணெய்

(பரராசசேகரம் — கெர்ப்பரோக சிகிச்சை)

அ)

| | | | |
|---|---|---|---|
| 1. | கற்பூரவள்ளியிலைச் சாறு (40 அவுன்ஸ்) | — | 1250 மி. லீ. |
| 2. | செம்பரத்தம் இலைச் சாறு (40 அவுன்ஸ்) | — | 1250 ,, |
| 3. | எள் எண்ணெய் (24 அவுன்ஸ்) | — | 750 ,, |

ஆ)

| | | | |
|---|---|---|---|
| 01. | செங்கத்தாரி வேர் | — | 05 கிராம் |
| 02. | முன்தொடரி வேர் | — | 05 ,, |
| 03. | பின்தொடரி வேர் | — | 05 ,, |
| 04. | கருஞ்சூரை வேர் | — | 05 ,, |
| 05. | நீர்ப்புலா வேர் | — | 05 ,, |
| 06. | காட்டுக்கொன்றை வேர் | — | 05 ,, |
| 07. | சாயவேர் | — | 05 ,, |
| 08. | நன்னாரி வேர் | — | 05 ,, |
| 09. | விட்டாடி வேர் | — | 05 ,, |
| 10. | நற்சீரகம் | — | 05 ,, |
| 11. | கருஞ்சீரகம் | — | 05 ,, |
| 12. | கடுகு | — | 05 ,, |
| 13. | சந்தனம் | — | 05 ,, |
| 14. | வசுவாசி | — | 05 ,, |
| 15. | சாதிக்காய் | — | 05 ,, |
| 16. | செவ்வள்ளி | — | 05 ,, |
| 17. | சாளியா | — | 05 ,, |
| 18. | மல்லி | — | 05 ,, |
| 19. | ஓமம் | — | 05 ,, |
| 20. | வசம்பு | — | 05 ,, |
| 21. | கைப்பு | — | 05 ,, |
| 22. | கடுக்காய் | — | 05 ,, |
| 23. | களிப்பாக்கு | — | 05 ,, |
| 24. | மாயாக்காய் | — | 05 ,, |

| | | | |
|---|---|---|---|
| 25. | கராம்பு | — 05 | கிராம் |
| 26. | செஞ்சந்தனம் | — 05 | ,, |
| 27. | இந்துப்பு | — 05 | ,, |
| 28. | பூதவிருக்கம் | — 05 | ,, |
| 29. | அதிமதுரம் | — 05 | ,, |
| 30. | திற்பலி | — 05 | ,, |
| 31. | ஈருள்ளி | — 05 | ,, |

இ)

| | | |
|---|---|---|
| 1. | இளநீர் (40 அவுன்ஸ்) | — 1250 மி. லீ. |
| 2. | செம்பரத்தம் பூ | — 100 எண் |

**செய் முறை -**

முதலில் (ஆ) பகுதியிலுள்ள சரக்குகளை இடித்துப் பொடித்து வைக்கவும். பின் (அ) பகுதியில் உள்ளனவற்றை ஒரு பாத்திரத் திலிட்டு (ஆ) பகுதியில் உள்ள சரக்குப் பொடியைக் கற்கமாகக் கலந்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரிக்கவும், பின் செவ்வரத்தம் பூவை இளநீரில் அரைத்து அதனையும் பாத்திரத்தில் போட்டுக் கலக்கி எரித்து நீர்வற்றிய பதத்தில் காய்ச்சி வடித்து எடுக்க.

**உபயோகம் -**

கருவுற்ற தாய்மாருக்கு முதலாம் மாதத்திலிருந்து ஒவ்வொரு தேக்கரண்டி விதம் ஏற்றி அருந்திவர,செங்கிரந்தி, செங்கரப்பான், கருங்கிரந்தி, தோடம் முதலியன நீங்கும்; கருவும் நன்கு வளரும் பாலர்களுக்குத் தலையில் வைப்பதுடன், உள் அருந்தவும் கொடுக்கலாம். பாலர்களுக்கு உண்டாகும் செங்கிரந்தி, செவ் வாப்பு, செங்கரப்பான், ஆகிய கிரந்தி நோய்கள் அனைத்தும், இருமல் முதலியனவும் தீரும்.

**குறிப்பு :**

முன் தொடரிக்குப் பதில் சரக்காகச் சிங்கிலிச் செடியைச் சேர்க்கலாம். சிங்கிலிச் செடிக்கு இண்டு / ஈயத் தண்டு / ஈயக் கொழுந்து / புலித்துடக்கி என்ற வேறுபெயர்களுமுண்டு. இது ஒரு முட்கொடி வகையைச் சேர்ந்தது. இக்கொடி சீயக்காய் அல்லது தொட்டாற் சுருக்கி செடி போன்ற வடிவமுள்ளது.

பின்தொடரிக்குப் பதில் சரக்காக நாயுருவியைச் சேர்க்கலாம்.



நீர் புலாவுக்கு வேறுபெயர் நீர் புல்லாந்தி.
விட்டாடிவேர் என்பது அகத்தியெனவும் கூறுவார்கள்.
பூதவிருக்கம் என்பது பூநாறி(பீநாறி)ப்பட்டையைக் குறிக்கும்,

## 14. தாழங்காய் எண்ணெய்

*(இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம்)*

| | | | |
|---|---|---|---|
| 01. | நன்னாரி வேர் | — 10 | கிராம் |
| 02. | கோரைக் கிழங்கு | — 10 | ,, |
| 03. | விலாமிச்சம் வேர் | — 10 | ,, |
| 04. | வெட்டி வேர் | — 10 | ,, |
| 05. | சிற்றாமுட்டி வேர் | — 10 | ,, |
| 06. | பேராமுட்டி வேர் | — 10 | ,, |
| 07. | தேவதாரு | — 10 | ,, |
| 08. | பச்சிலை | — 10 | ,, |
| 09. | கச்சோளம் | — 10 | ,, |
| 10. | ஜடாமாஞ்சில் | — 10 | ,, |
| 11. | மரமஞ்சள் | — 10 | ,, |
| 12. | வெண் கோட்டம் | — 10 | ,, |
| 13. | சந்தனம் | — 10 | ,, |
| 14. | நறும்பிசின் | — 10 | ,, |
| 15. | சதகுப்பை | — 10 | ,, |
| 16. | சிற்றேலம் | — 10 | ,, |
| 17. | அதிமதுரம் | — 10 | ,, |
| 18. | பசுப்பால் (20 அவுன்ஸ்) | — 625 | மி. லீ. |
| 19. | எள் எண்ணெய் (20 அவுன்ஸ்) | — 625 | மி. லீ. |
| 20. | இந்துப்பு | — 10 | கிராம் |
| 21. | தண்ணீர் (512 அவுன்ஸ்) | — 16000 | மி. லீ. |
| 22. | தாழம்பிஞ்சுச் சாறு (40 அவுன்ஸ்) | — 1250 | மி. லீ. |

**செய் முறை —**

*01 முதல் 17 வரையுமுள்ள சரக்குகளை இடித்து நொருக்கி தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் குடிநீர் செய்யவும். இரண்டு வீற்றரா கக் குறுக்கி வடித்து எடுக்கவும். பின்னர் தாழம் பிஞ்சுச்சாறு, பசுப் பால், நல்லெண்ணெய் ஆகியவற்றை ஒரு பாத்திரத்தில் விட்டு மேற்படி குடிநீரையும் ஒன்று சேர்த்து எரித்து மெழுகுப் பதத் தில் வடித்துக் கொள்ளவேண்டும். தைலம் சூடு ஆறுவதற்கு முன் இந்துப்பைப் பொடித்து கலந்து கொள்ளவும்.*

**உபயோகம் —**

*இது வாத ரோகங்களுக்கு வெளிப் பூச்சாகப் பூசலாம். அத் துடன் இதனைச் சிரசுக்கும் வைக்கலாம்,*

**தீரும் நோய்கள் —**

*வாதநோய்கள், கண் எரிவு, கைகால் முடக்கு, நோ முதலி யன தீரும்.*

## 15. நயன விதி எண்ணெய்

*(சுதேச வைத்திய அவுடதத் திரட்டு)*

| | | | |
|---|---|---|---|
| 01. | ஏலம் | — 5 | கிராம் |
| 02. | குங்குமம் | — 5 | ,, |
| 03. | வெட்டிவேர் | — 5 | ,, |
| 04 | சந்தனம் | — 5 | ,, |
| 05. | விலாமிச்சம் வேர் | — 5 | ,, |
| 06. | நற்சீரகம் | — 5 | ,, |
| 07. | சிற்றரத்தை | — 5 | ,, |
| 08. | குங்குமப் பூ | — 5 | ,, |
| 09. | சிறுநாகப் பூ | — 5 | ,, |
| 10. | ஓமம் | — 5 | ,, |
| 11. | வாலுழுவையரிசி | — 5 | ,, |
| 12. | மல்லி | — 5 | ,, |
| 13. | அதிமதுரம் | — 5 | ,, |
| 14. | மரமஞ்சள் | — 5 | ,, |
| 15. | கிளியூறல் பட்டை | — 5 | ,, |



| | | | |
|---|---|---|---|
| 16. | கராம்பு | — 5 | கிராம் |
| 17. | மஞ்சள் | — 5 | ,, |
| 18. | வெட்பாலையரிசி | — 5 | ,, |
| 19. | கஸ்தூரி மஞ்சள் | — 5 | ,, |
| 20. | பச்சிலை | — 5 | ,, |
| 21. | தேவதாரு | — 5 | ,, |
| 22. | குக்கில் | — 5 | ,, |
| 23. | சண்பக மொக்கு | — 5 | ,, |
| 24. | சாதிக்காய் | — 5 | ,, |
| 25. | தான்றிக்காய் | — 5 | ,, |
| 26. | குளவிந்த மஞ்சள் | — 5 | ,, |
| 27. | நல்லெண்ணெய் | — 750 | மி. லீ. |
| 28. | பசுப்பால் | — 750 | ,, |
| 29. | இளநீர் | — 750 | ,, |
| 30. | கற்றாழைச் சாறு | — 750 | ,, |
| 31. | தாழம் விழுதுச் சாறு | — 750 | ,, |
| 32. | கற்பூர வள்ளி இலைச்சாறு | — 750 | ,, |
| 33. | மொசுமொசுக்கைச் சாறு | — 750 | ,, |

**செய் முறை —**

*01 முதல் 26 வரையுமுள்ள கற்கச் சரக்குகளைப் பொடித்து வைத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் 27 முதல் 33 வரையு முள்ளனவற்றை ஒன்றுசேர்த்து மேற்படி பொடித்த சரக்கைக் கலந்து, சிறு தீயாக எரித்து மெழுகு பதத்தில் வடித்துக் கொள் ளவும்.*

**உபயோகம் —**

*இத்தைலத்தைத் தலைக்கு வைக்கவும், முழுகவும் உபயோ கிக்கலாம்.*

**தீரும் நோய்கள் —**

*கண் நோய்கள், சிரோ ரோகங்கள், மூக்கு நீர் பாய்தல் ஆகியன தீரும்.*

## 16. நாசி ரோக நாசத் தைலம்
## (N. R. Oil)

(தேரையர் தைல வர்க்கச் சுருக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 01. | நல்லெண்ணெய் | — 1.400 | லீற்றர் |
| 02. | பசுப்பால் | — 1.400 | ,, |
| 03. | இளநீர் | — 1.400 | ,, |
| 04. | தாமரை வளையம் | — 4 | கிராம் |
| 05. | வெட்டிவேர் | — 4 | ,, |
| 06. | சந்தனம் | — 4 | ,, |
| 07. | விலாமிச்சம் வேர் | — 4 | ,, |
| 08. | கஸ்தூரி மஞ்சள் | — 4 | ,, |
| 09. | தேற்றாங் கொட்டை | — 4 | ,, |
| 10. | கோரைக் கிழங்கு | — 4 | ,, |
| 11. | நற்சீரகம் | — 4 | ,, |
| 12. | ஏலம் | — 4 | ,, |
| 13. | பூலாங் கிழங்கு | — 4 | ,, |
| 14. | பச்சிலை | — 4 | ,, |
| 15. | செங்கழுநீர்க் கிழங்கு | — 4 | ,, |
| 16. | தண்ணீர் விட்டாங் கிழங்கு | — 4 | ,, |
| 17. | அதிமதுரம் | — 4 | ,, |
| 18. | மஞ்சிட்டி வேர் | — 4 | ,, |
| 19. | சண்பக மொக்கு | — 4 | ,, |
| 20. | புனுகுச் சட்டம் | — 4 | ,, |
| 21. | குங்குமப் பூ | — 4 | ,, |

### செய் முறை –

முதலில் 04 முதல் 19 வரையுமுள்ள சரக்குகளை எடுத்து இடித்து கற்கச் சூரணமாக வைத்துக் கொள்க. பின் ஒன்று முதல் மூன்று வரையுமுள்ளவற்றை ஒரு பாத்திரத்தில் விட்டு மேற்படி கற்கச் சூரணத்தையும் கலந்து அடுப்பேற்றவும். அதனைச் சிறு தீயாக எரித்து உரிய பதம் வரும்போது இறுதியில் கூறப்பட்ட இரு சரக்குகளையும் வடிகலத்தில் போட்டு வடித்துக் கொள்க.



### உபயோகம் –

சிரசுக்கு வைக்கவும், தேய்த்துக் குளிக்கவும் உதவும்.

### தீரும் நோய்கள் –

சுவாச நோய்கள், பீனிசம், கண்நோய்கள் (கடி, நீர்வடிதல்) ஆகியன நீங்கும்.

### குறிப்பு :

இத் தைலம் யாழ் மாநகர சபை சித்த மருத்துவ நிலையத்திற் பெருமளவு தயாரிக்கப்படுகின்றது. இத்தைலத்தில் செவ்வள்ளிக் கொடி கூடுதலாகச் சேர்க்கப்படுகின்றது. இது மிகவும் பிரபல்யமடைந்த தைலமாகும்.

## 17. பச்சை எண்ணெய் (மத்தன் தைலம்)

(குணபாடம் இரண்டாம் பாகம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | ஊமத்தமிலைச் சாறு | — 3.500 | லீற்றர் |
| 2. | முள்முருக்கமிலைச் சாறு | — 1.750 | ,, |
| 3. | தேங்காயெண்ணெய் | — 1.400 | ,, |
| 4. | துருசு | — 350 | கிராம் |

### செய் முறை –

துருசை ஊமத்தமிலைச் சாற்றுடன் அரைத்து, தேங்காய் எண்ணெய்யைக் கூட்டி மற்றைய சாற்றைக் கலந்து, கடுகு திரளும் பதம் வரும்வரை காய்ச்சி, வடித்து எடுத்துக் கொள்ளவும்.

### உபயோகம் –

மேற்பூச்சாக உபயோகிக்கவும், விரணங்களுக்கும் போடலாம்.

### தீரும் நோய்கள் –

புண், அவியல், பிளவை, காதில் புண் ஏற்பட்டுச் சீழ் வடிதல் ஆகியன தீரும்.

## 18. பாலர் கிரந்திக் கொதி எண்ணெய்

(எட்டு முறை)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | நற்சீரகம் | — | 5 | கிராம் |
| 02. | கருஞ்சீரகம் | — | 5 | ,, |
| 03. | ஏலம் | — | 5 | ,, |
| 04. | திற்பலி | — | 5 | ,, |
| 05. | செஞ்சந்தனம் | — | 5 | ,, |
| 06. | வெந்தயம் | — | 5 | ,, |
| 07. | சுக்கு | — | 5 | ,, |
| 08. | அதிமதுரம் | — | 5 | ,, |
| 09. | கடுகுரோகிணி | — | 5 | ,, |
| 10. | செண்பகப் பூ | — | 5 | ,, |
| 11. | சிறுநாகப் பூ | — | 5 | ,, |
| 12. | விழாலரிசி | — | 5 | ,, |
| 13. | வெட்பாலை அரிசி | — | 5 | ,, |
| 14. | பூ நாறி (பீ நாறி)ப் பட்டை | — | 5 | ,, |
| 15. | உள்ளி | — | 5 | ,, |
| 16. | கடுக்காய் | — | 5 | ,, |
| 17. | நெல்லிக் காய் | — | 5 | ,, |
| 18. | தான்றிக் காய் | — | 5 | ,, |
| 19. | அக்கராகாரம் | — | 5 | ,, |
| 20. | கார்போக அரிசி | — | 5 | ,, |
| 21. | மாயாக்காய் | — | 5 | ,, |
| 22. | வசம்பு | — | 5 | ,, |
| 23. | வலம்புரி | — | 5 | ,, |
| 24. | ஓமம் | — | 5 | ,, |
| 25. | மிளகு | — | 5 | ,, |
| 26. | மல்லி | — | 5 | ,, |
| 27. | கோட்டம் | — | 5 | ,, |
| 28. | செங்கத்தாரி வேர் | — | 10 | ,, |
| 29. | தேற்றா வேர் | — | 10 | கிராம் |
| 30. | செவ்வள்ளிக் கொடி | ... | 25 | ,, |
| 31. | வேம்பாடல் | — | 25 | ,, |
| 32. | வெங்காயம் | — | 200 | ,, |
| 33. | செவ்வரத்தம்பூ | — | 100 | பூ |
| 34. | நல்லெண்ணெய் – 5போத்தல் | ... | 3750 | மி. லீ |



### செய் முறை –

மேற்கூறிய சரக்குகளில் இடிக்க வேண்டிய சரக்குகளை உரலில் இடித்து, அரிதட்டில் அரித்து வைக்கவும். வெங்காயத்தையும், செவ்வரத்தம் பூவையும் இடித்து சிறிதளவு எண்ணெயுள் போட்டுப் பொரிந்து வருகையில் (சலங்கைப் பதத்தில்) மீதி எண்ணைய்யை விட்டுக் கொதிக்கும் போது வெற்றிலை வெடிப்பதத்தில் மேற்படி தூளைப் போட்டுக் கலக்கி அடுப்பில் இருந்து இறக்கி ஆறவிடவும். ஆறியபின் வடித்து கொள்ளவும்.

### உபயோகம் –

பாலர்களுக்குச் சிரசில் வைத்து, உடம்புக்கும் பூசிவிடவும், மலக்கட்டு இருப்பின், நாக்கில் தைலத்தை தடவிவிடவும். கிரந்தி முறுக்கல் இருப்பினும் நாக்கில் தடவச் சிறந்த பலன் அளிக்கும்.

### தீரும் நோய்கள் –

கிரந்தி, மலக்கட்டு ஆகியன தீரும்.

### குறிப்பு :

இத் தைலம் பிள்ளை பிறந்து 41 நாட்களின்பின் பாலர்களுக்கு வைப்பது யாழ்ப்பாணத்தில் ஒரு வழக்கமாகும். இது ஒரு கற்ப மருந்தாகவும் உபயோகிக்கின்றனர். இத்தைலம் 6 மாதம் அல்லது ஒரு வருடம்வரை வைக்கலாம். இதன்பின் வடி கிரந்தி எண்ணெய் உபயோகிப்பதும் வழக்கத்தில் உண்டு.

## 19. பிருங்காமலத் தைலம்
(ஔஷத யோக சங்கிரகம்)

| | | | |
|---|---|---|---|
| 01. | நல்லெண்ணெய் | — 1.600 | லீற்றர் |
| 02. | கருசலாங்கண்ணிச்சாறு | — 1.600 | ,, |
| 03. | நெல்லிக்காய்ச் சாறு | — 1.600 | ,, |
| 04. | சீந்தில்கொடிச் சாறு | — 1.600 | ,, |
| 05. | பசுப்பால் | — 1.600 | ,, |
| 06. | அதிமதுரம் | — 25 | கிராம் |
| 07. | சந்தனம் | — 25 | ,, |
| 08. | கோட்டம் | — 25 | ,, |
| 09. | கோரைக் கிழங்கு | — 25 | ,, |
| 10. | வெட்டி வேர் | — 25 | ,, |
| 11. | விலாமிச்சம் வேர் | — 25 | ,, |
| 12. | பூலாங் கிழங்கு | — 25 | ,, |
| 13. | ஜடாமாஞ்சில் | — 25 | ,, |
| 14. | சண்பக மொக்கு | — 25 | ,, |
| 15. | அன்னாசிப் பூ | — 25 | ,, |
| 16. | மஞ்சள் | — 25 | ,, |
| 17. | பச்சிலை | — 25 | ,, |

### செய் முறை —

ஆரம்பத்தில் 06 முதல் 17 வரையுமுள்ள சரக்குகளைப் பொடித்து அரிதட்டில் அரித்து வைக்கவும். பின்பு 01 முதல் 05 வரையுமுள்ளவற்றை ஒரு பாத்திரத்தில் இட்டு மேற்குறிப்பிட்ட சூரணத்தைப் பாலில் அரைத்து கற்கமாக ஒன்று சேர்க்கவும். பின் அதனை அடுப்பேற்றி எரித்து மெழுகு பதத்தில் வடித்து எடுக்கவும்.

### உபயோகம் -

சிரசிற்கு வைக்கவும், வாரம் ஒருமுறை இத்தைலத்தை வைத்து முழுகுதல் நன்று.

### தீரும் நோய்கள் -

கண் எரிச்சல், தேக எரிவு, கண் நோ, தலையிடி முதலியன நீங்கும். குருதி அமுக்கம் கூடுதலாகவுள்ள (Hypertension) நோயாளிகள் இதனை உபயோகித்து வருதல் சிறந்தது.



### குறிப்பு :

தயாரிக்கும் பாங்கில் வேறு ஒரு முறையும் உண்டு. செய்முறையை ஒன்றாகவே கருதவும். சரக்குகள் கீழே தரப்பட்டுள்ளன.

## பிருங்காமலத் தைலம்
(கண்ணுச்சாமிப் பரம்பரை வைத்தியம்)

பிருங்கா — கரிசலாங்கண்ணி
ஆமலக — நெல்லிக்காய்

### தேவையான சரக்குகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நல்லெண்ணெய் | — 1250 | மி. லீ |
| 2. | கரிசலாங்கண்ணிச் சாறு | — 1250 | ,, |
| 3. | நெல்லிக்காய்ச் சாறு | — 1250 | ,, |
| 4. | சீந்தில் கொடிச் சாறு | — 1250 | ,, |
| 5. | பசுப்பால் | — 1250 | ,, |
| 6. | இளநீர் | — 1250 | ,, |

### கற்கச் சரக்குகள்

| | | | |
|---|---|---|---|
| 01. | கோட்டம் | — 4 | கிராம் |
| 02. | அதி மதுரம் | — 4 | ,, |
| 03. | சிறுநாகப் பூ | — 4 | ,, |
| 04. | கராம்பு | — 4 | ,, |
| 05. | கோரைக் கிழங்கு | — 4 | ,, |
| 06. | கஸ்தூரி மஞ்சள் | — 4 | ,, |
| 07. | சந்தனத் தூள் | — 4 | ,, |
| 08. | ஏலம் | — 4 | ,, |
| 09. | சண்பகப் பூ | — 4 | ,, |
| 10. | தாமரை வளையம் | — 4 | ,, |

## 20. பீனிசத் தைலம்

(தேரையர் தைலவர்க்கம்)

| | | | |
|---|---|---|---|
| 01. | நல்லெண்ணெய் | — 1.500 | லீற்றர் |
| 02. | நொச்சி இலைச் சாறு | — 1.500 | ,, |
| 03. | கரிசாலைச் சாறு | — 1.500 | ,, |
| 04. | இந்துப்பு | — 15 | கிராம் |
| 05. | சிற்றரத்தை | — 15 | ,, |
| 06. | திற்பலி | — 15 | ,, |
| 07. | ஆமணக்கம் வேர் | — 15 | ,, |
| 08. | குடசப்பாலை வேர் | — 15 | ,, |
| 09. | கிரந்தித்தகரம் | — 15 | ,, |
| 10. | சுக்கு | — 15 | ,, |
| 11. | கோட்டம் | — 15 | ,, |
| 12. | தேற்றாங் கொட்டை | — 15 | ,, |
| 13. | சதகுப்பை | — 15 | ,, |
| 14. | வாய்விடங்கம் | — 15 | ,, |
| 15. | அதிமதுரம் | — 15 | ,, |
| 16. | வெள்ளாட்டுப் பால் | தேவையானளவு | |

### செய் முறை –

ஆரம்பத்தில் 05 முதல் 15 வரையுமுள்ள சரக்குகளைப் பொடித்து அரிதட்டில் அரித்து வைக்குக. பின்பு 01முதல் 03வரையிலுமுள்ளவற்றை ஒரு பாத்திரத்திலிட்டு மேற்படி சூரணத்தை வெள்ளாட்டுப்பாலில் நன்கு அரைத்து கற்கமாகச் சேர்த்துக் கலக்கி அடுப்பேற்றி எரிக்கவும். இறுதியில் இந்துப்பைப் பொடித்து ஒன்றுகலந்து உரிய பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

### உபயோகம் –

சிரசிற்கு வைப்பதற்கும், முழுகுவதற்கும் உபயோகிக்கலாம். நஸ்யம் செய்யவும் உதவும்.

### தீரும் நோய்கள் –

எல்லாவித பீனிசங்கள், நாட்பட்ட ஜலதோஷம், தலைவலி என்பன தீரும்.



## 21. மெழுகுத் தைலம் (பிண்ட தைலம்) (P. T Oil)

(IMPCOPS முறை – இந்தியா)

| | | | |
|---|---|---|---|
| 1. | தண்ணீர் | ... 3.200 | லீற்றர் |
| 2. | நல்லெண்ணெய் | ... .800 | கி.கிராம் |
| 3. | மஞ்சிஷ்டி | ... 50 | கிராம் |
| 4. | நன்னாரி | ... 50 | ,, |
| 5. | தேன் மெழுகு | — 50 | ,, |
| 6. | குங்கிலியம் | — 50 | ,, |

### செய் முறை –

மஞ்சிஷ்டி, நன்னாரி இரண்டையும் உரலிலிட்டு இடித்துப் பொடித்து வைக்கவும். அடுத்து ஒரு பாத்திரத்தில் நல்லெண்ணெய்யை விட்டபின் மேற்படி பொடித்து வைத்த கற்கச் சரக்கைத் தண்ணீரில் கலந்து அதனுள் விட்டு அடுப்பேற்றி எரிக்கவும். உரிய பதத்தில் இறக்கி வடிகட்டும் போது வடிகலத்தில் பொடித்த வெள்ளைக் குங்கிலியத்தையும், சிறுதுண்டுகளாகச் சீவிய தேன் மெழுகையும் போட்டுச் சூட்டுடன் வடிகட்டிக் கரையக் கூடியதாகக் கலந்துவிடவும்.

### உபயோகம்

வெளிப்பிரயோகம் மட்டும்.

### தீரும் நோய்கள் –

வாதரக்தம், வாதரோக வலி, அடிபட்ட நோ, வலி, சுழுக்கு, வீக்கம் ஆகியவற்றுடன் சருமரோகங்கள், கட்டிகள் ஆகியனவற்றுக்கும் பூசலாம்.

### குறிப்பு –

தற்போது மஞ்சிஷ்டிக்குப் பதிலாக செவ்வள்ளிக் கொடியை உபயோகிக்கலாம்.

மஞ்சிஷ்டி, நன்னாரி ஆகியனவற்றைக் கசாயம் செய்தும் இத்தைலத்தைத் தயாரிக்கலாம்; வேண்டுமாயின் ஒரு சிறுபகுதியைக் கற்கமாகவும் சேர்த்துக் கொள்ளலாம்.

## 22. மேனித் தைலம்

(குணபாடம் இரண்டாம் பாகம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | குப்பைமேனி இலை | 1 | பங்கு |
| 2. | ஆமணக்கெண்ணெய் | 4 | ,, |

**செய் முறை –**

குப்பைமேனி இலையைச் சிறுக அரிந்து, ஆமணக்கெண்ணெயில் போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து, இலை எண்ணெயில் பொரிந்து மிதந்து வருகையில் அதனை வடித்து எடுத்து அரைத்து அவ்வெண்ணெய்யுடன் கலந்துவிடவும்.

**அளவு –**

*5 — 10 மி. லீற்றர்.*
தினம் — இருவேளை குடிக்கவும்.

**தீரும் நோய்கள் –**

குடல் பூச்சிகள், (Intestinal worms) பவுந்திரம் என்பன நீங்கும்.

## 23. வாத கேசரித் தைலம்

(தேரையர் தைல வர்க்கச் சுருக்கம்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | சதுரக்கள்ளிச் சாறு | — | 1.400 | லீற்றர் |
| 02. | நொச்சியிலைச் சாறு | — | 1.400 | ,, |
| 03. | தழுதாழை இலைச் சாறு | — | 1.400 | ,, |
| 04. | வெள்ளாட்டுப் பால் | — | 1.400 | ,, |
| 05. | எருக்கமிலைச் சாறு | — | 1.400 | ,, |
| 06. | நல்லெண்ணெய் | — | 1.400 | ,, |
| 07. | ஆமணக்கெண்ணெய் | — | 1.400 | ,, |
| 08. | கடுக்காய்த் தோல் | — | 2.5 | கிராம் |
| 09. | காட்டு மிளகு | — | 2.5 | ,, |
| 10. | வெள்ளைப் பூடு | — | 2.5 | ,, |
| 11. | பெருங்காயம் | ... | 2.5 | ,, |
| 12. | நெல்லிக்கெந்தகம் | — | 2.5 | ,, |
| 13. | கோட்டம் | — | 2.5 | கிராம் |
| 14. | சுக்கு | — | 2.5 | ,, |
| 15. | மிளகு | — | 2.5 | ,, |
| 16. | திற்பலி | — | 2.5 | ,, |
| 17. | கடுகு | — | 2.5 | ,, |



**செய் முறை –**

ஆரம்பத்தில் 08 முதல் 17 வரையுமுள்ள சரக்குகளைப் பொடித்து. வெள்ளாட்டுப் பால் விட்டரைத்து கற்கமாக எடுக்கவும். பின்னர் 01 — 07 வரையுமுள்ளவற்றை ஒரு பாத்திரத்தில் விட்டுக் கற்கத்தைக் கலந்து காய்ச்சி உரிய பதத்தில் வடிக்கவும்.

**உபயோகம் –**

வெளிப்பூச்சாகவும், பிடித்தைலமாகவும் உபயோகிக்கலாம்.

**தீரும் நோய்கள் –**

எல்லாவித வாதநோய்கள், குறிப்பாக திமிர்வாதம், பக்கவாதம், முடக்குவாதம், மூட்டுவாதம் ஆகியன தீரும்,

## 24. விஷமுஷ்டித் தைலம்

(தேரையர் தைல வர்க்கச் சுருக்கம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | நல்லெண்ணெய் | — 2.800 | லீற்றர் |
| 2. | எட்டிக் கொட்டை | — 88 | கிராம் |
| 3. | வெள்ளாட்டுப் பால் | — தேவையான அளவு | |
| 4. | உரித்த வெள்ளைப்பூடு | — 88 | கிராம் |
| 5. | ஆயில் பட்டைத் தூள் | — 53 | ,, |

**செய் முறை –**

எட்டிக் கொட்டையைப் பாலில் 12 மணிநேரம் ஊறப் போட்டுச் சீவலாக வெட்டிக் கொள்ளவும். பின் பூடையும் சிறு சிறு துண்டுகளாக வெட்டி மேற்கூறிய இரண்டுடனும் ஆயில் பட்டைத் தூளைக் கலந்து ஒரு பாத்திரத்திற் போட்டு, நல்லெண்ணெய்யை விட்டு அடுப்பேற்றிச் சரக்குகள் சிவக்கும் பதத்தில் காய்ச்சி வடிக்கவும்.

**உபயோகம் —**

வெளிப்பிரயோகம் மட்டும்
வெயிலில் வைத்துச் சூடேறியபின் உபயோகிக்கவும்.

**தீரும் நோய்கள் —**

வாத நோய்கள். கீல்வாயு, நரம்புகளின் செயல்குறைவு ஆகியவை நீங்கும்.

## 25. வெள்ளை எண்ணெய் (பூர எண்ணெய்)

(குணபாடம் இரண்டாம் பாகம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆமணக்கெண்ணெய் | — | 1400 கிராம் |
| 2. | இரச கற்பூரம் | — | 35 ,, |
| 3. | ஏலரிசி | — | 35 ,, |
| 4. | சுக்கு | — | 35 ,, |

**செய் முறை —**

மேலே குறிப்பிட்டுள்ளவற்றுள் இறுதி மூன்று சரக்குகளையும் தனித்தனியே பொடித்துக்கொண்டு முதலில் இரச கற்பூரப் பொடிக்குச் சிற்றாமணக்கெண்ணெய் சிறிது சிறிதாய் விட்டரைத்து பின்பு மற்றைய சரக்குகளையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

**அளவு —**

15 — 30 மி. லீற்றர்.
காலை ஒருவேளை மட்டும் குடிக்கவும்.

**தீரும் நோய்கள் —**

மலக்கட்டு, வெள்ளை, குன்மம், கீல்வாயு, வீக்கம், மேகநோய், குழந்தைகளின் மாந்தநோய், குடற்பூச்சிகள் ஆகியன தீரும். பொதுவாகச் சரும நோய், வாத நோய்களில் ஆரம்ப விரேசனத்துக்கு இது உபயோகிக்கப்படுகின்றது.

**குறிப்பு :**

இந்த எண்ணெயுடன் வாய்விடங்கத் தூள் கலந்து கொடுக்க, குடல் பூச்சிகள் வெளியேறும். இதனை உபயோகிக்க முன்னர் போத்தலைக் குலுக்கி எண்ணெய்யை எடுக்கவும்.



# செந்தூரம்

உலோகங்கள், பாடாணங்கள், இரச, உபரச உப்புக்கள் ஆகியவற்றுக்குச் சில மூலிகைச் சாறுகளை / புகைநீரை விட்டு அரைத்துப் புடமிட்டு / எரித்து / வறுத்து / அரைத்து வெயிலில் வைத்துச் சிவக்கும்படி செய்து எடுத்துக் கொள்வது செந்தூரமாகும்.

செந்தூரம் தயாரிக்கும் முறைகளை இருபெரும் பிரிவுகளாக வகுக்கலாம்.

1. குப்பி வைப்பு / பதங்கமுறை (Sublimation)
   (உ — ம்) இரச செந்தூரம்
2. புடம் போடுதல்
   (உ — ம்) அயக்காந்த செந்தூரம்

மேற்கூறியதை விட, வேறு தயாரிப்பு முறைகளும் உண்டு.

1. எரிப்புச் செந்தூரம்
   (உ — ம்) சட்டி எரிப்பு முறை — ஆறுமுக செந்தூரம்
2. வறுப்புச் செந்தூரம்
   (உ — ம்) அயவீர செந்தூரம்
3. அரைப்புச் செந்தூரம்
   (உ — ம்) சண்ட மாருத செந்தூரம்

பொதுவாகச் செந்தூரங்கள் சிவப்பாகவிருக்கும். ஆனால் சில செந்தூரங்களுக்கு அதற்கெனக் குறிப்பிட்ட நிறம் உண்டு.
(உ — ம்) கௌரி சிந்தாமணிச் செந்தூரம். இது கடும் ஊதாநிறம் (Dark Violet) உடையது.

## செந்தூரத்தின் பண்பு

இது மிகவும் நுண்ணிதாக (Micro Fine Powder) இருத்தல் வேண்டும். இந்தியாவில் தற்போது செந்தூர பற்பங்களை ஜார் மில் (Jarmill) என்ற நவீன இயந்திரத்தின் உதவியுடன் மேலும் நுண்ணியதாக (Micro) அரைக்கலாம்.

செந்தூரத்தை எடுத்து அதனுள் விரலை வைத்துப் பார்க்கும் போது விரலின் கோடுகள் (ரேகைகள்) அதில் பதியுமளவுக்கு அணுத்துவமுடையதாக இருக்க வேண்டும்.

செந்தூரங்களை உண்ணும்போது உணவு முறைகளையும், பத்தியா பத்தியங்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியமாகும். சில செந்தூரங்கட்கு இன்ன உணவுகள் உண்ண வேண்டுமென்றும், இன்ன உணவுகளைத் தவிர்க்க வேண்டும் என்றும் விதிகள் உண்டு.

இவ்விதி முறைகளை மீறி நடந்தால், மருந்தின் நோய் நீக்கும் தன்மை (வீரியம்) குறைவதுடன், உடலுக்குப் பக்க விளைவுகளையும் ஏற்படுத்தும். பண்டைக் காலத்தில் மருத்துவர்கள் செந்தூரம், பற்பங்களைத் தனியே வழங்கிவந்தனர். ஆனால் இன்றைய உலகில் அதனை நடைமுறைப்படுத்த முடியாதளவு மக்களின் உடல்நிலை உள்ளது. ஏனெனில் இன்றைய மனிதனின் உணவுப் பழக்க வழக்கங்கள், தேகப் பயிற்சிகள், நோய் எதிர்ப்புச் சக்திகள் ஆகியவற்றின் நலிந்த தன்மையைக் குறிப்பிடலாம்.

ஆகையால் மருத்துவர்கள் செந்தூரம், பற்பங்களைத் துணை மருந்துகளுடன் சேர்த்துக் கொடுப்பது நன்று. அவ்வாறு செய்யின், மேற்குறிப்பிட்ட சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். உதாரணமாக அயக்காந்தச் செந்தூரத்தை அமுக்கிராச் சூரணத்துடன் கலந்து உண்ணுதல் நன்று.

செந்தூரத்தின் பண்புகள் பெரும்பாலும் பற்பங்களை ஒத்திருக்கும். செந்தூரங்களுக்கான சோதனை முறைகளும் பற்பங்களுக்கு உரியவற்றைப் போன்று பெரும்பாலும் இருக்கும்.

### ஆயுட் காலம் –

செந்தூரங்கள் எழுபத்தைந்து ஆண்டுகள் வரை வன்மையுடையன.

### பாதுகாப்பு –

இவற்றைத் தூய்மையான, ஈரப்பதமற்ற கண்ணாடி மூடிகளைக் கொண்ட போத்தல்களில் காற்றுப்புகா வண்ணம் மூடி வைக்கவேண்டும்.

### குறிப்பு :

சித்த மருந்துகளில் கட்டு, களங்கு, சுண்ணம், கறுப்பு, பற்பம், செந்தூரம் என்பவை சிறப்பம்சமாகும். இந்நூலில் பற்பம், செந்தூரம், கறுப்பு என்பவை மட்டும் தரப்பட்டுள்ளன.



## செந்தூர வகைகள்

01. அயச் செந்தூரம்
02. அயக்காந்தச் செந்தூரம்
03. அன்னபேதிச் செந்தூரம்
04. ஆறுமுகச் செந்தூரம்
05. இலிங்கச் செந்தூரம்
06. காந்தச் செந்தூரம்
07. சண்டமாருதச் செந்தூரம்
08. படிகலிங்கச் செந்தூரம்
09. பூங்காவிச் செந்தூரம்
10. மூதண்டச் செந்தூரம்
11. வெடி அன்னபேதிச் செந்தூரம்

## 1. அயச் செந்தூரம்

*(அகத்தியர் பரிபூரணம் - 400)*

1. அயப் பொடி — தேவையானளவு
2. பச்சை ஓதியம் பட்டை — ,,
3. காடிநீர் — ,,

### செய் முறை –

முதலில் ஓதியம்பட்டைக்குக் காடிநீர் தெளித்து இடித்துப் பிழிந்து சாறு எடுக்கவும். பின் தூய்மை செய்த அயப்பொடியை வேண்டியளவு கல்வத்திலிட்டு மேற்படி தயாரித்த சாறுவிட்டு கல்வத்தை மூன்று நாட்களுக்கு வெய்யிலில் உலர வைக்கவும். நான்காம் நாள் மேலும் மேற்குறிப்பிட்ட சாற்றைவிட்டு நன்கு அரைத்து வில்லை செய்து காயவைக்கவும். பின் அதனை அகலிவிட்டு (புடம்போடும் சட்டி) ஏழு சீலைமண் செய்து உலரவைத்துக் கஜபுடமிடவும் (100 வறாட்டி). இவ்விதம் எட்டுமுறை செய்யவும். பின்பு காடிநீர் சேர்க்காமல் தனி ஓதியம் பட்டைச் சாறுவிட்டு அரைத்து முன்கூறியது போல் செய்து மூன்று புடம் இடவும். இறுதியாக வில்லைகளை எடுத்துக் கல்வத்தில் நன்கு அரைத்துப் பத்திரப் படுத்தவும்.

அளவு —

60 — 130 மி. கிராம்
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்)

அனுபானம் -

அதிமதுரப் பொடி / ஆலம்பிஞ்சுப் பொடி / தேன் / நெய்

தீரும் நோய்கள் -

வளி நோய், வெளுப்பு நோய் ஆகியன தீரும், விந்து விருத்தியாகும்; இரத்தம் உற்பத்தி அதிகரிக்கும்.

குறிப்பு :

அயம் சேர்ந்த மருந்துகளை வெறுவயிற்றில் உண்பதைத் தவிர்க்கவும். உணவுக்குப் பின் உபயோகிக்கவேண்டும்.

## 2. அயக் காந்தச் செந்தூரம்

(அகத்தியர் செந்தூரம் - 300)

| | | | |
|---|---|---|---|
| 01. | அயப் பொடி (சுத்தித்தது) | — 80 | கிராம் |
| 02. | கந்தகம் ( ,, ) | — 80 | ,, |
| 03. | காந்தம் ( ,, ) | — 20 | ,, |
| 04. | இலிங்கம் ( ,, ) | — 10 | ,, |
| 05 | வெங்காரம் | — 10 | ,, |
| 06. | படிகாரம் | — 10 | ,, |
| 07. | பூநீறு | — 10 | ,, |
| 08. | சோற்றுப்பு | — 10 | ,, |
| 09. | இந்துப்பு | — 10 | ,, |
| 10. | நவாச்சாரம் | — 10 | ,, |
| 11. | கற்பூரம் | — 10 | ,, |
| 12. | தேசிப்புளிச் சாறு | —தேவையானளவு | |

செய் முறை —

மேற்குறிப்பிட்டவற்றுள் சுத்தி செய்ய வேண்டியவற்றைச் சுத்தி செய்யவும். பின்னர் மேற்படி சரக்குகளை முறைப்படி



கல்வத்திலிட்டுப் பொடித்து தேசிப்புளிச் சாறுவிட்டு இருநாட்கள் நன்கு அரைக்குக. பின்பு அதனை வில்லைசெய்து உலரவிட்டு அகலில் அடுக்கி மூடிச் சீலைமண் செய்யவும். பின் அதனை மேலும் உலரவிட்டு 100 வறாட்டியில் புடம்போடவும். செந்தூரம் சிவக்காவிட்டால் மேலும் முன்னையது போல் செய்து மீண்டும் புடம் போடவும்.

அளவு —

100 — 200 மி. கிராம்
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்)

அனுபானம் —

தேன் / நெய்

துணை மருந்து —

பஞ்ச தீபாக்கினிச் சூரணம்

தீரும் நோய்கள் —

எல்லாவித வெளுப்பு நோய்கள், வாத ரோகம், பெரும்பாடு; மாதர் நோய்கள் ஆகியவை தீரும்.

## 3. அன்னபேதிச் செந்தூரம்

(சித்த வைத்தியத் திரட்டு)

1. சுத்தித்த அன்னபேதி — தேவையானளவு
2. அரிசிக் காடிநீர் —

செய் முறை —

தூய்மை செய்த அன்னபேதியை அரிசிக் காடிநீர் விட்டு நன்கு அரைக்கவும். பின்னர் அதனை வில்லை செய்து அகலில் இட்டுச் சீலைமண் செய்து உலரவைத்துப் புடம் இடவும். மேற் கூறியதுபோல் இரண்டு அல்லது மூன்று முறை செய்து புடம் போடவும்,

அளவு —

50 — 100 மி. கிராம்
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்)

அனுபானம் -

தேன் — சுரம், வெளுப்பு நோய்களுக்கு.
நெய் — கடுப்புக் கழிச்சலுக்கு.

தீரும் நோய்கள்

சுரம், வெளுப்பு நோய், கழிச்சல் ஆகியவை தீரும்.

## 4. ஆறுமுகச் செந்தூரம்
(சித்த வைத்தியத் திரட்டு)

| | | | |
|---|---|---|---|
| 1. | வாலை இரசம் | — 50 | கிராம் |
| 2. | கந்தகம் (சுத்தித்தது) | — 90 | ,, |
| 3. | காந்தம் (சுத்தித்தது) | — 70 | ,, |
| 4. | அயப்பொடி ( ,, ) | — 120 | ,, |
| 5. | இந்துப்பு ( ,, ) | — 40 | ,, |
| 6. | வெங்காரம் (பொரித்தது) | — 80 | ,, |
| 7. | கற்றாழைச் சாறு | தேவையானளவு | |

செய் முறை -

முதலில் இரசத்தையும், கந்தகத்தையும் கல்வத்திலிட்டு ஒன்று சேர்த்து அரைத்துக் கஜலி செய்யவும். பின்பு மற்றச் சரக்குகளை முறைப்படி தனித் தனியாக அரைத்து, ஒன்று சேர்த்து கற்றாழைச் சாறு விட்டு நன்கு அரைக்கவும். இவ்வாறு ஐந்து நாட்கள் அரைத்தபின் வில்லை தட்டி உலரவைக்கவும். பின்னர் அதனை வாய் அகன்ற சட்டியில் வைத்து, வாய்க்குப் பொருத்தமான மற்றொரு சட்டியால் மூடி, ஏழு சீலைமண் செய்து உலரவிடவும். பின்பு அதனை அடுப்பேற்றி 24 மணி நேரம் தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினி என்னும் மூன்று தீயாக முறையே எட்டெட்டு மணித்தியாலம் தொடர்ந்து எரித்து ஆறவிட்டு எடுக்கவும். எடுக்கும்பொழுது செந்தூரம் மாதுளம் பூ நிறமாகக் காணப்படும். அப்படி நிறம் வராவிட்டால், திரும்பவும் இதேபோல் செய்யவும்.

அளவு -

100 — 200 மி. கி.
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்)



அனுபானம் -

தேன் / வேண்டியவை.

துணை மருந்து -

திரிகடுகுச் சூரணம்

தீரும் நோய்கள் -

வாத ரோகம், பாரிச வாதம், மூலரோகம், வெளுப்பு நோய், கிரந்தி ஆகியன தீரும்,

குறிப்பு :

இது எரிப்புச் செந்தூர வகுப்பைச் சேர்ந்தது.

## 5. இலிங்கச் செந்தூரம்
(சித்த வைத்தியத் திரட்டு)

| | | | |
|---|---|---|---|
| 1. | சுத்தி செய்த இலிங்கக் கட்டி | — 30 | கிராம் |
| 2. | சாம்பிராணி | 210 | ,, |
| 3. | விளைவு கற்பூரம் | — 210 | ,, |
| 4. | நூணாப்பட்டைச் சூரணம் | — தேவையானளவு | |

செய் முறை -

முதலில் கற்பூரம், சாம்பிராணி ஆகிய இரண்டையும் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து மெழுகுப் பதத்தில் ஏழு பங்குகளாகப் பிரித்து வைக்கவும். பின்பு அவற்றில் ஒரு பங்கை எடுத்து நீல நிறத்துணியில் தடவி லிங்கக் கட்டியைச் சுற்றி கட்டிவிடவும். பின் அதனை ஒரு ஓட்டில் வைத்துக் கொளுத்தி விடவும். பின்பு சூடு ஆறியதும் லிங்கக் கட்டியை எடுத்துக் கரியைச் சுரண்டிச் சுத்தம் செய்யவும். இவ்வாறு ஏழுமுறை செய்யவும். ஈற்றில் லிங்கக் கட்டியைக் கழுவி எடுக்கவும்.

பின்னர் ஒரு சட்டியின் அரைவாசிக்கு நூணாப்பட்டைச் சூரணத்தைப் போட்டு அதற்கு மேல் மேற்படி லிங்கக் கட்டியை வைத்து மேலும் நூணாப்பட்டைச் சூரணத்தால் அதனை நிரப்பி மூடியபின் மேற் சட்டி ஒன்றினால் மூடிச் சீலைமண் செய்து ஐந்து வறாட்டியில் புடம் இடவும். பின்பு லிங்கக் கட்டியை எடுத்து கல்வத்திலிட்டு நன்கு அரைத்துப் பத்திரப்படுத்தவும்.

**அளவு –**

50 — 100 மி. கிராம்
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்).

**அனுபானம் –**

தேன் / இஞ்சிச் சாறு

**துணை மருந்து –**

திரிகடுகுச் சூரணம் / வேண்டிய சூரணங்கள்.

**தீரும் நோய்கள் –**

குளிர்சுரம், நடுக்கம், நெஞ்சடைப்பு, சன்னி, வாயு, மேகநோய்கள் ஆகியவை தீரும்.

**குறிப்பு :**

இது இலகு புடச் செந்தூர வகையைச் சேர்ந்தது.

## 6. காந்தச் செந்தூரம்

(குணபாடம் — இரண்டாம் பாகம்)

| | | |
|---|---|---|
| 1. | காந்தப் பொடி (சுத்தித்தது) | — 35 கிராம் |
| 2. | வாழைக் கிழங்குச் சாறு | — தேவையானளவு |
| 3. | விளாமரப் பட்டைச் சாறு | — ,, |
| 4. | முருங்கைப் பட்டைச் சாறு | — ,, |
| 5. | எலுமிச்சம் பழச் சாறு | — ,, |

**செய் முறை :**

தூய்மை செய்த காந்தப் பொடியைக் கல்வத்திலிட்டு மேற் கூறப்பட்ட நான்கு சாறுகளை முறையே தனித்தனி விட்டு ஆறு நாட்களுக்கு நன்கு அரைக்கவும். மொத்தமாக 24 நாட்கள் அரைக்க வேண்டும். பின்பு அதனை வில்லைதட்டி உலர்த்தி அகலில் இட்டுச் சீலைமண் செய்யவும். அவ்வாறு செய்த பின் மேலும் உலரவிட்டுப் புடம் இடவும். அப்பொழுது காந்தம் முருக்கம் பூ நிறங் கொண்ட செந்தூரமாகக் காணப்படும்.



**அளவு –**

65 – 130 மி. கிராம்
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்)

**அனுபானம் –**

தேன் / பால் / சர்க்கரை / வெந்நீர்

**தீரும் நோய்கள் –**

பாண்டு, மாதர் நோய்கள், நடுக்கு வாதம், வாத ரோகம், வாத சூலை ஆகியவை தீரும்.

## 7. சண்ட மாருதச் செந்தூரம் (C. M. C)

(சித்த வைத்தியத் திரட்டு)

| | | | |
|---|---|---|---|
| 1. | இலிங்கம் | (சுத்தித்தது) | — 4 பங்கு |
| 2. | பூரம் | ( ,, ) | — 2 ,, |
| 3. | வீரம் | ( ,, ) | — 1 ,, |
| 4. | கந்தகம் | ( ,, ) | — 1 ,, |
| 5. | இரச செந்தூரம் | ( ,, ) | — 1 ,, |
| 6. | தாய்ப் பால் | | — 9 ,, |

**செய் முறை –**

முதலில் கந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து பின் வீரத்தையும் போட்டுத் தூளாக்கி ஒன்று சேர்த்து நன்கு அரைக்கவும். பின்பு இரச கற்பூரத்தைச் சேர்த்து அரைத்து நான்காவதாக இரச செந்தூரத்தையும் ஒன்று கூட்டி அரைக்கவும். ஈற்றில் லிங்கத்தை அரைத்து எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து தாய்ப் பால் விட்டு நன்கு அரைத்து உலரவிட்டு எடுத்துக் கொள்க.

**அளவு –**

30 – 60 மி. கிராம்
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்)

**அனுபானம் –**

தேன் / பனை வெல்லம்

**தீரும் நோய்கள் -**

வாத நோய்கள், சன்னிபாதம், வாதசூலை, வாயு ஆகியவை தீரும்.

இச் செந்தூரத்தைப் பசு வெண்ணெயில் சேர்த்துக் குழைத்து வெளிப் பிரயோகமாக உபயோகித்துவர வறள் கரப்பான் (Psoriasis) முதலிய கரப்பான் வகைகள் தீரும்.

**குறிப்பு :**

இது அரைப்புச் செந்தூர வகையைச் சேர்ந்தது.

## 8. படிகலிங்கச் செந்தூரம்

(குணபாடம் இரண்டாம் பாகம்)

1. இலிங்கம் (சுத்தித்தது) — 35 கிராம்
2. படிகாரம் (பொரித்தது) — 280 ,,
3. கடுக்காய்ப் பூ — 35 ,,
4. காட்டாத்திப் பூ — 105 ,,

**செய் முறை -**

இலிங்கம், படிகாரம் இரண்டையும் தனித்தனியே நன்கு பட்டுப்போல் அரைத்து, பின் ஒன்றுசேர்த்து அரைக்கவும்.

700 மி. லீற்றர் நீரில் கடுக்காய்ப் பூ, காட்டாத்திப் பூ ஆகிய வற்றைப் போட்டுக் கொதிக்க வைத்து 175 மி. லீற்றராகக் குறுக்கிக் குடிநீர் தயாரிக்கவும். அக்குடிநீரை மேற்படி அரைத்த பொடிக்கு விட்டு நன்றாக ஒன்றுசேர்த்து அரைத்து உலரவிடவும். பின் அதனைப் பத்திரப்படுத்தி வைக்கவும்.

**அளவு -**

200 — 650 மி. கிராம்
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்).

**அனுபானம் -**

தேன் / நெய் / வெண்ணெய்.

**தீரும் நோய்கள் -**

கடுப்புக் கழிச்சல், குருதிக் கழிச்சல், பெரும்பாடு, சுரத்துடன் கூடிய கழிச்சல் ஆகியவை தீரும்.



## 9. பூங்காவிச் செந்தூரம்

(ஏட்டு முறை)

1. பூங்காவி — 1 பங்கு
2. படிகாரம் — 1 ,,
3. இளநீர் — தேவையானளவு

**செய் முறை -**

ஒரு அகண்ட பாத்திரத்துள் தேவையான அளவு இளநீர் விட்டு, அதற்குள் பொடித்த பூங்காவியைப் போட்டுக் கரைத்து ஊறவிட்டுத் தெளியவிடவும். தெளிந்த இளநீரை வெளியேற்று வதற்கு பாத்திரத்தை மெதுவாகச் சரித்து வெளியே விடவும். மீதியாகவுள்ள பூங்காவியை வெய்யிலில் வைத்து உலரவிடவும். உலர்ந்த பூங்காவியை எடுத்து கல்வத்திலிட்டு படிகாரத்தையும் ஒன்று சேர்த்து நன்கு அரைத்து எடுத்துக் கொள்க.

**அளவு -**

250 — 1000 மி. கிராம்
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்)

**அனுபானம் -**

தேன் / வேண்டிய அனுபானம்.

**தீரும் நோய்கள் -**

வெள்ளை சாய்தல், பெரும்பாடு, குருதிக் கழிச்சல், மாத விடாய்க் கோளாறுகள் ஆகியவை தீரும்.

## 10. மூதண்டச் செந்தூரம்

(ஏட்டு முறை)

1. சாதிலிங்கம் (சுத்தித்தது) — 3 பங்கு
2. பச்சைக் கற்பூரம் ( ,, ) — 2 ,,
3. வெடியுப்பு ( ,, ) — 1 ,,

**செய் முறை –**

மேற்குறிப்பிட்ட சரக்குகளைத் தனித்தனியாக கல்வத்தி விட்டு பட்டுப்போல் நன்கு அரைக்கவும். பின்பு எல்லாவற்றை யும் ஒன்று சேர்த்து நன்றாக அரைத்து எடுத்துக் கொள்க.

**அளவு –**

50 — 100 மி. கிராம்
தினம் — இரு வேளை. (உணவுக்குப் பின்)
தேவையேற்படும் போதும் உபயோகிக்கலாம்.

**அனுபானம் –**

தேன் / இஞ்சிச் சாறு / தாய்ப் பால்.

**தீரும் நோய்கள் –**

வாய்வு, நெஞ்சடை வாதம், சன்னி ஆகியவை தீரும்.

**குறிப்பு :**

சில யாழ்ப்பாண மருத்துவர்கள் கீழ்க்காணும் அளவுகளிலும் மூதண்டச் செந்தூரத்தைத் தயாரிக்கின்றனர்.

| | | |
|---|---|---|
| 1. | சாதி லிங்கம் | — 3 பங்கு |
| 2. | வெடியுப்பு | — 2 ,, |
| 3. | விளைவு சூடம் | — 1 ,, |

## 11. வெடி அன்னபேதிச் செந்தூரம்

(குணபாடம் இரண்டாம் பாகம்)

| | | |
|---|---|---|
| 1. | அன்னபேதி (சுத்தித்தது) | — 4 பங்கு |
| 2. | வெடியுப்பு ( ,, ) | 1 ,, |
| 3. | எலுமிச்சம் பழச் சாறு | — தேவையானளவு |

**செய் முறை –**

மேற்குறிப்பிட்ட இரு சரக்குகளையும் கல்வத்திலிட்டு எலு மிச்சம் பழச்சாறுவிட்டரைத்து நன்கு மடியும்வரை அரைக்கவும். பின்னர் அதனை வில்லையாக்கி உலரவிடவும். உலர்ந்த வில்லை களை அகலில் வைத்துச் சீலைமண் செய்து சிறுபுடம் இடவும். இவ்வாறு இரண்டு அல்லது மூன்றுமுறை புடம் போடவும்.



**அளவு –**

50 — 100 மி. கிராம்
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்).

**அனுபானம் –**

தேன் / வேண்டியவை.

**தீரும் நோய்கள் –**

வெளுப்பு நோய், மஞ்சள் நோய் (காமாலை), பெருவயிறு, வீக்கம் ஆகியவை நீங்கும்.

**குறிப்பு :**

வெளுப்பு நோயில் ஏற்படுகின்ற வீக்கத்துக்கு இது விசேட மானது. அதாவது சிறுநீர் பெருக்கியாகவும், இரத்த விருத்தி யாகவும் ஒரேவேளையிற் செயலாற்றுகின்றது.

## சில செந்தூரங்களுக்குப் பொருத்தமான துணை மருந்துகள்

| | |
|---|---|
| 1. அயச் செந்தூரம் | — நெல்லிக்காய் இலேகியம் |
| 2. அயக் காந்தச் செந்தூரம் | அமுக்கிராச் சூரணம்<br>முடக்குச் சூரணம் |
| 3. ஆறுமுகச் செந்தூரம் | திரிகடுகுச் சூரணம்<br>அமுக்கிராச் சூரணம்<br>முடக்குச் சூரணம் |
| 4. அப்பிரகச் செந்தூரம் | ஆவாரைப் பஞ்சாங்கம்<br>மதுமேகச் சூரணம் |

குறிப்பு: இந் நூலில் அனுபானம், துணை மருந்துகளை ஒன்றா கக் கருதாமல் வேறுபடுத்தித் தரப்பட்டுள்ளன.

**அனுபானம் –**

மருந்துகளுக்கு சேர்க்கும் மூலிகைச் சாறு, குடிநீர், பனங் கட்டி, தேன், நெய், பால், சீனி ஆகிய இயற்கைப் பொருட்க ளைக் குறிக்கும்.

**துணை மருந்து –**

ஒரு மருந்தைத் தளமாகவும், இன்னொரு மருந்தை அதனுடன் ஒன்றுகூட்டிக் கொடுத்தலைக் குறிக்கும்.

# பற்பம்

பற்பத்தை நீறு என்றும் கூறுவர். உலோகங்கள் / பாடாணங்கள் / உப ரசங்கள் ஆகியவற்றுக்குச் சில மூலிகைச் சாறுகள்/ உப்புப் புகைநீர் / செயநீர் என்பவற்றை விட்டு அரைத்து/அரைத்துப் புடமிட்டு / எரித்து அல்லது ஊதியேனும் வெளுக்கும்படி செய்து எடுத்துக் கொள்வது பற்பம் எனலாம். இதனை வடமொழியில் பஸ்பம் அல்லது பஸ்ம என்று சொல்வர்.

**இதன் பண்புகள் —**

1. பொதுவாகப் பற்பங்கள் வெண்ணிறமுடையன.
2. பொதுவாகப் பற்பங்கள் மணம் சுவையற்றன.
3. பற்பத்தில் மினுமினுப்பு இருக்கக்கூடாது.
4. பற்பங்கள் நாள் செல்லச் செல்ல வீரியம் அதிகரிக்கின்றன.

பற்பங்கள் முறையாகத் தயாரிக்கப் பட்டனவா என்பதை அறிவதற்குச் சில சோதனைகள் — இவை செந்தூரத்துக்கும் பொருந்தும்.

1. பற்பங்கள் மினுமினுப்பாக இருக்கக் கூடாது.
2. பற்பத்தை ஆள்காட்டி விரலுக்கும் கட்டை விரலுக்கும் இடையில் இட்டுத் தேய்த்தால், விரல்களின் இரேகை இடுக்குகளில் பதிய வேண்டும். அதாவது பற்பம் மிக மென்மையாக இருக்க வேண்டும்.
3. சிறிதளவு பற்பத்தை நீரின் மேலிட்டால், அது நீருள் உடனே மூழ்கக் கூடாது.
4. பற்பத்தை தீயிலிட்டு ஊதினால் அதினின்றும் பற்பத்தின் மூலப்பொருள் நிலைக்கு அது திரும்பக் கூடாது. முன்னர் செந்தூரங்களுக்குக் கூறப்பட்ட பத்தியா பத்தியங்கள், உணவுப் பழக்கங்கள் ஆகியவை இவற்றுக்கும் பொருந்தும் என்பதை மருத்துவ சமூகம் கவனித்தல் வேண்டும்.

**ஆயுட்காலம் —**

நூறு ஆண்டுகள் வன்மையுடையது.



# பற்ப வகைகள்

01. அப்பிரக பற்பம்
02. ஆமையோட்டுப் பற்பம்
03. குங்கிலியப் பற்பம்
04. சங்கு பற்பம்
05. சிலாசத்துப் பற்பம்
06. தாளகப் பற்பம்
07. நண்டுக் கல் பற்பம்
08. நாக பற்பம்
09. பவழ பற்பம்
10. பலகறைப் பற்பம்
11. மஞ்சட் பற்பம்
12. மான் கொம்புப் பற்பம்

## சில பற்பங்களுக்குப் பொருத்தமான துணை மருந்துகள்

| | |
|---|---|
| 1. சங்கு பற்பம் | வெண் பூசினி இலேகியம்<br>பித்த சமன இலேகியம்<br>நெல்லிக்காய் இலேகியம் |
| 2. சிலாசத்துப் பற்பம் | தேற்றாங் கொட்டை இலேகியம்<br>வெண் பூசினி இலேகியம் |
| 3. தாளக பற்பம் | தாளிசாதிச் சூரணம்<br>தாளிச பத்திரிச் சூரணம் |
| 4. நாக பற்பம் | மாதுளை ஓட்டுச் சூரணம்<br>கருணைக் கிழங்கு இலேகியம் |
| 5. பவழ பற்பம் | தாளிசாதிச் சூரணம்<br>தாளிச பத்திரிச் சூரணம் |

6. மான் கொம்புப் பற்பம் — சம எடை பச்சைக் கற்பூரம் நெஞ்சு வலிக்கு (Angina Pectoris)

## 1. அப்பிரக பற்பம்
*(சித்த வைத்தியத் திரட்டு)*

1. கறுப்பு அப்பிரகம் — 35 கிராம்
2. மருதோன்றி வேர்ப்பட்டை — 560 ,,
3. தண்ணீர் — 2.240 லீற்றர்
4. கடம்பம் பிசின் (உலராதது) — தேவையானளவு
5. குப்பை மேனிச் சாறு — ,,
6. வேப்பெண்ணெய் — ,,
7. அத்திப் பால் — ,,

**செய் முறை —**

மருதோன்றி வேர்ப்பட்டையைத் தண்ணீரில் போட்டு அடுப்பேற்றி, நாலில் ஒரு பாகமாகச் சுருக்கிக் குடிநீர் செய்க. பின் இதனை 16 பங்காகப் பிரித்து, இவ்விரண்டு பாகமாக (குடிநீர்) நாள்தோறும் அப்பிரகத்துக்கு எட்டு நாட்களுக்கு வார்த்து ஊற வைத்து நிழலில் உலர்த்தி எடுக்கவும்.

பின்பு அப்பிரகத்தை நிறுத்து அப்போது இருக்கும் எடைக்கு இரு பங்கு உலராத கடம்பம் பிசினைச் சேர்த்து, அந்த இரு பங்கு பிசினும் ஒரு பங்காகக் குறைந்து வரும்வரை வற்றவிடவும். பின்னர் முன்போல் நாளொன்றுக்கு இரண்டு பங்கு வீதம் குப்பைமேனிச் சாற்றை எட்டு நாட்களுக்கு விட்டு ஊறவைத்து நிழலில் உலர்த்தவும்.

உலர்ந்த அப்பிரகத்துக்குத் தினமும் இரண்டு பங்கு வீதம் வேப்பெண்ணெய் விட்டு ஆறுநாட்களுக்கு அரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலர்த்தவும். உலர்த்தும்போது வில்லையை நிறுத்துக்கொண்டு அந்த எடைக்குச் சம எடையாக மூன்று நாட்களுக்கு அத்திப்பாலை அந்த வில்லைக்கு விட்டு உலர்த்தவும்.

பின்னர் அதனை அகலிலிட்டுச் சீலைமண் செய்து அறுபது வறாட்டி கொண்டு புடமிட்டு, நன்றாக ஆறியபின் எடுத்தால், வெண்மையாக இருக்கும்.

**அளவு —**

*30 – 60 மி. கிராம்.*
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்).



**அனுபானம் —**

சர்க்கரை / நெய் / வெற்றிலைச் சாறு.
இதனை 40 நாட்கள் (ஒரு மண்டலம்) உபயோகிக்கவும்.

**தீரும் நோய்கள் -**

(நீரிழிவு நோய்,) அழல் மேகப் பிரம்மியம், சுரம், வெகு மூத்திரம் ஆகியவை தீரும். மதுமேக நோயினால் உடம்பில் ஏற்படுகின்ற களைப்பு, இளைப்பு, நலிவு ஆகியனவும் தீரும்.

**பத்தியம் —**

புளி, புகையிலை, பெண்போகம், கடுகு, மதுபானம், அகத்திக் கீரை ஆகியவற்றை நீக்கவும். நற் பத்தியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். நீரிழிவு நோயுடையோர் அந்நோய்க்குரிய உணவுகளைத் தேர்ந்தெடுத்து உண்ண வேண்டும்.

## 2. ஆமையோட்டுப் பற்பம்
(IMPCOPS *முறை – இந்தியா*)

1. ஆமை ஓடு — 300 கிராம்
2. கற்சுண்ணாம்புத் தெளிவு நீர் — 600 மி. லீ.
3. பூ நீறுத் தெளிவு நீர் — 600 ,,
4. உத்தாமணிச் சாறு — தேவையானளவு

**ஆமையோடு சுத்தி**

ஆமை ஓட்டை எடுத்துத் துண்டுகளாக உடைத்து வைக்க, பின்பு, மேலே 2, 3 ஆம் இலக்கங்களிற் குறிப்பிட்டுள்ளவற்றை ஒரு பாத்திரத்தில் ஒன்று சேர்த்து, அதற்குள் உடைத்து வைத்த ஆமை ஓட்டுத் துண்டுகளைப் போட்டு அடுப்பேற்றி நன்கு எரிக்குக. ஆமை ஓட்டிலுள்ள எண்ணெய்க் கசிவு நீங்கியவுடன், அதனை வெளியே எடுத்துக் கழுவிச் சுத்தம் செய்யவும்.

**செய் முறை —**

சுத்தி செய்த ஆமையோடுகளை சிறிய துண்டுகளாக உடைத்து ஒரு அகலிலிட்டு அதனுள் உத்தாமணிச் சாற்றை

விட்டு நிரப்புக. பின் அதனைப் பொருத்தமான அகலால் மூடிச் சீலைமண் செய்துகொள்க. பிறகு நூறு வறாட்டிகளைக் கொண்டு அதனைப் புடமிடவும். புடம் ஆறியதும், ஆமை யோட்டை எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடிக்கவும். பின் அப் பொடிக்கு உத்தாமணிச் சாறுவிட்டு நன்கு அரைத்து வில்லைகள் தட்டி உலர வைக்கவும். அடுத்து நூறு வறாட்டியைக் கொண்டு மேலும் புடமிட்டு எடுக்க, வெண்நிறப் பற்பமாகும். தேவையேற்படின், மேலும் ஒன்று அல்லது இரண்டு புடங்கள் இடலாம்.

**அளவு –**

*100 — 200 மி. கிராம்.*
தினம் — இரண்டு / மூன்று வேளை (உணவுக்குப் பின்).

**அனுபானம் –**

தேன்/தாய்ப்பால்/பொடுதலைக் குடிநீர்/பேய்மிரட்டி இலைக் குடிநீர் (வெதுப்படக்கி) / ஓமக் குடிநீர்.

**தீரும் நோய்கள் –**

மாந்தம், கணம், குழந்தைகளின் மாந்தபேதி ஆகியவை தீரும்.

## 3. குங்கிலியப் பற்பம்

*(சித்த வைத்தியத் திரட்டு)*

1. வெள்ளைக் குங்கிலியம் — 300 கிராம்
2. இளநீர் — தேவையானளவு
(ஏறக்குறைய—ஏழு)

**செய் முறை –**

ஒரு பாத்திரத்தில் இளநீரை விட்டு அதனுள் வெள்ளைக் குங்கிலியத்தைப் போட்டு அடுப்பேற்றி எரிக்கக் குங்கிலியம் உருகும். உருகிய குங்கிலியத்தை எடுத்து ஆறவைத்து உடைத்துப் பொடியாக்கவும். பின் அதில் இளநீர் சேர்த்து முன்போல் செய்து எரிக்கவும். இவ்விதம் ஏழுமுறை செய்த பிறகு அதனை எடுத்து உலர்த்திக் கல்வத்திலிட்டுப் பொடித்து வைக்கவும்.



**அளவு –**

*200 — 500 மி. கிராம்.*
தினம் — இரண்டு / மூன்று வேளை (உணவுக்குப் பின்).

**அனுபானம் –**

நெய் / வெண்ணெய் / இளநீர் / பசுப்பால்.

**தீரும் நோய்கள் –**

வெள்ளை, நீர் எரிவு, நீர்க்கட்டு, வெட்டை, பிரமேகம், சீதபேதி ஆகியவை நீங்கும். உடல் குளிர்மைக்கும் உபயோகிக் கலாம்.

## 4. சங்கு பற்பம்

*(சித்த வைத்தியத் திரட்டு)*

1. சங்கு — 1 கி. கிராம்
2. எலுமிச்சம் பழச் சாறு — தேவையானளவு
3. ஆகாயத் தாமரைக் கற்கம் — 5 கி. கிராம்
4. ஆகாயத் தாமரைச் சாறு — தேவையானளவு

**சங்கு சுத்தி :**

சங்குகளை ஒன்றிரண்டாக உடைத்து எலுமிச்சம் பழச் சாற்றுள் நான்கு நாட்களுக்கு ஊறப்போட்டு, தண்ணீரால் கழுவி எடுக்கச் சுத்தியாகும்.

**செய் முறை –**

சுத்தி செய்த சங்குகளை ஆகாயத் தாமரைக் கற்கத்தின் நடுவில் வைத்து உலரவிடவும். பின் அதனை அகலிலிட்டுச் சீலைமண் செய்து ஐம்பது வறாட்டி கொண்டு புடம் இடவும். ஆறியபின் அவற்றை எடுத்துக் கல்வத்திலிட்டு ஆகாயத் தாமரைச் சாறுவிட்டு நன்கு அரைத்து வில்லைகளாக்கி உலர்த்தவும். உலர்ந்த பின், ஐம்பது வறாட்டி கொண்டு மேலும் புடமிடவும். பின்னர் அதனைப் பொடித்துப் பத்திரப்படுத்தவும்.

**அளவு –**

*100 — 200 மி. கிராம்.*
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்).

அனுபானம் –

நெய் / பசுப்பால் / வெண்ணெய்.
(இவற்றுள் நெய் விசேடமானது)

திரும் நோய்கள் –

குன்மம் (எரி), வயிற்றுக் கோளாறுகள், கண் புகைச்சல், தேக எரிவு ஆகியவை நீங்கும். நெய்யில் உட்கொள்ள உடல் பொன்நிறமடையும். துளசிச் சாற்றில் உட்கொள்ள சுரம் நீங்கும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோயில், துணை மருந்துடன் இதனை உபயோகிக்கலாம்.

## 5. சிலாசத்துப் பற்பம்

(IMPCOPS முறை – இந்தியா)

1. கற்பூரச் சிலாசத்து (சுத்தித்தது) — 300 கிராம்
2. சிறு செருப்படைச் சாறு — தேவையானளவு

செய் முறை –

சுத்திசெய்த கற்பூரச் சிலாசத்தைக் கல்வத்திலிட்டு சிறு செருப்படைச் சாறு விட்டு அரைக்கவும். நன்கு அரைத்த பின் அதனை வில்லை செய்து உலரவிட்டு ஐம்பது வறாட்டி கொண்டு புடமிடவும் இவ்வாறு மூன்றுமுறை செய்து புடமிடவும்.

அளவு –

500 — 1000 மி. கிராம்
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்).

அனுபானம் -

நெய் / வெண்ணெய் / வேண்டியவை.

திரும் நோய்கள் –

நீர் எரிவு, வெள்ளை, நீர்க் கட்டு, பித்த வியாதிகள், நீர்க் கடுப்பு, உடல் எரிச்சல் ஆகியவை நீங்கும்.

குறிப்பு :

குமரி கற்றாழைச் சாற்றுடன் சேர்த்து அரைத்துப் புடம் போடும் முறையையும் சிலர் கையாளுகின்றனர்.



## 6. தாளகப் பற்பம்

(சித்த வைத்தியத் திரட்டு)

1. சுத்திசெய்த தாளகம் — 30 கிராம்
2. வெடியுப்புச் செயநீர் — 60 ,,
3. வெடியுப்பு — தேவையானளவு
4. சிப்பிச் சுண்ணாம்பு — ,,

செய் முறை –

ஒரு சட்டியின் அடிப் பாகத்தில் ஓர் அப்பிரகத் தகட்டை வைத்து, அத் தகட்டின் மேல் சுத்தி செய்த 30 கிராம் தாளகத்தை இட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரிக்கவும். அறுபது கிராம் வெடியுப்புச் செயநீரைச் சிறிது சிறிதாகத் தாளகத்துக்குச் சுருக்குக் கொடுக்கவும். பின்பு தாளகத்தைக் கல்வத்திலிட்டு இச் செயநீரை விட்டு நன்கு அரைத்து வில்லை தட்டிக் காயவைக்கவும். பின்னர் ஒரு அகலில் அரைப்பகுதிக்குச் சிப்பிச் சுண்ணாம்பைப் பரவி, அதன் மேல் வில்லையை வைத்து மீதி அரைவாசிக்குச் சிப்பிச் சுண்ணாம்பை மேலும்போட்டு, மூடிச் சீலைமண் செய்து உலர்த்திப் பத்து வறாட்டிகளில் புடமிடவும். இதே போல் இரண்டு அல்லது மூன்றுமுறை செய்து புடமிடவும். ஒவ்வொரு முறைக்கும் ஐந்து வறாட்டிகள் வீதம் கூட்டுக. தாளகப்பற்பம் வெண்மை நிறமாக இருக்கவேண்டும். நெருப்பு அளவுக்கு மீறக் கூடாது.

அளவு –

25 — 50 மி. கிராம்
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்).

அனுபானம் –

தேன் / நெய் / பனை வெல்லம்

கால அளவு –

12 நாட்களுக்கு மேல் உட்கொள்ளக் கூடாது

துணை மருந்து –

தாளிசப் பத்திரிச் சூரணம் அல்லது தாளிசாதிச் சூரணம்.

### தீரும் நோய்கள் —

பித்த சுரம், மந்தார காசம், ஈளை, வலிப்பு, மேகம் ஆகியவை குணமடையும்.

இது ஈளை அல்லது இரைப்பு (Bronchial Asthma) நோய்க்குச் சிறந்த மருந்தாகும்.

### பத்தியம் :

உப்பைத் தவிர்க்க வேண்டும்.

## வெடியுப்புச் செயநீர் தயாரிக்கும் முறை

பழப்புளியையும், வெடியுப்பையும் சம அளவில் எடுத்து நன்கு கலந்து, உரலிலிட்டுக் கவனமாக இடிக்கவும். இடித்துக் கொண்டிருக்கையில், மெழுகுபதம் வரும்போது அதனையெடுத்துச் சிறுசிறு வில்லைகளாக்கி உலரவிடவும். அதன் பின்னர் உலர்ந்த வில்லைகளை மண் அகலில் இட்டு அடுப்பேற்றி எரிக்கவும்.

இவ்விதம் எரித்துக் கிடைத்த சாம்பலை,ஒரு பீங்கான் அல்லது கண்ணாடிப் பாத்திரத்திலிட்டுச் சற்றுச் சரிந்த நிலையில் வடியும் படி இரவு முழுவதும் திறந்து வைக்கவும். மறுநாள் காலையில் பாத்திரத்தில் சேர்ந்திருக்கும் திரவத்தை வடித்து எடுக்கவும். இதே போல் தினமும் இரவு வைத்துக் காலையில் செயநீரை எடுத்துச் சேர்த்துக்கொள்ளவும். சிலர் மண்ணில் புதைத்துவைத்தும் எடுக்கின்றனர். இதனை வெடியுப்புச் செயநீர் என்பர்.

## 7. நண்டுக்கல் பற்பம்

*(சித்த வைத்தியத் திரட்டு)*

| | | |
|---|---|---|
| 1. | நண்டுக் கல் | — தேவையானளவு |
| 2. | கற் சுண்ணாம்பு | — ,, |
| 3. | பூநீறு | — ,, |
| 4. | முள்ளங்கிச் சாறு | — ,, |
| 5. | சிறுபீளைச் சாறு | — ,, |

### நண்டுக்கல் சுத்தி —

கற் சுண்ணாம்பையும், பூ நீறையும் சம எடையாக எடுத்துத் தண்ணீரில் கரைத்து,அதன் தெளிந்தநீரை வேறு ஒருபாத்திரத்தில் வடித்து எடுக்கவும். வடித்தெடுத்த தெளிநீருள் நண்டுக் கல்லைப் போட்டு அடுப்பேற்றி மூன்று மணிநேரம் காய்ச்சவும். பின்னர் அதனைத் தண்ணீரினால் கழுவி எடுக்கச் சுத்தியாகும்.

### செய் முறை —

சுத்தி செய்த நண்டுக் கல்லைக் கல்வத்தில் போட்டு முள்ளங்கிச் சாறுவிட்டு மூன்று நாட்களுக்கு நன்கு அரைக்கவும்; பின்பு அதனை வில்லை தட்டி உலரவிடவும். உலர்ந்த வில்லைகளை அகலில் வைத்துச் சீலைமண் செய்து உலரவிட்டுப் புடம் இடவும். பின்பு சிறுபீளைச் சாறு விட்டு மூன்று நாட்களுக்கு நன்கு அரைத்து, முன்புபோல் புடமிடப் பதமாகும்.

### அளவு —

200 — 400 மி. கிராம்
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்).

### அனுபானம் —

தண்ணீர் / இளநீர் / முள்ளங்கிச் சாறு / நீர்முள்ளிக் குடிநீர்/ சிறுபீளைச் சாறு.

### தீரும் நோய்கள் —

நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீர்க் கட்டு ஆகியவை நீங்கும்.

இப் பற்பம் சிறப்பாகக் கற்கரைச்சி (Lithontriptic) செய்கையைக் கொண்டது.

## 8. நாக பற்பம்

*(போகர் வைத்தியம்)*

| | | |
|---|---|---|
| 1. | சுத்த நாகம் | — தேவையானளவு |
| 2. | கரிசாலைச் சாறு | — ,, |
| 3. | குமரிகற்றாழைச் சாறு | — ,, |

### செய் முறை —

நாகத்தை அடிகனத்த சட்டியிலிட்டு உலையில் வைத்து ஊதும்போது நாகம் உருகும். அப்பொழுது கரிசாலைச் சாற்றைச் சிறிது சிறிதாக விடவும். தொடர்ந்து இவ்வாறு செய்து, நாகம் பொடியாகும் வரை வறுத்து எடுக்கவும்.

இந்த நாகப் பொடியைக் கல்வத்திலிட்டுக் கற்றாழைச்சாறு விட்டு நன்கு அரைத்து வில்லைதட்டி உலரவிடவும். பின்பு அதனை அகலிலிட்டுச் சீலைமண் செய்து உலர்த்திப் இலகு புடமிடவும். இதேபோல் மூன்று அல்லது நான்கு புடமிட்டதும், நாகத்தின் பச்சை நிறம்மாறிப் பற்பமாகும்.

**அளவு —**

*100 — 200 மி. கிராம்*
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்).

**அனுபானம் —**

நெய் / வெண்ணெய் / தேன்.

**துணை மருந்து —**

கருணைக் கிழங்கு லேகியம் / தேற்றாங்கொட்டை லேகியம்.

**தீரும் நோய்கள் —**

மூலம், பவுந்திரம், பேதி, கிராணி, சீதபேதி, இளைப் பிருமல், ஈளை, இருமல், ஆகியன குணமடையும். பொதுவாக விரணங்களை ஆற்றும் தன்மையிருப்பினும், விசேடமாக உணவுப் பாதையின் கீழ் பாகத்தில் ஏற்படும் விரணங்களை ஆற்றும் தன்மையுடையது.

## 9. (அ) பவழ பற்பம்
*(சித்த வைத்தியத் திரட்டு)*

1. பவழம் (சுத்தித்தது) — 720 கிராம்
2. கருப்பஞ்சாறு — தேவையானளவு

**செய் முறை —**

தூய்மை செய்த பவழத்தைக் கல்வத்திலிட்டு கரும்புச் சாறு விட்டு ஏழு நாட்களுக்கு நன்றாக அரைத்து, வில்லைசெய்து உலர்த்தவும். பின்னர் அதனை அகலிலிட்டுச் சீலைமண் செய்து 34 வறாட்டி கொண்டு புடமிட்டு எடுக்கவும்.

**அளவு —**

*65 — 200 மி. கிராம்*
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்).



**அனுபானம் —**

பால் / வெந்நீர் / நெய் / வெண்ணெய்

**துணை மருந்து —**

தாளி சாதி / தாளிச பத்திரிச் சூரணம்

**தீரும் நோய்கள் —**

இரத்த பித்தம், வறட்டு இருமல், ஈளை, இருமல், இளைப் பிருமல் / க்ஷயம் (T. B.) சீதபேதி, கிரகணி ஆகியவை தீரும். அதிசாரத்துக்குத் தேசிப் புளிச் சாற்றில் குழைத்துக் கற்கண்டுத் தூள் கலந்து கொடுக்க நன்மை பயக்கும்.

## (ஆ) பவழ பற்பம்
*(IMPCOPS முறை — இந்தியா)*

1. நற் பவழம் — 200 கிராம்
2. கண்டங்கத்தரிச் சாறு — 60 மி. லீ.

**செய் முறை :**

சுத்தி செய்த பவழத்தைச் சிறு குடுவையிலிட்டுக் கண்டங் கத்தரிச் சாறு விட்டு மூடிச் சீலைமண் செய்து 150 வறாட்டியில் புடமிடவும். ஆறியபின், குடுவையை எடுத்துச் சீலையைப் பிரித்து மூடியைத் திறந்து வைக்கவும். இரு தினங்களில் வெண்மையாகப் பூத்துவிடும். அவ்வாறான பற்பத்தைக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து எடுக்கவும்.

**அளவு —**

*100 — 200 மி. கிராம்*
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்).

**அனுபானம் —**

நெய் / வெண்ணெய் / தூதுவளைச் சாறு அல்லது குடிநீர் / தண்ணீர் / பால்.

**தீரும் நோய்கள் —**

இளைப்பிருமல் / க்ஷயம் (T. B.), ஈளை, இருமல் ஆகியவை நீங்கும்.

குறிப்பு :

கண்டங் கத்தரிச் சாறுக்குப் பதிலாக, முயல் இரத்தம் விட்டுத் தயாரிப்பது விசேடமானது.

## 10. பலகறைப் பற்பம்

(தேரையர் கரிசல் – 300)

1. சுத்திசெய்த பலகறை — 1 கி. கிராம்
2. எலுமிச்சம் பழம் — 50 எண்ணிக்கை

பலகறை சுத்தி –

மஞ்சள் நிறமுள்ள பலகறையை ஒன்றிரண்டாக உடைத்து, அதனுள் இருக்கும் மண் முதலிய அழுக்குகளை நீக்கவும். பின்னர் அதனை எலுமிச்சம் பழச் சாற்றில் ஒருநாள் முழுவதும் (24மணித் தியாலம்) ஊறவைத்துத் தண்ணீரினால் கழுவி எடுக்கச் சுத்தி யாகும்.

செய் முறை –

முதலில் ஐம்பது எலுமிச்சம் பழங்களை எடுத்துப் பிழிந்து, சாறு எடுக்கவும். பின்னர் சுத்திசெய்த பலகறையைக் கல்வத்தி லிட்டுப் பொடித்து மேற்படி எலுமிச்சம்பழச் சாறுவிட்டு நன்கு அரைத்து வில்லைதட்டி உலர வைக்கவும். பின்னர் அதனை அகலிலிட்டுச் சீலைமண் செய்து உலரவைத்து ஐம்பது வறாட்டி யில் புடம் போடவும். இவ்வாறு தேவைக் கேற்ப இரண்டு அல்லது மூன்று முறை செய்து புடம் இடவும்.

அளவு –

50 — 100 மி. கிராம்.
தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்).

அனுபானம் –

நெய் / வெண்ணெய் / மோர் / பால்.

தீரும் நோய்கள் –

வெட்டை, மேகச் சூடு, நீர்க் கட்டு, குன்மம், விஷம், ஒவ்வாமை (Allergic Condition) ஆகியவை தீரும்.

குறிப்பு :

பலகறை என்பது சோகியை (Marine Shell) குறிக்கும்.



## 11. மஞ்சட் பற்பம்

(சுதேச வைத்திய அவுடதத் திரட்டு — யாழ்ப்பாண நூல்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | பெருங்காயம் | — | 10 | கிராம் |
| 02. | கடுகு | — | 10 | ,, |
| 03. | உள்ளி | — | 10 | ,, |
| 04. | மிளகு | — | 10 | ,, |
| 05. | மஞ்சள் | — | 10 | ,, |
| 06. | திற்பலி | — | 10 | ,, |
| 07. | சுக்கு | — | 10 | ,, |
| 08 | கடுக்காய் | — | 10 | ,, |
| 09. | வெங்காரம் | — | 10 | ,, |
| 10 | சீனாக்காரம் | — | 10 | ,, |
| 11. | பொரிகாரம் | — | 10 | ,, |
| 12. | அப்பளகாரம் | — | 10 | ,, |
| 13. | சவர்க்காரம் | — | 10 | ,, |
| 14. | நேர்வாளம் | — | 20 | ,, |

செய் முறை –

மேற்கூறிய சரக்குகளை முறைப்படி தூய்மையாக்கிய பின் பொடிக்க வேண்டியவற்றைப் பொடித்தும், அரைக்க வேண்டிய வற்றை முறைப்படி கல்வத்திலிட்டு அரைத்தும் எடுத்த பிறகு, எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து நன்கு அரைத்துப் பற்பமாக எடுத்துக் கொள்ளவும்.

அளவு –

500 – 750 மி. கிராம்
தேவைக்கு ஏற்ப உபயோகிக்கவும்.

அனுபானம் –

நெய் / பனங்கட்டி

பத்தியம் –

மோரும் சோறும்.

**தீரும் நோய்கள்**

மாதவிடாய் தடைப்படல், கற் பெருவயிறு, மாதவிடாய்க் குருதி முற்றாக வெளியேறாமை ஆகிய கோளாறுகள் நீங்கும்.

**குறிப்பு :**

இதனை மருத்துவர்கள் கையாளும் போது சற்று அவதான மாகவும், கண்ணியமாகவும் இருக்க வேண்டும். நோயாளிக்குப் பேதியாவதால் பலம் குன்றிவிடும். எனவே. தேகபலம் அறிந்து மருந்தின் அளவைக் கணிக்குக.

## 12. மான் கொம்புப் பற்பம் (சிருங்கி)

*(சித்த வைத்தியத் திரட்டு)*

1. மான் கொம்பு — 300 கிராம்
2. அகத்தியிலைச் சாறு — தேவையானளவு

**மான் கொம்பு சுத்தி –**

மான் கொம்பைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிப் பிளந்து ஒரு சட்டியிலிட்டு, அகத்தி இலைச்சாறு ஊற்றி ஒருநாள் முழு வதும் ஊறவைக்கவும். பின்பு அதனைத் தண்ணீரில் கழுவி எடுக்கவும். இவ்வாறு ஏழு நாட்கள் தொடர்ந்து செய்ய, மான் கொம்பு சுத்தியாகும்.

**செய் முறை –**

சுத்தி செய்த மான்கொம்புத் துண்டுகளை அகலில் வைத்து மூடிச் சீலைமண் செய்யவும், உலர்ந்த பின், முப்பது (30) வறாட்டிகளைக் கொண்டு புடமிடவும். ஆறியபின். அகலைப் பிரித்து மான் கொம்புகளை எடுத்துக் கல்வத்திலிட்டு, அகத்தியிலைச் சாறுவிட்டு நன்கு அரைத்து, வில்லைகள் தட்டி உலர்த்தவும். பின்பு முப்பது வறாட்டிகளைக் கொண்டு ஒன்று அல்லது இரண்டு முறை புடமிடப் பற்பமாகும்.

**அளவு –**

200 — 400 மி. கிராம்

தினம் — இரு வேளை (உணவுக்குப் பின்.)

தேவையேற்படும் போது உபயோகிக்கவும்



**அனுபானம் –**

நெய் / வெண்ணெய் / தேன் / வேண்டியவை.

**தீரும் நோய்கள் –**

கணை, இருமல், இருதய நோய், எலும்புருக்கி நோய், தோல் பிணிகள், சூட்டு நோய்கள் ஆகியவை தீரும்.

இது மார்பு வலிக்குச் (Angina Pectoris) சிறந்ததொரு மருந்தாகும்.

**குறிப்பு :**

பாளையங் கோட்டை சித்த மருத்துவ மனையிலே பட்டப் பின்படிப்புத்துறையில் இம் மருந்தை ஆய்வு செய்து, இருதய உரமாக்கி (Cardiac Tonic) ஆகச் செயலாற்றுவதென அறிந்து உறுதிப்படுத்தியுள்ளனர். இப்பற்பத்தைப் பொருத்தமான துணை மருந்துகளுடன் சேர்த்து உபயோகிக்கலாம்.

## சீலைமண் செய்தல்

மேற்குறிப்பிட்ட செந்தூர பற்பங்களில் சில செய்முறைகளிற் சீலைமண் செய்து புடம் போடுமாறு கூறப்பட்டிருப்பதை முன்பு அவதானித்தோம்,

புடம்போடும் சட்டியைத் (அகல்) தேர்ந்தெடுக்கையில் இரு சட்டிகளும் பொருத்தமானதாய் இருத்தல் வேண்டும். அதாவது சட்டிகளின் அகன்ற வாய் ஒன்றோடு ஒன்று இறுக்கமாய்ப் பொருந்தக் கூடியதாக அமைதல் வேண்டும். மருந்துகளின் தொகையைப் பொறுத்து, சட்டிகளின் அளவு குறைந்து அல்லது கூடிக் காணப்படலாம்.

புடம்போடவேண்டிய வில்லைகளை ஒரு சட்டியினுள் ஒன்றுடன் ஒன்று முட்டாதவாறு அடுக்கவும். பின்பு மற்றைய சட்டியால் இறுக்கமாக மூடவும்.

ஒரு சீலையை எடுத்து நாடாவைப் போல் அளவாகக் கிழிக்கவும். கிழிக்கும் சீலைத்துண்டு சட்டியின் வாயைச் சுற்றி மூடக் கூடிய நீளமாகவும், வாயிலிருந்து மேல் கீழாக அரை அல்லது ஒரு அங்குலம் அகலமாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு ஏழு துணிகளைக் கிழித்து எடுக்கவும். இத்துணிகளை ஒவ்வொன்றாக

நீரில் நனைத்து ஒரு பலகையில் விரித்து வைத்து, அரைத்த புற்று மண்ணை அதன்மேல் ஒருபடையாகப் பூசவும். பின்பு அதனை எடுத்து மேற்கூறிய மருந்துச் சட்டியினதும், மூடிச் சட்டியினதும் பொருந்திய வாய்க்கு மண் பூசிய பக்கம் வெளிப் பக்கமாக மேலும் கீழும் சமமாக விட்டு ஒட்டி விடவும். இதே போல் மற்றைய சீலைத் துண்டுகளையும் புற்றுமண் பூசி சட்டி யின் வாயை மூடி ஒட்டவும். ஆனால், முதலாவது சீலையைத் தவிர மற்றைய அனைத்தும் புற்று மண் பூசிய பக்கம் உள்பக்க மாக விட்டு ஒட்ட வேண்டும். அத்துடன் ஒட்டும் சீலையின் அந்தலைகள் ஒரே இடத்தில் விடாமல் மாறிமாறி மறையக் கூடியதாக ஒட்டி உலர வைக்கவும். இதனையே அகலுக்குச் சீலைமண் செய்தல் என்பர்.

மேற்கூறியவாறு காசிக்குப்பிக்கு அல்லது போத்தலுக்குச் சீலைமண் செய்யும் முறையும் உண்டு. ஆனால் அகலுக்குச் சீலைமண் செய்வதுபோல் அல்லாமல், முதல் சீலையைப் புற்று மண் பூசிய பக்கத்தையே உட்பக்கமாக விட்டு ஒட்டவும். இவ்வாறு ஏழு சீலையையும் மண் பூசி ஒட்டி உலரவைக்கவும். இம்முறை வாலுகா யந்திரத்தில் உபயோகப் படுத்தப்படுகின்றது.

வாலுகா யந்திரம் என்பதை குப்பியிலடைத்து மணலில் புதைத்து எரித்தெடுத்தல் எனக் கூறலாம். இதனில் வாலுகம் என்பது மணலைக் குறிக்கும். சரக்குகளைத் தூய்மைசெய்து தனித்தனியாக அல்லது சாறுகள் கலந்து அரைத்துப் பொடிசெய் யவும். பின்னர் மேற்குறிப்பிட்டவாறு குப்பிக்கி ஏழு சீலைமண் செய்து உலர்த்தவும். பின்பு மேற்படி பொடித்த மருந்தைக் குப்பியினுள் போடவும். பிறகு வாய் அகன்ற ஒரு கலத்தில் (குண்டானில்) மணலை நிரப்பி அதனுள் குப்பியின் கழுத்துப் பகுதிக்கு கீழ் மணலினுள் மறையக் கூடியதாக மேற்படி மருந் தைக் கொண்ட குப்பியை வைக்கவும். பின் அதனை அடுப்பேற்றி, இடையில் விடாமல் குறிக்கப்பட்ட கால அளவுக்குத் தொடர்ந்து எரிக்கவேண்டும்.

எரிக்கும் அக்கினியை தீபாக்கினி, கமலாக்கினி, கதலியாக்கினி, காடாக்கினி என வகுத்துள்ளனர். அந்தந்த மருந்துகளின் செய்முறையில் கூறப்பட்டதற்கு அமைய அக்கினி முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

புடம் போடுவது பற்றிய வறாட்டிகளின் எண்ணிக்கை விபரம் இந்நூலின் பிற் பகுதியில் விபரமாகத் தரப்பட்டுள்ளது.



# கறுப்பு

கறுப்பு நிறத்தை அடையும்படி தயாரிக்கப்படுகின்ற மிக நுண்ணிய துகள் மருந்துகள் சிலவற்றுக்குக் கறுப்பு என்றுபெயர்.

குறிப்பிட்ட மருந்துகளுக்கேற்பச் சரக்குகளைப் புடம்போட்டு அல்லது எரித்து அல்லது பல சரக்குகளைக் கலந்து, கறுப்பு நிறம் ஆகும் வரை நன்றாக அரைத்துப் பொடியாக்கிக் கறுப்பு தயாரிக்கப்படுகின்றது.

இது மிக நுண்ணிய ( Micro Fine ) துகள்களாக இருக்க வேண்டும்.

**ஆயுட் காலம் –**

ஓராண்டு வன்மையுடையன.

**பாதுகாக்கும் முறை –**

கண்ணாடி மூடியுள்ள போத்தல்களிற் காற்றுப் புகாதபடி வைத்திருக்க வேண்டும்.

## கறுப்பு வகைகள்

1. கஸ்தூரிக் கறுப்பு
2. தாளகக் கறுப்பு
3. சிவனார் அமிர்தம்

## பொதுவான துணை மருந்துகள்

| | | |
|---|---|---|
| 1. | கஸ்தூரிக் கறுப்பு | — தாளிசசாதி / தாளிச பத்திரிச் சூரணம் |
| 2. | தாளகக் கறுப்பு | — பவழபற்பம், தாளிச பத்திரிச் சூரணம் |
| 3. | சிவனார் அமிர்தம் | — சிவகரந்தைச் சூரணம், திலவாகைச் சூரணம். |

## 1. கஸ்தூரிக் கறுப்பு

*(சித்த வைத்தியத் திரட்டு)*

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | பச்சைக் கற்பூரம் | — | 10 | பங்கு |
| 02. | குங்குமப் பூ | — | 10 | ,, |
| 03. | கோரோசனை | — | 10 | ,, |
| 04. | கஸ்தூரி | — | 02 | ,, |
| 05. | இலிங்கம் | — | 10 | ,, |
| 06. | பூரம் | — | 10 | ,, |
| 07. | கந்தகம் | — | 10 | ,, |
| 08. | இரச செந்தூரம் | — | 10 | ,, |
| 09. | தாளகம் | — | 10 | ,, |
| 10 | மனோசிலை | — | 10 | ,, |
| 11. | இரசம் | — | 10 | ,, |
| 12. | திற்பலி | — | 15 | ,, |
| 13. | ஓமம் | — | 15 | ,, |

**செய் முறை –**

மேற்குறிப்பிட்டவற்றுள் தூய்மை செய்ய வேண்டியவற்றை முதலில் தூய்மை செய்யவும். பிறகு திற்பலி, ஓமம் ஆகிய இரண்டையும் பொன்வறுவலாக வறுத்து, இடித்து வஸ்திரகாயம் செய்து வைக்க. பின்னர் கந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து இரசத்தையும் சிறிது சிறிதாகச் சேர்த்துக் கருநிறம் வரும்வரை (கஜலி) நன்கு அரைத்துக் கொள்க. மேலும் 05 முதல் 11வரையு முள்ளசரக்குகளை முறைப்படி கல்வத்திலிட்டு அரைத்து மேற் குறிப்பிட்ட சூரணத்தையும் அதனுடன் ஒன்றுசேர்த்து நன்கு அரைக்கவும். ஈற்றில் கோரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம் ஆகியவற்றை முறையே ஒவ்வொன்றாகச் சேர்த்து நன்கு அரைத்து காற்றுப்புகாத போத்தலில் அடைத்து வைக்கவும்.

**அளவு –**

*60 — 130* மி. கிராம்

தினம் — இருவேளை. (தேவையேற்படும் போது)

**அனுபானம் –**

தேன் / தாய்ப் பால் / இஞ்சிச்சாறு



**துணை மருந்து –**

தாளிசாதி / தாளிச பத்திரிச் சூரணம்.

**தீரும் நோய்கள் –**

சளி, சுரம், இருமல், இரைப்பு ஆகியவை தீரும்.

இதனை ஈளை நோயில் (இரைப்பு) ஏற்படுகின்ற இளுப்புக்கு (Asthmatic Breathing) வேண்டிய துணை மருந்துடன் உபயோகிக்கச் சிறந்த பலனைக் கொடுக்கும். உடல் குளிர்ந்தால் ['சில்' (Chill) விட்டால்] இம்மருந்தைக் கொடுக்க, வெப்பமுண்டாகி உற்சாகம் (Stimulant) ஏற்பட்டுச் சுகம் காணப்படும்.

**குறிப்பு :**

இம் மருந்து பாளையங் கோட்டை சித்த மருத்துவ மனையில் உள்ளக நோயாளிகளுக்குத் துணை மருந்துகளுடன் சேர்த்துக் கொடுக்கப்படுவதைக் காணக்கூடியதாய் இருக்கிறது.

## 2, தாளகக் கறுப்பு

*(குணபாடம் இரண்டாம் பாகம்)*

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | தாளகம் (சுத்தித்தது) | — | 1 | பங்கு |
| 2. | நத்தையின் சதை | — | 4 | ,, |

**செய் முறை –**

தாளகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து அரைக்கவும். பின்னர் நத்தையின் சதையைச் சிறிது சிறிதாகச் சேர்த்து நன்கு அரைத்து, வில்லை தட்டி உலரவைக்கவும். உலர்ந்த பின், அகலில் வைத்துச் சீலைமண் செய்து இலகு புடம் (5 வறாட்டி) போடவும். பின்பு அதனை எடுத்துப் பார்க்கையில், கறுப்பு நிறமாகத் தோன்றும். அதனை எடுத்துப் பொடித்துப் பத்திரப் படுத்தவும்.

**அளவு –**

*65 — 130* மி. கிராம்

தினம் — இரு வேளை (தேவையேற்படின்)

அனுபானம் –

தேன் / நெய் / வேண்டியவை

துணை மருந்து -

தாளிசாதி / தாளிச பத்திரிச் சூரணம்

தீரும் நோய்கள் –

காசம், இரைப்பிருமல், ஈளை, சுரம் ஆகியவை நீங்கும்.

குறிப்பு :

மேற்குறிப்பிட்ட கஸ்தூரிக் கறுப்பு மருந்துக்குப் பதிலாக இதனை உபயோகிக்கலாம். கஸ்தூரிக் கறுப்புக்குக் கூறப்பட்டுள்ள நோய் நிலைமைகளில் இதனை உபயோகித்தல் நன்று.

## 3. சிவனார் அமிர்தம்

*(சித்த வைத்தியத் திரட்டு)*

| | | | |
|---|---|---|---|
| 1. | இருவி | — 1 | பங்கு |
| 2. | இரசம் | — 1 | ,, |
| 3. | கருநாபி | — 1 | ,, |
| 4. | கந்தகம் | — 1 | ,, |
| 5. | சுக்கு | — 1 | ,, |
| 6. | மனோசிலை | — 1 | ,, |
| 7. | பொரித்த வெங்காரம் | — 1 | ,, |
| 8. | திற்பலி | — 1 | ,, |
| 9. | மிளகு | — 8 | ,, |

செய் முறை –

மேற்குறிப்பிட்டவற்றுள் தூய்மை செய்ய வேண்டியவற்றைத் தூய்மை செய்யவும். முதலில் இருவி, கருநாபி, சுக்கு, திற்பலி, மிளகு ஆகியவற்றை ஒன்று சேர்த்துப் பொடித்துச் சூரணமாக வைக்கவும். பின்னர் கந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து இரசத்தைச் சிறிது சிறிதாகச் சேர்த்து அரைத்து மேற்குறிப்பிட்ட மனோசிலை, வெங்காரம் ஆகியவற்றையும் ஒன்று சேர்த்து அரைக்கவும். ஈற்றில் பொடித்து வைத்த சூரணத்தையும் நன்கு கலந்து கறுப்பு நிறமடையும் வரையும் நன்றாக அரைத்து எடுக்கவும்.



அளவு –

100 — 200 மி. கிராம்

தினம் — இருவேளை.

அனுபானம் –

தேன் / இஞ்சிச்சாறு / தாய்ப்பால்.

(இவற்றை ஒன்றாகச் சேர்த்தும் அனுபானமாக உபயோகிக்கலாம்).

தீரும் நோய்கள் –

ஐந்துவகை இரைப்பிருமல், குன்மம், சன்னி, எருவாய் மூளை, ஒவ்வாமையால் ஏற்படும் சுவாசாசய நோய்கள் ஆகிய அனைத்தும் தீரும்.

ஒவ்வாமைகளுக்கு ( Allergic conditions ) தகுந்த துணை மருந்துடன் உபயோகிக்கலாம். உதாரணமாக இதனை நிலவாகைச் சூரணத்துடன் சேர்த்துக் கொடுக்கலாம்.

பத்தியம் –

உப்பு, புளி நீக்கவும்.

## மாத்திரைக் கட்டு பற்றிய சிறு விளக்கம்

எளிதில் நொருங்கிச் சிதறக்கூடிய பாடாணங்களையும், நெருப்புக்குப் புகையும் பொருட்களையும் புகையாது உருகுநிலைக்குக் கொண்டு வந்து அவற்றைக் கட்டுப்படுத்துவதே கட்டு எனலாம். இதனை மாத்திரைக்கல் அல்லது மாத்திரைக் கட்டு எனவும் மருத்துவ இலக்கியங்கள் கூறுகின்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள பரம்பரை வைத்தியர்கள் இதனை மாத்திரைக் கட்டு என்று கூறுவதுடன், மனிதனின் இறுதிக் கட்டடமான மரணப்படுக்கையில் இருக்கும் போது இதனை உபயோகித்தும் வருகின்றனர்.

இது சித்த மருத்துவர்களுக்கு ஒரு சிறப்பு அம்சமாக விளங்குகின்றது. இம்மருந்து நூறு ஆண்டு வன்மையுடையதாக இருப்பதால் ஒருமுறை இதனை முறையாகத் தயாரித்து வைத்தால் இதனை வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தலாம்.

சித்தர்கள் பெரும்பாலும் பாடாணங்களையே கட்டுக்களாக்கிப் பயன்படுத்தி வந்தனர். நடைமுறையில் அனுபவம் உள்ள வைத்தியர்கள் "வாதக் கட்டு" என்றும் "வைத்தியக் கட்டு" என்றும் இரு வகையாகக் குறிப்பிடுகின்றனர். வாதக்கட்டு என்பது வாத வேதியியல் முறைக்கு பயன்படுத்துவது என்றும், வைத்தியக் கட்டு நோய் நீக்கத்துக்கு பயன்படுவது எனவும் கொள்ளலாம்.

# புற மருந்துகள் / வெளி மருந்துகள்
## ( EXTERNAL MEDICINES )

நோய்களின் தன்மைக்கு ஏற்ப மேற்பூச்சாக / பற்றாக / தூவு பொடியாக / கழுவு திரவமாக புற உபயோகத்துக்கெனப் பயன்படும் மருந்து வகைகளுக்குப் புறமருந்துகள் அல்லது வெளி மருந்துகள் என்று பெயர்.

புண், படை, சொறி, சிரங்கு, வீக்கம், வெடிப்பு, அழற்சி மற்றும் தோலைப்பற்றிய பிணிகளுக்கு வெளிப் பூச்சாகவோ, பற்றாகவோ பயன்படுத்தும் மருந்துகளும் புறமருந்துகளே.

இத்தகைய மருந்துகளை வெண்ணெய், பற்று, பசை, மெழுகு, பொடி, கழுவுநீர், களிம்பு, சேர்வை, லேபம், பூச்சு மருந்து என்ற பெயர்களில் இங்கு தரப்பட்டுள்ளன. சில இலகு முறைகளும் இதனில் சேர்க்கப் பட்டுள்ளன.

இங்கு கூறப்படும் புறமருந்துகளிற் சில உட்பிரயோகமாகவும் பயன்படுத்தலாம். அவற்றை மருந்துகள் பற்றிய விபரத்தின் இறுதிப்பாகத்திலுள்ள குறிப்புக்களில் தரப்பட்டுள்ளன. அவ்வாறு உள் எடுக்கும் மருந்துகளுக்குச் சேர்க்கப்படும் சரக்குகளை தூய்மை செய்யவேண்டியது முக்கியமாகும். எச் சந்தர்ப்பத்திலும் உள் எடுக்கும் மருந்துகளிற் சேரும் சரக்குகளைத் தூய்மை செய்யாமல் உபயோகிக்கக் கூடாது.

**ஆயுட் காலம் -**

ஒவ்வொரு மருந்தினது தயாரிப்பு முறைகளையும் அதில் சேரும் சரக்குகளையும் பொறுத்து அதனுடைய ஆயுட்காலம் அமையும்.

**பாதுகாப்பு –**

மருத்துவ மனைகளில் புறமருந்துகளை வைத்துப் பாதுகாப்பதற்கு உள் எடுக்கும் மருந்துகளோடு சேர்த்து வைக்காமல் தனியாக ஒருமேசை / ஏந்தானம் அல்லது இறாக்கை (Rack) யில் வைக்கவேண்டும். அத்துடன் புறமருந்துகளை வைத்திருக்கும் போத்தல்களில் நஞ்சுத்தன்மையுடையதற்கான அடையாளத்தையும் சுட்டுத்துண்டு (Label) மூலம் இலகுவில் பார்க்கக்கூடியதாகவும் தெளிவாகவும் எழுதி வைக்கவும். இவ்விடயத்தில் வைத்தியர்களும், மருந்தாளர்களும் கவனம் செலுத்துதல் நன்று. இவ்வாறான முறையைக் கடைப்பிடித்து வந்தால், தவறுதலாகக் கையாண்டு உட்கொள்ளும் சந்தர்ப்பங்களைத் தவிர்க்கலாம்.



# புற மருந்து வகைகள்

01. அமிர்த வெண்ணெய்
02. காவிக்கல் பற்று
03. கார்போகிப் பசை
04. கால் கடுவன் பற்று
05. கிளிஞ்சல் மெழுகு
06. குங்கிலிய வெண்ணெய்
07. குப்பிளா இலைப் பசை
08. சிரங்குக் களிம்பு
09. படிகப் பன்னீர்
10. பச்சை எருவை
11. பசளிப் பற்று
12. பச்சைச் சேர்வை
13. படை சங்காரன்
14. பற்பொடி (Araben)
15. பூண்டுத் தேன்
16. முருங்காதி லேபம்
17. மூசாம்பரப் பற்று
18. வங்க விரணக் களிம்பு
19. வங்க வெண்ணெய்
20. வெங்கார மது
21. வெள்ளுள்ளிப் பற்று
22. வெள்ளை மெழுகு
23. வெங்காரப் பொடி.

## 1. அமிர்த வெண்ணெய்

*(அகத்தியர் வைத்திய காவியம் — 1500)*

| | | | |
|---|---|---|---|
| 1. | சவ்வீரம் | — | 5 கிராம் |
| 2. | பசு வெண்ணெய் | — | 350 ,, |

**செய் முறை –**

சவ்வீரத்தைக் கல்வத்திலிட்டுப் பட்டுப்போல் நன்கு அரைக்கவும். பின்பு பசுவெண்ணெய்யைச் சிறிது சிறிதாகக் கலந்து ஆறு மணி நேரம் நன்றாக அரைத்து எடுக்கவும். பின்னர் அதனை ஏழு முறை நீரில் பிசைந்து கழுவி எடுக்கவும்.

**உபயோகம் –**

வெளிப்பிரயோகம் மட்டும் (மேற் பூச்சு).

**தீரும் நோய்கள் –**

விரணம், பிளவை, மூலவேக்காடு, புண் ஆகியன தீரும். இதனைச் சீலையில் தடவிப் புரையோடிய புண்களுக்கும் போடலாம்.

**குறிப்பு :**

இதற்குச் சவ்வீரக் குழம்பு என்ற் பெயரும் உண்டு.

## 2, காவிக்கல் பற்று

*(பாளையங் கோட்டை சித்த மருத்துவ மனை முறை).*

| | | | |
|---|---|---|---|
| 1. | காவிக்கல் | — | ஒரு பங்கு |
| 2. | புற்று மண் | — | ,, |
| 3. | சுக்குப் பொடி | — | ,, |
| 4. | காந்தக்கல் பொடி | — | ,, |
| 5. | கொன்ளு | — | ,, |

**செய் முறை –**

மேற்படி சரக்குகளை நீர்விட்டு அரைத்துப் பற்றாக எடுத்துக் கொள்ளவும்.



**உபயோகம் –**

பூச்சாக பூசிவிடவும்.

**தீரும் நோய்கள் –**

வீக்கம், நெறி (Lymph Nodes) வீக்கங்கள் ஆகியவை தீரும்.

**குறிப்பு :**

பாளையங்கோட்டை சித்த மருத்துவ மனையில் உள்ளக நோயாளர் பிரிவில் இம் மருந்தை யானைக்கால் (Elephantiasis) நோயாளிகளுக்கு உபயோகிக்கின்றனர்.

## 3. கார்போகிப் பசை

*(பாளையங் கோட்டை சித்த மருத்துவ மனை முறை)*

| | | | |
|---|---|---|---|
| 1. | கார்போக அரிசி | — | ஒரு பங்கு |
| 2. | கருஞ்சீரகம் | — | ,, |
| 3. | காட்டுச் சீரகம் | — | ,, |
| 4. | கொப்பறாத் தேங்காய் | — | ,, |
| 5. | கசகசா | — | ,, |
| 6. | நீரடிமுத்துப் பருப்பு | — | ,, |
| 7. | கந்தகம் | — | ,, |

**செய் முறை –**

கொப்பறாத் தேங்காய், நீரடிமுத்துப் பருப்பு, கந்தகம் என்பன நீங்கலாக மற்றைய சரக்குகளை முதலில் உரலிலிட்டு இடித்துப் பொடிக்கவும். பின்பு கந்தகத்தை கல்வத்திலிட்டுப் பொடிக்கவும். அடுத்ததாக மேற்படி பொடித்த சூரணத்தையும், கொப்பறாத் தேங்காய், நீரடிமுத்துப் பருப்பையும் ஒன்றுசேர்த்து நன்கு அரைத்துப் பசையாக எடுக்கவும்.

**உபயோகம் –**

மோர் அல்லது பழச்சாறு விட்டு அரைத்துப் பூசி விடவும்.

**தீரும் நோய்கள் –**

படை, வெண்குட்டம், பட்ர் தாமரை என்பன குணமடையும்.

## 4. கால் கடுவன் பற்று

(பாளையங் கோட்டை சித்த மருத்துவ மனை முறை)

1. இரச செந்தூரம் — 20 கிராம்
2. பசுவெண்ணெய் — 200 ,,
3. பிரமதண்டு சுட்ட சாம்பல் — 250 ,,

**செய் முறை —**

இரச செந்தூரத்தைச் சிறிதளவு வெண்ணெய் கலந்து ஒரு மணிநேரம் நன்கு அரைத்து, பின் மீதி வெண்ணெய்யையும் ஒன்று சேர்த்து மேலும் இருமணிநேரம் அரைக்கவும். பின்பு பிரமதண்டுச் சாம்பலையும் சேர்த்து ஒருமணிநேரம் அரைத்து வைக்கவும்.

**உபயோகம் -**

பூசி விடுதல்.

**தீரும் நோய்கள் —**

கால் கடுவன், பிளவை, சேற்றுப்புண் ஆகியன தீரும்.

## 5. கிளிஞ்சல் மெழுகு

(சித்த வைத்தியத் திரட்டு)

1. கிளிஞ்சல் — 1 கி. கிராம்
2. நெல்லிக்காய் — 500 கிராம்
3. சிற்றாமணக் கெண்ணெய் — தேவையானளவு

**செய் முறை —**

கிளிஞ்சலைச் சுத்தம் செய்து எரித்தபின் பச்சை நெல்லிக்காய்ச் சாற்றில் அல்லது நெல்லிவற்றல் குடிநீரில் ஊறவைக்கவும். இவ்வாறு ஐந்துமுறை செய்து உலர்த்தவும். பின் அதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து வேண்டிய அளவு சிற்றாமணக் கெண்ணெய்யைச் சிறுகச் சிறுகச் சேர்த்துக் களிம்புப் பதத்தில் அரைத்து எடுக்கவும்.

**உபயோகம் —**

பூசிவிடவும்.

இலுப்பெண்ணெய் அல்லது ஆமணக்கெண்ணெய்யுடன் கலந்து போடவும்.



**தீரும் நோய்கள் —**

காலிலுண்டாகும் பித்தவெடிப்பு நீங்கும்

**குறிப்பு :**

கிளிஞ்சல் என்பது சிறிய சிப்பி வகையைக் குறிக்கும்

## 6. குங்கிலிய வெண்ணெய்

(சித்த வைத்தியத் திரட்டு)

1. வெள்ளைக் குங்கிலியம் — 35 கிராம்
2. நல்லெண்ணெய் — 70 ,,

**செய் முறை —**

குங்கிலியத்தை நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சும்போது குங்கிலியம் உருகி எண்ணெயில் கலந்துவிடும், உடனே அக்கலவையை நீர் நிரம்பிய பாத்திரத்தில் கொட்டி மத்தினால் கடைய, வெண்ணெய் போல குங்கிலியம் தண்ணீரில் மிதக்கும் இவ் வெண்ணெயை எடுத்து நீர்நிரம்பிய வாய்அகன்ற சாடியில் போட்டு வைக்கவும். நாள்தோறும் நீரைப் புதிதாக மாற்றவேண்டும்.

**உபயோகம் —**

வெளிப்பிரயோகம். இம்மருந்தை உட்பிரயோகமாகவும் உபயோகிக்கலாம்.

**அளவு —**

3 — 6 கிராம்.
தினம் — இரு வேளை.
ஏலரிசிப் பொடியுடன் உண்ணவும்.

**தீரும் நோய்கள் —**

மேக விரணம், வெளிமூலம், மூல எரிவு, இரத்தமூலம், மேக வெள்ளை, நீர்க்கடுப்பு, உட்காங்கை, உடல் முழுவதும் ஏற்படுகின்ற எரிவு ஆகியன நீங்கும்.

## 7. குப்பிளா இலைப் பசை

*(ஏட்டு முறை)*

| | | | |
|---|---|---|---|
| 1. | வேப்பிலை | — 1 | பங்கு |
| 2. | குப்பிளா இலை | — 3 | ,, |
| 3. | மல்லி | — 1 | ,, |
| 4. | கார்போக அரிசி | — 1 | ,, |
| 5. | சன்னி நாயகம் | — 1 | ,, |

**செய் முறை -**

வேப்பிலையைப் பொது விதிப்படி கசாயம் செய்யவும். பின்னர் மேற்குறிப்பிட்ட மற்றைய சரக்குகளை முறைப்படி கல்வத்திலிட்டு மேற்படி வேப்பிலைக் கசாயத்தை விட்டு ஒன்று சேர்த்து அரைத்துப் பசையாக எடுத்துக் கொள்ளவும்.

**உபயோகம் –**

வெளிப் பூச்சாக உபயோகிக்கவும்.

**தீரும் நோய்கள் –**

தோல் பிணிகள் தீரும். குறிப்பாக நீர், சீழ் ததும்பி வடியும் நிலையிலுள்ள சரும நோய்க்குச் (Weeping Eczema) சிறந்தது.

## 8. சிரங்குக் களிம்பு

*(பாளையங் கோட்டை சித்த மருத்துவமனை முறை)*

| | | | |
|---|---|---|---|
| 1. | இரச செந்தூரம் | — 40 | கிராம் |
| 2. | மிருதார்சிங்கி | — 40 | ,, |
| 3. | கந்தகம் | — 40 | ,, |
| 4. | தேன் மெழுகு | — 2 | கி. கிராம் |
| 5. | நீரடிமுத்து எண்ணெய் | — 1.800 | ,, |
| 6. | வேப்பெண்ணெய் | — 1.800 | ,, |

**செய் முறை –**

பொடிக்க வேண்டிய சரக்குகளைப் பொடித்து மற்றைய சரக்குகளுடன் கலந்து அரைத்து களிம்பாக எடுத்துக் கொள்ளவும்.



**உபயோகம் –**

வெளிப்பூச்சு

**தீரும் நோய்கள் –**

சிரங்கு (Scabies) நோயில் ஏற்படுகின்ற அரிப்பு, புண் ஆகியவை தீரும்.

## 9. படிகப் பன்னீர்

*(பாளையங் கோட்டை சித்த மருத்துவ மனை முறை)*

| | | | |
|---|---|---|---|
| 1. | படிகாரம் (சுத்தித்தது) | — 100 | கிராம் |
| 2. | பன்னீர் | — 4.400 | லீற்றர் |

**செய் முறை –**

படிகாரத்தைப் கல்வத்திலிட்டு நன்கு அரைத்துப் பொடியாக்கி பன்னீரில் கலந்து சீலையில் அல்லது (Filter Paper) இல் வடிகட்டி எடுத்துக் கொள்ளவும்.

**அளவு –**

2 — 3 துளி கண்களில் விடவும்.

**தீரும் நோய் –**

கண்வீக்கம், கண்சிவப்பு, கண்வலி ஆகியவை தீரும்.

**குறிப்பு :**

படிகாரம் 35 கிராமுக்கு 11.2 லீற்றர் தண்ணீர் கலந்து வாய் கொப்பளிக்கவும், புண்களைக் கழுவவும் மூக்கில் இரத்தம் பெருகுகையில் நசியமிடவும் உபயோகிக்கலாம்.

## 10. பச்சை எருவை

*(பாளையம் கோட்டை சித்த மருத்துவமனை முறை)*

| | | | |
|---|---|---|---|
| 1. | வெள்ளைப் பாடாணம் | — 10 | கிராம் |
| 2. | தாளகம் | — 10 | ,, |
| 3. | கற்சுண்ணாம்பு | — 20 | ,, |
| 4. | வெள்ளைக் குங்கிலியம் | — 40 | ,, |
| 5. | துருசு | — 40 | ,, |
| 6. | நல்லெண்ணெய் | — 300 | மி. லீ. |

**செய் முறை —**

மேற்குறிப்பிட்டுள்ள கற்சரக்குகளை முறைப்படி கல்வத்திலிட்டுப் பொடித்து நல்லெண்ணெய் சேர்த்து பசையாக அரைத்து எடுக்க.

**தீரும் நோய் —**

துர்மாமிச வளர்ச்சி, பாலுண்ணி ஆகியவற்றுக்குப் பூசிவிடக் குணமடையும்.

## 11. பசளிப் பற்று

(*ஏட்டு முறை*)

1. சிறுபசளி இலை — 100 கிராம்
2. பச்சை மஞ்சள் — 25 ,,
3. தேங்காய்ப் பால் — தேவையானளவு

**செய் முறை —**

மேற்கூறிய மூன்றையும் ஒன்றுசேர்த்துக் கல்வத்திலிட்டுப் பசையாக அரைத்து எடுக்கவும்.

**உபயோகம் —**

பற்றுப் போல் போட்டுவிடுதல்.

**தீரும் நோய்கள் —**

சர்மரோகம், அக்கி ஆகியன தீரும்.

**குறிப்பு :**

தோல் பிணியில் நீர் ததும்பிச் சீழ்பிடித்து வடிந்து கொண்டிருந்தால், இப்பற்றைப் போட்டு, நீரை வெளியாக்கிய பின் தைலங்களை உபயோகிக்கலாம். இதேபோல் அக்கியிலும் இதனைக் காவிக் கல்லுடன் சேர்த்து உபயோகிக்கலாம். இப்பற்று நீரை உறிஞ்சி எடுப்பதில் விசேடமானது.

## 12. பச்சைச் சேர்வை

(*ஏட்டு முறை*)

1. துருசு — 10 கிராம்
2. இரசம் — 5 ,,



3. துத்தம் — 10 கிராம்
4. குங்கிலியம் — 10 ,,
5. முள்முருக்க மிலைச் சாறு — தேவையானளவு
6. ஊமத்தம் இலைச் சாறு — ,,
7. தேன் மெழுகு — 250 கிராம்

**செய் முறை —**

இரசத்தையும துருசையும் கல்வத்திலிட்டு முள்முருக்கமிலைச் சாறுவிட்டு நன்கு அரைக்குக.

பின் துத்தத்தையும், குங்கிலியத்தையும் சேர்த்து ஊமத்தமிலைச் சாறு விட்டரைத்து முன்குறிப்பிட்ட எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து அரைக்கவும். ஈற்றில் தேன் மெழுகைச் சேர்த்து அரைத்து சேர்வையாக வைக்குக.

**உபயோகம் —**

வெளிப்பிரயோகம் மட்டும்.

**தீரும் நோய்கள் —**

புண், சிரங்குப் புண், புரையோடிய புண், ஆகியவை தீரும்.

**குறிப்பு :**

தேன் மெழுகுக்குப் பதிலாக வசிலின் (Vascline) சேர்த்து அரைக்கலாம்.

## 13. படை சங்காரன்

(*சித்த வைத்தியத் திரட்டு*)

1. அழிஞ்சில் வேர்ப் பட்டை — 1 பங்கு
2. மருக்காரை வேர்ப் பட்டை — 1 ,,
3. மருக்காரை வித்து — 1 ,,
4. தேசிப் பழச்சாறு — தேவையானளவு

**செய் முறை —**

முதல் கூறப்பட்ட மூன்று சரக்குகளையும் பொடி செய்து கல்வத்திலிட்டுப் தேசிப்பழச்சாறு விட்டு மெழுகு போல் நன்கு அரைக்கவும்.

**உபயோகம் —**

மேற் பூச்சாகவும், உள்ளுக்கும் கொடுக்கலாம்.

அளவு —

½ — 1 கிராம் தினம் இரு வேளை.

தீரும் நோய்கள் —

படர்தாமரை, படைகள் என்பன உதிர்ந்து விடும்.

## 14. பற்பொடி (Araben Tooth Powder)

*(யாழ். மாநகரசபை முறை)*

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆலம் பட்டை | — 300 | கிராம் |
| 2. | வேலம் பட்டை | — 300 | ,, |
| 3. | காசுக்கட்டி | — 200 | ,, |
| 4. | கடுக்காய்ப் பிஞ்சு | — 200 | ,, |
| 5. | மாயாக்காய் | — 100 | ,, |
| 6. | கராம்பு | — 50 | ,, |
| 7. | பாக்குச் சுட்ட சாம்பல் | — 100 | ,, |

செய் முறை —

பொடிக்க வேண்டியனவற்றைப் பொடித்துக் கல்வத்திலிட்டு நன்கு சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

உபயோகம் —

பல்துலக்குவதற்கு உபயோகமாகிறது.

தீரும் நோய்கள் —

பல் நோய்கள்,முரசு கரைதல், வாய் நாற்றம், பல்லீறு கரைந்து இரத்தம் வருதல், பல்லரணை, பற்கூச்சம் ஆகியன தீரும்.

## 15. பூண்டுத் தேன்

*(பாளையம் கோட்டை சித்த மருத்துவ மனை முறை)*

| | | |
|---|---|---|
| 1. | வெள்ளைப் பூடுச் சாறு | — 1 கி. கிராம் |
| 2. | தேன் | — 435 கிராம் |



செய் முறை :

உரித்த வெள்ளைப் பூடைக் கல்வத்திலிட்டு அரைத்து வெண்ணெய் போல் எடுத்து வெள்ளைத் துணியிற் பூசி நெருப்பு அனலில் வாட்டிப் பிழியச் சாறுவரும். இத்துடன் தேனைச் சேர்த்து நன்கு கலக்கி வைக்கவும்.

உபயோகம் —

தொண்டையின் உட்பகுதியில் தடவி விடவேண்டும்.

தீரும் நோய்கள் —

தொண்டைத் தாபிதம், லசன் தாபிதம் (Tonsillitis) ஆகியன தீரும்.

## 16. முருங்காதி லேபம்

*(ஏட்டு முறை)*

| | | |
|---|---|---|
| 1. | முருங்கைப் பட்டை | — 1 பங்கு |
| 2. | மாவிலங்கம் பட்டை | — 1 ,, |
| 3. | மரமஞ்சள் | — 1 ,, |
| 4. | முருங்கைப் பட்டைச் சாறு | — தேவையானளவு |

செய் முறை —

முதல் மூன்று சரக்குகளையும் பொடித்து முருங்கைப்பட்டைச் சாறுவிட்டு நன்கு அரைத்து லேபமாக எடுத்துக்கொள்ளவும்.

உபயோகம் —

வாத ரோகங்களுக்குப் பற்றாகப் போடவும். ஆமவாத நோய்க்கும் (Rheumatic Fever)போடலாம்.

## 17. மூசாம்பரப் பற்று

*(பாளையங் கோட்டை சித்த மருத்துவ மனை முறை)*

| | | |
|---|---|---|
| 1. | மூசாம்பரம் (கரிய போளம்) | — 1 பங்கு |
| 2. | கண்டு பறங்கி (சிறுதேக்கு) | — 1 ,, |

3. ஆளி விதை — 1 பங்கு
4. எட்டி வித்து — 1 ,,
5. குன்றிமணி — 1 ,,
6. பெருங்காயம் — 1 ,,
7. முட்டை — தேவையானளவு
8. நல்லெண்ணெய் — ,,

செய் முறை —

கடைச் சரக்குகளை நன்கு வறுத்துப் பொடித்துக் கல்வத்தி லிட்டு முட்டை வெண்கரு, நல்லெண்ணெய் என்பவற்றை விட்டு எல்லாவற்றையும் சேர்த்தரைத்து, களிக்கமானவுடன் எடுத்துக் கொள்ளவும்.

உபயோகம் —

பூசிவிடுதல்.

தீரும் நோய்கள் —

கீல் வாதம், மூட்டு வீக்கம், மூட்டுளைவு ஆகியன குண மடையும்.

## 18. வங்க விரணக் களிம்பு

(பாளையங் கோட்டை சித்த மருத்துவ மனை முறை)

1. வங்க செந்தூரம் — 400 கிராம்
2. மிருதார்சிங்கி — 400 ,,
3. இரச செந்தூரம் — 200 ,,
4. இரச கற்பூரம் — 200 ,,
5. தேன் மெழுகு — 3 கி. கிராம்
6. தேங்காய் எண்ணெய் — 7 லீற்றர்

செய் முறை —

பொடிக்க வேண்டிய சரக்குகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்து வைக்கவும். பின்னர் தேங்காயெண்ணெயை அடுப் பேற்றிக் கொதிக்க வைத்து அதனுள் சிறுதுண்டுகளாகச் சீவிய தேன் மெழுகைப் போட்டு உருகியவுடன், பாத்திரத்தைக் கீழே இறக்கி, மேற்படி பொடியைத் தூவிக் கிண்டி ஆறவிடவும்.



உபயோகம் —

வெளிப் பிரயோகம்.

தீரும் நோய்கள் —

விரணங்களுக்குப் போடலாம்.

## 19. வங்க வெண்ணெய்

(சித்த வைத்தியத் திரட்டு)
(IMPCOPS முறை — இந்தியா)

1. வங்க செந்தூரம் — 175 கிராம்
2. மிருதார்சிங்கி — 175 ,,
3. மயில் துத்தம் — 87.5 ,,
4. வெண்ணெய் — 1400 கிராம்

செய் முறை —

மேலே ஒன்று முதல் மூன்று வரையுமுள்ள சரக்குகளைத் தனித்தனியே கல்வத்திலிட்டுப் பொடித்துப் பின் ஒன்று சேர்த்து வெண்ணெய்யுடன் கலந்து நன்கு அரைத்து வைக்கவும்.

உபயோகம் —

வெளிப்பிரயோகம்.

தீரும் நோய்கள் —

விரணம், படை, புண் ஆகியன தீரும்.

## 20. வெங்கார மது

(பாளையங் கோட்டை சித்த மருத்துவ மனை முறை)

1. வெங்காரம் — 300 கிராம்
2. தேன் — 2.000 கி. கிராம்

செய் முறை —

வெங்காரத்தைப் பொரித்துக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்துப் பின்னர் அத்துடன் தேன் விட்டு மேலும் அரைத்து உருவாக்கிக் கொள்ளவும்.

உபயோகம் –

தொட்டுப் போடுதல்.

தீரும் நோய்கள் –

அக்கரம், வாயினுள் பருக்கள், கடைவாய் அவியல் ஆகியவை தீரும். லசன் (Tonsillitis) தாபிதத்துக்கும் தடவிவிடலாம்.

## 21. வெள்ளுள்ளிப் பற்று

*(ஏட்டு முறை)*

| | | | |
|---|---|---|---|
| 1. | வெள்ளுள்ளி | — 2 | பங்கு |
| 2. | வெழுத்தல் பிசின் | — 1 | ,, |
| 3. | வேற்கொம்பு | — 1 | ,, |
| 4. | கரிய போளம் | — 1 | ,, |
| 5. | பெருங்காயம் | — 1 | ,, |
| 6. | சாளியா | — 1 | ,, |
| 7. | கடுகு | — 1 | ,, |
| 8. | மஞ்சள் | — 1 | ,, |
| 9. | விளைவு கற்பூரம் | — 1 | ,, |
| 10. | வேலிப்பருத்தி இலைச்சாறு | — தேவையானளவு | |

செய் முறை -

மேற்கூறிய சரக்குகளை எடுத்துக் கல்வத்திலிட்டு வேலிப் பருத்தி இலைச்சாறு விட்டு நன்கு அரைத்துப் பற்றாக வைக்க.

உபயோகம் –

பாதிக்கப்பட்ட இடத்துக்குப் போட்டு பற்றாகக் கட்டிவிடவும்.

தீரும் நோய்கள் –

வாத நோ, குத்துளைவு, போன்றவற்றுக்கு உகந்ததாகும்.

தசைநார்த்தாபிதம் (Tendonitis) காரணமாகத் தோள்மூட்டில் ஏற்படுகின்ற குத்துளைவு, நோ ஆகியவற்றிற்குச் சிறந்தது.



## 22. வெள்ளை மெழுகு

*(IMPCOPS முறை — இந்தியா)*

| | | | |
|---|---|---|---|
| 1. | வெள்ளைப் பாடாணம் | — 35 | கிராம் |
| 2. | தேங்காய் எண்ணெய் | — 175 | ,, |
| 3. | மஞ்சள் மெழுகு | — 350 | ,, |

செய் முறை –

தேங்காயெண்ணெயைக் கொதிக்க வைத்துச் சீவிய மெழுகை அதனுள் போட்டு உருகியவுடன், நன்கு பொடித்த பாடாணத்தைத் தூவிக் கிளறிக் கொண்டிருக்கையில் அவை ஒன்று சேரும். சூடு ஆறும்வரை கிளறவும். பின்பு அது மெழுகு நிலையடைந்து கெட்டியாகும்.

உபயோகம் -

தீயில் உருக்கித் துணியில் தடவி இளஞ் சூட்டுடன் போடவும்.

தீரும் நோய்கள் –

இதனைத் தடித்த துணியில் வேண்டிய அளவு தடவி வீக்கங்கள், கட்டிகள், பிளவைகள், ஆறாத புண்கள் மீதுபோட சுகம் காணப்படும். சாதாரணமாகத் தசைகளில் ஏற்படும் வீக்கங்கள், நெறி வீக்கங்களுக்கு இது சிறந்த பலனைக் கொடுக்கும். மூலக் கட்டிகளுக்கும் போடலாம்.

## 23. வெங்காரப் பொடி

*(சித்த வைத்தியத் திரட்டு)*

1. வெங்காரம் — 100 கிராம்

செய் முறை –

வெங்காரத்தை நன்கு பொடித்து நுண்ணிய தூளாக்கி வைக்கவும்.

உபயோகம் –

தூவி விடலாம்.

தீரும் நோய்கள் –

சொறி, சிரங்கு, புண், புரை, படை முதலியன தீரும்.

# மருந்துச் சரக்குகளின் சுத்தி அல்லது நச்சுத் தன்மை நீக்கம்

## (Purification or Detoxification of Drugs)

மருந்துகளுக்குப் பயன்படுத்தும் சிற்சில தாவரப் பொருட்கள், விலங்கினப் பொருட்கள், தாது (கனி)ப் பொருட்கள் ஆகியன இயற்கையிலேயே நச்சுச் தன்மையும், நச்சுச் செய்கையும் உடையன. எனவே, இவைகளைக் கொண்டு மருந்து தயாரிப்பதற்கு முன்பே இவற்றின் நச்சுத் தன்மையை நீக்கித் தூய்மை செய்வதன் மூலம் அதன் நச்சுத் தன்மை அளவைக் குறைப்பதோடு அவற்றின் நோய் நீக்கும் திறனையும் அதிகரிக்கச் செய்தல் வேண்டும். இச் செய்கையே ''நச்சுத் தன்மை நீக்கல்'' அல்லது ''சுத்தி செய்தல்'' அல்லது ''தூய்மை செய்தல்'' எனக்கூறலாம்.

மேற்குறிப்பிட்டவை முப்பெரும் பிரிவுகளின் கீழ் அடங்கும், அவையாவன, 1. த்தாவர இனம், 2. விலங்கு இனம் 3. தாது இனம், மருந்துச் சரக்குகளைப் பொறுத்து சுத்தி முறைகளும் வேறுபடுகின்றன. இவற்றுக்குரிய சுத்தி முறைகள் பல நூல்களில் குறிப்பிட்டிருப்பினும், தற்காலத்துக் கேற்ப இலகுவானதும், யாழ்ப்பாணத்தில் அநேக மருத்துவர்களால் கையாளப்படும் முறைகளும் இங்கு தரப்பட்டுள்ளன.

மருந்துச் சரக்குகளின் சுத்தி முறைகளில் பெரும்பாலும் தோலாஇயந்திரம் பயன்படுத்தப் படுகின்றது. அதுபற்றிய விபரத்தைத் கீழே கவனிப்போம்:

## தோலா இயந்திரம் / துலா இயந்திரம்

தேவையான பொருட்கள்: i. மண் பானை ஒன்று, ii. நீர்ப் பொருள், iii. சரக்கு, iv. சீலை, v. கயிறு, vi. சட்டம், vii. தீ.

முதலிலே மண்பானை ஒன்றினுள் நீர்ப்பொருளை விட்டு வைக்கவும். பின் ஒரு சீலைத்துணியிற் சரக்கைவைத்துத் தளர்ச்சியாக முடிந்து, அதனைக் கயிற்றின் ஒருநுனியில் தொடுக்கவும். பின்னர் சீலையில் கட்டிய கிழியை (முடிச்சை) நீருள் அமிழ்ந்து இருக்க அல்லது நீருள் அமிழ்ந்து இருக்காதவண்ணம் ஆவிபடக் கூடியதாய் பானையின் வாயில் குறுக்கே வைக்கப்பட்ட சட்டத்தில் கயிற்றின் அடுத்த நுனியைக் கட்டித் தொங்க விடவும். பின்பு பானையினது வாயை மூடிச்சட்டியால் இறுக்கமாக மூடி, அடுப்பேற்றவும். பிறகு நீர்ப்பொருள் வற்றும்வரை அல்லது குறிப்பிட்ட நேரம்வரை எரிக்கவும். ஈற்றில் சுத்திசெய்த சரக்கை வெளியே எடுத்து நன்நீரில் கழுவி வைக்கவும். (உ—ம் 189ம் பக்.)



## 1. தாவர இனம்

01. அபின்
02. அமுக்கிராக் கிழங்கு
03. ஆற்றுத்தும்மட்டிக் காய்
04. இஞ்சி
05. இருவி
06. எட்டிக் கொட்டை
07. கஞ்சா
08. கடுக்காய்
09. கலப்பைக் கிழங்கு
10. கார்போக அரிசி
11. குங்கிலியம் அல்லது ருக்கில்
12. குந்திருக்கம் அல்லது நறும்பிசின்
13. கொடிவேலி வேர்
14. சாதிக்காய்
15. சிவதை வேர்
16. சுக்கு
17. சோராங் கொட்டை அல்லது சேங் கொட்டை
18. தான்றிக் காய்
19. தேற்றாங் கொட்டை
20. நாபி
21. நீரடிமுத்து
22. நெல்லிக்காய்
23. நேர்வாளம்
24. பலாசம் வித்து
25. பறங்கிக் கிழங்கு
26. பெருங்காயம்
27. வெள்ளைப் பூடு

# 1. தாவர இனம்

## 1: அபின்

(அ). *(பாரதத்தின் சித்த மருந்துகள் செய்முறை குறிப்பு நூல்)*

சுத்தி செய்ய எடுக்கும் அபினின் நிறை 510 கிராம் எனின், 2.100 லீற்றர் தீ நீர் (Distilled Water) எடுத்து அதனை மூன்று பங்காகப் பிரிக்கவும். ஒரு பங்கு நீராகிய 700 மி. லீற்றரில் அபினை நன்றாகக் கரைத்து, ஒரு நாள் முழுவதும் (24 மணிநேரம்) ஊற விடவும். பின் ஒரு சீலையில் வடிகட்டி வரும், திப்பியில் இரண்டாவது பங்கு நீரைவிட்டு நன்றாகக் கரைத்து முன்போலவே செய்யவும். பின்னர் எஞ்சி வருகின்ற திப்பியை மூன்றாவது பங்கு நீரிலும் சேர்த்து முன்போலவே செய்யவும். வடித்த நீரெல்லாவற்றையும் ஒன்றாகக் கூட்டி ஒரு பாத்திரத்தில் விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வைத்து குளிரவிட்டு எடுக்கச் சுத்தியாகும்.

(ஆ . (IMPCOPS *முறை – இந்தியா*)

அபினைப் போதுமான அளவு சுத்தமான நீரில் கரைத்துத் துணியில் வடிகட்டவும். பின் அதனுடன் சிறிது பசுப்பால் சேர்த்துக் காய்ச்சவும். கெட்டியாக வரும் தருணத்தில் எரிப்பதை நிறுத்தி, தானாகவே குளிரவைக்கவும். பின்னர் இதனை ஒரு கல்வத்திலிட்டு மூழ்கும் அளவுக்கு இஞ்சிச் சாறுவிட்டு, ஊறவைத்து திரவாம்சத்தை வற்ற வைக்கவும். இவ்விதம் ஏழு தடவை திரும்பத் திரும்ப ஊறவைத்து நன்கு உலர்ந்த பின் பத்திரப்படுத்தவும்.

## 2. அமுக்கிராய் கிழங்கு

அமுக்கிராக் கிழங்கைப் பசுப்பாலில் போட்டு அவித்து எடுத்து நீரினால் கழுவி உலரவிட்டு வைக்கவும்.

## 3. ஆற்றுத்தும்மட்டிக் காய்

ஆற்றுத்தும்மட்டிக் காயை எடுத்து வரகு வைக்கோலினால் நன்கு சுற்றவும். பின்னர் அதில் தீயை மூட்டவும். வைக்கோல் எரிந்து முடிந்தபின் காயை எடுத்துப் பார்க்கும் போது வெடித்துக் காணப்படும். அதனை எடுத்து வெளித்தோலையும்



உள் விதையையும் நீக்கிச் சதையை மட்டும் எடுத்துப் பிழிந்து சாறு எடுக்கவும். இச்சாற்றை வடிகட்டிக் கொள்ளவும். இக்காயை யாழ்ப்பாணத்தில் பேய்க்கொம்மட்டி அல்லது வரித்தும்மட்டி என அழைப்பர். இது கொடி வகுப்பைச் சேர்ந்தது.

## 4 இஞ்சி

இஞ்சியை எடுத்து மேல் தோலைச் சீவிக் கழுவிச் சுத்தமாக்கவும்.

## 5. இருவி

இதனைச் சிறு துண்டுகளாக வெட்டிப் பசுநீரில் (கோசலம்) ஊறவைத்து எடுத்து உலர்த்தவும்.

(நாபியின் சுத்தி முறையும் இது போன்றிருக்கும்)

## 6. எட்டிக் கொட்டை

(அ) (IMPCOPS *முறை – இந்தியா*)

இதனைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி ஆமணக்கம் வேர் கசாயத்தில் நன்றாகக் கொதிக்க வைத்துக் கழுவி உலர்த்தவும். பின்னர் நெய்யிற் பொரித்து எடுத்துக் கொள்ளவும்.

(ஆ). *(பாரதத்தின் சித்த மருந்துகள் செய்முறைக் குறிப்பு நூல்)*

எட்டி கொட்டையை நாவற்பட்டைச் சாற்றில் ஒரு நாழிகை (24 நிமிடங்கள்) ஊறவைத்து நன்னீரில் கழுவி எடுக்கவும்.

## 7. கஞ்சா

(IMPCOPS *முறை — இந்தியா*)

கஞ்சாவின் விதை, காம்பு ஆகியவற்றை நீக்கிச் சுத்தம்செய்து நீரில் சிறிதுநேரம் ஊறவைக்கவும். பின் பிசைந்து வடிகட்டி மறுபடியும் புதியநீரில் ஊறவைத்து முன்செய்தது போல் பிசைந்து எடுக்கவும். இவ்வாறு 7 அல்லது 10 முறை செய்து வெய்யிலில் உலர்த்திப் பசுநெய்விட்டு இளவறுப்பாய் வறுத்து எடுத்துக் கொள்ளவும்.

## 8. கடுக்காய்

கடுக்காயின் உள்ளே இருக்கும் கொட்டையை நீக்க வேண்டும்

| | | |
|---|---|---|
| கடுக்காய் | — | உள் நஞ்சு |
| சுக்கு | — | புற நஞ்சு |

கடுக்காய்க்கு உள்(கொட்டை) நஞ்சு; சுக்குக்குப் புற(தோல்) நஞ்சு என்ற கூற்றை இங்கு நினைவு கூருதல் பொருத்த மாகும்.

## 9. கலப்பைக் கிழங்கு
(IMPCOPS *முறை — இந்தியா*)

இதனைச் சிறுசிறு துண்டுகளாகவெட்டி பசுநீரில் 24மணிநேரம் ஊறவைக்கவும். பின்னர் நீரில் கழுவிஉலர்த்தியெடுக்கவும்.

## 10. கார்போக அரிசி

இதனைப் பாலில் அவித்து எடுத்து உலர்த்தச் சுத்தியாகும்.

## 11. குங்கிலியம் அல்லது குக்கில்

இதனை வெளிப்பிரயோகமாக உபயோகிக்கும் போது சுத்தி செய்யத் தேவை இல்லை. ஆனால், உட்பிரயோகத்துக்குப் பசுப்பாலிற் கழுவி எடுத்தோ அல்லது சீலையில் மூடிந்து ஆறுமணி நேரம இளநீரில் அவித்து (தோலா இயந்திரம்) எடுத்தோ உபயோகிக்கலாம்.

## 12. குந்திருக்கம் அல்லது நறும்பிசின்

இவற்றிலுள்ள தூசுகள், மரப்பட்டைகளைப் புடைத்துச் சுத்தி செய்யவும். இதனைப் பறங்கிச் சாம்பிராணி என்றும் கூறுவர்.

## 13. கொடி வேலி வேர்

கொடிவேலி வேரைக் கழுவிய பின், பசுப்பாலில் அமிழும்படி வைத்து அவித்து எடுத்து, பின்பும் கழுவி, வேரின் வைரத்தை நீக்கி விடச் சுத்தியாகும்.

குறிப்பு : வேர்ப் பட்டையையே எடுத்து மருந்துகளுக்குச் சேர்க்கவேண்டும்.

## 14. சாதிக்காய்

சாதிக்காயின் மேல் தோலை நீக்கிவிடவும். உட்பருப்பையே உபயோகிக்க வேண்டும்.



## 15. சிவதை வேர்

இதனைப் பாலில் வேகவைத்து உள்ளிருக்கும் வைரத்தை (நரம்பை) மட்டும் நீக்கிவிட்டு, மற்றதைக் கழுவி உலர்த்திக் கொள்ளவும்.

## 16. சுக்கு

இதன் மேல் தோலைச் சீவி நீக்கிய பின், உலர்த்திக் கொள்ளவும்.

## 17. சேராங்கொட்டை அல்லது சேங்கொட்டை
(IMPCOPS *முறை — இந்தியா*)

சேராங் கொட்டையிலிருந்து வெளிப்படும் கறுப்பு நிற எண்ணெய் மிகவும் காரமானது. இந்த எண்ணெய் உடம்பின் தோலில் பட்டால் எரிவையும் கொப்புளங்களையும் ஏற் படுத்தும். ஆகையால் இதனைச் சுத்தி செய்யும்போது கையிலோ, கண்ணிலோ, மற்றும் உடலின் எத்தப் பாகங் களிலோ படாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

குறிப்பு : இதனைக் கையாளும் பொழுது முற்காப்பாகக் கைகளில் நல்லெண்ணெய்யைப் பூசிக்கொள்ளவும்.

(அ). சேராங் கொட்டையைப் பாக்கு வெட்டியால் நான்கு துண்டுகளாக வெட்டிப் பசுவின் சாணம் கரைத்த நீரில் (சாணிப் பாலில்) ஊறப் போடவும். மூன்று நாட்களின் பின் அதனை எடுத்து நன்னீரில் கழுவிய பின்பு தோலாயந்திரத்தில் மீண்டும் சாணிப்பால்விட்டு அமிழவைத்து அவித்து எடுத்துப் பின்னர் இளநீரினால் கழுவி எடுத்து உலர்த்திக் கொள்ளவும்.

(ஆ) சேராங் கொட்டையை எடுத்து மூக்கை வெட்டி, சுண்ணாம்புக் கற்களின் நடுவில் வைத்து, கள் அல்லது காடிநீர் விட்டுக் கிளறி எடுக்கவும். இவ்வாறு ஏழு முறை செய்து கழுவி வைக்கவும்.

(இ). புளியமிலை அவித்த நீரிலும், பசுச் சாணிப்பாலிலும், கற்றாளைச் சாறிலும் முறையே ஒவ்வொன்றிலும் அவித்து எடுத்துக் கழுவி உலர்த்தவும்.

## 18. தான்றிக் காய்

தான்றிக் காயின் உள்ளே இருக்கும் கொட்டையை நீக்கவும்.

## 19. தேற்றாங் கொட்டை

இதனைப் பசுப்பாலில் 24 நிமிடங்கள் (ஒரு நாழிகை) ஊற வைத்து நீரில் கழுவி எடுத்துக் கொள்ளவும்.

## 20. நாபி

(IMPCOPS *முறை — இந்தியா*)

நாபியைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி பசுவின் நீரில் மூன்றுநாட்கள் ஊறவைக்கவும். தினமும் புதிய பசுநீரைப் பயன்படுத்தவும். அடுத்து, அதனை வெய்யிலில் உலர்த்திய பின் தோலாயந்திரத்தில் பசுவின் நீரிலேயே மூழ்க விட்டு ஆறு மணிநேரம் கொதிக்க வைத்து, வெளியே எடுக்கவும் பின்னர் ஓரளவு சூடான நீரில் நாபியைக் கழுவி உலர்த்தவும்.

## 21. நீரடி முத்து

இதனை உடைத்து அதன் ஓடுகளை நீக்கிவிட்டுப் பருப்பை எடுக்கவும். பின்னர் பருப்பின்மேல் தோலைப் போக்கிக் கொள்ளவும். (கையால் கசக்க மேற்தோல் நீங்கும்).

## 22. நெல்லிக் காய்

நெல்லிக்காயின் உள்ளே இருக்கும் விதையை மட்டும் நீக்கி விடவும். விதை நீக்கிய நெல்லிக் காயை நெல்லி முள்ளி என்று கூறுவர்.

## 23. நேர்வாளம்

(அ). இதனை ஒரு துணியில் முடித்து பசுச் சாணிப்பாலில் ஊறவைத்த பின், அதனைத் தோலாயந்திரமாக 6மணி நேரம் வேகவைத்து எடுக்கவும். பின்பு அதனை எடுத்துக் கழுவி கோது நீக்கி இரண்டாகப் பிளந்து உள்ளே இருக்கும் நாக்குப் போன்ற இதனை (வித்திலையை) நீக்கவும். பின்பு நேர்வாளப் பருப்பை நெய்யில் வறுத்தெடுக்கவும்.

(ஆ). (*பதார்த்த குண சிந்தாமணி*)

பசுச் சாணம், புளியமிலை, செம்மண் ஆகியவற்றைத் தேவையானளவு எடுத்து ஒரு பாத்திரத்திற் போட்டு



நீர்விட்டுக் கரைக்கவும். பின் அதற்குள் முடிச்சாகக் கட்டிய நேர்வாளத்தைப் போட்டு தோலாயந்திரமாக ஆறு மணித்தியாலங்களுக்கு நன்கு கொதிக்க வைக்கவும். பின்னர் நேர்வாள முடிச்சை வெளியே எடுத்து நன்கு கழுவி வைக்கவும். அடுத்ததாக நேர்வாளத்தின் கோதுகளை நீக்கி உள்ளிருக்கும் பருப்பை எடுத்துக் கூரிய கத்தியால் பிளந்து உள்ளிருக்கும் (நாக்கு) வித்திலையை நீக்கி விடவும். பிறகு பச்சையரிசியுடன் பிளந்த பருப்புக்களைச் சேர்த்து, நன்கு வேக வைத்துப் பருப்புக்களை மட்டும் பிரித்தெடுக்கவும். பின்னர் அதனை நீரில் கழுவி எலுமிச்சம் பழச் சாற்றுள் ஊறப் போட்டு உலர்த்தவும். ஈற்றில் நெய்யில் வறுத்து எடுக்கவும்.

## 24. பலாசம் வித்து

இதனை நீரில் ஊறவைத்து மேற்தோலை நீக்கி எடுக்கவும்.

## 25. பறங்கிக் கிழங்கு

இதனைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி ஒரு பானையிலிட்டு பசுப்பாலும் தூய நீரும் சம அளவாகச் சேர்த்து அடுப்பேற்றி எரிக்கவும். முக்கால் பங்கு சுண்டிய பின், நீரில் கழுவி எடுத்து மேற்தோலை நீக்கி உலர்த்திக் கொள்ளவும்.

## 26. பெருங்காயம்

இதனை நெய்யில் பொரித்து எடுக்கவும்.

## 27. வெள்ளைப் பூடு

இதனை பல்லுப் பல்லாக உடைத்து வெய்யிலில் உலர்த்தி தோல், வேர் ஆகியவற்றை நீக்கிக் கொள்ளவும்.

### தோலா இயந்திரத்தில் சுத்தி செய்ய உபயோகிக்கும் சரக்குகளுக்கு உதாரணம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மூழ்க | வைத்து | (சுத்தி) | — | நேர்வாளம் |
| 2. | ,, | ,, | ,, | — | சேங்கொட்டை |
| 3. | ,, | ,, | ,, | — | இரச கற்பூரம் |
| 4. | ,, | ,, | (குடிநீர்) | — | கொம்பரக்கு |
| 5. | மூழ்கவைக்காமல் | | (சுத்தி) | — | சவ்வீரம். |

## 2. விலங்கினம்

01. அண்ட ஓடு அல்லது முட்டை ஓடு
02. அம்பர்
03. ஆமையோடு
04. எலும்புகள்
05. கடல்நுரை
06. கிளிஞ்சல்
07. கொம்பரக்கு
08. சங்கு
09. சிருங்கி (மான்கொம்பு)
10. நண்டுக்கல்
11. நத்தை
12. பலகறை
13. பவழம்
14. பூநாகம்
15. முத்து
16. முத்துச்சிப்பி
17. மெழுகு

## 2. விலங்கினம்

### 1. அண்ட ஓடு அல்லது முட்டை ஓடு

சோற்று உப்பை நன்றாக நீரில் கரைத்து, ஒரு மணிநேரம் கழித்து, அதன் தெளிவினை மட்டும் வடித்தெடுத்துக் கொள்ளவும். பின்னர் அதில் அண்ட ஓடுகளை ஒருநாள்வரை ஊறவிடவும். மறுநாள் நன்றாகக் கொதிக்கவைத்து நீர் சுண்டியவுடன் ஆறவிடவும். பின்பு சவ்வு போகக் கழுவி, உலர்த்தவும்.

### 2. அம்பர்

இதில் கல், மண், தூசி ஆகியன இருப்பின், நீக்கிவிடவும்.

### 3. ஆமையோடு

முதலில் பூநீறும், கற்சுண்ணாம்பும் சம எடையாக எடுத்து, அவை இரண்டின் அளவுக்கும் எட்டுமடங்கு நீர்விட்டுக் கலக்கி, அதன் தெளிவை எடுக்கவும். சிறுசிறு துண்டுகளாக உடைத்து எடுத்த ஆமையோட்டை அத்தெளிவிற்போட்டு எண்ணெய்க் கசிவு நீங்கும் வரை எரித்து எடுக்கவும். பின்னர் சுத்த நீரில் கழுவி உலர்த்தவும்.

### 4. எலும்புகள்

பொடித்த எலும்புத்துண்டுகளை ஒரு பங்கு எடுத்து, அதற்கு மூன்றுபங்கு புளித்த பசுமோர் விடவும். பின்னர் அதனை சூரியோதயம் முதல் மாலைவரை வெய்யிலில் வைக்கவும். இவ்வாறு ஒவ்வொரு நாளும் மூன்றுபங்கு பசுமோரை விட்டு,சூரிய புடமாக ஐந்துநாட்களுக்கு வைக்கவும். அதன்பின் மோர் விடாமல் இருநாட்கள் வெய்யிலில் வைக்கவும். ஈற்றில் நீர்ப்பற்று இல்லாமல் நன்கு உலர்ந்த பின், தூய நீர்விட்டுக் கழுவி உலர்த்தி எடுக்கவும்.

### 5. கடல் நுரை

இதில் மண், கல், தூசு இருப்பின், அவைகளைப் புடைத்து நீக்கி எடுக்கவும்.

### 6. கிளிஞ்சல் (சிறிய சிப்பி வகை)

கிளிஞ்சல்களை உவர்மண் கலந்த நீரில். ஆறு மணிநேரம் வரை கொதிக்க வைத்துக் கழுவி எடுத்துக் கொள்ளவும்.

### 7. கொம்பரக்கு

இதனில் இருக்கும் கட்டை, மரத்தோல், மற்றும் நூல் போன்றவற்றை நீக்கிக்கொள்ளவும்.

### 8. சங்கு

(அ). உடைத்த சங்குத் துண்டுகளை கற்சுண்ணாம்புக் குவியலுக்குள் வைத்து, மூடவும். பின்னர் அதற்குமேல் நீரைத் தெளித்துச் சிறிது நேரம் விட்டுச் சூடாறிய பின் எடுத்து தூய நீரினால் கழுவி உலர்த்தவும்.

(ஆ). கற்சுண்ணாம்பு, உவர்மண் என்பவற்றைச் சம எடையாக எடுத்து, அவற்றினளவுக்கு எட்டுமடங்கு நீர் விட்டுக் கலக்கி, தெளியவிடவும். பின் அதனுள் சங்கைப் போட்டுக் கொதிக்க வைக்கவும். ஈற்றில் நீரில் கழுவி, எடுத்து உலர்த்தவும்.

## 9. சிருங்கி (மான்கொம்பு)

மான்கொம்பைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டிப் பிளந்து, அகத்தியிலைச் சாற்றில் ஒருநாள் முழுவதும் ஊறவைக்கவும். பின்னர் அதனை எடுத்து நீரில் கழுவி உலர்த்தவும்.

## 10. நண்டுக்கல்

கற்சுண்ணாம்பு, பூநீறு ஆகியவற்றைச் சம எடையாக எடுத்து, அவற்றுக்கு எண்மடங்கு தூயநீர் விட்டுக் கலக்கி, தெளியவிடவும். பின்னர் தெளிவை எடுத்து அதில் நண்டுக் கல்லைப் போட்டு மூன்றுமணிநேரம் நன்றாகக் கொதிக்க வைக்கவும். ஈற்றில் அதனைத் தண்ணீரில் கழுவியெடுத்துக் கொள்ளவும்.

## 11. நத்தை

நத்தையின் ஓட்டை உடைத்து அதன் சதையை நன்றாக நீர்விட்டுக் கழுவி எடுக்கவும்.

## 12. பலகறை (சோகி)

பலகறைகளையுடைத்து அவற்றுள் படிந்திருக்கும் மண் முதலிய அழுக்குகளை நீரில் நன்றாகக் கழுவி நீக்கி விடவும். பின்னர் எலுமிச்சம் பழச் சாற்றில் ஊறவைத்து அல்லது அரிசிக் கஞ்சியில் ஊறவிட்டுக் கழுவி எடுக்கவும்.

## 13. பவழம்

பவழத்தைச் சிறுசிறு துண்டுகளாக உடைத்து, அதில் இருக்கும் மண்ணை நீக்கி, பின்னர் எலுமிச்சம் பழச்சாற்றில் ஒருநாள் முழுவதும் ஊறவைக்கவும். மறுநாள் வெந்நீர் விட்டுக் கழுவி எடுத்து உலர்த்தவும்.

## 14: பூநாகம்

பூநாகத்தை ஒரு பாத்திரத்திலிட்டு அவைகள் மூழ்கும் அளவுக்குப் பால் அல்லது மோர்விட்டு வைக்கவும். இதனை உட்கொண்ட பூநாகம் சிறிதுநேரம் கழிந்த பின் மண்ணைக் கக்கிவிடும். பூநாகத்தை எடுத்து, உருவிக் கழுவிச் சுத்தம் செய்யவும். பின்னர் அவற்றின் மீது சுண்ணாம்புத் தெளிநீரை தெளிக்க அவை இறந்துவிடும். பின்பு அவற்றை மருந்து தயாரிக்க உபயோகிக்கலாம்.



## 15. முத்து

(அ) (குணபாடம் தாது - சீவ வகுப்பு)
எலுமிச்சம்பழச் சாற்றிலும், காடியிலும் ஒருநாள் ஊற வைத்து எடுத்து, நீர்விட்டுக் கழுவி வைக்கவும்.

(ஆ) (IMPCOPS முறை - இந்தியா)
முத்துக்களைப் பசுவின் தயிரில் 24 மணிநேரம் ஊற வைத்து எடுத்து நல்ல தண்ணீரில் கழுவி வைக்கவும்.

## 16. முத்துச் சிப்பி

சம எடையாகப் பூநீறும் கற்சுண்ணாம்பும் சேர்த்து அவற்றுக்கு எண்மடங்கு நீர்விட்டுக் கலக்கித் தெளிவை எடுக்கவும். பின் அதில் முத்துச்சிப்பிகளைப் போட்டு எண்ணெய்க்கசிவு நீங்கும்வரை எரித்தெடுத்து சுத்தநீரில் கழுவி வைக்கவும்.

## 17. மெழுகு

இதனை உருக்கித் தெளிய வைத்து, வடிகட்டி எடுத்துக் கொள்ளவும்.

## தாது இனச் சரக்குகளுக்குச் சுருக்குக் கொடுத்தல்

சுருக்குக் கொடுக்கும் முறை தாது இனச் சரக்குகளைச் சுத்தி செய்வதற்கும், கட்டு மருந்துகள் (மாத்திரைக்கட்டு) தயாரிப்பதற்கும் உபயோகப்படுகின்றது. சில பாடாணங்களைச் சில மூலிகைச் சாறுகளினால் சுருக்குக் கொடுத்துத் தூய்மை செய்யலாம். எடுத்துக்காட்டாக, இலிங்கச் சுத்தியினைக் (இலிங்கம் (இ) பக்கம்: 197) கூறலாம். இதேபோல் சில பாடாணங்களை மூலிகைச் சாறு / செயநீர் / தைலம் மற்றும் திரவங்களால் தனித்தோ ஒன்று கூட்டியோ சுருக்குக் கொடுத்துக் கட்டு தயாரிக்கலாம்.

செய்முறை- ஒருசிறு அகன்ட அகலை(புடம்போடும் சட்டி அடுப்பில் வைத்து அதனுள் சுருக்குக் கொடுக்கவேண்டியதை (உ+ம் இலிங்கக் கட்டி) வைத்து சிறுதீயாக எரிக்கும்பொழுது இலிங்கக் கட்டியில் சூடு ஏறும். அப்பொழுது சுருக்குக் கொடுக்க வேண்டிய மூலிகைச்சாறு / திரவத்தை சிறு கரண்டியால் எடுத்து இலிங்கக் கட்டிக்குமேல் விடவும். சூடேறிய இலிங்கக்கட்டி அதனை உறிஞ்சி எடுக்கும். இவ்வாறு முழுச்சாற்றையும் சிறிதுசிறிதாக விடும் பொழுது சாமணத்தால் (Forceps) இலிங்கக்கட்டியைப் புரட்டிக் கொடுத்தல் வேண்டும். முழுச்சாறும் இலிங்கக் கட்டியினால் உள் வாங்கப்பட்ட பின், பத்திரப்படுத்தவும். இச்செய் முறையை சுருக்குக் கொடுத்தல் எனப்படும்.

## 3. தாது இனம்

1. அஞ்சனக்கல்
2. அட்டுப்பு
3. அப்பிரகம்
4. அயம்
5. அன்னபேதி
6. இந்துப்பு
7. இலிங்கம்
8. இரசம்
9. இரசகற்பூரம்
10. இரசசெந்தூரம்
11. கந்தகம்
12. கருவங்கம்
13. கல்நார்
14. கற்சுண்ணாம்பு
15. கற்பூரச் சிலாச்சத்து
16. காந்தம்
17. காவிக்கல்
18. கௌரிபாடாணம்
19. சத்திச்சாரம்
20. சூடன்
21. செம்பு
22. சோற்றுப்பு (கறியுப்பு)
23. தாளகம்
24. துத்தம்
25. துருசு (மயில் துத்தம்)
26. நவாச்சாரம்
27. நாகம்
28. நிமிளை
29. பச்சைக் கற்பூரம்
30. படிகாரம் (சீனாக்காரம்)
31. பூநீறு
32. பொன்
33. மண்டூரம்
34. மனோசிலை
35. மிருதார்சிங்கி
36. வளையலுப்பு
37. வீரம்
38. வெங்காரம்
39. வெடியுப்பு
40. வெள்ளி
41. வெள்வங்கம்
42. வெள்ளைப்பாடாணம்



## 3. தாது இனம்

### 1. அஞ்சனக்கல் அல்லது நீலாஞ்சனம்

(அ) (IMPCOPS *முறை – இந்தியா*)

அஞ்சனக் கல்லை முறையே திரிபலைக் குடிநீர் கரிசாலைச் சாறு ஆகியவைகளில் கொதிக்க வைத்து எடுக்கச் சுத்தியாகும்.

(ஆ) (*குணபாடம் தாது – சீவ வகுப்பு*)

நிலாஞ்சனத்தைப் பொடித்துப் பழச்சாறுவிட்டு அரைத்து ஒருநாள் முழுவதும் வெய்யிலில் காய வைத்து எடுக்கத் தூய்மையாகும்.

### 2. அட்டுப்பு

(IMPCOPS *முறை — இந்தியா*)

இதற்கு நான்கு பங்கு நீர்விட்டு நன்றாகக் கொதிக்க எரிக்கும் போது, கோழிமுட்டையின் வெள்ளைக் கருவை ஊற்றியதும் பொங்கி எழும். அதில் வரும் அழுக்கைப் அகப்பையால் வழித்து நீக்கவும். பின்னர் வடிக்கும் பதத்தில் சீலை கட்டிய ஒரு வடிகலத்தில் ஊற்றி வடித்தெடுக்கவும். பின்பு காற்று இல்லாத இடத்தில் வைத்து மறுநாள் அதிலிருக்கும் நீரை வடித்த பிறகு உலரவைக்கவும். இவ்வாறு திரும்பத் திரும்ப ஏழு முறை செய்யவும்.

### 3- அப்பிரகம்

(IMPCOPS *முறை – இந்தியா*)

அப்பிரகத்தை நன்கு சிவக்கக் காய்ச்சி, பசுவின் நீரில் (கோசலம்)தோய்க்கவும். இவ்வாறு ஏழுமுறை செய்தபின்னர் அதனை மிக நுண்ணியதாக இடித்துப் பொடித்துப் போதுமான அளவு சொரசொரப்பான நெல்லுடன் சேர்ந்துத் தொய்ந்த முடிச்சாக ஒரு துணியில் கட்டவும். பின் அதனைக் காடி நிறைந்துள்ள கண்ணாடிப் பாத்திரத்தில் ஊறவைக்கவும். நன்கு ஊறியபின்னர் முடிச்சை எடுத்து, நன்றாகக் கையால் அழுத்திப் பிசையவும். அப்பொழுது காடியும் அப்பிரகத்தூளும் சீலையினூடாக வெளியேறிக் காடியின் அடியில் படியும். இவ்வாறு மீண்டும் மீண்டும் செய்ய, நுண்ணிய அப்பிரகத்தூள் சீலையின் ஊடாக வெளியேவரும். இவ்விதம்

செய்வதால் காடியின் அடியில் அப்பிரகம் வந்துசேரும். பின்னர் பாத்திரத்தைச் சரித்துக் காடியை வெளியேற்றி விட்டுக் குளிர்ந்த நீரில் கழுவி உலர்த்தவும். இந்நிலையில் இது வெண்ணெய் போன்று தோற்றமளிக்கும். இதனை அப்பிரக வெண்ணெய் அல்லது அப்பிரக நவநீதம் என்று கூறுவர்.

## 4. அயம்

(IMPCOPS முறை – இந்தியா)

அயத்தை நன்றாகப் பழுக்கக் காய்ச்சி முறையே காடி, நல்லெண்ணெய், பசுவின் நீர், கொள்ளவித்த நீர் ஆகிய நான்கிலும் மும்மூன்று முறை தோய்த்தெடுத்துக் கழுவிக் கொள்ளவும்.

குறிப்பு : நல்லெண்ணெய்யில் தோய்த்தெடுத்த பின் எண்ணெய்யை அகற்றுதற்கு சிகைக்காய் (சீயாக்காய்) அவித்தநீரில் தோய்த்தெடுக்கலாம்.

## 5. அன்னபேதி

அன்னபேதியை நன்னீரில் கரைத்து வடிகட்டி, சிறிய அளவு கந்தகத் திராவகத்தையும் (ஐதான $H_2So_4$) அதில் கலந்து அடுப்பேற்றி எரிக்கவும். நீர் முழுவதும் சுண்டி வெண்ணிறப் பொடியாகும் வரை எரித்தெடுத்துக் கொள்ளவும். அன்ன பேதிக் கட்டிகள் மிகத் தூய்மையான நிலையிலிருப்பின், தண்ணீரில் விரைவாகக் கழுவி எடுத்து அகலிலிட்டு அவற்றின் நீர்ச்சத்து முழுவதும் சுண்டும்வரை எரித்தெடுக்கச் சுத்தியாகும்.

## 6. இந்துப்பு

காடியில் மூன்று நாட்களுக்கு ஊறப்போட்டு வெயிலில் உலர்த்தி எடுக்கவும்.

## 7. இலிங்கம்

(அ) (IMPCOPS முறை – இந்தியா)

இலிங்கத்தைச் சிறுசிறு துண்டுகளாக உடைத்து, தாய்ப்பாலில் ஒருநாளும், எலுமிச்சம்பழச் சாற்றில் ஒருநாளும் ஊறவைத்துக் கழுவியெடுக்கவும்.

தாய்ப்பாலுக்குப் பதிலாகப் பசுப்பாலும் உபயோகிக்கலாம்.



(ஆ)

இலிங்கத்தைச் சிறுசிறு துண்டுகளாக உடைக்குக. பின் போதுமானளவு எலுமிச்சம் பழச்சாறு, குப்பைமேனிச் சாறு, பால் ஆகியவற்றைச் சமஅளவாகச் சேர்த்து அடுப்பேற்றவும். பின்பு உடைத்த இலிங்கத் துண்டுகளை அதனுள் போட்டு, முற்றாக வற்றும்வரை எரித்துச் சுண்டக் காய்ச்சவும். பின்னர் அதனை எடுத்துக் கழுவி உலர்த்திக் கொள்ளவும்.

(இ)

மேற்கூறிய மூன்று சாறுகளிலும் இலிங்கத்துக்குச் சுருக்குக் கொடுத்தும் சுத்தி செய்யலாம்.

## 8. இரசம்

(அ) (குணபாடம் தாது - சீவ வகுப்பு)

இரசத்தை முறையே செங்கல் மாத்தூளிலும், மஞ்சட் பொடியிலும் ஒவ்வொரு மணிநேரம் அரைக்கவும். பின்னர் அதனைச் சுத்தமான நீரில் கழுவி எடுக்கவும். தேவையானளவு குப்பைமேனிச் சாறு எடுத்து அதற்குள் மேற்படி இரசத்தைப் போட்டு அடுப்பேற்றிச் சாறு சுண்டும்வரை எரித்து எடுக்கச் சுத்தியாகும்.

(ஆ) (யாழ்ப்பாண மருத்துவர்களின் முறை)

இரசத்தைக் கல்வத்திலிட்டு ஒட்டறை போட்டு மூன்று மணிநேரம் அரைத்த, பின் ஊதுகுழலால் ஊதி ஒட்டறையை இரசத்திலிருந்து வேறுபடுத்தவும். பின்பு செங்கட்டிமா போட்டு மூன்று மணிநேரம் அரைத்து முன்னையது போல் ஊதியெடுக்கவும். பிறகு மஞ்சள் மாவை மூன்றுமணிநேரம் அரைத்து முன்புபோல் ஊதி வேறுபடுத்தி, எடுக்கவும். பின்னர் வெற்றிலைச் சாறு விட்டரைத்து அதனைக் கழுவி எடுத்துத் துணியால் ஒற்றி நீரைப் போக்கவும். ஈற்றில் மாச்சீனி சேர்த்து அரைத்தால், சீனி வெள்ளையாகவே காணப் படும்.

குறிப்பு : சீனி கறுப்பாக மாறுமாயின், இரசம் சுத்தியாகவில்லையென்று அறிந்து கொள்ளவேண்டும். அவ்விதம் இருப்பின், மேற்குறிப்பிட்ட சுத்திமுறையை மீண்டும் செய்யவும். இம்முறையையே ஈழத்து மருத்துவர்கள் பெரும்பாலும் கைக்கொள்ளுகின்றனர்.

(இ) (IMPCOPS முறை - இந்தியா)

மிகவும் தடித்த நெருக்கமான இழைகள் கொண்ட துணியில் இரசத்தை மீண்டும் மீண்டும் பல தடவைகள் வடிகட்டி எடுத்துத் தடித்த பீங்கான் பாத்திரத்தில் விடவும். பின்னர் போதுமானளவு தண்ணீர் விட்டு அடுப்பேற்றி எரிக்கவும். அப்பொழுது இரசத்தில் உள்ள மலினங்களின் அளவுக்கேற்ப நீரின் நிறமும் மாறும். நிறம் மாறிய தண்ணீரை வடித்தெடுத்துப் புதிய நீரைவிட்டுக் கொதிக்க வைக்கவும். தண்ணீரின் நிறம் மாறாமல் இயற்கை நிறத்தோடு இருக்கும்போது எரிப்பதை நிறுத்தவும். பின் இரசத்தை எடுத்துக் காடியில் ஏழு தடவை கழுவிய பின் இறுதியாக நல்ல தண்ணீரில் கழுவி எடுக்கவும்.

குறிப்பு : எக்காரணம் கொண்டும் பீங்கான் அல்லது கண்ணாடிப் பாத்திரத்தைத் தவிர, வேறு உலோகப் பாத்திரங்களைச் சுத்தி செய்யப் பயன்படுத்தக் கூடாது. இரசத்தைக் கையாளுபவர் கையில் மோதிரமோ, வளையலோ அணிந்திருத்தலாகாது.

## 9. இரசகற்பூரம் (பூரம்)

(பதார்த்த குண சிந்தாமணி)

வெற்றிலை, மிளகு ஆகியவற்றைத் தனித்தனி 10 கிராம் எடுத்து, கல்வத்தில் நீர் விட்டரைத்து 1.400 லீற்றர் நீரில் கலந்து கரைக்கவும். பின்னர் அதனை ஒருபாத்திரத்தில் விட்டுப் பூரத்தைச் சீலையில் முடிந்து, தோலாயந்திர முறையில் நீரில் அமிழச் செய்து, சிறுதீயாக எரிக்கவும். நீர் முக்காற் பங்கு வற்றியவுடன் பூரத்தை எடுத்து தண்ணீர்விட்டுக் கழுவி, உலர்த்தி எடுக்கவும்.

## 10. இரச செந்தூரம்

(குணபாடம் தாது - சீவ வகுப்பு)

இரச செந்தூரத்தைச் சிறுசிறு துண்டுகளாக உடைத்து, தாய்ப் பாலில் ஒருநாளும், எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு நாளும் ஊறப்போட்டுப் பின்பு கழுவி உலர்த்தி எடுக்கவும்.

தாய்ப்பாலுக்குப் பதிலாகப் பசுப் பாலும் உபயோகிக்கலாம்.



## 11. கந்தகம்

(அ) (யாழ்ப்பாண மருத்துவர்களின் முறை)

வாழைக் கிழங்குச் சாறும், பசுப் பாலும் சம அளவாகக் கலந்து, ஒரு வாயகன்ற பானையில் இட்டு, சீலை அல்லது கண்ணறைச் சாக்கைப் பானையின் வாயில் வேடு கட்டவும். பின்னர் அதன் மேல் கந்தகத்தை வைத்து மற்றொரு மூடிச் சட்டியால் மூடிச் சீலைமண் செய்யவும்.

பின் அதனை ஒரு குழியில் வைக்கவும். பானையிலுள்ள சாறுக்குச் சூடு பிடிக்காதவாறு பானையின் பக்கங்களை மணலால் நிரப்பி நீர்விட்டு நனைத்து விடவும். ஆனால் மூடிச் சட்டியின் மேற்பக்கம் கண்ணுக்குத் தெரியக் கூடியதாக இருக்க வேண்டும். குழியில் வைத்த பானையின் மேற்சட்டியின் மேல் தேவையான அளவு வராட்டிகளை அடுக்கித் தீ மூட்டி விடவும். சூடேறியதும், கந்தகம் உருகி மணிகளாகக் கீழே இறங்கும்.

அடுத்த நாள் பானையைக் கவனமாக வெளியே எடுத்து வெளிப்புறத்தைத் துப்பரவு செய்து, சீலை மண்ணை அகற்றவும். பின்னர் மூடிச்சட்டியைத் திறந்து கீழிறங்கிய கந்தக மணிகளை கிளைந்தெடுத்துச் சுத்த நீரில் கழுவி யெடுக்கவும்.

இவ்வாறு கந்தகத்தின் மணம் நீங்கும்வரை திரும்பத் திரும்பச் செய்யவும் (ஆறு முறை செய்யலாம்). சாம்பல் மொந்தன் வாழைக்கிழங்கு இதற்குச் சிறந்தது.

குறிப்பு : வாழைக் கிழங்குச் சாறு, பசுப் பாலுக்குப் பதிலாக மருதோண்டி இலைக் கற்கம், பசுவின் தயிர் ஆகியவற்றை உபயோகித்துக் கந்தகத்தை மேற்கூறிய முறையில் சுத்திசெய்யலாம். இதனைக் குணபாடம் இரண்டாம் பாகத்தில் காண்க.

(ஆ) (IMPCOPS முறை - இந்தியா)

கந்தகத்தை ஒரு கரண்டியிலிட்டு, வெண்ணெய்யைச் சேர்த்து உருக்குக், கந்தகம் நன்கு உருகியதும் பசுப்

பாலில் சாய்க்கவும். இவ்வாறு மொத்தமாக முப்பது கடவை செய்து, நல்ல தண்ணீரில் கழுவி எடுக்கவும்.

குறிப்பு ; கந்தகம் சுத்தி செய்தபின் கந்தகமணம் தென்படக் கூடாது. கந்தகமணம் இல்லாமல் போகும்வரை சுத்தி செய்யப்பட வேண்டும்.

## 12. கருவங்கம்

(அ) (குணபாடம் தாது சீவ — வகுப்பு)

நொச்சிச் சாற்றில் மஞ்சட் பொடியைக் கலந்து வைத்துக்கொண்டு, அதனுள் கருவங்கத்தை உருக்கிச் சாய்க்கவும். இவ்வாறு இருமுறை செய்து கழுவி உலர்த்திக் கொள்ளவும்.

(ஆ) (IMPCOPS முறை — இந்தியா

கருவங்கப் பொடியை நொச்சிச் சாற்றில் போட்டு, வெய்யிலில் வைத்து எடுக்கச் சுத்தியாகும்.

(இ) (IMPCOPS முறை — இந்தியா)

கருவங்கத்தை உருக்கி, மிகவும் கவனமாக காடியில் சாய்க்கவும். பின்னர் அதனை மீண்டும் உருக்கிப் புளியமிலைச் சாற்றில் சாய்க்கவும். இதேபோல் புளித்த மோர், குமரிச் சாறு (கற்றாழை), பசுவின் நீர், நல்லெண்ணெய் ஆகியவற்றிலும் அடுத்தடுத்துச் செய்து தண்ணீரில் கழுவி உலர்த்திக் கொள்ளவும்.

## 13. கல்நார்

(தன்வந்திரி வைத்திய காவியம்)

இதனைச் சிறுசிறு துண்டுகளாக உடைத்துப் பசுவின் நீரில் பத்து நாட்களுக்கு ஊறவைத்துக் கழுவி எடுத்துக்கொள்ளவும். தினமும் புதிய பசுநீரை உபயோகிக்கவும்.

## 14. கற்சுண்ணாம்பு

(IMPCOPS முறை — இந்தியா)

சுட்ட சுண்ணக் கல்லுக்கு இளநீர் அல்லது பசுமோர் விட்டுத் தாளித்து நீர்விட்டுக் கரைத்துச் சீலையில் வடிகட்டிக் கொள்ளவும்.



## 15. கற்பூரச்சிலாச்சத்து

(அ) (குணபாடம் தாது – சீவ வகுப்பு)

இளநீரில் அல்லது பசுப்பாலில் போட்டுக் காய்ச்சி, எடுத்து நீரில் கழுவிக் கொள்ளவும்.

(ஆ) (IMPCOPS முறை – இந்தியா)

சிலாசத்தைச் சிறுசிறு துண்டுகளாக உடைத்து, பூநீறு கரைத்த தெளிநீரும், சுண்ணாம்புத் தெளிநீரும் சம அளவாகக் கலந்த கலவையில் நான்கு மணிநேரம் கொதிக்கவைத்து நீரில் கழுவி எடுத்துக்கொள்ளவும்.

## 16. காந்தம்

(குணபாடம் தாது – சீவ வகுப்பு)

காந்தத்தைக் கொல்லன் உலையில் பழுக்கக்காய்ச்சி ஏழு அல்லது இருபத்தொரு முறை கொள்ளுக் குடிநீரில் தோய்த்து நன்னீரில் கழுவி எடுக்கவும்.

## 17. காவிக்கல்

இதனைச் சிறிதளவு இளநீர் விட்டரைத்தபின், அதனை மேலும் இளநீரில் கரைத்துத் தெளியவிட்டு வடிகட்டி எடுத்து உலர்த்தவும்.

## 18. கௌரி பாடாணம்

(குணபாடம் தாது – சீவ வகுப்பு)

இதனைச் சிறுசிறு துண்டுகளாக உடைத்து அவுரியிலைச் சாற்றில் மூன்று நாட்களும், பாகலிலைச் சாற்றில் மூன்று நாட்களும் ஊறவைத்து எடுத்துக் கழுவி உலர்த்தவும்.

## 19. சத்திச்சாரம்

(குணபாடம் தாது – சீவ வகுப்பு)

இதனைக் காடிநீரில் அல்லது பசுநீரில் மூன்று நாட்களுக்கு மத்தித்து உலர்த்திக் கொள்ளவும்.

## 20. சூடன் அல்லது சூடம்

(அ) (குணபாடம் தாது – சீவ வகுப்பு)

சரக்கைப் பார்த்து மண், தூசு முதலிய அழுக்குகளை நீக்கிச் சுத்தி செய்யவும்.

(ஆ)

செங்கழுநீர்ப்பூச் சாற்றில் ஒரு நாழிகை (24 நிமிடங்கள்) நேரம் ஊற வைத்தெடுத்து வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவும்.

## 21. செம்பு (தாமிரம்)

(அ)

இதனைப் பழுக்கக் காய்ச்சி மோர், காடி, புளியமிலைச் சாறு, குப்பை மேனிச் சாறு இவைகளில் முறையே தனித் தனியாகத் தோய்த்தெடுத்துக் கழுவிக் கொள்ளவும்.

(ஆ)

தாமிரத் தகட்டை நெருப்பில் பழுக்கக் காய்ச்சி, கொள்ளுக் கசாயத்தில் மூழ்க வைக்கவும். இதேபோல் பழுக்கக் காய்ச்சிப் புளியமிலைக் கசாயம், குமரிச்சாறு, புளித்த மோர், நீர்முள்ளிச் சாறு ஆகியனவற்றில் ஒவ்வொன்றிலும் தோய்த்தெடுக்கவும். இவ்வாறு ஏழு தடவைகள்செய்து கழுவி எடுக்கவும்.

## 22. சோற்றுப்பு அல்லது கறியுப்பு

உப்பை நீர்விட்டுக் கரைத்து வடிகட்டவும். பின்னர் அதனைக் காய்ச்சி, குழம்புப் பதத்தில் இறக்கி, வெய்யிலில் காய வைத்து எடுக்க வேண்டும்.

## 23. தாளகம்

(அ) (IMPCOPS முறை – இந்தியா)

உடைத்த தாளகத் துண்டுகளைச் சுட்ட சுண்ணாம்புக் குவியலுக்குள் வைத்து மூடி, பனங் கள்ளை அதன்மீது தெளித்துவிடவும். சூடு தணிந்ததும் கழுவி எடுத்து உலர்த்தவும்.

(ஆ) (குணபாடம் தாது – சீவ வகுப்பு)

சிறு துண்டுகளாக உடைத்த தாளகத்தை இரட்டை மடிப்புச் சீலையில் முடிச்சாகக் கட்டவும். பின்னர் அதனைப் பசுநீர், அரிசி கழுவிய நீர், புளித்த காடி இவற்றுள் ஒன்றில் மூன்றுநாட்களுக்குத் தோலா யந்திரத்தில் சிறுதீயாக (கமலாக்கினி) எரித்தெடுத்துக் கழுவி, உலர்த்தவும்.



## 24. துத்தம் அல்லது பால்துத்தம்

(குணபாடம் தாது – சீவ வகுப்பு)

இதனைப் பொடிசெய்து, துணியில் முடிந்து, கிழிகட்டிச் சுண்ணாம்புத் தண்ணீரில் எரித்து எடுக்கவும்.

## 25. துருசு

(குணபாடம் தாது – சீவ வகுப்பு)

இதனை வெந்நீரில் கரைத்து வடிகட்டி, சுண்டக் காய்ச்சி, உப்பு இறுகியவுடன் எடுத்துக் கொள்ளவும்.

## 26. நவாச்சாரம்

இதனை வெள்ளாட்டு நீர் அல்லது அரிசியை இரண்டாம் தடவை கழுவிய கழுநீர் விட்டு அரைத்து உலர்த்தவும்.

## 27. நாகம் அல்லது துத்த நாகம்

(குணபாடம் தாது – சீவ வகுப்பு)

பொடித்த நவாச்சாரம் கலந்து வைத்துள்ள இலுப்பெண்ணெய்யில் நாகத்தை உருக்கிச் சாய்க்கவும். இவ்விதம் இருபத்தொரு முறை செய்யச் சுத்தியாகும்.

## 28. நிமிளை (பொன்நிமிளை)

(குணபாடம் தாது – சீவ வகுப்பு)

சிறுசிறு துண்டாக உடைத்த நிமிளையை வாழைக் கிழங்குச் சாற்றில் நன்கு கொதிக்கவைத்து எடுத்துக் கொள்ளவும்.

குறிப்பு: சாம்பல் மொந்தன் வாழைக்கிழங்கு விசேடமானது.

## 29. பச்சைக் கற்பூரம்:

(குணபாடம் தாது – சீவ வகுப்பு)

செங்கழுநீர்ப்பூச் சாற்றில் ஒருநாழிகை (24 நிமிடங்கள்) நேரம் ஊறவைத்து எடுத்து வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவேண்டும்.

## 30. படிகாரம் அல்லது சீனாக்காரம்

(குணபாடம் தாது – சீவ வகுப்பு)

இதனை நீரில் கரைத்து வடிகட்டிக் காய்ச்சி, குழம்புப் பதத்தில் இறக்கிக் குளிரவிட்டு எடுக்கவும்.

## 31. பூநீறு

*(IMPCOPS முறை — இந்தியா)*

பூநீறின் எடைக்கு நான்கு மடங்கு நீர் விட்டுக் கரைத்துத் தெளிய விடவும். கிடைத்த தெளிவை வாயகன்ற பீங்கானின் வடிகட்டி நீர்வற்ற வெய்யிலில் காயவைக்கவும். இதுபோல் பத்துத் தடவைகள் செய்யவேண்டும்.

## 32. பொன்

*(குணபாடம் தாது – சீவ வகுப்பு)*

மெல்லிய தகடாகத் தட்டி, செம்மண் பூசிக் காய்ச்சிக் கழுவி எடுத்துக்கொள்ளவும். இவ்வாறு ஆறுமுறை செய்யச் சுத்தியாகும்.

## 33. மண்டூரம் (கிச்சுக்கிட்டம்)

*(பதார்த்தகுண சிந்தாமணி)*

இதனைச் சிறுசிறு துண்டுகளாக நொருக்கிச் சட்டியில் இடவும். பின்னர் மண்டூரத்தின் எடைக்கு நான்கு மடங்கு புளியமிலை சேர்த்து எட்டுமடங்கு நீரும் விட்டு மூன்றுமணி நேரம் வேகவைக்கவும். ஆறியபின் அதனை எடுத்துக் கழுவி உலர்த்தி, இலையை நீக்கிவிடவும். பின்பு சட்டியில் எட்டு மடங்கு பசுநீர் விட்டு, மண்டூரத்தைப் போட்டு எரித்து நீர் சுண்டியபின் இறக்கி வைக்கவும். பின் அதனை நன்னீர் விட்டுக் கழுவி எடுத்துக் கொள்ளவும்.

## 34. மனோசிலை

*(குணபாடம் தாது – சீவ வகுப்பு)*

இஞ்சிச் சாறு, எலுமிச்சம்பழச் சாறு, புளித்த மோர் ஆகிய வற்றில் ஏதேனும் ஒன்றினுள் நான்கு மணித்தியாலத்துக்கு ஊறவைத்துக் கழுவி உலர்த்தவும்.

## 35. மிருதார் சிங்கி

*(குணபாடம் தாது – சீவ வகுப்பு)*

இதனை வெள்ளாட்டு நீரில் காய்ச்சி எடுத்துப் பின்பு தாய்ப் பால், வெள்ளாட்டுப் பால் இவைகளில் முறையே நான்கு மணிநேரம் ஊறவைத்து எடுத்துக் கொள்ளவும்.



## 36. வளையலுப்பு

*(குணபாடம் தாது – சீவ வகுப்பு)*

இதனைக் காடிநீரில் ஒன்றரை மணிநேரம் ஊறவைத்து, பின்னர் எடுத்து உலர்த்திக் கொள்ளவும்.

## 37. வீரம்

*(குணபாடம் தாது – சீவ வகுப்பு)*

இளநீரில் சிறிது கற்பூரத்தைக் கலந்து ஒருபானையில் விடவும். பின்னர் வீரத்தை ஒருதுணியில் முடிந்து கட்டி, (கிழி கட்டி) நீரில் படாமல் தோலாயந்திரமாக அரைமணி நேரம் எரித்து எடுக்கவும். ஈற்றில் அதனை நல்லநீரில் கழுவி வெய்யிலில் உலர்த்தவும்.

## 38. வெங்காரம்

*(குணபாடம் தாது – சீவ வகுப்பு)*

இதனை ஒரு மண்சட்டியில் போட்டு அடுப்பேற்றி நீர் வற்றப் பொரித்து எடுத்துக் கொள்ளவும்.

## 39. வெடியுப்பு

*(குணபாடம் தாது – சீவ வகுப்பு)*

வெடியுப்பின் எடைக்கு நான்கு மடங்கு நீர்விட்டு அடுப் பேற்றி எரிக்கவும். கொதிக்கும்போது கோழிமுட்டையின் வெள்ளைக் கருவை அதில் ஊற்றி, அழுக்கை அகப்பையால் வழித்து நீக்கவும். உரிய பதமானதும் சீலைகட்டிய மறுசட்டியில் அதனை வடித்துக் காற்று இல்லாத இடத்தில் வைக்கவும். மறுநாள் அதிலிருக்கும் நீரைவடித்து உலரவிடவும். இவ்வாறு ஏழுமுறை செய்க. (1400 கிராம் வெடியுப்புக்கு — 4 கோழிமுட்டை வீதம்)

## 40. வெள்ளி

*(குணபாடம் தாது – சீவ வகுப்பு)*

இதனை உருக்கித் தகடாகத் தட்டிக் காய்ச்சி, மணித் தக்காளிச் சாற்றில் தோய்த்தெடுக்கவும். இவ்விதம் வெள்ளி மடியும்வரை மீண்டும் மீண்டும் காய்ச்சித் தோய்த்து நீரில் கழுவி எடுக்கவும்.

## 41. வெள்வங்கம்

(அ) (IMPCOPS *முறை — இந்தியா*)

நாட்டு நவாச்சாரத்தை நன்கு பொடித்து இலுப்பெண்ணெய் நிறைந்த பாத்திரத்தில் நான்கு மூலையிலும் போடவும். பின்னர் அதில் வெள்வங்கத்தை உருக்கிச் சாய்க்கவும். பின் சுத்த நீரில் கழுவி உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

(ஆ)

நொச்சிச் சாற்றில் மஞ்சள் பொடியைக் கலந்து வைத்துக் கொள்ளவும். பின் வெள்வங்கத்தை உருக்கி, அதில் சாய்க்கவும். இப்படி இருமுறை செய்க. அல்லாவிடில் வெள்வங்கப் பொடியை நொச்சிச் சாற்றில் போட்டு வெய்யிலில் வைத்து எடுத்தாலும் சுத்தியாகும்.

## 42. வெள்ளைப் பாடாணம்

(அ) (*குணபாடம் தாது – சீவ வகுப்பு*)

சிறுகீரைச்சாற்றில் மிளகுக் கற்கத்தைக் கரைத்துக் கொதிக்க வைக்கவும். வெள்ளைப் பாடாணத்தை ஒரு துணியில் பொட்டளியாகக் கட்டி (கிழி) தொங்கவிட்டு நீரில் படாமல் தோலா யந்திரமாக எரித்து அதன் மீது நீராவி படும்படிசெய்து எடுத்துக் கழுவிக் கொள்ளவும்.

(ஆ)

இதனை வெண்பூசினிக்காய்ச் சாற்றில் ஆறுமணி நேரம் தோலா யந்திரமாக நீரில் படாமல் எரித்து எடுத்துக் கொள்ளவும். அல்லாவிடின், கற்சுண்ணாம்புக்குள் புதைத்து பனங்கள் விட்டு ஏழுமுறை தாளித்து எடுக்கவும்.



# பகுதி II

# மூலிகைகளிலிருந்து சாறு எடுக்கும் முறைகள்

சித்த மருத்துவத்தில் மருந்துகள் தயாரிப்பதற்கும் அனுபானங்கட்கும் மூலிகைகளிலிருந்து சாறுகள் பெறப்படுகின்றன. மூலிகைகளிலிருந்து சாறு எடுக்கும் முறைகள் பலவுள. அவைகள் மூலிகைகளின் தன்மைக்கு ஏற்ப வேறுபட்டதாகவிருக்கும். இதனுடைய தொழில் நுட்பங்களை நாம் நன்கறிந்து செயற்பட்டால் மூலிகைகளிலிருந்து இலகுவாகவும், முழுமையாகவும் சாறுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

மூலிகையின் இலை, வேர், பட்டை, பூ, காய் ஆகிய ஐந்து உறுப்புக்களில் தேவைப்பட்ட ஏதாவது ஒன்றை அல்லது ஐந்தையும் சேர்ந்த சமூலத்தை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மூலிகைப் பொருட்களிலிருந்து சாறுகளைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு எடுக்கப்படும் சாறுகள் கீழ்காணும் முறைகளில் எடுத்துக் கொள்ளலாம்:

1. சீவி இடித்துப் பிழிதல்.
2. நீராவியில் அவித்துப் (பிட்டவியல்) பிழிந்தெடுத்தல்.
3. வாட்டிப் பிழிதல்
4. அரைத்து வாட்டிப் பிழிதல்
5. பிறபொருளைச் சேர்த்துச் சாறுபெறுதல்.

மூலிகைகளிலிருந்து பெறப்படும் சாறுகள் அம்மூலிகைகள் வளரும் இடத்தின் தட்ப வெப்பத்துக்கேற்பக் குறைந்து அல்லது கூடிக் காணப்படலாம். மூலிகையல்லாமல் சீவ வகுப்புப் பொருள்களிலிருந்தும் சாறு பெறுவதுண்டு. எடுத்துக்காட்டாக, நண்டு கோழிக்குஞ்சு, இவற்றைக் குறிப்பிடலாம்.

மூலிகைகளிலிருந்து சாறுபெற்றுக் கொள்வதில், நீர் கலந்து இடித்துப் பிழிந்து சாறு பெற்றுக்கொள்ளும் பொழுதும், அதனைக் கணக்கிடும் பொழுதும் சில முக்கிய விடயங்களை அறிந்திருத்தல் அவசியமாகும். இவை உதாரணத்துடன் கீழே தரப் பட்டுள்ளன;

முதலில் இரண்டு கி. கிராம் கரிசாலைச் சமூலத்திலிருந்து சாறுபெற வேண்டுமெனை வைத்துக்கொள்வோம், கரிசாலையை நீரினால் கழுவி சுத்தம் செய்து, உரலிலிட்டு மர உலக்கையால் இடித்து எடுத்து இடுக்கினால் பிழிந்து 400 மி. லீ. சாறு பெறப் பட்டுள்ளதென எடுத்துக் கொள்வோம். பிழிந்த சக்கையில் மேலும் சாறு இருப்பதால் அதனுடன் 200 மி. லீ. தண்ணீர் அல்லது வெந்நீர் கலந்து உரலிலிட்டு இடித்துப் பிழிந்தபோது அதிலிருந்து பெறப்பட்ட சாறு 300 மி. லீ. ஆகவிருப்பின், தேறிய சாறு அதில் சேர்க்கப்பட்ட நீரைக்கழித்து 100 மி. லீ. எனக் கணக்கிட்டு வைக்கவேண்டும். இந்த விதத்தில் மூன்றுமுறை இடித்துப் பிழிந்து எடுக்கலாம். மூன்றாவது முறையும் சேர்த்த நீரைக்கழித்து 50 மி. லீ. ராக சாறு எனக்கொண்டால், 2கி. கிராம் கரிசாலையிலிருந்து பெற்ற சாறு மொத்தமாக 550 மி. லீ. எனலாம்.

## சீவி இடித்துப் பிழிதல் -

சாறு எடுக்கவேண்டிய பச்சிலைகளைத் தூய்மை செய்து சிறுக அரிந்து உரலிலிட்டு, உலக்கையால் இடித்துப் பிழியச் சாறு கிடைக்கும். இடிக்க வேண்டியவற்றைச் சீவி அல்லது சிறுக அரிந்து அல்லது சிறு துண்டுகளாக வெட்டி இடித்துச் சாறு எடுக்கலாம். இதில் பெரும்பாலும் கல்லுரலும் மர உலக்கையுமே நன்று. சாறு பிழிவதற்குக் கையினால் நசிக்கும் இடுக்கு அல்லது பிழியும் யந்திரத்தை உபயோகிக்கலாம். தற்காலத்தில் பல தொழில்நுட்ப நவீன எந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட முறைக்கு எடுத்துக்காட்டாக, கரிசாலை நொச்சி, பொன்னாங்காணி, வாழைக்கிழங்கு என்பவற்றிலிருந்து சாறு எடுப்பதைக் கூறலாம்.

மூலிகைகளைத் தவிர சீவ இனப் பொருட்களிலிருந்தும் சாறு பிழிந்தெடுக்கும் முறைகளும் உண்டு. உதாரணமாக, வயல்நண்டு, கோழிக்குஞ்சு ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

**நண்டுச் சாறு :**

வயல் நண்டுகளை எடுத்து அவற்றின் கொடுக்குக் கால்களை ஒடித்துப் பின்னர் நீரில் கழுவி எடுத்து, உரலிலிட்டு இடித் துச்சாறு எடுக்கலாம். இச்சாறு காதுநோய்த் தைலத்துக்கும் ஈரல் நோய், பெருவயிறு ஆகியவற்றுக்கும் பயன்படுத்தப்படு கின்றன.



**கோழிக் குஞ்சுச் சாறு :**

கூவாத இளம் கோழிக் குஞ்சுகளைக் கொன்று, தோலையுரித்து குடல், தலை என்பவற்றை நீக்கியபின், உரலிலிட்டு இடித்துப் பிழியச் சாறு இறங்கும். இச்சாற்றுடன் சாராயத்தைக் கலந்து வாரத்துக்கு ஒருமுறை வீதம் மூன்று தடவைகள் கொடுக்க, அடிபட்ட வர்மம் இளகும்.

## 2. நீராவியில் அவித்து (பிட்டவியல்) இடித்துப் பிழிதல்

பச்சிலைகளைப் பிட்டவியலாக அவித்து இடித்துப் பிழிவ தால் அதிலுள்ள முழுச்சாற்றையும் பெற்றுக்கொள்ளலாம். பிட்டவியலை – நீராவியில் அவித்தல் (steam) எனவும் கூறலாம். சில பச்சிலைகள் உரலில் இடிக்கும்போது விழுவிழுப்புத் தன்மை யாக இருக்கும். இத்தகையவற்றை நீராவியில் அவிக்கும்போது அத்தன்மை மாறி, சாறு எடுக்கக் கூடியதாகவிருக்கும். இவற்றின் நிலைமைக்கேற்ப பிட்டவியல் செய்து இடித்துப் பிழிந்து, அல்லது இடித்து பின் பிட்டவியலாகவும் செய்து சாறு எடுக்கலாம்.

உதாரணமாக, துளசியிலையை எடுத்துச் சுத்தம் செய்து வேடு கட்டி அல்லது வட்டு (வண்டு) கட்டி அவித்து எடுத்துப் பின்பு உரலிலிட்டு இடித்துப் பிழியும்போது சாறு முழுவதும் இறங்கும். இதேமுறையில் பாவட்டம் இலையிலிருந்தும் சாறு பெற்றுக் கொள்ளலாம்.

## 3. வாட்டிப் பிழிதல்

சில மூலிகைகளை அனலில் வாட்டி, பின் இடித்து மசித்துப் பிழிந்து சாறு எடுக்க வேண்டிய நிலையுமுண்டு. இத்தகைய மூலிகைகளை நெருப்பில் வாட்டிப் பிழியும் போது, இருமுறையா கச் செய்கின்றனர். ஒன்று - நெருப்புக்கு அண்மையில் மூலிகை யைப் பிடித்து வாட்டுவதையும், மற்றையது - வைக்கோல் போன்ற வற்றால் குறிப்பிட்ட மூலிகையைச் சுற்றித் தீமூட்டி எரிப்பதன் மூலம் வாட்டுகின்றனர். வாட்டிப் பிழிதலுக்குக் கொடிக்கள்ளி, பிரண்டை, கும்மட்டிக்காய் என்பவற்றை உதாரணமாகக் குறிப் பிடலாம்.

**கும்மட்டிக் காய் :**

தேவையான அளவு கும்மட்டிக் காய்களை எடுத்து அவற்றை எண்ணி வைக்கவும். பின்னர் வைக்கோல் எடுத்து நிலத்தில்

பரவி, அதன்மேல் கும்மட்டிக் காய்களைப் பரவலாக வைத்து மேலும் வைக்கோலால் காய்களுக் கிடையிலும் மேலுமாகப் போட்டுக் காய்களை நன்கு மறைத்து மூடி வைக்கோலுக்குத் தீமூட்டி விடவும். வைக்கோல் எரிந்து முடிந்ததும், ஒரு நீண்ட சலாகையின் உதவியால் காய்களைச் சாம்பலிலிருந்து அகற்றி ஆறவைக்கவும். அதன் பின் அக்காய்களை எடுத்துப் பார்க்கையில், அவை வெந்து அவற்றின் மேல் தோல்கள் வெடித்திருப்பதை அவதானிக்கலாம். பின்பு கத்தியினால் அத்தோலைச் சீவி அகற்றிவிட்டுக் காய்களைப் பிளந்து, விதைகளையும் நீக்கிக் கொள்ளவேண்டும். இவ்வாறு தோலும் விதையும் நீக்கப்பட்ட கும்மட்டிக் காய்களைச் சிறிது மசிய இடித்துச் சீலையில் போட்டுப் பிழியச் சாறு வெளிப்படும். இதேபோன்று கொடிக் கள்ளியையும் வைக்கோலின் மத்தியில் வைத்துச் சுட்டெடுத்துப் பிழிந்து சாறு எடுக்கலாம்.

**பிரண்டை :**

பிரண்டையை வாட்டிப் பிழிதலுக்கு எரிபொருளாகக் கரியைப் பயன்படுத்தலாம். கணுக்கள் நீக்கிய பிரண்டைத் துண்டுகளை இடுக்கியில் பிடித்துக் கொண்டு வாட்டி, பின் இடித்து அல்லது முறுக்கிப் பிழியச் சாறு வெளிவரும். மேற்கூறிய முறையில் நன்கு வெந்திருந்தால் இடிக்கவேண்டிய அவசியம் ஏற்படாது.

## 4. அரைத்து வாட்டிப் பிழிதல்

சாறு பெறப்பட வேண்டியவற்றை அம்மி அல்லது கல்வத்திலரைத்துப் பின்னர் அனலில் வாட்டிப் பிழியும்போது சாறு கிடைக்கும். இதற்கு எடுத்துக்காட்டாக. வெள்ளைவெங்காயத்தை (உள்ளியை)க் கூறலாம்.

**பூண்டு அல்லது வெள்ளைவெங்காயம் (உள்ளி) :**

வெள்ளைப்பூண்டைத் தேவையானளவு எடுத்து, அதன் வேர், மேல்தோல் ஆகியவற்றைக் கத்தியால் நீக்கிவிட்டுப் பூண்டைத் தனித்தனிப் பல்லுகளாக்கிச் சுத்தம் செய்யவும். பின்னர் பூண்டுப் பல்லுகளைக் கல்வத்தில் போட்டு நன்கரைத்து, வெண்ணெய் போலாக்கவும். பின் வெள்ளைச் சீலைத்துண்டு ஒன்றை அளவாக எடுத்து அதனில் வெண்ணெய் போல் அரைத்தவற்றை ஒரே சீராகத் தடவவும். பிறகு அதனைக்



கையால் சுற்றிப் பிடித்துக் கொண்டு அனலில் வாட்டி முறுக்கிப் பிழிய, சாறு வெளிப்படும். திரும்பத் திரும்ப அனலில் வாட்டிப் பிழிய முழுச்சாறும் வெளியேறும். இவ்வாறு பெறப்படும் பூண்டுச் சாற்றையே பூண்டுத் தைலம் எனவும் கூறுவர். இந்நூலிலே புறமருந்துகள் என்ற பகுதியில் பதினைந்தாவது மருந்தாகக் குறிப்பிடப்பட்டுள்ள பூண்டுத் தேனைக் கவனிக்கும் போது, செய்முறையை விபரமாக அறிந்து கொள்ளலாம்.

## 5. பிறபொருளைச் சேர்த்துச் சாறு பெறுதல்

சாறு எடுப்பதற்கான பொருளுடன் வேறு மூலிகை அல்லது தாதுப் பொருள்களைச் சேர்த்தும் சாற்றைப் பிரித்தெடுக்கலாம்:

### (அ) துவர்ப்பி சேர்த்துச் சாறு எடுத்தல்

சாறு எடுப்பதற்கான பொருள்களுடன் துவர்ப்புப் பொருட்களான படிகாரம், கடுக்காய், மாசிக்காய் போன்றவற்றுள் ஏதாவதொன்றின் தூளைச் சேர்த்துச் சாற்றைக் கசியச்செய்து பெறுதல். இதற்கு எடுத்துக்காட்டாகக் கற்றாழையைக் குறிப்பிடலாம்.

**கற்றாழை :**

தேவையான கற்றாழையை எடுத்து மடல்களாக உடைத்து, நீரினால் கழுவவும். பின் மடல்களின் ஓரத்தில் உள்ள முட்களையும், பச்சையாக உள்ள தோலையும் கத்தியால் நீக்கவும். உள்ளே இருக்கும் கண்ணாடி போன்ற பகுதியையே கற்றாழைச்சோறு என்பர். இக்கற்றாழைச் சோற்றைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி ஒரு வாயகன்ற பாத்திரத்தில் போடவும். வெட்டிப்போட்ட கற்றாழைச் சோற்றின் எடைக்கு அரைப்பங்கு பொடித்த படிகாரத்தைத் தூவிக் கிளற வேண்டும். ஈற்றில் கற்றாழைச் சோற்றிலிருந்து வடியும் சாறு ஒரு பக்கத்துக்குச் சேருமாறு அப்பாத்திரத்தைச் சிறிது சரித்து வைக்கவும். இவ்வாறு சேரும் சாற்றை எடுத்து வேறு ஒருபாத்திரத்துள் ஊற்றவும். சாறு சேரச்சேர எடுத்துச் சேர்த்துக் கொள்ளவும். கற்றாழைச்சாறு பல தைலங்களுக்குச் சேர்க்கப்படுகின்றது. அத்துடன் சிலாச்சத்துப் பற்பச்செய் முறையிலும் அரைக்கப்பயன்படுகின்றது. மேற்குறிப்பிட்ட முறையில் படிகாரத்தைப் பகுதி பகுதியாகவும் சேர்த்துக் கிளறிச் சாற்றை வடியவைக்கலாம்.

**வாழைப் பழச் சாறு :**

வாழைப் பழத்துக்கும் துவர்ப்பி அல்லது பச்சை நெல்லின் உமி சேர்த்துச் சாறு பெறலாம். இதற்குத் துவர்ப்பியாக மாயாக்காய் அல்லது தான்றிக்காயின் தூள் நன்றெனக் கருதப்படுகின்றது. வாழைப் பழத்தின் தோலையுரித்து நீக்கி விட்டு, ஒரு பாத்திரத்தில் இட்டு, துவர்ப்பித் தூள் போட்டு நன்கு பிசைந்து அப்பாத்திரத்தை ஒருபுறம் சரித்து வைக்கவும். பிசைந்த வாழைப் பழத்திலிருந்து சாறு கசிந்து ஒரு பக்கம் சேரும். அதனை வடித்து எடுத்துச் சேர்த்துக் கொள்க.

## வேறொரு முறை -

நன்றாகக் கனிந்த வாழைப் பழத்தை எடுத்து உரித்து ஒரு பாத்திரத்தில் போடவும். பின்பு பச்சைநெல் உமியைச் சிறிது சிறிதாகத் தூவி விட்டுப் பிசையவும். பின்னர் அப்பாத்திரத்தை ஒரு பக்கமாகச் சரித்து வைக்கவும். அப்பொழுது சாறு கசிந்து அப்பாத்திரத்தின் பக்கத்திற் சேரும். அச் சாற்றை மற்றொரு பாத்திரத்தில் எடுத்துச் சேர்த்துக் கொள்ளவும்.

## (ஆ) துருசுச்சுண்ணம் சேர்த்துச் சாறு எடுத்தல்

விராலி என்பது ஒருவகைச்செடி. இதன் இலையில் நீர்த் தன்மை காணப்படுவதில்லை. எனவே இடித்துப் பிழிதல் போன்ற முறைகளால் இதன் சாற்றை இலகுவிற் பெறுதல் இயலாது. விராலி இலையுடன் துருசுச் சுண்ணம் சேர்த்துச் சிறிது நேரம் வைக்க, இலை மென்மையடையும். பின்னர் அதனை இடித்துப் பிழியச் சாறு வெளிப்படும். விராலி இலை முழுவதையும் ஓர் இடத்தில் குவித்து வைத்து அதன் மீது துருசுச்சுண்ண நீரைத் தெளித்து அல்லது ஒவ்வோர் இலையாகத் துருசுச்சுண்ணநீரில் நனைத்தும் எடுக்கலாம். இந்த முறையில் இலையை மென்மையடையச் செய்து இடித்துச் சாற்றைப் பிழிந்து எடுக்கலாம்.



# கூட்டுச் சரக்குகள்
# COMPOUND DRUGS

**இரு சரக்குகள்**

| | |
|---|---|
| இரு சீரகம் — | நற்சீரகம்<br>கருஞ்சீரகம் |
| இரு சந்தனம் — | வெண் சந்தனம்<br>செஞ் சந்தனம் |
| இரு மஞ்சள் — | கறிமஞ்சள்<br>மரமஞ்சள் |
| இரு நன்னாரி — | சிறு நன்னாரி<br>மலை நன்னாரி |

**மூன்று சரக்குகள்**

| | |
|---|---|
| திரிகடுகு — | சுக்கு<br>மிளகு<br>திற்பலி |
| திரிபலை — | கடுக்காய்<br>தான்றிக்காய்<br>நெல்லிக்காய் |
| திரிசாதம் — | இலவங்கப் பட்டை<br>இலவங்கப் பத்திரி<br>ஏலக்காய் |
| திரிசாதி — | சாதிக்காய்<br>கராம்பு<br>வசுவாசி |
| திரிகண்டகம் — | கண்டங்கத்தரி<br>நெருஞ்சில்<br>பூனைக்காலி |
| திரிகந்தம் — | அகில்<br>சந்தனம்<br>தேவதாரு |

| | | |
|---|---|---|
| திரிகாயம் | — | பெருங்காயம்<br>கடுகு<br>வெள்ளுள்ளி |
| திரி மஞ்சள் | — | கறிமஞ்சள்<br>மரமஞ்சள்<br>கஸ்தூரி மஞ்சள் |
| திரி நிம்பம் | — | வேம்பு<br>கறிவேம்பு<br>நிலவேம்பு |
| திரி பத்திரி | — | இலவங்கப் பத்திரி<br>சாதி பத்திரி<br>தாளிச பத்திரி |
| திரி மூலம் | — | சிறுதேக்கு மூலம்<br>திற்பலி மூலம்<br>சித்திர மூலம் |
| திரி சுகந்தம் | — | சாதிக்காய்<br>சாதிபத்திரி<br>கராம்பு |
| திரிலவங்கம் | — | கராம்பு<br>அகில்<br>சண்பகப் பூ |
| முக்கூட்டெண்ணெய் | — | பசுநெய்<br>நல்லெண்ணெய்<br>ஆமணக்கெண்ணெய் |
| முக் கனி | — | வாழைப் பழம்<br>மாம் பழம்<br>பலாப் பழம் |

## நான்கு சரக்குகள்

| | | |
|---|---|---|
| சதுர் ஜாதம் | — | இலவங்கப் பட்டை<br>இலவங்கப் பத்திரி<br>ஏலக்காய்<br>சிறுநாகப் பூ |



## ஐந்து சரக்குகள்

| | | |
|---|---|---|
| ஐங்காயம்<br>(யாழ்ப்பாணப் பகுப்பு முறை) | — | சுக்கு<br>மிளகு<br>திற்பலி<br>பெருங்காயம்<br>வெள்ளுள்ளி |
| ஐங்காயம்<br>(இந்தியப் பகுப்பு முறை) | — | சுக்கு<br>மிளகு<br>கடுகு<br>பூண்டு<br>பெருங்காயம் |
| ஐங்காயம்<br>(வேறொரு பகுப்பு முறை) | — | ஓமம்<br>கடுகு<br>வெந்தயம்<br>வெள்ளுள்ளி<br>பெருங்காயம் |
| ஐங்காரம்* | — | சீனாக்காரம்<br>வெங்காரம்<br>அப்பளகாரம்<br>பொரிகாரம்<br>சவர்க்காரம் |
| ஐங்கோலம்<br>(இந்தியப் பகுப்பு முறை) | — | கருஞ்சீரகம்<br>கடுகு<br>ஓமம்<br>வேப்பம் வித்து<br>இலுப்பை வித்து |
| ஐங்கோலம்<br>(யாழ்ப்பாணப் பகுப்பு முறை) | — | சுக்கு<br>திற்பலி<br>திற்பலிமூலம்<br>செவ்வியம்<br>கொடிவேலி |
| ஐந்து வெறிகள் | — | வசுவாசி<br>மதனகாமியப் பூ<br>பொஸ்தாக்காய்<br>சலாமிருசி<br>சாதிக்காய் |

* 222 ஆம் பக்கம் பார்க்க

ஐங்கூட்டெண்ணெய்
— மூன்று வகை

| I | II |
|---|---|
| ஆமணக்கெண்ணெய் | ஆமணக்கெண்ணெய் |
| வேப்பெண்ணெய் | வேப்பெண்ணெய் |
| நல்லெண்ணெய் | நல்லெண்ணெய் |
| புங்கெண்ணெய் | புங்கெண்ணெய் |
| புன்னையெண்ணெய் | இலுப்பெண்ணெய் |

III

ஆமணக் கெண்ணெய்
வேப்பெண்ணெய்
புங்கெண்ணெய்
புன்னையெண்ணெய்
கடுகெண்ணெய்
} இதனை ஐந்து நெய்கள் என்றும் கூறுவர்

குறிப்பு :

மேற்குறிப்பிட்டவாறு ஐங்கூட்டெண்ணெயை மூன்று வகைகளாக வேறுபடுத்திப் பகுத்திருப்பதை நூல்களில் அவதானிக்கலாம்.

ஐந்து உப்பு

| I | II |
|---|---|
| கறியுப்பு | கறியுப்பு |
| கல்லுப்பு | கல்லுப்பு |
| இந்துப்பு | இந்துப்பு |
| கறுப்புப்பு | வளையலுப்பு |
| வெடியுப்பு | பூநீறு |

I. M S மருந்தகம், யாழ்ப்பாணம் — முறை
II. சித்த மருத்துவ ஆய்வுக் கோவை – தஞ்சாவூர் முறை.

பஞ்ச கௌவியம் — பால்
தயிர்
வெண்ணெய்
கோசலம் (பசுநீர்)
கோமயம்



பஞ்ச இரசம் அல்லது பஞ்ச சூதம் — இரசம்
இலிங்கம்
இரசசெந்தூரம்
வீரம்
பூரம்

பஞ்ச திரவியம் (யாழ்ப்பாணப் பகுப்பு முறை) — இலவங்கப்பட்டை
இலவங்கப் பத்திரி
விலாமிச்சு
சண்பகப் பூ
நெல்லிமுள்ளி

பஞ்ச திரவியம் (இந்தியப் பகுப்பு முறை) — ஏலம்
சீரகம்
சண்பகம்
கராம்பு
கோட்டம்

பஞ்ச மூலம் — சுக்கு
திற்பலிமூலம்
பேரரத்தை
சித்திரமூலம்
சிறுதேக்கு

(சில நூல்களில் இதுபற்றிக் குறிப்பிடுகையில், சிறுதேக்குக்குப் பதிலாக செவ்வியமும் கூறப்பட்டுள்ளது.)

பஞ்சமூலம் (வேறு பகுப்பு முறை) — சுக்கு
சிற்றரத்தை
பேரரத்தை
சிறுதேக்கு
செவ்வியம்

பஞ்ச மோகினி — கஸ்தூரி
கோரோசனை
குங்குமப்பூ
புனுகு
பச்சைக் கற்பூரம்

| | |
|---|---|
| பஞ்ச வர்க்கம்<br>அல்லது<br>பஞ்ச வாசம் | — ஏலம்<br>இலவங்கம்<br>சாதிக்காய்<br>சிறுநாகப்பூ<br>கற்பூரம் |
| பஞ்ச நிம்பம்<br>அல்லது<br>பஞ்ச வேம்பு | — வேம்பு<br>மலைவேம்பு<br>கறிவேம்பு<br>சிவநார் வேம்பு<br>நிலவேம்பு |
| பஞ்ச பாடாணம் | — சாதிலிங்கம்<br>தாளகம்<br>வீரம்<br>கௌரி பாடாணம்<br>வெள்ளைப் பாடாணம் |
| பஞ்ச கற்பம் | — கடுக்காய்த் தோல்<br>கஸ்தூரி மஞ்சள்<br>நெல்லி<br>மிளகு<br>வேப்பம் வித்து |
| பஞ்ச வில்வம் | — வில்வை<br>நொச்சி<br>மாவிலங்கு<br>முட்கிளுவை<br>விளாத்தி |
| பஞ்சா மிலம்<br>(பஞ்ச + அமிலம்) | — புளி<br>மாதுளை<br>நெல்லி<br>இலந்தை<br>எலுமிச்சை |
| பஞ்சாமிர்தம் | — வாழைப் பழம்<br>மாம் பழம்<br>மாதுளம் பழம்<br>பலாப் பழம்<br>தேங்காய்த் துருவல் |



| | |
|---|---|
| பஞ்ச திக்தம் | — பேய்ப்புடோல்<br>நன்னாரி<br>கடுகுரோகிணி<br>கோரை<br>வட்டத்துத்தி |
| பஞ்ச துவர்ப்பி | — அத்தி<br>இத்தி<br>ஆல்<br>அரசு<br>நாவல் |
| மகா பஞ்சமூலம் | — வில்வை<br>பாதிரி<br>பெருமுன்னை<br>பெருவாகை<br>தழுதாளை |
| சிறு பஞ்சமூலம்<br>அல்லது<br>இலகு பஞ்சமூலம் | — கண்டங்கத்தரி<br>வட்டுக்கத்தரி<br>யானை நெருஞ்சி<br>சிற்றாமல்லி<br>பேராமல்லி |
| பஞ்ச லோகம் | — பொன்<br>வெள்ளி<br>செம்பு<br>இரும்பு<br>காரீயம் |

**அறு சரக்குகள்**

| | |
|---|---|
| ஆறு அரிசிகள் | — நெல் அரிசி<br>கார்போகரிசி<br>விளாலரிசி<br>மல்லி<br>வெட்பாலரிசி<br>வாலுளுவையரிசி |

## எண் சரக்குகள்

| | | |
|---|---|---|
| அட்டகாயம் | — | திரிகடுகு<br>இருசீரகம்<br>பெருஞ்சீரகம்<br>ஓமம்<br>பெருங்காயம் |
| அட்ட மூலம் | — | கோரைக் கிழங்கு<br>விஷ்ணுகிராந்தி<br>பேய்ப்புடோல்<br>சீந்தில்<br>கஞ்சாங்கோரை<br>ஆடாதோடை<br>கருந்துளசி<br>பற்படாகம் |
| அட்ட வர்க்கம் | — | திரிகடுகு<br>இந்துப்பு<br>பெருங்காயம்<br>இருசீரகம்<br>ஓமம் |
| அட்ட வகை | — | சிற்றரத்தை<br>பேரரத்தை<br>செவ்வியம்<br>சித்திரமூலம்<br>சிறுதேக்கு<br>நன்னாரி<br>கோரை<br>சிறுகாஞ்சோன்றி |
| அட்ட சந்தனம் | — | அகில்<br>சந்தனக் கட்டை<br>கோட்டம்<br>இலவங்கப் பட்டை<br>இலவங்கப் பத்திரி<br>பச்சைக் கற்பூரம்<br>குங்குமப்பூ<br>கஸ்தூரிமஞ்சள் |



| | | |
|---|---|---|
| அட்ட லோகம் | — | பொன்<br>வெள்ளி<br>நிமிளை<br>இரும்பு<br>காந்தம்<br>துத்தநாகம்<br>மண்டூரம்<br>தாமிரம் |

## ஒன்பது சரக்குகள்

| | | |
|---|---|---|
| நவதானியம் | — | நெல்<br>கோதுமை<br>துவரை<br>பயறு<br>கடலை<br>அவரை<br>எள்ளு<br>உழுந்து<br>கொள்ளு |
| நவரத்தினம் | — | கோமேதகம்<br>வைடூரியம்<br>புஷ்பராகம்<br>பவளம்<br>நீலம்<br>முத்து<br>மாணிக்கம்<br>மரகதம்<br>வைரம் |

### பத்துச் சரக்குகள்

| | |
|---|---|
| தசாங்கம் | — அகில் |
| | தேவதாரு |
| | சந்தனம் |
| | விலாமிச்சு |
| | வெட்டிவேர் |
| | குங்கிலியம் |
| | மருக்கொழுந்து |
| | சர்க்கரை |
| | நெய் |
| | தேன் |
| தசமூலம் | — சிற்றாமுட்டி |
| | பேராமுட்டி |
| | சிறுநெருஞ்சி |
| | கண்டங்கத்தரி |
| | வட்டுக்கத்தரி |
| | வில்வை |
| | பாதிரி |
| | முன்னை |
| | பெருங்குமிழ் |
| | பெருவாகை |

※

குறிப்பு !

**ஐங்காரம்** என்று குறிப்பிட்டவற்றுள் வெங்காரம், பொரிகாரம் ஆகிய இரண்டும் அடங்கும் (பார்க்க : பக்கம் 215). பொதுவாக, வெங்காரத்தைச் சுத்தி செய்வதற்குப் பொரித்து எடுக்கின்றனர். பொரித்த பின், அதிலுள்ள நீர்த்தன்மை நீங்கிவிடும். வெங்காரத்தை பொரித்து எடுக்க பொரிகாரம் என்பர். அதே வேளையில் வெங்காரத்தின் மறுபெயர் பொரிகாரம் என்றும் சில நூல்கள் கூறுகின்றன (உ-ம் குணபாடம், தாது - சீவ வகுப்பு).

வழக்கத்தில் பொரிகாரத்தை எண்ணெய்க் கசிவான ஒரு பொருளாகவே மருந்துக் கடைகளில் விநியோகிக்கின்றனர். எனவே, ஒரு மருந்து முறையில் வெங்காரமும், பொரிகாரமும் சேர்க்குக எனக் குறிப்பிட்டிருப்பின், பொரிகாரத்தை வாங்கும் பொழுது எண்ணெய்க்காரம் என்று மருந்துக் கடையில்கேட்டு வாங்கவேண்டும். மேலும் இந்நூலின் 67 ஆம் பக்கத்திலுள்ள வெள்ளை வெங்காயக் குளிகை என்ற பகுதியில் குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க.



### வழக்கிலுள்ள சில மருத்துவக் கலைச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களும், வட சொற்களும்.

| தமிழ்ச் சொற்கள் | வட சொற்கள் |
|---|---|
| அயர்வு | அசதி |
| அழல் நோய் | பித்த ரோகம் |
| ஆண் குறிப் புற்று | இலிங்கப் புற்று |
| இருமல் | காசம் |
| இடப்பாட்டீரல் வீக்கம் | பிலீக விருத்தி |
| இரைப்பிருமல் | சுவாச காசம் அல்லது தமக சுவாசம் |
| இளைப்பு நோய் | க்ஷயம் அல்லது இராஜஸ்மா |
| உடல் குளிர்ச்சி | உடல் சில்லிடல் |
| உறுப்புக்கள் | அவயவங்கள் |
| உடல் | சரீரம் |
| உணவு வெறுப்பு | அரோசகம் |
| ஊதல் நோய் | சோபை |
| எருவாய் முளைநோய் | மூலம் அல்லது அர்ஸஸ் |
| எழு ஞாயிறு | சூரியா வர்த்தம் |
| ஏற்பு நோய் | தனுர் வாதம் |
| என்புச் சுரம் | அஸ்தி சுரம் |
| என்பு வெட்டை | அஸ்தி வெட்டை |
| ஏழு தாதுக்கள் | சப்த தாதுக்கள் |
| ஐயநோய் | கப ரோகம் அல்லது சேத்துமப் பிணி |
| கடுங் காய்ச்சல் | தாப சுரம் |
| கடுப்புக் கழிச்சல் | சீதபேதி |
| கண்நோய் | நேத்திர ரோகம் |
| கழிச்சல் | பேதி |
| குடல் இளைப்பு நோய் | உளை மாந்தை |
| குடற் பூச்சிகள் | குடற் கிருமிகள் |
| குருதி | உதிரம் |
| குழந்தைகள் | பாலர்கள் |
| குளியல் | ஸ்நானம் |
| கெட்ட நாற்றம் | துர் நாற்றம் |
| கெட்ட தசை | துர் மாமிசம் |

| தமிழ்ச் சொற்கள் | வட சொற்கள் |
|---|---|
| சளி, தடிமன் | ஜலதோஷம் |
| செம்பு | தாமிரம் |
| தலைக்குத் தைலம் தேய்த்துக் குளித்தல் | அப்பியங்கனம் செய்தல் |
| தலைவலி | சிரஸ் சூலை |
| தொழுநோய் | குஷ்டம் (குட்டம்) |
| தோல் நோய் | சர்மநோய் (சரும நோய்) |
| தோல் மரப்பு | சர்மத் திமிர் |
| நச்சு / நஞ்சு | விஷம் / விடம் |
| நிணக் கழிச்சல் | கிராணி |
| நீர் / தண்ணீர் | ஜலம் |
| நீர் அருகல் / நீர்சுருக்கு | மூத்திரக் கிரிச்சரம் |
| நாட்பட்ட காய்ச்சல் | புராண சுரம் |
| நெல்லிக்காய்த் தைலம் | ஆமலகத் தைலம் |
| நோய்கள் (பிணிகள்) | ரோகங்கள் (வியாதிகள்) |
| பக்க வாதம் | பாரிசவாதம் / பாரிச வாயு |
| பசிமந்தம் | அக்கினி மந்தம் |
| படுஞாயிறு | சந்திரா வர்தம் |
| பற்சொதி | தந்த சூலை |
| புண் | விரணம் |
| பூப்புக் காலம் (மாதவிடாய்க் காலம்) | ருது காலம் |
| பெண்குறி | யோனி |
| பெருங்கழிச்சல் (வயிற்றோட்டம்) | அதிசாரம் |
| பெரு வயிறு | மகோதரம் |
| பைத்தியம் | உன்மாதம் |
| பொருமல் | உப்புசம் |
| மஞ்சள் நோய் (மஞ்சட் காமாலை) | காமாலை |
| மலக் கட்டு (மலச்சிக்கல்) | மலபந்தம் |
| மாந்தக் கழிச்சல் | மாந்தபேதி |
| முழு உடம்பு வலி | சர்வாங்க வலி |
| மூக்கு | நாசி |
| மேல் வாயு | அந்தர வாயு |



| தமிழ்ச் சொற்கள் | வட சொற்கள் |
|---|---|
| வயிறு | உதரம் |
| வலப்பாட்டு ஈரல் (கல்லீரல்) | யக்கிருத் |
| வளி நோய் | வாத ரோகம் |
| வன்மை குறைதல் | பலஹீனம் (பலவீனம்) |
| வாந்தி | வமனம் (சத்தி) |
| விரை | அண்டம் / பீஜம் |
| வெண்நீர் (விந்து) | சுக்கிலம் |
| வெப்பம் | உஷ்ணம் |
| வெள்ளை | பிரமேகம் (பிரமியம்) |
| வெழுப்பு நோய் | பாண்டு ரோகம் |

## பருவ காலம்

| பெரும் பொழுது | | ருது சரியை |
|---|---|---|
| காலம் | பருவங்கள் (தமிழ்ச் சொல்) | ருதுக்கள் (வடசொல்) |
| சித்திரை, வைகாசி | இளவேனிற் காலம் | வசந்த ருது |
| ஆனி, ஆடி | முதுவேனிற் காலம் | கிரீஷ்ம ருது |
| ஆவணி, புரட்டாதி | கார் (மழைக்) காலம் | வருஷ ருது |
| ஐப்பசி, கார்த்திகை | கூதிர் (குளிர்) காலம் | சரத் ருது |
| மார்கழி, தை | முன் பனிக் காலம் | ஹேமந்த ருது |
| மாசி, பங்குனி | பின் பனிக் காலம் | சிசிர ருது |

## தமிழ் எண்கள்

பண்டைய சித்த மருத்துவ நூல்களிற் கையாண்டுள்ள எண்கள் தமிழ் எண்களாகும். அவை இப்பொழுது வழக்கிழந்துபோனதால், அவ்வெண்களைக் கண்டறிவதிற் பலர் இடர்ப்படுகின்றனர். எனவே, அந்த எண்களைப் பெரிய அளவிலும் வழக்கிலுள்ள ஆங்கில, உரோம எண்களுடன் நடுவணாகவும் வரச் சேர்த்துள்ளமை பயில்வோர் நன்மை கருதியாகும். அடுத்த பக்கத்தில் ( 226 ஆம் பக்கம் ) அவை தரப்பட்டுள்ளன.

எ ண் க ள்

| ஆங்கிலம் | தமிழ் | உரோமன் |
|---|---|---|
| 1 | ௧ | I |
| 2 | ௨ | II |
| 3 | ௩ | III |
| 4 | ௪ | IV |
| 5 | ௫ | V |
| 6 | ௬ | VI |
| 7 | ௭ | VII |
| 8 | ௮ | VIII |
| 9 | ௯ | IX |
| 10 | ௰, ௧0 | X |
| 100 | ௱ | C |
| 200 | ௨௱ | CC |
| 300 | ௩௱ | CCC |
| 400 | ௪௱ | CD |
| 500 | ௫௱ | D |
| 600 | ௬௱ | DC |
| 700 | ௭௱ | DCC |
| 800 | ௮௱ | DCCC |
| 900 | ௯௱ | CM |
| 1000 | ௲ | M |



## சீந்திற் சர்க்கரை எடுக்கும் முறை

சீந்தில் கொடியை எடுத்துச் சிறு சிறு துண்டுகளாகக் குறுக்கே சீவி எடுக்கவும். பின்னர் அத்துண்டுகளை உரலிலிட்டு ஒரளவுக்கு நொருக்கி இடிக்கவும். பின் அதனைக் குளிர்ந்த நீரில் இட்டுக் கலக்கித் தெளிய விடுக. மறுநாள் நீரில் மிதக்கும் சக்கை களைக் கையால் கசக்கிப் பிழிந்தபின், சக்கையை எடுத்துவிடவும். பிறகு அதனை இரண்டு அல்லது மூன்று மணிநேரம் வெயிலில் வைக்கும்பொழுது நீர் தெளியும். அந்த நீரைச் சிறிது சிறிதாக வெளியேற்றவும். பின்பு சுத்த நீர்விட்டு முன்புபோல் கலக்கித் தெளிய வைத்து நீரை வெளியேற்றவும். இதேபோல் மீண்டும் ஒருமுறை செய்து தெளியவிட்டு, அடியிற் படிந்திருக்கும் மாவை எடுத்து உலர்த்தி வைக்கவும். இதனையே சீந்திற் சர்க்கரை அல்லது அமுது சர்க்கரை என்பர்.

### குறிப்பு :

சீந்தில் கொடி முற்றியதாயின், எடுக்கும் சத்துமா தூய வெண்மையாக இருக்கும்.

கொடி முற்றாத நிலையில் இருப்பின், எடுக்கும் சத்துமா பழுப்பு (தூய வெள்ளையற்ற) வெண்மையாக இருக்கும்.

## தீ நீர்

இது இரு வகைப்படும்.

1. சரக்குகளைச் சேர்த்து வாலையிலிட்டுத் தண்ணீர் சேர்த்து அடுப்பேற்றி எரித்து இறக்குவது ஒரு வகை. இதனைத் தீ நீர் என்பர்.

   உ + ம் : சந்தனக் கட்டை – சந்தனத் தைலம்

2. உப்பு வகைகளை வாலையிலிட்டு எரித்து இறக்குவது மற்றொரு வகை. இதனைப் புகைநீர் எனவும் திராவகம் எனவும் கூறுவர்.

   உ + ம் : சங்கத் திராவகம்

மேற்கூறிய இரண்டையும் "சக்தி நீர்" என வழங்குவதும் உண்டு.

செயநீர் எனக் கூறும்போது வெடியுப்புச் செயநீர் முறையைக் கவனிக்குக (பக்கம் 152 பார்க்க).

# அனுபானம்

### தேன் –

செந்தூர பற்பங்களுக்குப் பொதுவாக தேன் ஒரு சிறந்த அனுபானமாக உபயோகிக்கப்படுகின்றது. தற்காலத்தில் வியாபார நோக்கிலே தேனில் கலப்படம் செய்வதைக் காணக் கூடியதாயுள்ளது. இது சுதேச மருத்துவத் துறைக்கு ஓர் இழுக்காகும். இதனால் நல்ல தேனையும், போலித் தேனையும் பிரித்துக் காண்பதற்குத் தேவையான அறிவைப் பொதுமக்கள் பெற்றிருத்தல் வேண்டும். இதற்கான அறிவுறுத்துரைகளைக் கூறுதல் மருத்துவர்களின் தலையாய கடமையாகும்.

### தூய தேனைப் பரிசோதித்து அறியும் முறை

1. நல்ல தேனைச் சுவைத்து விழுங்கும்போது தொண்டையில் கரகரப்பாக இருக்கும்.
2. நீர் ஊறக்கூடிய கடதாசியில் நல்ல தேனில் சிறிதை விட்டால் மறுபக்கத்தில் ஊறாமல் இருக்கும்.
3. ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் நீரை நிரப்பி அதற்குள் நல்ல தேன் துளிகளை விட்டால், அது கரையாமல் முத்துப்போல் கீழே இறக்கிக் காணப்படும்.
4. தேனுடன் சோடியம் சல்பைட் (Sodium Sulphide) டைச் சேர்த்துக் கலக்கும்போது அதனில் சர்க்கரை இருக்குமாயின், ஒரு வெள்ளைப் படை காணப்படும். நல்ல தேனில் அவ்வாறு காணப்படமாட்டாது.

| | | | |
|---|---|---|---|
| 1 அவுன்ஸ் | இரவம் | — | 31. 25 ml |
| 1 ,, | தேன் | ≏ | 28 — 30 கிராம் |
| 1 ,, | நெய் | ≏ | 25 — 26 ,, |
| 1 போத்தல் | தேன் | ≏ | 672 — 720 கிராம் |
| 1 ,, | நெய் | ≏ | 600 — 624 ,, |

மேலே குறிப்பிட்டுள்ள ≏ என்ற குறியீடு அண்ணளவாக அல்லது தோராயமாக என்பதைக் குறிக்கும்.

### தாய்ப் பால் –

இந் நூலில் அனுபானம், துணை மருந்து என்பன வேறு படுத்திக் காட்டப்பட்டுள்ளன (பக்கம் 143 பார்க்க).



எமது பண்டைய சித்த மருத்துவர்கள் தாய்ப்பாலைச் சிறந்த அனுபானமாகக் கைக்கொண்டு வந்துள்ளனர். இன்றும் குழந்தைகட்கு அனுபானமாக அதனை உபயோகித்து வருகின்றனர். அத்துடன் தலைக்கு வைக்கும் எண்ணெய்களுக்கும் தாய்ப்பாலை மூன்பு உபயோகித்துள்ளனர். தாய்மார் இதனை உணர்ந்து தமது மழலைச் செல்வங்களுக்குப் பாலூட்டுவதிற் கரிசனை எடுக்கவேண்டும். ''பால் நினைந்தூட்டும் தாய்'' என்ற மணிவாசகர் வாக்கும் இங்கு சிந்தனைக்குரியது.

இன்றைய காலகட்டத்தில் இம் முறை அருகி வருகின்றது. இந்நிலையில் தாய்ப்பாலின் இடத்துக்கு பசுப்பாலை தைலங்களுக்குச் சேர்க்கவேண்டி உள்ளது.

கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் தாய்ப்பாலுக்கும் பசுப்பாலுக்கும் இடையில் அடங்கியுள்ள சத்துக்களின் ஒற்றுமை வேற்றுமைகளைக் காணலாம்:

| அடங்கிய பொருட்கள் | | தாய்ப்பால் | பசும்பால் |
|---|---|---|---|
| நீர் | (Water) | 88.4 % | 87.1 % |
| புரதம் | (Protein) | 1.5 % | 3.2 % |
| கொழுப்பு | (Fat) | 3.3 % | 3.9 % |
| லக்ரோஸ் | (Lactose) | 6.5 % | 4.9 % |
| உப்புக்கள் | (Salts) | .3 % | .9 % |
| மொத்தம் | | 100 % | 100 % |

குழந்தைகளின் உடல் வளர்ச்சி, மன வளர்ச்சிக்குத் தாய்ப் பாலே சிறந்தது. இதனை இன்று மேற்கத்திய மருத்துவர்களும் அங்கீகரித்ததுடன் வலியுறுத்தியும் வருகின்றனர்.

சிலருக்குப் பசும்பால் ஒத்துக் கொள்ளாமல் இருக்கலாம். அப்படியானவர்கள் பசும்பாலைக் காய்ச்சும் போது மூன்று அல்லது நான்கு மிளகைப் போட்டுக் காய்ச்சி, பின்னர் மிளகை வெளியே எடுத்துவிட்டுப் பாலை உபயோகிக்கலாம். பாலில் உள்ள வாய்வு, மந்தம் போன்றவை நீங்குவதால் வயிற்றுக்கு ஒத்துவரக் கூடியதாய் இருக்கும்.

குழந்தைகட்குப் பசும்பாலுடன் தூய வெந்நீரைக் கலந்து செறிவைக் குறைத்து உபயோகிக்கவும்.

## புடங்களின் வகை

| | | |
|---|---|---|
| காடைப் புடம் | — | ஒரு வராட்டி கொண்டு போடும் புடம் |
| கவுதாரிப் புடம் | — | மூன்று வராட்டி கொண்டு போடும் புடம். |
| இலகு புடம் | — | ஐந்து வராட்டி கொண்டு போடும் புடம். |
| குக்குட புடம் (சேவல்) | — | பத்து வராட்டி கொண்டு போடும் புடம். |
| வராக புடம் (பன்றி) | — | ஐம்பது வராட்டி கொண்டு போடும் புடம். |
| கஜ புடம் | — | நூறு வராட்டி கொண்டு போடும் புடம். |
| கஜ புடம் (யானை) | — | ஆயிரம் வராட்டி கொண்டு போடும் புடம். |
| சாண் புடம் | — | ஒரு சாண் நீளம்.<br>,, ,, அகலம்.<br>,, ,, உயரம். |
| முழப் புடம் (முழுப்புடம்) | — | ஒரு முழம் நீளம்.<br>,, ,, அகலம்<br>,, ,, உயரம் |
| பூ புடம் | — | பூமியில் புதைத்து வைத்தல். |
| தானிய புடம் | — | தானியத்திற்குள் புதைத்து வைத்தல். |
| (உ + ம் - நெற்புடம் | — | நெல்லுள் புதைத்து வைத்தல்) |
| உமிப் புடம் | — | உமியில் புதைத்து வைத்தல் |
| சூரிய புடம் | — | வெயிலிற் வைத்து எடுத்தல் |
| சந்திர புடம் | — | சந்திர வெளிச்சத்தில் வைத்து எடுத்தல். |
| அமாவாசைப் புடம் | — | அமாவாசையன்று திறந்த வெளியில் வைத்து எடுத்தல். |
| பனிப் புடம் | — | பனியில் வைத்து எடுத்தல் |
| பருவ புடம் | — | குறித்த பருவத்தன்று திறந்த வெளியில் வைத்து எடுத்தல். |



| | | |
|---|---|---|
| பட்டைப் புடம் | — | மரத்தைத் துளைத்து அதற்குள் மருந்தை வைத்து,குடைந்தெடுத்த மரத்தூளால் துளையை மூடி வைத்திருந்து, குறிப்பிட்ட நாள் கழித்தெடுத்தல். |

**மணல் மறைவு புடம் –**

மணல் மறைவு புடம் தயாரிப்பதற்கு முதலில் மருந்துகளைச் சிறு சிறு பொட்டணமாகக் கட்டிக் கொள்க. பின் ஒரு கலத்தின் பாதியளவுக்கு மணலை நிரப்பி அதில் இப்பொட்டணங்களை வைத்து, மேலும் மணலைக் கொட்டிய பிறகு, வாய் பொருந்தும்படி மற்றொரு கலத்தால் மூடிச் சிலைமண் செய்து பெரும் புடமிடவும். சூடு ஆறியதும் பொட்டணங்களை எடுத்து, மருந்தை அரைத்து வைத்திருந்து உபயோகிக்கலாம்.

உதாரணம் - கௌரி சிந்தாமணி, செந்தூரம்

**குறிப்பு :**

மணல் மறைவு புடம் என்பதைத் தொண்ணூறு வராட்டியில் போடுவது எனவும் கூறுகின்றனர்.

ஆதாரம் : குணபாடம் தாது சீவ வகுப்பு நூல்

**வராட்டியின் அளவு –**

பசுஞ் சாணத்தால் வராட்டி செய்தல் வேண்டும்.

விட்டம் = 30 செ. மீ

அகலம் (தடிப்பு) = 1.25 செ. மீ

வராட்டியின் விட்டம் மேற் குறிப்பிட்டவாறு கூறப்பட்டிருப்பினும்,வழக்கத்தில் 15 — 20 செ. மீ அளவிலேயே செய்கின்றனர்.

**சூரண புடம் –**

சூரணத்தைப் புடம் போடும்படி கூறப்பட்டிருப்பின், ஒரு மண்சட்டியை எடுத்து அடுப்பேற்றிச் சூடாக்கிய பின், சட்டியை இறக்கி வைத்து அதற்குள் சூரணத்தைக் கொட்டி நகச்சூடு ஏறும்வரை வறுத்தெடுத்து, பிறகு, கல்வத்திலிட்டு அரைத்தெடுத்தல் வேண்டும்,

உதாரணம் — சுக்குச் சூரணம் — ஏழுமுறை வறுத்தெடுத்தல் வேண்டும்.

## மருந்துகளைப் பழக வைத்தல்

சில மருந்துகளைத் தயாரித்து உடனடியாக நோயாளிகளுக்குக் கொடுக்காமல், அவற்றைக் குறிப்பிட்ட சில நாட்களுக்கு கைதொடாது வைத்திருந்த பின், எடுத்து உபயோகிக்கும் முறை பழக வைத்தல் எனலாம்.

உதாரணம் — இரச செந்தி மெழுகு
இடிவல்லாதி மெழுகு

## ஐந்திணை நிலங்கள்

| தெய்வம் | நிலம் | நோய் |
|---|---|---|
| திருமால் | முல்லை (காடு) | அழல் நோய் |
| முருகன் | குறிஞ்சி (மலை, குன்று) | ஐய நோய் |
| இந்திரன் | மருதம் (வயல், ஆற்றங்கரை) | வளி, அழல், ஐய நோய் |
| வருணன் | நெய்தல் (கடல் சார்ந்த பகுதி) | வளி நோய் |
| கொற்றவை | பாலை (வரண்ட மணற்சாடு) | உயிர்வாழ்தல் கடினம் |

## ஐம்பூத (பஞ்ச பூத) த் தலங்கள்

| தமிழ்ச் சொற்கள் | வடசொல் | அமைந்துள்ள ஊர் |
|---|---|---|
| நிலம் | பிருதுவி | திருவாரூர், காஞ்சி |
| நீர் | அப்பு | திருவானைக்கா |
| தீ | தேயு | திருவண்ணாமலை |
| காற்று | வாயு | திருக்காளத்தி |
| வெளி | ஆகாயம் | சிதம்பரம் |



## காய கற்பம்

காயம் - உடம்பு ; கற்பம் - அழியாமை

காய கற்பம் என்று கூறும்போது உடம்பு அழியாமல் இருப்பதற்காகக் கையாளும் முறைகளைக் குறிக்கும். இவை மூலிகைகள், தாதுப் பொருட்கள் உயிரினப் பொருட்கள், போன்றவற்றை நாள்தோறும் உபயோகிப்பதாலும், இயம நியமங்களைக் கடைப்பிடிப்பதாலும் யோகப் பயிற்சியாலும் உடம்பின் அழிவைத் தடுக்கலாம். அதாவது நீண்ட ஆயுளை ஏற்படுத்தலாம்.

மேற் குறிப்பிட்ட மூலிகைகள், தாதுப் பொருட்கள், உயிரினப் பொருட்கள், ஆகியவற்றை எக்காலத்திலும் எடுத்துக் கொள்ளலாம். காய கற்பம் பெரும்பாலும் மூலிகைப் பொருட்களால் ஆனவை. எடுத்துக்காட்டாக தேனூறல், பிட்டு, கற்கம், குடிநீர், வற்றல் என்ற பலவகை வடிவங்களிலிருக்கும். இவை தவிர, மருந்துகளாகத் தயாரித்து, அவற்றினை நாள்தோறும் உண்பதனையும் கற்ப மருந்து எனலாம். இதனை எமது பண்டைய வைத்தியர்கள் நடை மருந்து என்றும் கூறுவர். உதாரணமாக அயக் குழம்பு, அய பிருங்கராஜ கற்பம், பூரண சந்திரோதயம் என்பவற்றைக் குறிப்பிடலாம். கற்பங்கள் உள் மருந்தாக மட்டுமன்றி, வெளிப்பூச்சு, முழுக்கு முதலிய வெளியாட்சியாகவும் பயன்படுத்துவதுண்டு.

## மருந்து சார்ந்த இயல்கள்

| மருந்து இயல் | நேரொத்த ஆங்கிலச் சொற்கள் |
|---|---|
| மருந்து முறையியல் | Pharmacology |
| மருந்து வேலையியல் (செயலாற்றல்) | Pharmacodynamics |
| மருந்து செய்யியல் (தயாரிப்பு) | Pharmaceutics |
| மருந்தாளுகலை | Pharmacy |
| மருந்துப் பண்பியல் | Pharmacognosy |
| தேர்வு மருந்து முறையியல் | Experimental Pharmacology |
| மருந்து வேதியியல் (இரசாயனம்) | Chemotherapy |

# மருத்துவ அளவைகள்

## நிறுத்தலளவை

| | | |
|---|---|---|
| 1 உளுந்து | 1 கிரெயின் அண்ணளவு (ஏறக்குறைய) | 65 மி. கிராம் |
| 4 யவம் | 1 குன்றி 2 கிரெயிள் | 130 மி. கிராம் |
| 1 மஞ்சாடி | 4 கிரெயின் (அண்ணளவு) | 260 மி. கிராம் |
| 6 குன்றி | 1 மாஷம் | 780 மி. கிராம் |
| 3.75 குன்றி | 1 பண எடை | 488 மி. கிராம் |
| 32 குன்றி | 1 வராகனெடை (1 டிராம்) | 4.16 கிராம் |
| 40 குன்றி | 1 கழஞ்சு | 5.2 கிராம் |
| 10 வராகனெடை | 1 பலம் (பெரிய) | 41.6 கிராம் |
| 0.25 பலம் | 1 கஃசு அல்லது 1 கைசா | 10.4 கிராம் |
| 1 தோலா | 180 கிரெயின் | 11.7 கிராம் |
| 3 தோலா | 1 பலம் (சின்ன) | 35 கிராம் |
| 8 பலம் (சின்ன) | 1 சேர் | 280 கிராம் |
| 40 பலம் (சின்ன) | 1 வீசை (3 இறா. 2 அவு) | 1.4 கி. கிராம் |
| 50 பலம் (சின்ன) | 1 தூக்கு | 1.75 கி. கிராம் |
| 2 தூக்கு | 1 துலாம் | 3.5 கி. கிராம் |

## முகத்தலளவை

| | | |
|---|---|---|
| 360 நெல் | 1 சோடு | 33.6 மி. லீற் |
| 5 சோடு | 1 ஆழாக்கு | 168 மி. லீற் |
| 2 ஆழாக்கு | 1 உழக்கு | 336 மி. லீற் |
| 2 உழக்கு | 1 உரி | 672 மி. லீற் |
| 2 உரி | 1 நாழி (படி) | 1.344 லீற் |



| | | | | |
|---|---|---|---|---|
| 4 நாழி | = | 1 குறுணி = (மரக்கால்) | = | 5.376 லீற் |
| 2 குறுணி | = | 1 பதக்கு | = | 10.75 லீற் |
| 3 குறுணி | = | 1 முக்குறுணி | = | 16.1 லீற் |
| 2 பதக்கு | = | 1 தூணி | = | 21.5 லீற் |
| 3 தூணி | = | 1 கலம் | = | 64.512 லீற் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஆழாக்கு | = | 2 பலம் | = | 2½ அவு | = | 78.125 ml |
| 1 உழக்கு | = | 4 பலம் | = | 5 அவு | = | 156. 25 ml |
| 1 உரி | = | 8 பலம் | = | 10 அவு | = | 312. 50 ml |
| 1 நாழி | = | 16 பலம் | = | 20 அவு | = | 625 ml |
| 1 போத்தல் | = | 19.2 பலம் | = | 24 அவு | = | 750 ml |
| 1 படி | = | 32 பலம் | = | 40 அவு | = | 1250 ml |

1 தேக்கரண்டி (Tea Spoonful) = 4 மி.லீ = 1 டிராம்
※ 1 மேசைக் கரண்டி (Table Spoonful) = 15 மி.லீ = ½ அவு
2 மேசைக் கரண்டி = 1 திரவ அவுன்ஸ்
யானை மார்க் சோடா = 375 மி. லீ
பன்ரா (fanta) போத்தல் = 300 ,, ,,
சாராயப் போத்தல் = 750 ,, ,,
பால்புட்டி = 200 ,, ,,

| டிராம் fl dr | அவுன்ஸ் fl oz | துளி min |
|---|---|---|
| 1 ,, | — ,, | 60 ,, |
| 2 ,, | ¼ ,, | 120 ,, |
| 4 ,, | ½ ,, | 240 ,, |
| 6 ,, | — ,, | 360 ,, |
| 8 ,, | 1 ,, | 480 ,, |

| டிராம் fl dr | அவுன்ஸ் fl oz | மி. லீ ml | லீற்றர் Litre |
|---|---|---|---|
| 8 ,, | 1 ,, | — ,, | — ,, |
| 16 ,, | 2 ,, | — ,, | 1/16 ,, |
| 32 ,, | 4 ,, | 125 ,, | 1/8 ,, |
| 48 ,, | 6 ,, | — ,, | — ,, |
| 64 ,, | 8 ,, | 250 ,, | 1/4 ,, |

※ மேசைக் கரண்டியையும் உச்சிக் கரண்டியையும் சமனாகக் கருதலாம்.

# கால அளவை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | நாழிகை | = | 24 | நிமிடம் | | |
| 2.5 | ,, | = | 60 | ,, | = | 1 மணி |
| 1 | முகூர்த்தம் | = | 90 | ,, | = | 1.30 மணி |
| 1 | சாமம் | = | | | = | 3 மணி |
| 8 | ,, | = | 1 | நாள் | | |
| 1 | பட்சம் | = | 15 | நாட்கள் | | |
| 1 | மண்டலம் | = | 45 | ,, | | |
| 1 | பருவகாலம் (ருது) | = | 2 | மாதங்கள் | | |
| 1 | அயனம் | = | 6 | ,, | | |
| 2 | ,, | = | 1 | வருடம் | | |

குறிப்பு :

மண்டலம் என்பது 40, 45, 48 ஆகிய நாட்கள் என உலக வழக்கிலுள்ளது. எனினும், இந்தியாவில் பொதுவாக மண்டலம் என்பது 45 நாட்கள் எனவும், ஈழத்தில் 40 நாட்கள் எனவும் வழக்கத்தில் கொண்டுள்ளனர். இந்திய நாட்டின் வழக்கத்தை இங்குள்ளோர் முற்றாக மறுப்பதில்லை.

**சிறு பொழுது—**

| | |
|---|---|
| வைகறை | எற்பாடு |
| விடியல் | மாலை |
| நண்பகல் | யாமம் |

**நீட்டலளவை**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | விரல் கடை | = | ¾ | அங்குலம் | = | 1.95 | செ. மீ |
| 1 | சாண் | = | 9 | ,, | = | 22.86 | ,, |
| 1 | முழம் | = | 18 | ,, | = | 45.72 | ,, |
| 1 | பாகம் | = | 72 | ,, | = | 182.88 | ,, |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ※ அரிசி எடை | | | | ≏ | 25 | மி. கிராம் |
| பாசிப்பயறுப் பிரமாணம் | ≏ | ½ | கிறெயின் | ≏ | 32.5 | ,, |
| மிளகு / உழுந்துப் பிரமாணம் | ≏ | 01 | ,, | ≏ | 65 | ,, |
| குன்றிப் பிரமாணம் | ≏ | 02 | ,, | ≏ | 130 | ,, |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மஞ்சாடிப் பிரமாணம் | ≏ | 04 | கிரையின் | ≏ | 260 | மி. கிராம் |
| தூதுவளைப் பழப் பிரமாணம் | ≏ | | | ≏ | 100 | ,, |
| வெருகடி (பூனை) (ஐந்து விரல்) | ≏ | 10 | ,, | ≏ | 650 | ,, |
| திரி கடி (மூன்று விரல்) | ≏ | 15 | ,, | ≏ | 975 | ,, |
| கொட்டைப் பாக்களவு | ≏ | | | ≏ | 5 | கிராம் |

※ மேற்கூறப்பட்ட அளவுகள் திட்டவட்டமாகச் சரியானதெனக் கருதமுடியாது. ஏனெனில், மருந்துகளுக்கு மருந்துகள் வேறுபாடடையலாம். இதற்குக் காரணம் மருந்துகளிற் சேரும் சரக்குகளைப் பொறுத்து எடை வேறுபாடு அடையும். தாது வர்க்கச் சரக்குகள் சேரும் போது அதனுடைய எடை கூடுதலாக இருக்கும். ஆகையால் ஒவ்வொரு மருந்துகளின் அளவுகளும் அவ்வவற்றுக் கேற்பக் கொடுக்கப்பட்டுள்ளதை கவனித்துக் கொள்ளவும்.

# சத்து

மூலிகைகள், தாதுப் பொருட்கள், உயிரியல் பொருட்கள் என்பவற்றிலிருந்து அவற்றின் சத்துக்களைப் பிரித்தெடுத்துக் கொள்வது சத்து எனப்படும்.

சில மூலிகைகளிலிருந்து செம்பு, அயம், உப்புக்கள் ஆகியவற்றைப் பிரித்தெடுக்கலாம். சில மூலிகைகளை எரித்து எடுக்கும் சாம்பலை நீரில் கரைத்து, இத்தகைய சத்துக்களைப் பிரித்து எடுக்கலாம். உப்புக்களாயின், அவற்றின் கரைசலை நன்றாகக் காய்ச்சிப் பிரித்து எடுக்கலாம். எடுத்துக்காட்டாக, குப்பைமேனி உப்பு, பிரண்டை உப்புப் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்நூலின் 227 ஆம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள சீந்திலிருந்து எடுக்கும் சர்க்கரை, 'சீந்தில் சத்து' எனப்படும். அவ்வாறே பூ நாகத்தைச் சாணத்தில் கலந்து உலர்த்தி எரித்து எடுக்கும் சத்து, செம்புச் சத்து எனப்படும்.

## ஒரே பார்வையில் - அளவைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 கிறெயின் | = 65 மி. கி | | | |
| 2 ,, | = 130 ,, | = 1 குன்றி | | |
| 4 ,, | = 260 ,, | = 1 மஞ்சாடி | | |
| 80 ,, | = 5200 ,, | = 1 கழஞ்சு | = 5 மி. லீ | |
| 640 ,, | = 41600 ,, | = 8 ,, | = 1 பலம் | = 41.6 கிராம் (40 ,, ) |
| | | = 1 ,, | = 20 மஞ்சாடி | = 5.2 ,, (5 கிராம்) |
| 1 படி | = 2½ இறாத்தல் | = 40 அவுன்ஸ் | = 32 பலம் | = 1250 மி. லீ |
| 1 வீசை | = 3 இறா 2 அவுன்ஸ் | = 50 ,, | | = 1562.5 மி. லீ |
| 1 தோலா | = 2¼ கழ | = 1 ரூபா எடை | | = 11.25 மி. லீ |
| 1 துரோணம் | = 32 இறாத்தல் | = 15.36 லீற்றர் | | |
| 1 நாழி | = 20 அவு | | = 16 பலம் | = 625 மி. லீ |
| 1 ஆழாக்கு | = 2½ அவு | | = 2 பலம் | = 78.125 மி. லீ |
| 1 போத்தல் | = 24 அவு | | = 19 1/5 பலம். | = 750 மி. லீ |
| 1 வராகன் | = 4 கிராம் | = 1 டிராம் | | |
| 1¼ ,, | = 5 கிராம் | = 1 கழஞ்சு | | |
| 5 ,, | = 20 ,, | = 4 ,, | | |
| 1 தோலா | = 180 கிறெயின் | = 11.7 கிராம் | = 2¼ கழஞ்சு | |
| 1 பண எடை | = 488 மி. கிராம் | | | |

| | | | |
|---|---|---|---|
| 1 பலம் | = 7 கழஞ்சு | = 35 கிராம் | — குணபாட நூலின்படி (சின்ன) |
| 1 ,, | = 8 ,, | = 40 ,, | — வட இந்திய முறைப்படி (பெரிய) |
| 1 ,, | = 12 ,, | = 60 ,, | — வேறு சில நூல்களின்படி |
| 1 ,, | = 16 ,, | = 80 ,, | — யாழ்ப்பாண நூலின்படி ( உ+ம் : பரராசசேகரம் ) |

1 படி = 64 அவுன்ஸ் எனவும் சில நூல்கள் கூறுகின்றன.

( உ + ம் — இருபாலைச் செட்டியார் வைத்தியத் தெளிவு )

### பலம் என்ற அளவையில் உள்ள வேறுபாடுகள்

எமது மருத்துவத்தில் பலம் என்ற அளவை பாரம்பரியமாக வழக்கில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

மேற் குறிப்பிட்டவாறு அட்டவணையில் வேறுபட்டுக் காணப்படுவதால், மருத்துவர்கள் மருந்து தயாரிப்பு முறைகளை மேற்கொள்ளும்போது, எந்த எந்த நூல்களில் கூறப்பட்டுள்ளதோ அவற்றுக்கேற்பத் பலம் அளவையைக் கணித்துக் கொள்ள வேண்டும். ஆனால் தற்போது பலம் 40 கிராம் என்ற அளவையே இந்தியாவிலும் ( IMPCOPS ) ஈழத்திலும் நடைமுறைக்குக் கொண்டு வருகின்றனர். இதுபற்றிய விபரத்தை மேலே குறிப்பிட்டுள்ள ஒரே பார்வையில் - அளவைகள் என்ற பகுதியின் இறுதியில் காணலாம்.

## எந்திரங்கள் (பொறி)

1. அவி இயந்திரம்:- நீராவியில் மருந்துகளை அவித்து எடுத்தல்.
   உ+ம்:- தாளிசாதி வடகம், பறங்கிக் கிழங்கு, சிவதை, பலாசு வித்து, அமுக்கிராக் கிழங்கு.
2. துலா இயந்திரம்- (தோலா இயந்திரம்) :- விபரம் 182, 189 ஆம் பக்கங்களைப் பார்க்க.
3. தூப இயந்திரம்:- தூபச் சரக்குகளைக் கொண்டு அவி யந்திரம் போல் செய்தல்.
   உ+ம்:- தூபச் சரக்கு — சாம்பிராணி
   மருந்து — பறங்கி இரசாயனம்
4. மெழுகுத் தைலக் கருவி:- மெழுகு போன்ற பொருட்களை உருக்கி ஆவியாக்கித் தைலமாக வடித்தல்.
   உ+ம்:- மெழுகுத் தைலம்.
5. சுடர்த் தைலக் கருவி:- எரித்துச் சுடராக்கி வெளியேறும் தைலத்தை எடுத்தல்.
   உ+ம்:- கந்தகச் சுடர்த் தைலம், ஓணான் சுடர்த் தைலம்
6. குப்பி புடக் கருவி:- மருந்துள்ள குப்பியைத் தலை கீழாக வைத்து மேற்பக்கத்துக்கு வராட்டியை அடுக்கி எரித்துத் தைலத்தை இறக்கிக் கொள்ளல்.
   உ+ம்:- — அண்டத் தைலம், கடலைத் தைலம்.
7. குழிப் புடத் தைலக் கருவி:- குழி அமைத்து அதனுள் மருந்துடன் துவாரமுள்ள பானையையும் அதற்குக் கீழ் ஒரு பாத்திரத்தையும் வைத்து வராட்டியால் எரித்துச் சூடாக்கித் தைலத்தை இறக்கிக் கொள்ளல்.
   உ+ம்:- — சிரட்டைத் தைலம், செவ்வரளித் தைலம்,
   — சிவனார் வேம்புத் தைலம்.
8. செந்தூரம் எரிக்கும் கருவி:- இரு சட்டிகளைப் பயன்படுத்திச் சீலைமண் செய்து அடுப்பில் எரித்துக் கொள்ளல்.
   உ+ம்:- — ஆறுமுகச் செந்தூரம், அய காந்தச் செந்தூரம்
9. பதங்கக் கருவி- வாலுகா இயந்திரம்:- மேற்சட்டியில் அல்லது போத்தலின் கழுத்துப் பகுதியில் பதங்கமாகப்படிய வைத்து எடுத்துக் கொள்ளல் (Sublimation.)
   உ+ம்:- — இரசப் பதங்கம், இரச செந்தூரம்,
   — காள மேக நாராயண செந்தூரம்
10. திராவக வாலை இயந்திரம் :- திராவகமாக (ஆவியாக்கி) வடித்துக் கொள்ளல். (Distillation)
    உ+ம் :- — ஓமத் தீ நீர், சோம்புத் தீ நீர்.



## உசாத்துணை நூல்கள்


1. அனுபவமுள்ள குடிநீர் வகைகள்,
   தொகுத்தவர்,
   வைத்திய பூபதி ஏ. சி. இராசையா,
   யாழ்ப்பாணம் -1985

2. கண்ணுசாமிப் பரம்பரை வைத்தியம்
   வைத்திய வித்வன்மணி,
   சி. கண்ணுசாமிப்பிள்ளை, சென்னை - 1988

3. குணபாடம், தாது - சீவ வகுப்பு
   (இரண்டாம் - மூன்றாம் பகுதிகள்)
   டாக்டர் R. தியாகராஜன் L. I. M, சென்னை - 1981

4. கை எழுத்துப் பிரதிகள்
   கையாட்சி முறைகள்,
   அமரர் சித்த வைத்தியர்
   சி. ஆ. பொன்னம்பலம் (பரமு வைத்தியர்)
   தாவடி, யாழ்ப்பாணம்

5. சித்த ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான கைந்நூல்
   வைத்திய கலாநிதி பொன். இராமநாதன்,
   D. A. M. & S. (Cey.), M. D. (Siddha)
   யாழ்ப்பாணம் - 1994

6. சித்த ஔடத செய்முறை
   ஆயுள் வேத இலாகா
   வைத்திய கலாநிதி, என். எம். பொன்னையா, எல். ஐ. எம்.
   வைத்திய கலாநிதி, ஐ. சபாபதிப்பிள்ளை, எல். ஐ. எம்.
   சென்னை

7. சித்த மருந்துகளின் செய்முறை (IMPCOPS)
   The Indian Medical Practioners
   Co-operative Pharmacy And Stores,
   சென்னை - 1988

8. சித்த வைத்தியத் திரட்டு
(ஆறாம்பதிப்பு)
டாக்டர் க. நா. குப்புசாமி முதலியார், H. P. I. M.
டாக்டர் க. ஷ. உத்தமராயன், H. P. I. M.
*சென்னை 1987*

9. சுதேச வைத்திய ஔடதத் திரட்டு
ஸ்ரீமான் ஐ. பொன்னையாபிள்ளை *(ஏழாலை)*
*வைத்தியராற் பார்வையிடப்பட்டது*
*யாழ்ப்பாணம் 1932*

10. பரராசசேகரம் (இரண்டாம் பகுதி)
*கெற்பரோகம், பாலரோகம்,*
ஐ. பொன்னையாப்பிள்ளை, *(ஏழாலை)*
*யாழ்ப்பாணம்.*

11. மருந்துசெய் இயலும் கலையும்
தேவ *ஆசிர்வாதம் சாமுவேல்,* எம். டி. (சித்தா)
*சென்னை.*




## மேலதிக குறிப்புகளுக்கான இடம்
## SPACE FOR ADDITIONAL NOTES

## மேலதிக குறிப்புக்களுக்கான இடம்
## SPACE FOR ADDITIONAL NOTES

